# புஷ்பாஞ்சலி

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலாகனக துர்கா

56280?

வர்மா பதிப்பகம்
55, வெங்கட்நாராயணா சாலை,
தியாகராய நகர், சென்னை—600 0 17.

முதற்பதிப்பு : ஜூலை 1991
உரிமை : ஆசிரியர்க்கு.

விலை ரூ. 30.

11352

2968852

அச்சிட்டோர் :
அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை - 600 078.

# பதிப்புரை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற வீர இளைஞன் இக் கதையின் நாயகனாகிறான்.

விடுதலை பெற்றவன் எதிர் பார்த்துச் சென்ற காதலியைக் காணாமல் ஏமாற்றம் அடைகிறான்.

எதிர்பாராமல் சந்தித்த ஒரு நங்கையிடம், எதிர் பாராத நிலையில் தவறாக நடந்து கொள்கிறான்.

சந்திப்பைப் போலவே பிரிவும் நிகழ்கிறது.

பெற்ற பிள்ளைக்கே ஆயாவாக இருக்கும் தாய் ஒருத்தி; பெற்றவளிடம் உண்மை கூற முடியாமல் தவிக்கும் தந்தை ஒருவன்.

பழைய தவறைத் திருத்திப் பழைய உறவைப் புதுப்பிக்கத் துடித்தபடி காலம் நோக்கிக் காத்திருக்கும் கதாநாயகன் நிலைமை, படிப்போர் நெஞ்சைப் பிழியச் செய்கிறது.

பண்பட்ட எழுத்தாற்றலின் பக்குவப் படைப்பாக இப் புதினம் உருவாகியுள்ளது.

நிகழ்ச்சிப் பின்னல்களில் நம் நெஞ்சங்களை நெகிழ்ச்சிப் படுத்தும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர். அவர்கட்கு எமது நன்றி.

வாசகப் பெருமக்களுக்கு ஓர் அரிய வாழ்க்கைச் சித்திரத்தை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

—பதிப்பகத்தார்.

11352
2968852

# புஷ்பாஞ்சலி

நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த புதிது. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழாம் வருடம்!

இந்தியா அமைதிப் போரை நடத்தி வந்த போதிலும் ஆங்கிலேயர்களின் அடக்கு முறையால் நாட்டில் நிறைய இம்சைகள் நிகழ்ந்தன. இரத்த ஆறு ஓடிற்று. பலர் கைகால்களை இழந்தனர். உயிரை இழந்தனர்.

சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் யாராயிருந்தாலும் சரி, ஆண், பெண், வயோதிகர்கள் என்ற பாகுபாடின்றி மாடுகளை விளாசினாற் போலச் செம்மையாய் உதைத்தார்கள். கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் போதும்;வேட்டை நாய்களைத் துரத்துவதுபோலத் துரத்தித் துரத்தி வந்து சுட்டார்கள். ஆனாலும் சரி, இந்தியர்கள் ஆவேசத்தை அடக்கிக் கொண்டு, மகாத்மாவின் நிழலில்பொறுமையாய் அமைதிப் போராட்டத்தை நடத்தி வந்தார்கள். இறுதியில் அந்த மகா யாகத்தில் சில ஆயிரக்கணக்கான பேர்களை பலிசந்த பிறகு, பல லட்சக்கணக்கான பேர்கள் பயங்கரமான இம்சைகளை அனுபவித்த பிறகு நினைத்ததைச் சாதித்துக் கொண்டார்கள். நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது.

பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு இந்தியத் தாய் தன் கட்டுத் தளைகளை அறுத்துக் கொண்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கினாள்.

ஆண்டுக்கணக்காய்ச் சிறைகளில் மங்கிக்கொண்டு, வாழ்க்கையின் மேலிருந்த ஆசைகளையெல்லாம் தியாகம் செய்திருந்த அரசியல் கைதிகளுக்கு உடனே விடுதலை கிடைத்து விட்டது.

ஆசையாய், வேண்டியவர்களையும் நெருங்கியவர்களையும் திரும்பவும் கண்ணால் காணப்போகிறோம் என்ற சந்தோஷத்தோடு ஜெயிலைவிட்டுத் தம் தம் வீடுகளுக்குப் புறப்பட்டார்கள் அவர்கள்.

அவ்வாறு விடுதலையானவர்களுள் ஒருவன் மகேந்திரன். அவன் வயது சுமார் இருபத்தைந்து இருக்கலாம். முகத்தில் தாடியும் மீசையும் மண்டிப் போயிருந்தன. அக்கண்கள் மட்டும் கூர்மையாயும் சுறுசுறுப்பாயும் இருந்தன. உதடுகளில் லேசாய் முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தாற்போலத் தோன்றற்று. ஆனால் கூர்ந்து கவனித்தால், அங்கே முறுவலுக்கு பதில் ஒரு விதமான சப்பீரம் தென்படும். எப்படிப்பட்ட சமயத்திலும் என் தன்னம்பிக்கையைக் கைவிட்டுவிட மாட்டேன் என்று பெருமையாய் எடுத்துச் சொல்வது போலிருந்தது அது. முகத்தில் ஒரு விதமான உறுதி தென்பட்டது.

ஒரு காலத்தில் அவன் மேனி செக்கச் செவேல் என்று இருந்திருக்கும். ஆனால் சில ஆண்டுகளாய் மழையிலும் வெயிலிலும் சுற்றியலைந்ததால் மாநிறமாய் மாறிப் போயிருந்தது. அவ்வளவு ஆண்டுகளாய் சிறையில் மட்கிப் போயிருந்த போதிலும், பல கொடுமைகளுக்கு ஆளாகியிருந்த போதிலும் அந்த மேனி கட்டுக் குலையாமல்தான் இருந்தது.



கொஞ்சம் கசங்கிப் போயிருந்த ஆடையுடன் அவன், ஜீப்பில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். எண்ணெயைப் பசை காணாத கேசங்கள் பறந்து நெற்றியில் தாறுமாறாய் விழுந்து கொண்டிருந்தன. அது கூட ஒருவகையில் அழகாய்த்தான் இருந்தது.

பாதை குண்டுங் குழியுமாய் மோசமாய் இருந்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நன்றாய் மழை பெய்திருக்கும் போலிருந்தது. ஆங்காங்கு சேற்றுக் குட்டைகள் தென்பட்டன.

தெருவிற்கு இரு பக்கங்களிலும் உயரமாய் வளர்ந்திருந்த மரங்களோடு காட்டுக் கொடிகள் பின்னிக் கொண்டு பூக்களைச் சொரிந்து கொண்டிருந்தன. அவற்றிலிருந்து குப்பென்று வந்து வீசிய வாசனை மயக்கத்தைத் தோற்றுவித்தது.

'அம்மாடா! எவ்வளவு நல்ல வாசனை!'

நாசித்துவாரங்களை அகல விரித்து மூச்சை இழுத்து அந்தக் காட்டுப்பூக்களின் மணத்தை சுவாசித்த அவனுக்குப் பல ஆண்டுகளாய் இருள் நிறைந்த அறையில் மங்கிக் கிடந்ததால் இந்த வெளிச்சமும், இந்தத் திறந்த வெளியும் இந்த சுதந்திரக் காற்றும் அமிர்தமாய் இருந்தன.

'இன்றிரவு இங்கே எங்கேயாவது தங்கும்படி நேருமோ என்னவோ? வழி சரியாகவேயில்லை சார்' என்றான் டிரைவர்.

'ஊஹூம். கூடாது. எவ்வளவு ராத்திரியானாலும் சரி, போய்ச் சேர்ந்து விடவேண்டும். இடி இடித்துக் கொண்டு தான் இருக்கு, ஆனாலும் நிற்கவேண்டாம்!'

திடமாய்ச் சொன்னான் அவன்.

'வழி எனக்குச் சரியாய்த் தெரியாது சார்! எங்கேயாவது வழி தவறிப் போயிட்டேன்னால்...'

முணுமுணுத்தான் டிரைவர்.

'நான் தான் இருக்கேனே.'

அலட்சியமாய்ப் பதிலளித்தான் அவன், திரும்பவும் யோசனையில் ஆழ்ந்துப் போனபடி.

அஷ்டமி சந்திரன் மெதுவாய் மரங்களின் சந்துகளிலிருந்து எட்டிப் பார்க்க முயன்றது. இருட்டுமில்லாத வெளிச்சமு மில்லாத மங்கலான சூழ்நிலை. மயக்கம் தந்து கொண்டிருந்த காட்டுப் பூக்களின் நறுமணங்கள், எதைப் பார்த்தாலும் கண்களுக்கு மனோகரமாயும், மனதிற்கு உல்லாசமாயும், ஆர்வமாயும் இருந்தது.

கண்களுக்கு முன்னால் தென்பட்ட இந்த சுந்தரக் காட்சிகளும்கூட ஓடிக்கொண்டே யிருக்கும். ஜீப் நின்று விட்டால், எங்கே சிதறிப் போய் விடுமோ என்று தோன்றிற்று. அவன் யோசனைகள் அங்குமிங்கும் தாவி விட்டு, இறுதியில் தன் வீட்டின்மேல் வந்து நிலைத்தது.

நான்கு வருஷங்களுக்கு முன்னால் வீட்டை விட்டு வந்து விட்டான். அம்மா எப்படி இருக்கிறாளோ? சுதந்திரப் போராட்டத்தில் சேருவதாய்ச் சொன்னால் வேண்டாம் என்று மறுத்து விடுவாள் என்றெண்ணியும்,

'எனக்கு நீ ஒரே மகன். அந்தப் போராட்டத்தில் சேருவதற்கு வேறு எத்தனையோ பேர் இருக்கிறார்கள். என்று தடை விதித்து விடுவாள் அவள் என்றும், அழுது அட்டகாசம் பண்ணி விடுவாள் என்றும் எண்ணியே சொல்லாமல் வந்து விட்டான்.

மறுநாள் அவனைக் காணாமல் எவ்வளவு கலங்கிப் போய்விட்டாளோ? ஊண் உறக்கத்தை மறந்து எவ்வளவு நாள் அழுது கொண்டே படுத்திருந்தாளோ?



ஆனால் அவன்தான் என்ன செய்வான்? நாடு பரிதவித்துக் கொண்டிருக்கும்போது குடிமகனாய், தன் கடமையை எப்படிப் புறக்கணிப்பான்? புறக்கணித்தால் சந்தோஷமாய் திருப்தியாய் இருக்க முடியுமா அவனால்? தேசத் தாய் கண்ணீர் மல்க வரச் சொல்லி அழைக்கும் போது போகாமல் எப்படியிருப்பான்?

அதனால்தான் பெற்ற தாயை வருத்தப்படுத்துகிறோம் என்று தெரிந்தும் கூட கட்டுப்படுத்திக்கொண்டு போனான்.

சாம்பவி கூடவே இருந்ததால் கொஞ்சம் பரவாயில்லை. அந்தத் துணிச்சலில் தான் அவனும் போனான். சாம்பவியைப் பற்றிய யோசனை வந்ததுமே அவன் மனமெல்லாம் இன்ப வேதனையால் நிரம்பி வழிந்தது.

அவன் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு அவனுக்கும் சாம்பவிக்கும் நடந்த சம்பாஷணைகளை இவ்வளவு நாளில் என்றாவது மறந்திருப்பானா? இந்த ஜென்மத்தில் அவனால் மறக்கத்தான் முடியுமா?

அன்றைக்கு நிலா வெளிச்சத்தில் புன்னைமரத்தடியில் விடை பெற்றுக் கொண்டபோது, கடைசி முறையாய்ப் பேசிய வார்த்தைகள் கண் முன் நிழலாடியது.

'தனிப்பட்ட அபிப்பிராயங்களையும் சொந்த சுகங்களையும் தியாகம் செய்ய வேண்டிய விலைமதிப்பில்லாத தருணம் இது சாம்பவி! இந்தப் போராட்டத்தில் என்னைப் போன்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பலம் தரவேண்டும். உன்னைப் போன்ற இளம் பெண்கள் அதற்கு தைரியமும் சாகஸமும் அளிக்க வேண்டும்.

'இம்முறை இந்தச் சூறாவளியைப் பார்த்துப் பயந்து ஓடத் தவறமாட்டார்கள் ஆங்கிலேயர்கள். நாட்டில் நம்

அதிகாரங்களுக்கு விடைகொடுத்து, விட்டு, மூட்டை முடுச்சுக்களைக் கட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்து விடுவார்கள்.'

என்றான் அவன் ஆவேசமாய்.

சாம்பவி மௌனமாய் இருந்தாள். அவள் அந்தராத்மா அதை உண்மையென்று ஆமோதிக்கத் தவற வில்லை.

இருவரும் ஒருவரையொருவர் ஆர்வத்தோடு பரிவாய் பார்த்துக் கொண்டார்கள்.

சாம்பவி... ஒருக்கால் ...ஒருக்கால் நான் திரும்பி வரா விட்டால் இதுதான் நாம் கடைசியாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் சந்திப்பாய் இருந்தால்—...'

'மகேந்தர்!'

'சாம்பவியின் உடல் பயத்தால் சிலிர்த்தது. நடுங்கும் விரல்களை அவன் உதட்டின் மேல் எச்சரிப்பது போல வைத்து,

'அப்படி... அப்படியானால் இந்த நிமிஷமே எனக்கு சாசுவதம் ஆகிவிடும். நீ திரும்பி வரும் வரைக்கும் இந்த நிமிஷத்தோடேயே வாழ்ந்துட்டிருக்கேன் மகேந்தர்! மகேந்தர் இல்லைன்னு தெரிந்த அன்றைக்கு இந்த சாம்பவி யும் உலகத்தில் இருக்கமாட்டாள்.'

'சாம்பவி!'

கலக்கத்தோடு அவளை இழுத்து மார்போடு அணைத் துக் கொண்டான்.

'சாம்பவி! நீ இந்த மாதிரி யோசனைகளைக் கனவி லும் வர விடாதே! அம்மாவை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன் என்பதை மறந்து விடாதே! ஒருக்



கால் எனக்கு ஏதாவது ஆயிட்டால், அம்மாவின் பொறுப்பு உன்னுடையது. நீ இருக்கிறாய் என்று தான் கவலையில்லாமல் போகிறேன்!

ஈரக்கண்கள் பளபளக்கச் சிரித்தாள் சாம்பவி.

'அத்தையைப் பற்றி நீங்கள் என்னிடம் சொல்லணுமா? அம்மா அப்பாவை இழந்த நான் அத்தையிடந்தான் அவ்விருவரையும் பார்த்தேன். அத்தை மேல் உங்களை விட எனக்குத்தான் அதிகமாய்ப் பொறுப்பு இருக்குன்னு தெரியும் எனக்கு. ஆனால்... ஆனால் நீங்கள் திரும்பி வருவீங்க மகேந்திரன்! என் அன்பு உங்களைத் திருப்பி என்னிடம் உயிரோடு கொண்டு வந்து ஒப்படைத்து விடும். அந்த நம்பிக்கை இருக்கு எனக்கு.'

'இதை நான் என்றும் நினைவில் வைத்துட்டிருப்பேன் சாம்பவி!'

சாம்பவி திடீரென்று இரு கைகளையும் அவன் கழுத்தைச் சுற்றிப்போட்டுக் கொண்டு,

'அதுமட்டுமில்லை. இன்னொன்று கூட நினைவில் வச்சுக்குங்க. உங்களுக்காக எவ்வளவு நாளானாலும்; எவ்வளவு யுகமானாலும் சரி, காத்துட்டிருப்பேன். அது மட்டும் ஞாபகத்தில் வெச்சுக்குங்க.'

—அப்பொழுது சாம்பவி சொன்ன அந்த வார்த்தை களே இன்னும் செவிகளில் எதிரொலித்துக் கொண் டிருந்தன.

அந்த நினைவே— புனிதமான அந்த அன்பே, ஒரு ரட்சையாய் சதா கூடவேயிருந்து வந்து அநேகம் முறை பல ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருந்தது அவனை.

சாம்பவியின் மேல் இந்த ஆசை மட்டும் இல்லா மலிருந்தால், அவனுக்கு வாழ்க்கை மேல் இவ்வளவு

பிடிப்பு இருந்திருக்குமா என்பதேகூட சந்தேகந்தான். இவ்வளவு நரக வேதனையை மூறலுடன் பொறுத்துக் கொண்டிருந்திருப்பானா?

'அசட்டு சாம்பவி! சாம்பவியின் மனம் வெண்ணெயைப் போன்றது. ஜெயிலில் வெள்ளையர்களின் கொடுமையால் தான் பட்ட அவதியைப்பற்றிச் சொன்னால் அவளால் தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா பாவம்! அவனுக்காக ஆசையாய் எதிர்பார்த்துக் கொண்டே எவ்வளவு கஷ்டங்களைத் தன்னந் தனியாய் அனுபவித்திருப்பாளோ? உண்ண சரியான உணவுகூட இருந்திருக்காது. அப்படிப்பட்ட வறுமையாய் இருந்தாலும் கூட பரவாயில்லை, சாம்பவி எளிதாய்த் தாங்கிக் கொண்டிருந்திருப்பாள்.

அது பட்டுந்தானா? அல்லது தாறுமாறான இச் சூழ்நிலையில் சாம்பவிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமா?

ஒரு வினாடி அவன் மனம் உடல் இரண்டும் பயத்தால் நடுங்கின. இல்லை இல்லை, இந்தத் தீயின் புகை எங்கோ வேறுமூலையில் இருக்கும். சாம்பவியிடம் பரவியிருக்காது. தமிழ்நாட்டில் எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும் அந்தக் குக்கிராமத்தில் யுத்த பயங்கரம் பரவியிருக்க வழியில்லை. அவன் போய் கதை கதையாய்ச் சொல்ல வேண்டும். அவன் வாயாலேயே சாம்பவி பயங்கரமான இக்கதைகளைக் கேட்கவேண்டும்.

திடீரென்று அவன் போய் நின்றால் சாம்பவி என்ன சொல்லுவாள்? திடீரென்று கத்திக்கொண்டே கைக் காரியங்களைப் போட்டுவிட்டு, 'மகேந்திரன்'— என்று அவன் கைகளில் துவண்டுவிட மாட்டாளா? அல்வாறுஓடிவந்து தன்னைக் கட்டிக் கொள்ளும் சாம்பவியை அவன் மார்போடு அழுத்திக் கொள்ளும் காட்சி கண்முன் நிழலாடவே —அவன் கண்களில் கண்ணீர் சுழன்றது.



'அப்பப்பா! இன்னும் எவ்வளவு நேரமோ; ஜீப் எவ்வளவு வேகமாய் ஓடிக் கொண்டிருந்த போதிலும் இந்த வேகம் போதவில்லை. சாம்பவியையும் அம்மாவையும் பார்க்க வேண்டும் என்ற துடிப்பால்தான் ஜெயிலிலிருந்து விடுதலையானதுமே தன்னோடுகூட விடுதலையான சக கைதி ராம்நாராயண்,

'மகேந்தர்? ரெண்டு நாள் என்னோடு தங்கி ஓய்வெடுத்துக்கிட்டுப் போப்பா'

என்று எவ்வளவு கெஞ்சிக் கேட்டுக்கொண்ட போதும் கேட்காமல் புறப்பட்டு விட்டான். அவன் பரபரப்பைப் புரிந்து கொண்ட அவர்,

'சரி, போ! போய் ஒரு வாரத்திற்கெல்லாம் சாம்பவியையும் உங்கம்மாவையும் கூட்டிட்டுத் திரும்பி வா!' என்று தானே ஜீப்பைக் கொடுத்து உதவினார்.

புறப்படும் பொழுது அவர்,

'சீக்கிரமாய் வந்துவிடு மகேந்திரா! தற்சமயம் இந்த உலகத்தில் உன்னைத்தவிர எனக்கு வேறு யாருமில்லைங்கிற சங்கதி உனக்கும் தெரியுமில்லையா?' என்றார் அது நினைவிற்கு வந்ததுமே மகேந்திரன் கண்கள் கசிந்தன.

உண்மைதான்! அவருக்கு எல்லாம் இருந்தது, ஆனால் நெருங்கியவர்கள் என்று யாருமே கிடையாது. ஜெயிலில் இருந்தபோதே அவர் மனைவி இதய நோயால் மரணமடைந்து விட்டாள். அந்தச் செய்தியைக் கேட்டு அவர் எவ்வளவு தளர்ந்து போனார் என்று மகேந்திரன் ஒருவனுக்குத்தான் தெரியும்.

அந்தச் சமயத்தில் அவருக்கு அருகில் இருந்து அவரைத் தேற்றிய ஒரே மகன் மகேந்திரன்தான். ஜெயிலில் அனுபவித்த பயங்கர அனுபவம் ஒரு பங்கானால், ராம்

நாராயணனின் பழக்கம் இன்னொரு பங்கு. 'இளம் கன்று பயம் அறியாது' என்பது போலத் திமிராக இருந்து வந்த மகேந்திரன், அவர் நெருக்கத்தால் மிக சாத்விகமான மனிதனாகவும், கம்பீரமாகவும் மாறிவிட்டான். உலக அறிவை நிறையத் தெரிந்துகொண்டான்.

சாம்பவியை அழைத்துக்கொண்டு போய்க் காட்ட வேண்டும். இந்த வயதான காலத்தில் நெருங்கியவர்கள் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் அவர் மனதிற்குத் தானும் சாம்பவியும் சேர்ந்து நிம்மதியைத் தர வேண்டும். சாம்பவியைப் பார்க்கப் போகும் நேரத்தை எதிர்பார்த்து அவன் மனம் பொங்கிக்கொண்டிருந்தது.

சாம்பவியின் மார்பில் சிறுபையனைப்போல தலையை புதைத்துக்கொண்டு விட்டால் போதும். இவ்வளவு வருடமாய் பட்ட இந்தப் பயங்கர வேதனையும் கசப்பான அனுபவங்களும் மறந்துபோய் விடும். இன்னும் எவ்வளவு நேரம்? எவ்வளவு யுகங்களோ? அவன் மனம் 'சாம்பவி, சாம்பவி' என்று குமுறிக்கொண்டேயிருக்கையில், ஜீப்பு 'சடன் பிரேக்' போட்டபடி நின்றுவிட்டது.

## 2

'என்னவாச்சு?' கற்பனையுலகத்திலிருந்து பலவந்தமாய் விடுபட நேர்ந்ததற்கு எரிச்சலடைந்தவனாய்க் கேட்டான்.

'குறுக்கே எதையோ நிறுத்தியிருக்காங்க சார்'? என்றான் டிரைவர்.

'அதென்னன்னு சீக்கிரமாய்ப் பாரு!' அலுத்துக் கொண்டான். ஏற்கெனவே அவனுக்குத் தாமதமான ஒவ்வொரு நிமிஷமும் யுகமாய் இருந்தது.



இறங்கிப் போன டிரைவர் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்து, 'குதிரை வண்டி சார்! சக்கரம் சேற்றில் புதைத்துக்கிட்டது. தூக்கி நிறுத்தாவிட்டால் நமக்குக்கூட வழி இல்லை' என்றான்.

'நானும் இறங்கிக் கை கொடுக்கட்டுமா?'

டிரைவர் சரி என்று தலையாட்டினான்.

'நடு வழியில் இந்த நியூசென்ஸ் வேறயா?'—அலுத்துக் கொண்டே இறங்கி வந்தான் மகேந்திரன்.

அழகான குதிரை வண்டி! பார்த்ததுமே பணக்காரக் குடும்பத்தினர் வீட்டு வண்டி என்று தெரிந்தது. குதிரையும் நல்ல தீனி தின்று கொழுத்தபடி இருந்தது.

மகேந்திரன் சக்கரத்தை நெருங்கிப் பரிசீலித்தான்.

'சேற்றில் புதைந்துக்கிட்டது தம்பி! தூக்கி நிறுத்த எனக்குப் பலம் பத்தலை'— வண்டிக்காரன் சொன்னான்.

தலைப்பாகைக் கட்டிக் கொண்டிருந்தான் அவன். நரைத்த தாடி தேங்காய் நாரைப்போல நீண்டிருந்தது. சுருக்கங்கள் விழுந்த முகம் வயதானதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. வெகுநேரமாய் முயற்சி செய்து கொண்டிருந்தான் போலும்! வியர்வை வழிந்து கொண்டிருந்தது உடம்பெல்லாம்.

'ப்ளீஸ்! நீங்கள்கூட ஒரு கை கொடுங்கள்!'

பின்னாலிருந்து ஒரு குரல் கேட்கவே மகேந்திரன் திடுக்கிட்டு, அந்த பக்கமாய்ப் பார்த்தான். அவ்விடத்தில் மரங்கள் அடர்ந்து இருந்ததால் நிலா வெளிச்சம் படவில்லை. கூர்ந்து கவனித்தாலொழிய அவ்விடத்தில் ஆள் இருப்பது தெரியாது.

'ப்ளீஸ்! நீங்கள் தலறாய்ப் புரிந்துக்கவில்லையென்றால்...' இரண்டடிகள் முன்னுக்கு வந்து இம்முறை ஆங்கிலத்தில் கேட்டாள்.

அப்பொழுதுதான் பளிச்சென்று வரத் தொடங்கிய நிலா வெளிச்சத்தில், மகேந்திரன் அப்பெண்ணைக் கூர்ந்து கவனித்தான். அவள் உடைகளையும், பேசிய விதத்தையும் பார்த்தபொழுது செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாய்த் தோன்றியது. சுமார் இருபத்திரெண்டு வயதிருக்கலாம். ஒல்லியாய் கொடியைப் போல இருந்தாள். அகன்ற முகம், பெரிய கண்கள், கழுத்தில் சன்னமான சங்கிலி— மார்பில் புலிநகம் கோர்த்த டாலர் தொங்கிக் கொண்டிருந்தது.

இளமையின் செழிப்பு நன்றாய்த் தெரிந்தது,

மகேந்திரன் தன்னை இமைக்காமல் அவ்விதமாய்ப் பார்த்ததைக் கண்டு அப்பெண் வெட்கத்தால் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

அவன் சக்கரத்தை நெருங்கி அதை ஆட்டிப் பரிசீலித்தான். வண்டிக்காரனை முன்னுக்கிப் போய் குதிரையை அவிழ்த்து விடும்படி உத்தரவிட்டான். பிறகு மூவருமாய்ச் சேர்ந்து பலத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு மேலே தூக்கவே சக்கரம் மேலுக்கு வந்தது மகேந்திரனின் முகத்தில் வியர்வை அரும்பிற்று. ஷர்ட்டின் கைகளை மடித்து விட்டுக் கொண்டிருந்ததால் முழங்கை வரை சேறு ஒட்டிக் கொண்டது.

'இங்கே எங்கேயுமே தண்ணீர் கூட கிடைக்காது போலிருக்கு!' இரண்டு கைகளையும் பார்த்துக்கொண்டே தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

வண்டிக்கு அடியில் ஒட்டிக்கொண்ட சேற்றை வைக்கோலால் துடைத்துக் கொண்டிருந்த வண்டிக்காரன்



'அதோ! அந்தக் கோடியில் ஒரு குட்டை இருக்குது ஐயா' என்றான்.

'எங்கே?'— சுற்றுமுற்றும் பார்த்தான்.

'நான் காட்டுகிறேன், வாங்க'— அந்தப் பெண் வழி நடந்தாள். தெருவின் இறக்கத்தில் பள்ளமாய் இருந்த இடத்தில் மழைநீர் தேங்கிச் சிறு சிறு குட்டையாயிருந்தது. மகேந்திரன் போய் கைகளைக்கழுவிக் கொண்டு வந்தான்.

'தாங்க்ஸ்! நீங்கள் வராமல் போயிருந்தால் இன்றிரவு எங்களால் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்திருக்க முடியாது. "ஈரக்கைகளைப்பேன்ட் ஜேபிக்குள் விடப்போன மகேந்திரவிடம் ஒருகைக் குட்டையைத் தந்தபடியே நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

அருகில் இருந்த பெரிய ஆலமரத்தின் விசாலமான கிளைகள் தொலைவில் இருந்த ஜீப்பையும் குதிரை வண்டியையும் மறைத்துக் கொண்டிருந்தது. நிலாவெளிச்சம் இப்பொழுது பளீரென்று வந்தது. அந்தவெளிச்சத்தில் அப்பெண்ணின் முகத்தில் இடதுபக்கத்து உதட்டிற்கு மேல் பளிச்சென்று தென்பட்ட மச்சத்தைப் பார்த்து அவன் அப்படியே நின்று விட்டான். சாம்பவிக்குக்கூட இதே போலவேதான்—ஆனால் வலது பக்கமாய் இருந்தது மச்சம்!

'அட!' அதையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அவன் ஏதோ ஞாபகத்தில் கைக்குட்டைக்குப் பதிலாய் கையைப் பிடித்துக் கொண்டான். ஒரு வினாடி மை தீட்டிய அப்பெண்ணின் கண்கள் அவனை மருட்சியுடன் பார்த்தன. உடனே கையை விடுவித்துக் கொண்டாள். இதொன்றையும் கவனிக்காத மகேந்திரன் கை எங்கே நழுவிப் போய் விடுமோ, அதன் மூலம் தன் கனவு எங்கே சிதறிப் போய்விடுமோ என்பது போல இன்னும் அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் அந்த மச்சத்தையும் அதன்மூலமாய் அங்கே தென்பட்டுக் கொண்டிருந்த சாம்பவியின் உருவத்தையும் கண்கொட்டாமல் உற்றுப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தவிர அவன் மனதில் எந்த விதமான கெட்ட எண்ணமும் இல்லை, ஆனால் அவன் பார்வையையும் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்த விதத்தையும் முற்றிலும் தவறாய்ப் புரிந்துகொண்டு விட்ட அப்பெண், இடது கையை நீட்டி மகேந்திரனின் கன்னத்தில் சுளீரென்று ஒன்று கொடுத்தாள். எதிர்ப்பாராமல் கன்னம் சுளீரென்றதுமே அவன் அதிர்ந்து போனவனாய் ஒரு வினாடி அப்படியே நின்று விட்டான். 'சி. ராஸ்கல்!' ஒரே உதறலில் கையை விடுவித்துக் கொண்டு மின்னலாய் ஓடப்போனாள். ஆனால் அடுத்த வினாடியே அவன் ஓரடி முன்னுக்கு வந்து கையை நீட்டி அப்பெண்ணின் தோளை அழுத்தமாய்ப் பிடித்து நிறுத்தினான். எதிர்பாராமல் ஏற்பட்டு விட்ட இந்த அவமானத்தால் அவனுக்குக்கோபம் உண்டாயிற்று. முகம் கடினமாய் மாறிற்று முகத்திலிருந்த நரம்புகள் புடைத்துக் கொண்டன.

'ஏன் அடித்தாய்?' கேட்பதற்காக அவன் வாயைத் இறக்கப் போனான். ஆனால் அதற்குள் ஆத்திரமடைந்து விட்ட அப்பெண் கழுத்திலிருந்த புலிநகச் சங்கிலியைக் கழற்றி அவன் முகத்தில் குத்தப்போனாள். அவன் சரேலென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். இல்லாவிட்டால் கண்கள் போயிருக்கும். குறி தவறாத புலிநகம் கன்னத்தை ஆழமாய் கிழித்து விட்டது வலியால் வீலென்று கத்திய அவன் கையைவிட்டு விட்டு! 'அப்பப்பா!ராட்சசி!' என்று கன்னத்தைத்தடவிக் கொண்டான்.

திகுதிகு வென்று தாங்க முடியாமல் எரிந்த அந்த எரிச்சலாலும் வலியாலும் அவனுக்குத் தலைச் சுற்றினாற் போலிருந்தது. ஓரடி நடந்து வந்து பக்கத்திலிருந்த ஆலமரத்தின் மேல் கையை வைத்துக் கொண்டு நின்றான். கன்னத்தில் வைத்துக் கொண்டிருந்தகைவெதுவெதுப்பாய்



ஈரமானாற் போலிருக்கவே எடுத்துப் பார்த்துக் கொண்டான். சிவந்த ரத்தம் அடர்ந்த ஆலமரத்து நிழலில் கருப்பாய் உள்ளங்கை நிறைய தென்பட்டது. 'என்ன வாயிற்று அந்தப் பெண்ணிற்கு? நான் என்ன செய்து விட்டேன்?' என்றெண்ணினான்.

அதற்குள் அப்பெண் அங்கிருந்து மின்னலாய் மறைந்து விட்டாள்.

அவன் சுதாரித்துக் கொண்டு அங்கிருந்து வெளியே வருவதற்குள் குதிரை வண்டி சாலையில் போய்க் கொண்டிருந்தது. வண்டிக்காரனுக்குக் கூட ஒருக்கால் ஒன்றுமே புரிந்திருக்காது. அவன் பயந்தவாறு வண்டிக்குள் உட்கார்ந்தபடி இந்தப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தான்.

மகேந்திரன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே குதிரை வண்டி முனைத்திருப்பி கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

ஜீப்பிற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த டிரைவர் வாயைத் திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அப்படியே சிலையாய், பைத்தியம் பிடித்தவனைப் போல நின்று கொண்டிருந்த மகேந்திரன் சுதாரித்துக்கொண்டு, லேசாய்த் தோளைக் குலுக்கிக் கொண்டே வந்து ஜீப்பில் உட்கார்ந்து கொண்டு, 'போ' என்றான்.

திமிர்ந்து உட்கார்ந்து கொண்ட டிரைவர் திருட்டுத் தனமாய் ஆர்வம் கொப்பளிக்க, மகேந்திரனையே ஓரக் கண்ணால் பார்க்கத் தொடங்கினான்.

மகேந்திரனுக்கு எரிச்சலாயிருந்தது. அவன் எண்ணத்தைப் புரிந்துக்கொணடவனாய்—' அந்தப் பொண்ணு

பைத்தியம் போலிருக்கு' என்றான். கேட்காமலேயே தந்த அந்த சான்ஜாப்பில்—'நான் ஒன்றும் செய்யவில்லை. அந்தப்பெண்தான் அனாவசியமாய் என்னைத்தாக்கி விட்டுப் போனாள். நன்றிக்கெட்டவள்'—என்ற அர்த்தம் தொனித்தது. ஆனால் டிரைவர் அதை நம்பினவனாய்த் தெரியவில்லை. அவமானமடைந்த மகேந்திரனின் அந்த ராத்மா திரும்பிப் போய் அவளைப் பிடித்து நாலு அறை கொடுக்க வேண்டும் போலவும் இன்னும் அதிகமாய் அவளை அடித்து ரத்தம் கசிய காயப்படுத்திவிட்டு வர வேண்டும் போலவும் இருந்தது ஆனால் விவேகம் அதைத் தடுத்து நிறுத்திற்று.

அவன் பண்பு கூட அதுதான் உண்மை என்று ஒத்துப் பாடவே, எப்படியோ ஒருவாறு அமைதியடைந்தது அவன் மனம். ஒருக்கால் கையை அப்படிப் பிடித்ததைப் பார்த்துத் தவறாய் எண்ணிக் கொண்டிருந்திருப்பாள். ஆனாலும் இப்படியா? இந்தப் பக்கத்தில் வண்டிக் காரனும் டிரைவரும் இல்லையா? இத்தனைப் பேர் இருக்கும்போது தன்னை அவ்வாறு காட்டுமிராண்டித் தனமாய் நடந்து கொள்ளும் மிருகம் என்றெண்ணிக் கொண்டாளா? சீ! சீ! அவன் ஏதாவது துடுக்குத்தனமாய் நடந்துக் கொண்டிருந்தால் கத்தி அவர்களையெல்லாம் அழைத்திருக்க முடியாதா என்ன? அந்த புத்தி கூட இல்லாத அழகான முட்டாளா! முன்பின் தெரியாத பெண்ணை— அதுவும் இவ்வாறு நடுத்தெருவில்— சீ! சீ!

மகேந்திரனுக்கு உடம்பெல்லாம் தேளும் பூரானும் படர்ந்தாற்போல அருவருப்பு ஏற்பட்டது. அப்பெண்ணின் அப்பாவித்தனத்தைப் பார்த்துக் கோபத்தோடு சிரிப்பும் வந்தது.

ஜீப் திரும்பவும் வேகத்தை மேற்கொண்டது.



# 3

மகேந்திரன் ஊருக்கு வந்து சேர்ந்தபொழுது காலை ஆறுமணிக்கு மேல் ஆகிவிட்டது. அவனால் தன் கண் களையே தான் நம்பமுடியவில்லை, அவ்வளவு தூரம் மாறிப் போயிருந்தது ஊர்.

பரபரப்புடன் வீதிகளைக் கடந்து, முனைத்திரும்பி தன் வீடு இருந்த சந்திற்குள் நுழைந்தான். உடனே அவன் கண்கள் நிலைக்குத்தி நின்றுவிட்டன. தான் பார்த்துக் கொண்டிருப்பது கனவா நினைவா என்று புரியவில்லை.

அவன் வீடு இருக்க வேண்டிய இடத்தில் ஒரு ஆரம்ப பாடசாலை இருந்தது. பிள்ளைகள் உட்கார்ந்துகொண்டு பாடத்தை உரக்கப் படித்துக் கொண்டிருந்தார்கள். முன் எல்லையில் புதிதாய்க் கிடைக்கப்பெற்ற சுதந்திரக்காற்றை ஆழ்ந்து சுவாசித்துக் கொண்டு கம்பீரமாய்ப் பறந்து கொண்டிருந்தது மூவர்ணக்கொடி!

சிலையாய் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந் தான் மகேந்திரன்.

'யாரு தம்பி! என்ன வேணும் உங்களுக்கு!'

ஜீப்பை விட்டிறங்கி, மாசடைந்த ஆடையுடனும் கலைந்த கேசங்களுடனும் வந்து சிலையாய் நின்றுவிட்ட மகேந்திரனிடம் ஊன்றிக் கொண்டே வந்த கிழவர்ஒருவர் கேட்டார். அவருக்குப் பார்வை சரியாய்த் தெரியாது போலிருந்தது. கண்களுக்கு மேல் கையைக் குறுக்காய் வைத்துக் கொண்டே அவனைக் கூர்ந்து பார்த்தார்.

திரும்பி அவரைப் பார்த்த மகேந்திரன் உடனே கிட்டே போய், 'சங்கரன் மாமா! நான்தான்! உன்னா லேயே என்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில் லையா?'

தொண்டை கம்ம கேட்டான்.

மகேந்திரனை விநோதமாய்க் கூர்ந்து கவனித்த அவர், உடனே அவன் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டே, 'அட! மகேந்திரா! நீயா? எப்ப வந்தாய்?' கேட்டார்.

'எங்க வீட்டுக்குப் போகலாம் வா'—

ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பொங்கத் தடுமாற்றம் அடைந்தார் அவர்.

'மாமா! அம்மா அலங்கள்ளாம்—' வார்த்தைகளை முடிக்கக்கூடவில்லை.

'மொதல்ல வீட்டுக்குப் போவோம். எல்லாவற்றையும் சொல்றேன்' என்று அவர் பரபரத்தார்.

## 4

'ஏய்! ஜானகி! உன்னைத்தான்! இப்படி வா சட்டுனு, யார் வந்திருக்காங்க பாரு.'

இன்னும் மகேந்திரனின் கையை விடாமல் பிடித்துக் கொண்டே உள்ளே அழைத்துக் கொண்டு போனபடி கத்தினார்.

'யாரு? உட்காரச் சொல்லுங்க! இதே வந்துட்டேன்! அடுப்பில் காய் குழைஞ்சுப் போயிடுத்து. அடிப்பிடிச்சு விடும்.'

—உள்ளேயிருந்து அலுத்துக்கொண்டே வந்தது பதில்.

'உன் மூஞ்சி! மொதல்ல வெளியே வா! வந்து பாரு! யாருன்னு தெரிஞ்சால் வாயைப் பிளப்பாய்! வரப் போறயா இல்லையா?...'



'அப்பப்பா! யாருன்னு சொல்லக்கூடாது? நீங்களும் உங்க அவசரமும்...'

கைக் காரியத்தைப்போட்டு விட்டு ஈரக் கைகளைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்த அவள் மகேந்திரனைப் பார்த்ததுமே சுதவிற்கருகிலேயே நின்று விட்டாள்.

'யாருன்னு அடையாளம் தெரிஞ்சுதா?'

'மகேந்திரன்!'

'மாமீ' மகேந்திரன் அருகே போனான்

'நீ... நீ செத்துப் போயிட்டாய்னு எல்லோரும்...'

'மூடு வாயை! மனுஷனைக் காணாவிட்டால் ஆயிரம் நினைச்சுப்போம்! எதிரே வந்து பிரத்யட்சமாய் நிற்கிற போது அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினால் ஆயுள் குறைவுன்னுகூட தெரியாதா உனக்கு?'

கிழவர் கடிந்து கொண்டார்.

'எவ்வளவு நாளாச்சுப்பா உன்னைப்பார்த்து! எப்ப வந்தாய்?' சுதாரித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

'மகேந்திரா! நீ மொதல்ல குளிப்பா! ஏய், இதப்பாரு, உன்னைத்தான்! இனி இப்படி போத்து மாதிரி நின்னுட்டுப் பார்க்கிறதை விட்டுட்டுத் தம்பிக்கு வெந்நீர் இருக்கா இல்லையான்னு போய்ப்பாரு. வீட்டில் தயிர் இருக்கா? இல்லாவிட்டால் போய் வாங்கிட்டு வரேன். சட்டுனு சொல்லு!'

'அதுசரி மாமா... அம்மா அலங்கள்ளாம்...' மகேந்திரன் இடைமறித்தான்.

ஜானகி கணவனை வருத்தத்தோடு பார்த்தாள்.

'சொல்றேன் தம்பி, சொல்றேன். மொதல்ல நீ குளிச்சுட்டு ஒரு வாய் சோறு சாப்பிடுப்பா!'

மகேந்திரன் அவரை நெருங்கிச் சட்டென்று கைகளைப் பிடித்துக் கொண்டு, 'மாமா! அம்மா அவங்களெல்லாம் என்னவானாங்க? சாம்பவி எங்கே இருக்கிறாள்? இதெல்லாம் தெரிஞ்சுக்காமல் என்னால் சாப்பிடவா முடியும்?' கேட்டான் அழுத்தமாய். ஜானகி அங்கே நிற்கப் பிடிக்காதவளாய் உள்ளே போய் விட்டாள்.

கிழவர் தடியைச் சுவரில் சாய்த்து நிறுத்தி விட்டு, கீழே உட்கார்ந்து கொண்டார்.

'உட்காருப்பா, உட்காரு! எல்லாவற்றையும் சொல்றேன்' என்றார். கால்கள் நடுங்க, மார்பு படபடக்க மகேந்திரனும் அவருக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். சங்கரன் சொல்லத் தொடங்கினார்.

# 5

'இதாண்டா தம்பி நடந்த விஷயம். உன்னை உங்க வீட்டில் எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தாங்க. சந்தேகம் ஏற்பட்ட ஒவ்வொரு இடத்திலும் சோதனைப் போட்டாங்க. குறுக்கிட்ட ஓரிருவரை செம்மையாய் உதைத்துத் தள்ளினாங்க. நீ கிடைக்கலைங்கிற கோபத்தால் ஊரில் அநேக ரகளைகளைச் செய்தாங்க. அது நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் நீ பிடிப்பட்டுப் போய் விட்டாய் என்று சொன்னார்கள். சுட்டுத் தள்ளி விட்ட தாய்ப் பேப்பரில் செய்திகள் வந்தன. செய்தியைக் கேட்டதும் ஏற்கனவே ஊண் உறக்கம் இல்லாமல் அழுதுகிட்டேயிருந்த உங்கம்மா படுத்தப் படுக்கையாகி விட்டாள். எவ்வளவு முயன்றாலும் எங்களால் அவளைப் பலவந்தப் படுத்தி ஒரு வாய் தண்ணீரைக்கூட குடிக்கச் செய்ய முடியலை. பதினைந்து நாளுக்குள் போயிட்டாள்.'



'ஆனால் நான்...நான் அப்போது தப்பித்துக்கிட்டேன் மாமா!' தாரையாய் வழிந்துக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பதிலளித்தான் மகேந்திரன்.

'எங்களுக்கு எப்படித் தெரியும் சொல்லு? குறைந்த பட்சம் ஒரு கடிதம்கூட போடலை நீ.'

'துணிச்சல் இல்லை. அதோடுகூட நான் சீக்கிரத்திலேயே திரும்பி வந்து விடுவேன், நலமாய்த் நான் இருக்கேன்று தெரியப்படுத்தணும்னு ரொம்பவும் தவித்தேன். ஆனால் எனக்கு அந்த சான்ஸே கிடைக்கலை.

'உங்கம்மாவின் தகனக் காரியங்களையெல்லாம் என் கையால் தான் பண்ணினேன்.'

'அப்ப சாம்பவி?' மகேந்திரன் பரபரக்கக் கேட்டான்.

'சாம்பவி கொஞ்சநாள் என்னிடம் இருந்தாள். அவங்க மாமா வந்து அழைச்சுட்டுப் போயிட்டார்.'

'மாமாவா?'

'ஆமாம் மதுரையில் நாகராஜன்னு யாரோ இருக்காராமே!'

'ஆனால்... எப்போதும் சொல்லிக்கிறதைத் தவிர சாம்பவி நேரில் பார்த்ததுகூட இல்லையே? அவங்களைக் கண்டால் பிடிக்கவும் பிடிக்காது.'

'நிலைமை சரியாய் இல்லாதபோது பிடிக்கும் பிடிக்காதுங்கற பேச்சுக்கே இடம் ஏதுடா? அசடு! நான் தான் லெட்டர் போடுன்னு சொன்னேன். வேறென்ன பண்ணுவேன் சொல்லு? என்னால் ஒரு வாய் சாதம் போட முடியும். அவ்வளவுதான் ஆனால் கல்யாணம் எப்படிப் பண்ணிவைக்க முடியும்? வயது வந்த பெண்ணைக்

கல்யாணம் பண்ணி வைக்காமல் இந்தப்பட்டிக்காட்டில் தனியாய் வெச்சிருப்பது அவ்வளவு உசிதமாய் தோணலை எனக்கு.'

'அப்படீன்னால் சாம்பவி இப்போ...'

'மதுரையில் இருக்கலாம்.'

'இதென்ன மாமா? உங்களுக்குத் திட்டமாய்த் தெரியாதா?,

கிழவர் தெரியாது என்று தலையாட்டினார்.

'சாம்பவி எழுதிய கடிதத்தைப் பார்த்துட்டு அவர் வந்து அழைச்சுட்டுப் போனார். போன ஆறுமாதம் வரைக்கும் அவ்வப்பொழுது க்ஷேமத்தைத் தெரியப்படுத்தி அவங்க நன்றாய்ப் பார்த்துக்கொள்வதாய் லெட்டர் எழுதிட்டிருந்தாள். போகப் போக என்னவாச்சோ தெரியாது. கடிதப் போக்கு வரத்தே நின்னுடுத்து. நான் கடிதம் போட்டேன், திரும்பி வந்துடுத்து.'

மகேந்திரனின் இதயத்தைப் பிளந்து கொண்டு வெளி வந்த பெருமூச்சை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டான்.

இருவருக்குமிடையே மௌனம் ஆட்கொண்டது.

'சாம்பவி எழுதிய கடிதம் இருக்கா மாமா?'

கடைசியாய்க் கேட்டான்.

'ஆங்! சாம்பவி ஒருத்திதானா என்ன? எங்க வீட்டுக்கு வந்த ஒரு சின்ன காகிதமாயிருந்தாலும் சரி, சாகுவதமாய் இருந்துட வேண்டியதுதான்! இதப்பாரு, ஏய் உன்னைத் தான்! அந்த கடிதாசிக்கட்டுங்களை இங்கே கொண்டா.'

ஐந்து நிமிஷங்கழித்து ஜானகி கடிதங்கள் குத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய இரும்புக் கம்பியைக்



கொண்டு வந்து வைத்து விட்டு 'மகேந்திரா, குளிக்கத் தண்ணீர் விளாவி வெச்சுட்டேனப்பா, எழுந்திரு' என்றாள்.

ஆமாண்டா தம்பி! நீ மொதல்ல குளிச்சு, சாப்பிட்ட பிறகுதான் இதைத் தொடணும்.,

சங்கரன் மாமா மகேந்திரன் கையிலிருந்த இரும்புக் கம்பியைப் பிடுங்கி தொலைவில் வைத்தார்.

ஐயோ! இதென்னது? அந்த கன்னத்தில் அதென்ன காயம்? நான் சரியாய்பார்க்கவேயில்லையே?' அப்பொழுது தான் பார்த்த ஜானகி தன் கலக்கத்தை வெளியிட்டாள்.

'இதுவா? இது... இது வந்து குத்திவிட்டது மாமி'— தடுமாற்றத்துடன் பதிலளித்தான் மகேந்திரன்.

'ஐயோ' எனக்குப் பார்வை கம்மி! நான் பார்க்கவே யில்லை. மொதல்ல அதுக்கு ஏதாவது மருந்து போட்டுக்கோ!' கிழவர் நொந்துக் கொண்டே துரிதப்படுத்தினார்.

## 6

குளித்து சாப்பிட்ட பிறகு கடிதங்கள் கோத்திருந்த கம்பியிலிருந்து சாம்பவி எழுதிய கடிதத்தையெல்லாம் பிரித்து எடுத்து, ஒவ்வொன்றாய்ப் படிக்கத் தொடங்கினான். முதலில் எழுதப்பட்ட சில கடிதங்களில் மகேந்திரனைப் பற்றிய ஓரிரு வரிகள் இருந்தன. அவ்வளவுதான். போகப் போக அதைப்பற்றிய வார்த்தைகளே இல்லை. அவளுடைய மாமா நாகராஜன் மிகவும் நல்லவராம். வீட்டில் எல்லோரும் தன்னை சொந்த மகளாய் மிக அன்பாய் நடத்துகிறார்களாம். அவர்கள் செல்வந்தர்களாம். அவளை மிக அருமையாய்ப் பார்த்துக் கொள்வதால் வாழ்க்கை எந்தக் குறையுமில்லாமல் நிம்மதியாய்க் கழிந்து கொண்டிருக்கிறதாம்.

சாம்பவியின் கடிதங்களிலெல்லாம் அந்தக் குடும்பத்தில் எவ்வளவு விலையுயர்ந்த பொருட்கள் உள்ளனவென்றும், அந்தக் குடும்பத்திற்கு சமூகத்தில் எவ்வளவு மதிப்பும் செல்வாக்கும் உள்ளனவென்றும், விவரமாய்த் தெரியப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றை எவ்வளவு முறை திரும்பித் திரும்பிப் படித்துப் பார்த்தபோதிலும் இந்தக் கிராமத்தை விட்டு விட்டு வந்ததற்குக் கொஞ்சமும் வருத்தமோ, மகேந்திரனைப் பற்றிய கவலையோ தென்படவில்லை.

சாம்பவி எழுதிய கடிதங்களைப் படித்தால் பாழாய்ப் போன கிராமத்தை விட்டு விட்டு வந்ததே நல்லதாய்ப் போயிற்று, இங்கே நிச்சிந்தையாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று திருப்தியாய்ச் சொல்லிக் கொள்வது போலிருந்தது.

ஏமாற்றத்தால் மகேந்திரன் மனம் உடைந்துவிட்டது. எவ்வளவு ஆசையாய் வந்தான் அவன்! என்னென்னவோ ஊகித்துக் கொண்டிருந்தான்! எல்லோரும் போலவே சாம்பவிகூட அவன் இறந்துவிட்டதாய் நம்பிவிட்டாளா? போகட்டும், குறைந்தபட்சம் அவனைப் பற்றி நாலு வரியாவது எழுதக்கூடாதா? அன்றைக்கு நிலா வெளிச்சத்தில் புன்னைமரத்தடியில் நின்று கொண்டு சொன்ன வார்த்தைகளை அவ்வளவு எளிதாய் மறந்துவிட்டாளா? முதலில் வருத்தத்தால் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஆனால் விவேகம் நயந்து சொன்ன பிறகு மகேந்திரன் நிம்மதியடைந்தான்.

ஆம். பின்னே ஒரு பெண்ணால் வேறென்ன செய்ய முடியும்? சூழ்நிலையோடு ஒத்துப்போகாவிட்டால் வாழ்க்கை துர்லபமாகி விடும் என்று அஞ்சியிருப்பாள். அந்தப் பயத்தால் மகேந்திரனைப் பற்றி நினைவுகளை இதயத்தின் அடியில் புதைத்துக் கொண்டு சாதாரணமாய்



வாழ முயற்சித்திருப்பாள். தான் எதிர்ப்பட்டு விட்டால் போதும் அந்த உணர்ச்சிகள் பொங்கி வெளிப்படாமல் போகுமா?

அன்றிரவு படுத்தபோதிலும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. எல்லோரும் சந்தோஷத்தால் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவனுக்கோ எதுவும் மிஞ்சாமல் போய்விட்டது.

யாருமில்லாத— திக்கற்றவனாகி விட்டான். அம்மா மரணமடைந்து அவனை விட்டுப் பிரிந்து விட்டாள். உயிரோடிருந்த சாம்பவியோ எங்கேயோ தொலை தூரத்திற்குப் போய்விட்டாள் அவனைவிட்டு. இந்தத் தனிமையிலிருந்து எப்படி வெளியேறுவது ?

பயங்கரமான இந்த ஏமாற்றத்திலிருந்து தேறிக் கொண்டு திரும்பவும் மனிதனாய் மாறுவது எப்படி? அவனுக்கு அந்தச் சக்தியை யார் கொடுப்பார்கள்? வேதனையால் அவன் மனம் குழம்பியது.

மறுநாள் ஊரையெல்லாம் சுற்றிப் பார்ப்பதற்குப் புறப்பட்டபொழுது ஒருமுறை தன் வீட்டைத் திருப்தியாய் பார்த்து விட்டு வர பள்ளிக்கூடப் பக்கமாய்ப் போனான். வீட்டைப் பள்ளிக்கூடமாய் மாற்றியிருந்த அந்த எல்லைக்குள் இருந்த புன்னைமரம் இப்பொழுது இல்லை. வெட்டிவிட்டார்கள். இப்பொழுது அவ்விடத்தில் பண் படுத்தப்பட்டு விளையாடும் இடமாய் மாற்றப்பட்டிருந்தது

மகேந்திரன் போனபொழுது அங்கே பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாரமான இதயத்துடன் அவ்விடத்தில் நிற்க முடியாதவனாய்த் திரும்பி வந்து விட்டான்.

# 7

'உன் பெயரில் அந்த வீட்டை உரிமையாக்கி நான் தான் பள்ளிக்கூடத்துக்குத் தந்துட்டேன் தம்பி.' பிற்பாடு சொன்னார் சங்கரன் மாமா'

'நல்ல காரியம் செய்திங்க மாமா! ரொம்ப நல்ல காரியம் செய்திங்க.'

'அந்த ரெண்டு ஏக்கர் மஞ்சக்காணி...' கிழவர் தயக்கத்தோடு நிறுத்திக் கொண்டார். இவ்வளவு நாளாய் அதிலிருந்து வந்து கொண்டிருந்த கொஞ்சநஞ்ச ஆதாயத்தைக் கொண்டுதான் கணவன் மனைவி இருவரும் வாழ்க்கையை நிம்மதியாய் ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அது இருந்ததால்தான் மகன்கள் சல்லிக்காசு அனுப்பாத போதிலும், மகள் அவ்வப்பொழுது பிரசவம் அது இது என்று வந்துகொண்டிருந்த போதிலும் அவருக்கு அவ்வளவாய்க் கஷ்டமில்லாமலிருந்தது. இறந்து விட்டதாய் எண்ணியிருந்த மகேந்திரன் திரும்பவும் வந்து சேர்ந்த சந்தோஷம் அவரிடம் அதிக நேரம் நிலைத்திருக்கவில்லை. அவர் இதயத்தில் இடி விழுந்து விட்டது.

மகேந்திரன் அவரை நெருங்கித் தோளில் கை வைத்தான் 'மாமா! அம்மா செத்தபொழுது கொஞ்சமோ நஞ்சமோ செலவாகியிருக்கும் சாம்பலியும் உன்னிடம் கொஞ்சநாள் இருந்திருக்கிறாள். நான் இல்லாதபோது குடும்பத்துக்கு ரொம்பவும் உதவிப் பண்ணியிருக்கிறாய். இதன் மூலமாய் உன் கடன் தீர்ந்துப் போயிடும்னு இல்லை ஆனால் அந்த ரெண்டு ஏக்கரையும் நீயே வைத்துக் கொண்டால் எனக்குத் திருப்தியாயிருக்கும்' என்றான்.

கிழவரின் கண்கள் ஆசையாலும் ஆனந்தத்தாலும் மின்னின. உடனே கசிந்து விட்டன.



'ஆனால் மகேந்திரா...' ஏதோ சொல்லப் போனார்.

'என்னிடம் வேறெதையும் சொல்லாதிங்க. எனக்கு எப்படியும் வீடு இல்லை. எப்பவாவது வரணும்னு தோன்றினால் உன்னிடமே வந்து ரெண்டு நாள் தங்கிட்டுப் போறேன்.'

'அதில்லை. உனக்கு...' கிழவர் தடுமாறினார்.

'என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். எனக்குஜனங்களிடையே செல்வாக்கு நிறைய உண்டு. என் ஒருத்தன் வயிற்றைக் கழிவிக்க அந்த அளவுக்காவது சம்பாதிக்க முடியாமல் போகாது என்னால்' என்றான்.

அவன் அன்று மாலையே அங்கிருந்து புறப்பட்டு விட்டான்.

இங்கே வந்ததுமே ஜீப்பைத் திருப்பி அனுப்பி வைத்துவிட்டு, தன் நிலைமை இதுபோல தாறுமாறாகி விட்டதென்று தெரியப்படுத்தி ராமநாரயணனுக்குக் கடிதம் கொடுத்தனுப்பினான். அவரிடமிருந்து உடனே பதில் வந்தது.

'மகேந்திரா!

உன்னை எப்படித் தேற்றுவது என்றுதான் தெரியவில்லை எனக்கு. நெருங்கியவர்கள் என்று யாருமேயில்லாத நான், பயங்கரமான தனிமையை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அந்த வருத்தம் எனக்குத் தெரியும். மகேந்திரா! என் உடல்நிலை அவ்வளவாய் நன்றாகவேயில்லை. சில நாட்கள் நாட்டையெல்லாம் சுற்றிவிட்டு வரவேண்டும் போலிருக்கிறது. என்னோடு கூட உன்னையும் அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீ உடனே புறப்பட்டு வா. மனிதனுக்குச் சாதாரண சமயத்தைக்காட்டிலும் உடல்நலம் இல்லாதபொழுதுதான் ஆதரவு காட்டுபவர்கள் அவசியம் தேவை.

உறவினர்கள் என்ற பெயரில் என்னைச் சுற்றிக் கொண்டிருக்கும் பந்துக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இவர்கள் அன்பெல்லாம் என் சொத்தின் மேல்தானே தவிர என்மேல் இல்லை என்று எனக்குத் தெரியும்.

நேற்றுதான் என் தூரத்து மருமகன் சொந்தக்காரன் ஒருவன் டாக்டரிடம் போய் அவர் இன்னும் எவ்வளவு நாள் பிழைத்திருப்பார் என்று சொல்லச்சொல்லி வற்புறுத்தினாராம்.

ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் அவர்கள் எல்லோரிடமிருந்தும் தப்பித்து ஓடிப் போவதற்காகத்தான் என் இந்தப் பிரயாணம்! நாளைக்கு நான் பெங்களூருக்குப் போகிறேன். அங்கே நம்மோடு கூட கைதியாயிருந்து ஜெயிலில் மரணமடைந்த என் சிநேகிதனின் தாய் இருக்கிறாள். நீ வரும்வரை அங்கேயே இருப்பேன். நீ வந்ததுமே நாம் புறப்பட்டு விடலாம்.

மகேந்திரா! நீ உலகத்தில் 'தனியன்' என்று ஒரு நாளும் நினைக்காதே. உனக்கு நான் இருக்கிறேன். அதே போல எனக்கும் நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கையோடு உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்—'

அக்கடிதத்தைப் பத்து முறையாவது படித்திருப்பான். மகேந்திரன் பெருமூச்சு விட்டான். தன் வாழ்க்கை ஒரு நிலைக்கு வரும்வரையிலும் தந்தையைப் போன்ற ராம் நாராயணனின் நிழலில் இருந்து தீர வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். அவரிடம் போவதற்கு முன்னால் சாம்பவியைச் சந்திக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.



# 8

பத்து நாட்களில் அரும்பாடுபட்டு மகேந்திரன் சாம்பவியின் விலாசத்தை சம்பாதித்துக் கொண்டான்.

நாகராஜன் ஸ்டீல் பாத்திர வியாபாரம் செய்து வந்தாராம். அவருடைய ஒரே மகன் சந்திரன் ஐதராபாத்தில் லாயராய் இருக்கிறானாம். தற்சமயம் எல்லோருமே அங்கேதான் இருக்கிறார்கள். சாம்பவி சந்திரன் விவாகம் நடந்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிறதாம். இந்த விஷயத்தைக் கேட்டதும் அவனால் தேறிக் கொள்ளவும் முடியாதபடி தளர்ந்து விட்டான்.

எவ்வளவு யோசித்துப் பார்த்தும் அவனுக்கு சாம்பவியின் மேல் கோபம் வரவில்லை. அவன் இறந்துவிட்ட தாய் எண்ணி அவள் இத்திருமணத்திற்குச் சம்மதித்திருப்பாள். இப்பொழுது அவன் போய் அவளுக்கு முன்னால் நின்றால், சுகமாய் நடக்கும் அவர்கள் வாழ்க்கையில் குழப்பம் ஏற்படுமோ? என்ன செய்யலாம்? அதற்காகப் பார்க்காமலிருந்து விடவும் அவன் மனம் ஒப்புக்கொள்ள மறுத்தது. பார்த்து சாம்பவியைத் தேற்றவேண்டும். 'நான் என்றுமே உன்னுடையவன் தான் சாம்பவி! என்னைப்பற்றி யோசித்து உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாதே. சந்திரன் மனைவியான நீ எல்லா விதத்திலும் அவனை சந்தோஷப்படுத்த வேண்டியதுதான் தர்மம் இவ்வாறு ஏதேதோ கற்பனைப் செய்து கொண்டு அவன் சென்னைக்கு புறப்பட்டான்.

சாம்பவியின் வீட்டை எளிதாகவே கண்டு பிடிக்க முடிந்தது அவனால். சந்திரன் வீட்டிலில்லை என்று தெரிந்தது. 'அம்மாவைச் சந்திக்கிறேன்' என்றான் மகேந்திரன். அவன் இதயம் விநோதமாய் படபடக்கத்' தொடங்கியது. கணவனுக்குப் பக்கத்தில் சாம்பவியைச் சந்திப்பது வேறு. தனியாய்ச் சந்திப்பது வேறு.

'முடியாது, யார்வந்தாலும் முடியாது, அப்புறமாய் வரச் சொன்னாங்க' என்றான் வேலைக்காரன்.

'ஒரு நிமிஷம் போதும்.'

'முடியாதுன்னு சொல்லலை? அம்மா கிளப்புக்குப் போயிட்டிருக்காங்க. இப்ப யாரையும் பார்க்க மாட்டாங்க.' மகேந்திரன் கண்கள் வியப்பால் விரிந்தன. ஒரு வினாடி நின்று, 'வந்தது உன் அத்தான் மகேந்திரன்னு சொல்லு. அப்பக் கூட முடியாதுன்னு சொல்லிட்டால் உடனே போயிடறேன்' என்றான்.

வேலைக்காரன் மகேந்திரனை ஏறயிறங்கப் பார்த்து விட்டு உள்ளே போனான்.

மகேந்திரன் டிராயிங் ரூமில் நின்று கொண்டிருந்தான். அந்த அறையும் அதிலிருந்த சாமான்களும் சாம்பவி எவ்வளவு உன்னத நிலையில் இருந்தாள் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன. செல்வந்தர்களிடம் உள்ள டாம்பீகம் நன்றாய்த் தெரிந்தது.

ஐந்து நிமிஷத்தில் சாம்பவி அறைக்குள் வந்தாள். காலடி சப்தம் கேடடு மகேந்திரன் திரும்பிப் பார்த்தான்.

யார் இந்தப் பெண்! சிவப்பாய், குள்ளமாய், பருமனாய், விலையுயர்ந்த புடவையில் உடம்பெல்லாம் நகைகள் மின்ன வந்து நிற்கும் இவள் யார்? உண்மையில் சாம்பவிதானா? மகேந்திரன் தடுமாற்றமடைந்தான்.

சாம்பவியின் கைகளில் ஜாதிமல்லிகைப் பூக்களைத் தொடுத்திருந்த சரம் இருந்தது. இருவரும் அதிர்ந்துப் போய் ஒருவரையொருவர் விழுங்கிவிடுவது போல்பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள் ஒரு விநாடி.

'சாம்பவி!'—செல்வச் செழிப்புடன் இருந்த அவளை சாம்பவியாய் உணர அவன் மனம் தயங்கிற்று.



'மகேந்தர்!' அவள் சட்டென்று ஓடி வந்து அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

'சாம்பவி!' அவன் தொண்டை அடைத்துக் கொண்டது.

'மகேந்தர்! நீங்கதானா? நிஜமாய் நீங்களேதானா?'

'நான்தான் சாம்பவி! நான்தான்'. அதற்குமேல் பேச அவனுக்கு முடியவில்லை. நிமிஷங்கள் ஓடின.

'இந்த ஜென்மத்தில் திரும்பவும் உங்களை உயிரோடு இது போலக் கண்ணால் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை.

இன்றைக்கு எழுந்ததுமே நான் யார் முகத்தில் விழித்தாளோ?' அவள் அவன் கைகளை விட்டு விட்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

மகேந்திரன் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

'உட்காருங்கள்! என்னால் இன்னும் நம்பவே முடியலை. வேலைக்காரன் வந்து சொன்னபோது நிஜமாய் எனக்கு எதுவுமே புரியலை!'

அந்தப் பரபரப்பில் சாம்பவியின் கையிலிருந்த பூச்சரம் கீழே நழுவி விழுந்து; அவள் காலடியில் நசுங்கிப் போயிற்று.

'ஐயோ!' என்றான் மகேந்திரன் குனிந்து அதைக் கையிலெடுத்துக் கொண்டே.

'அதா? போகட்டும், வேறொன்று தொடுத்துக் கொள்கிறேன்.' அலட்சியமாய்ச் சொல்லி விட்டு' மகேந்திரன் கையைப் பிடித்து சோபாவில் உட்கார வைத்துவிட்டு, 'இதோவரேன்!' என்று உள்ளே ஓடினாள்.

மகேந்திரனின் வெறிப்பிடித்தவனைப் போல கையி லிருந்த பூச்சரத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கலகலவென்று சிரித்தாற் போல மலர்ந்து இதழ் விரிந்து கொண்டிருந்த பூக்கள் இப்பொழுது வாடிக் கசங்கிப் போய் தீனமாய்ப் பார்த் தாற்போலிருந்தது.

'கிளப்புக்கு வரமுடிலைன்னு போன் பண்ணினேன்.' திரும்பி வந்த சாம்பவி சொன்னாள்.

திரும்பி வந்த சாம்பவியிடம் ஒரு விதமான மிடுக்கும் கம்பீரமும் தென்பட்டன.

மகேந்திரன் சுருக்கமாய் தன் கதைகளையெல்லாம் சொன்னான்.

சாம்பவி இரக்கத்தோடு, ஒரு சிநேகிதியைப் போல் கேட்டுக் கொண்டிருந்தாள். சம்பாஷணை சாம்பவியின் விஷயமாய்த் திரும்பியது. கணவனைப் பற்றிய பேச்சு வந்ததுமே சாம்பவியின் முகத்தில் கோடிப் பிரகாசம் ஏற்பட்டது.

'அவர் ரொம்ப நல்லவர் மகேந்திரன்! என் மேல் உயிர்' பெருமையாய்ச் சிரித்தாள். அந்த வார்த்தைகள் மகேந்திரனின் இதயத்தில் சூலமாய் தைத்துக் கொண்டன என்று அவளுக்குத் தெரியாது.

சாம்பவியின் அந்தஸ்து பெருகிவிட்டது. எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமாய்க் கழிந்து கொண்டி ருந்தது வாழ்க்கை. அந்தச் சமயத்தில் நாகராஜனின் அரவணைப்பு கிடைத்தது மிக அதிர்ஷ்டம். நிறுத்தாமல் தன் பெருமையைப் பீற்றிக் கொண்ட அவள் தோரணை யைப் பார்த்ததுமே மகேந்திரனுக்கு அவளைப் பார்க்க வந்த மகிழ்ச்சி கூட வற்றி விட்டது.



'ஆனால் சாம்பவி...' கடைசி சந்திப்பைப் பற்றியும் அந்த வாக்குறுதியைப் பற்றியும் ஞாபகப்படுத்தப் போனான். அதை உணர்ந்து விட்டாற்போல சாம்பவியின் முகம் கொஞ்ச நேரம் சிவந்து விட்டது. உடனே அலட்சி யமாய் அதைத்தள்ளிவிட்டு, 'விடு அத்தான்! நாளைக்கோ நாளன்றைக்கோ ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகி றேன் நான்! நீங்கள் அந்தவிஷயத்தை ஞாபகப்படுத்தினீங் கன்னால் வெட்கத்தால் என் உயிரே போகிறது' என்றாள்.

மகேந்திரன் வாயடைத்துப் போய் விட்டான். அவன் மனம் பனிக்கட்டியைத் தொட்டாற்போல மரத்துப் போய் விட்டது.

'சூழ்நிலை மாறும் போது மனிதன்கூட மாறுவது தான் சகஜம். அந்த மாறுதலை நீங்க புரிஞ்சுக்கணுமே தவிர பழிக்கக்கூடாது' சாம்பவியின் குரல் கம்பீரமாய் வெளிவந்தது.

'நான் ஒரு பெண். எனக்கு வேறு கதி இல்லாமல் போய் விட்டது, என்ன செய்வேன்?'—

என்று கண்ணீர் மல்கச் சொல்லியிருந்தால் அவன் எவ்வளவு திருப்தியடைந்திருப்பான்!

ஆனால் சாம்பவி அம்மாதிரி யோசிக்கும் நிலையில் இல்லை.

'அதுசரி, எங்கே தங்கியிருக்கீங்க நீங்க?'—

சம்பாஷணையை மாற்றுவதற்காகக் குசல பிரச்சனை களைக் கேட்கத் தொடங்கினாள்.

'ஒரு நண்பன் வீட்டில்!'— எங்கோ பார்த்தபடி பதில் சொன்னான்.

கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, 'எங்கள் வீட்டிலேயே வந்து தங்குங்க' என்றாள்.

'வேண்டாம் சாம்பவி!'

'என்?'

'உனக்கு எதுக்கு அவ்வளவு சிரமம்?'

'பலே ஆள்தான்' வராமல் அபூர்வமாய் வந்திருக்கிங்க. நாலுநாள் வெச்சுப்பது ஒரு சிரமமா? போகட்டும் அவர் வரட்டும். அவரே கேட்டபிறகு வந்துக்கலாம்.'

'நான் போயிட்டு வரேன் சாம்பவி.'

'இதென்னது? அவர் வரதுக்குள்ளேயா? பலே ஆள்தான் நீங்க! உட்காருங்க, இதோ காபி டிபன் கொண்டு வரச் சொல்லி சமையல்காரனுக்குச்சொல் விட்டு வரேன்.' எழுந்து உள்ளே ஓடினாள்

வாயைத் திறந்தால் 'அவர், அவர்!' அவரைப் பற்றிய நினைவைத் தவிர வேறெந்த ஞாபகமுமோ இராது போலிருந்தது சாப்பவிக்கு. அவர் ரொம்ப நல்லவர். பரிச்சயமானல் நீங்களே அப்படிச் சொல்லுவீர்கள். அவர் சீக்கிரத்திலேயே அட்வகேட் ஜெனரல் ஆகப்போகிறார்'

'அவருக்கு என் மேல் உயிர்!'—

இந்த வார்த்தைகளே திரும்பத் திரும்ப அவன் இதயத்தைத் துளைத்தெடுக்கத் தொடங்கியது. சாம்பவி இல்லாமல் அவனால் ஒரு நிமஷம் கூட இருக்க முடியாதாம். வீடு திரும்பியதுமே கண்ணில் படாவிட்டால், 'சாம்பவி', 'சாம்பவி' என்று பதறிப்போய் விடுவானாம்,

சாப்பவியை மணம் செய்து கொண்ட பிறகு அவனுக்குத் தொட்டதெல்லாம் பொன்னாயிற்றாம். 'இதெல்லாம்



உன் அதிர்ஷ்டந்தான்'-என்கிறானாம். 'ஒரு பெண்ணிற்கு வாழ்க்கையில் இதைவிட வேறென்ன வேண்டும்? ஒரு பெண் அதிர்ஷ்டத்திற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா?'— இதுதான் சாம்பவியின் வார்த்தைகளிலிருந்த பொருள்.

மகேந்திரன் ஏமாற்றத்தால் தளர்ந்துப் போய் விட்டான். அவன் தான் என்னென்ன கற்பனைகள் செய்து கொண்டிருந்தான்! இந்த நான்கு ஆண்டுகளுக்குள் தான் சாம்பவி எவ்வளவு மாறிப் போய் விட்டாள்.

அவனுக்குத்தெரிந்தசாப்பவிக்கும் இவளுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள்! உருவத்தில் மட்டுமில்லை, சுபாவத்தில் கூட எவ்வளவு வித்தியாசங்கள்! உருவத்தில் மட்டுமில்லை சுபாவத்தில்லும் கூட எவ்வளவு வித்தியாசம் இருந்தது!

அந்த அப்பாவியான சாம்பவியின் மனதில் அவனைத் தவிர வேறு யாருக்குமே இடமில்லாமலிருந்தது. இளம் வயதில் கனவு வாழ்க்கையில் மிதந்து கொண்டிருந்த அந்த சாம்பவிக்கு வாழ்க்கை என்றால் பயம் இல்லை. இப்பொழுது இந்த சாம்பவிக்கு லாயர் சந்திரன் மனைவியாய் புதிய குணாதிசயங்கள் வந்து சேர்ந்து விட்டன. ஆசைகள் படமெடுத்தாடத் தொடங்கி விட்டன.

பெண் ஒரு சமூகத்தில் ஆடம்பரமாய் நாலு பேருக்கு முன்னால் வளைய வரவேண்டுமென்றால் பெயரும் புகழும் உடைய கணவன் வேண்டும். அவற்றையெல்லாம் அவன் வழங்கிக் கொண்டிருப்பதால்தான் கணவன் மேல் அவ்வளவு உயிரா?.

படிப்பில்லாத சாம்பவிக்கு இடையில் வந்த செல்வத்தால் அப்பாவித்தனம் போய், விவேகம் நசிந்து, ஆடம்பரமாய் வாழவேண்டும் என்ற ஆர்பாட்டம் அதிகமாகி விட்டது.

மகேந்திரனுக்கு முள்ளின் மீது உட்கார்ந்திருப்பது போலிருந்தது. எப்பொழுது அங்கிருந்து வெளியேறு வோமா என்றிருந்தது.

சாம்பவி டிபன் காபி எடுத்துக் கொண்டு வந்தாள்.

அதைச் சாப்பிட்டதாய் பேர் பண்ணிவிட்டு எழுந்து போக முயன்ற போது, சந்திரனே வந்து விட்டான். சாம்பவி பரிச்சயம் பண்ணினாள்.

சாம்பவி அவ்வளவு பெருமையாய், தன் அதிர்ஷ்ட மாய் மெச்சிக் கொண்ட கணவன் குள்ளமாய்... பருமனாய் இருந்தான். அவன் மிக புத்திசாலி என்பதற்கு பளபளத்த அந்த வழுக்கைத்தலையே சான்று. இவ்வளவு சின்ன வயதிலேயே அத்தனை தலைமயிரும் கொட்டிப் போனது வேதனையான விஷயந்தான்! சாம்பவி அவனி டம் என்ன சொன்னாள் என்று மகேந்திரனுக்குப் புரிய வில்லை.

சந்திரனுக்குக் கூட மகேந்திரனிடம் பெரிதாய் ஆர்வம் ஒன்றும் ஏற்படவில்லை. முற்றுப்புள்ளி வைத்தாற்போல் பேசினான். அந்தப் பேச்சில் கூட தான் ஒரு லாயர் என்ற கர்வம் பிரதிபலித்தது.

கொஞ்ச நேரங்கழித்து மகேந்திரன் போய்விட்டு வருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டான். சந்திரன் ஆட்சேபணை சொல்லவில்லை. அவன் சோபாவிற்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த சாம்பவி குனிந்து ரகசிய மாய் அவன் செவியில் ஏதோ சொன்னாள்.

ஒரு வினாடி புருவங்களை நெறித்த சந்திரன் உடனே முகத்தை மலர்ச்சியாய் வைத்துக்கொண்டு, 'உங்கள் மருமாள் உங்களை நாலு நாள் வந்து தன் வீட்டில் இருக்கச் சொல்கிறாள்' என்றான், அலட்சியமாய் தமாஷ் பேசினாற்போல.



சாம்பவி அதென்னவோ ஜோக் என்பது போல பாவித்து கலகலவென்று சிரித்தாள்.

மகேந்திரன் தன்னால் இருக்க முடியாது என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

❋ ❋ ❋

படியிறங்கி வந்து கொண்டிருந்த போது வராந்தாவில் ஜோடியாய் நின்று விடை கொடுத்துக் கொண்டிருந்த தம்பதிகளைப் பார்த்து அவன் மனம் எதிர்ப்பார்த்தாற் போலப் பொறாமைப் படாமல் போனது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டு எதிர்பார்த்தபடியிருந்த தருணம் ஏதோ நிம்மதியாய் தாண்டிப் போய்விட்டாற்போல அப்பாடா என்றிருந் தது.

ஆனால் வேறு விதமான வருத்தம்! வரும்போது அவன் ஊகித்துக் கொண்டு வந்த எதுவுமே நடக்க வில்லை.

அவன் பிழைத்து உயிரோடு திரும்பி வந்ததற்கு சாம்பவி மகிழ்ச்சியடைந்தது உண்மையே! அதில் அன்பு இருந்தது. ஆனால் நெருக்கம் இல்லை. அன்பான உறவினன் ஒருவனாய் சிறுவயதுத் தோழனாய்ப் பரிவு இருந்தது; ஆனால் காதலாய் நேசம் இல்லை.

இவ்வளவு நாளாய் இறந்து போய் விட்டதாய் நினைத்து மறந்து விட்டிருந்த ஆள் உயிரோடு கண்முன் வந்து நின்றதால் ஏற்பட்ட அடக்கமாட்டாதசந்தோஷம்! ஆனால் அதில் பல நாட்களாய் எதிர்பார்த்துப் பார்த்துத் தவித்துப்போய், ஏமாற்றத்தால் தளர்ந்து போய் எதிர் பாராமல் திருப்பவும் ஏற்பட்ட மனநிறைவு இல்லை.

இப்போதைய இந்த சாம்பவிக்கு வீடு, கணவன், குழந் தைகளைத் தவிர வேறெந்த விஷயத்தைப் பற்றியும்

யோசிக்க அவகாசமே இல்லை. மகேந்திரனைப் பற்றிக் குரலை பிரச்னை கேட்பதோடு சரி. மனத்தளவில் அவன் நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அன்பு இல்லை.

சாம்பவியைப் பற்றி நினைத்துக் கொண்டால் அவனுக்குக் காரணமில்லாமலேயே எரிச்சல் ஏற்பட்டது. பார்க்காமலேயே இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். அது ஒரு இனிய நினைவாய் என்றென்றும் நிலைத்து விட்டிருக்கும். கண்ட கனவெல்லாம் புழுதியாகிவிட்டன. மனக்கோட்டைகள் இடிந்து சரிந்து விட்டன.

இனி என்ன செய்ய வேண்டும்? தயைஇன்றி சாம்பவி அவனுக்கு ஏற்படுத்தி விட்டுப்போன தனிமையிலிருந்து அவன் எப்படித்தப்பித்துக் கொள்வது? ஏமாற்றத்தாலும், அவமானத்தாலும், கோபத்தாலும் அவன் ரத்தம் கொதிக்கத் தொடங்கியது.

ஆனால் என்ன செய்வான்? இந்த ஊரும், இந்தக் காற்றும் அவனுக்கு வேதனையைத் தந்தாற் போலிருந்தது.

## 9

அடுத்த ஒரு மணி நேரத்தில் ரயில்வே ஸ்டேஷனில் இருந்தான் மகேந்திரன். அவன் பிளாட்பாரத்தில் வந்து நின்றபோது ரயில் புறப்படத்தயாராய் இருந்தது. அதிக நேரம் இல்லை. எதிரே தென்பட்ட கம்பார்ட்மென்டில் ஏறிக் கொண்டு விட்டான். முதல் வகுப்புப் பெட்டி அது. கம்பார்ட்மென்டில் யாருமே இல்லை...இப்படியே நடக்கட்டும்! டிக்கெட் இல்லாமல்.

முதல் வகுப்பில் பயணம் பண்ணும் தன்னை நெருங்கி, 'டிக்கெட் எங்கே?' என்று டிக்கெட் கலெக்டர் கேட்டால், 'இல்லை' என்று டபாய்த்து விடுவான். அவர் ஏதாவது



மிகமிஞ்சிப் பேசிவிட்டால் பிடித்து அடிப்பான். பிறகு ஜெயில் அதுவே மேல். இந்த வெளியுலகத்தைவிட அந்த ஜெயிலே நன்றாயிருக்கும். மகேந்திரன் உறுதியோடு உட்கார்ந்திருந்தான். ஒரு டிக்கெட் கலெக்டரேயில்லை பெட்டிக்குள் யார் வந்தாலும் சரி, அவர்களைக் கூப்பிட்டுச் சண்டைக்கு இழுக்கவேண்டும் என்ற நிலையில் இருந்தான் அவன். இல்லாவிட்டால் அவனுக்கு வெறிப் பிடித்துவிடும் போலிருந்தது.

ரயில் கொஞ்ச நேரத்திலேயே ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றது. மகேந்திரன் எவ்வளவு ஆசையாய் எதிர்பார்த்த போதிலும் யாருமே வந்து கம்பார்ட்மென்டில் ஏறவில்லை. நேரமோ ஓடிக் கொண்டேயிருந்தது. ரயில் திரும்பவும் புறப்படத் தயாரானது. இங்கேயும் அவனுக்கு ஏமாற்றந்தான்!

இந்த நிலையில் தனியாய் இருக்கவே அவனுக்கு தைரியம் போதவில்லை. எதிர்ப்பாராமல் மிக நுட்பமான இடத்தில் அடியுண்ட அவன் மனம் விவேகத்தை இழந்து விட்டது. அவனுக்கு என்னவாகிவிட்டது. இன்றைக்கு? மனம் ஏன் வெறிப்பிடித்தக் குதிரையாய் அலைப்பாய்கிறது? அவனுக்கு அவன் மீதே வெறுப்பு ஏற்பட்டது.

இவ்வளவு நாளாய் ராம் நாராயணனின் நெருக்கத்தால் படிந்திருந்த நல்ல பண்புகள் எல்லாம் எங்கே ஓடி ஒளிந்தன. அவரிடமிருந்து வாழ்க்கையைப்பற்றி கற்றுக் கொண்டிருந்த பாடங்கள் எல்லாம் புழுதியில் கரைந்து விட்டதா? அவரைப்பற்றிய யோசனைகள் வந்ததுமே அவன் மனம் கொஞ்சம் சாந்தமடைந்தது. வயோதிகரான தந்தைக்குச் சமமான பாசமுடைய அவர் நினைவு வந்ததுமே விவேகம் கொஞ்சங் கொஞ்சமாய் விழித்துக் கொள்ளத் தொடங்கியது.

மகேந்திரன் இறங்கிப் போய் டிக்கெட் வாங்கிவந்து விடலாம் என்றெண்ணினான். அதற்குள் ரயில் புறப்படத்

தயாராய் கூவி விட்டது. மகேந்திரன் எழுந்து பாத்ரூமிற்குப் போனான்.

அவன் திரும்பி கதவைத் திறந்தபொழுது கம்பார்ட்மென்டில் யாரோ ஏறியிருந்தார்கள். எதிரேயிருந்த பெர்த்தின் மேல் சாமான்கள் தென்பட்டன. அப்பாடா என்று நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டு விட்டு, சக பிரயாணியை கம்பார்ட்மென்ட் முழுவதும் கண்களால் தேடிய பொழுது கதவிற்கு உட்புறமாய்த் தாழிட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் கண்ணில் பட்டாள். தனியாய் பயணம் செய்ததால் வெளியேயிருந்து யாரும் உள்ளே நுழைந்து விடாமலிருக்க, கதவையும் ஜன்னல்களையும் சாத்தி பந்தோபஸ்து பண்ணிக் கொண்டாள். மகேந்திரன் பாத்ரூம் கதவிற்கருகில் நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கதவைச் சரியாய் தாழிட்டிருக்கிறோமோ இல்லையோ என்று மற்றொரு முறை பரிசோதித்துத் திருப்தியடைந்த அவள் திரும்பினாள். மகேந்திரன் அங்கிருந்து வந்து தன் பெர்த்தில் உட்கார்ந்து கொண்டான்.

தன்னந்தனியாய் இருந்த ஒரு கம்பார்ட்மென்டில் மூதல் முதலாக அவனைப் பார்த்த அந்தப் பெண்ணின் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. அதில் லீலையாய் பயமும் எட்டிப் பார்த்தது. அதைப் புரிந்து கொண்ட மகேந்திரனின் உதடுகளில் குறுநகை படர்ந்தது.

உண்மையில் என்ன பெண்களோ இவர்கள்! இல்லாத எண்ணங்களையெல்லாம் ஏற்படுத்தித் தூண்டி விடுவதில் கை தேர்ந்தவர்கள்.

அவனையே பார்த்து கொண்டிருந்த அப்பெண்ணின் முகத்தில் அளவுக்கு மீறிய பயம் வந்து சேர்ந்து கொண்டது. கை தன்னையறியாமலேயே மார்பின் மேல்



போயிற்று. அலட்சியமாய் அருதான்றையும் பொருட்படுத்தாமல் சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொள்ளப் போன மகேந்திரன், சட்டென்று நின்றுவிட்டான். அவன் பார்வை அப்பெண்ணின் மார்பின் மீது நிலைத்து, அவ்விடத்தில் தொங்கிக் கொண்டிருந்த புலிநகடாலரைக் கூர்ந்து பார்த்தன. இந்தப் பெண் கையில் ஏற்றிப் பிடித்துக் கொண்டிருந்த தீக்குச்சி முற்றிலும் எரிந்து விரலில் பட்டு சுளீரென்றது. ரயில் அதற்குள் பிளாட்பாரத்தை விட்டுப் புறப்பட்டு வேகத்தை மேற்கொண்டது.

அவன் அளவில்லாத ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே அப்பெண்ணின் கண்கள் பரபரப்புடன் கம்பார்ட்மென்ட் முழுவதும் தேடி அபாயச்சங்கிலி இருந்த இடத்தில் நிலைத்தது.

அவள் பார்வையை உணர்ந்து கொண்ட மகேந்திரனின் கண்கள் அபாய சங்கிலி தான் உட்கார்ந்திருந்த இடத்திற்கருகிலேயே இருந்தது உணர்ந்து குறும்பாய்ச் சிரித்தன.

கொஞ்ச நேரம் திளமாய் பார்த்த அப்பெண், அடுத்த நிமிஷமே துணிச்சலை வரவழைத்துக்கொண்டு தலையைக் குலுக்கிக் கொண்டு பெர்த்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். மகேந்திரனின் கை தன்னையறியாமல் கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டது. அங்கே அப்பெண் பெண் ஏற்படுத்தியிருந்த காயம் நிரந்தர முத்திரையாய் ஆழமாய்ப் பதித்துப் போய் பள்ளத்தை ஏற்படுத்தியிருந்தது. மகேந்திரனுக்கு ஒரு வினாடி அப்பெண்ணைப் பார்த்து— 'ஒன்றும் பயப்படத் தேவையில்லை; அன்று கூட அனாவசியமாய்த் தவறாய் புரிந்து கொண்டுவிட்டாய்: அன்று கையைப் பிடித்தது என் தவறுதான்; ஆனால் என் மனதிலிருந்த எண்ணம் இதுதான்!'—என்று விவரமாய்ச் சொல்லிவிட வேண்டும் போலிருந்தது.

'நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். என்னால் உனக்கு எந்த ஆபத்தும் வராது'— என்று நாக்கு நுனி வரையிலும் வந்துவிட்ட வார்த்தைகள் — அப்பெண் கண்களில் தென்பட்ட பயத்தையும், தலையைத் திருப்பிக் கொண்ட விதத்தில் தென்பட்ட திமிரையும் பார்த்தபிறகு கொஞ்ச நேரம் அழவைத்து விட்டுப் பிறகு சொல்லவேண்டும் என்ற குறும்புத்தனமான எண்ணம் தடுத்தி நிறுத்தி விட்டது.

அப்பெண்ணிற்கருகில் வந்து, கொஞ்ச தூரத்தில் அந்த பெர்த்தின் மீது உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது கூட அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுக்க வேண்டுமானால் அவனைத் தாண்டிக் கொண்டுதான் போய்த்திரவேண்டும்.

அவன் ஒரு காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். தான் உட்கார்ந்திருந்த பெர்த்தின் மேல் வந்து உட்கார்ந்து கொண்ட அவனைப் பார்த்துப் பயப்படவில்லை. வெறுப்படைந்தாற் போல முகத்தை வைத்துக் கொண்டாள். 'உன்னால் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது'— என்பதுபோல மிடுக்காய் பார்த்துவிட்டு அந்தப் பக்கமாய்த் திரும்பி ஜன்னல் கதவு ஒன்றை மேலே தூக்கப் போனாள்

அதைவிட அந்தப்பெண் பயந்தாற்போல தீனமாய் பார்த்திருந்தால், அவன் உருகிப் போயிருப்பான்.

தன் நடத்தைக்கு வெட்கமடைந்து, மன்னிப்புக்கேட்டுக்கொண்டு போய் தன் சீட்டில் உட்கார்ந்திருப்பான்.

ஆனால், 'உன்னால் என்னை ஒன்றும் பண்ணிவிட முடியாது'— என்ற அலட்சியம் அவனைத்தூண்டிவிட்டது. அதனால் உடனே அவளிடம் வந்து ஜன்னலைத் திறக்க முடியாமல் தடுத்தான்.



அந்தத் தருணத்திற்காகவே எதிர்பார்த்துக்கொண்டிருந்த அப்பெண் சட்டென்று எழுந்து மின்னலாய் அபாயச் சங்கிலியை நோக்கி ஓடப்போனாள். மகேந்திரன் சரேலென்று வந்து காலைக்குறுக்கே வைத்தான். திடீரென்று அவன் கால் குறுக்கிட்டதால் துள்ளி விழப் போனாள். நிமிஷத்தில் அவனுடைய பலமான கை வந்து அப்பெண் குப்புற விழுந்து விடாமல் தடுத்து விட்டது. கோபத்தால் கண்கள் சிவக்க கூர்ந்து பார்த்தாள் அவனை. அவன் சிரித்தான்.

அவள் கையை விடுவித்துக் கொள்ளப் போனாள். ஆனால் முடியவில்லை. கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு மகேந்திரன் கையை விட்டு விட்டான்.

அடுத்த நிமிஷம் இரு கைகளாலும் அவனைப் பிடித்துப் பலமாய்த் தள்ளி விட்டாள். அடுத்த வினாடியே அபாயச் சங்கிலி கைக்கு எட்டியிருக்கும். ஆனால் அதற்குள் எழுந்துவிட்ட மகேந்திரன் இரு கைகளையும் நீட்டி அப்பெண்ணின் உடம்பைத் தொட்டு அப்பால் பிடித்து இழுத்தான். இழுத்த வேகத்தில் அப்படியும் இப்படியும் அசைந்துப் போய்க் கொண்டிருந்த ரயிலின் வேகந்திற்கு நிற்க முடியாமல் பெர்த்தின் மேல் வந்து விழுந்தான்.

'இப்பொழுது என்ன பண்ணுவாய்?' ஆத்திரத்துடன் கேட்டான் அவன்.

பதிலுக்கு அப்பெண்ணின் கைகள் வந்து மகேந்திரனின் முகத்தில் பலமாய் பட்பட்டென்று தாக்கின.

முதலில் கொஞ்ச நேரம் அசந்துப் போய்விட்ட அவன், உடனே ஒரு கையால் அவ்விரு கரங்களையும் அழுத்திப் பிடித்துக் கொண்டு அசைய முடியாமல் செய்தான். இன்னொரு கையால் அப்பெண்ணின் உடம்பை எழுந்திருக்க முடியாமல் அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

ஒரு வினாடி நேரம் அப்படியே நீடித்தது

மகேந்திரன் அழகாய் தினமாய் இருந்த மைத்திட்டிய அக்கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்பெண் இமைகளைப் படபடத்தபடி பயந்தவாறு பார்த்தாள். அப்பார்வை அவன் இளமையைத் தூண்டி விட்டது.

மிக நெருக்கத்தில் இழுத்து அணைத்துக் கொண்டிருந்த அந்த அழகான உடல் இச்சையைத் தட்டி எழுப்பி விட்டது. விவேகத்தை ஆவேசம் அடக்கிவிட்டது. என்றோ அவமானப்பட்ட அந்தராத்மா பழி வாங்கச் சொல்லி அவசரப்படுத்திற்று. அவனிடமிருந்த நல்ல பண்பை இச்சையால் மயக்கமடைந்து தடுமாறிக் கொண்டிருந்த மிருகத்தன்மை வெற்றி கொண்டு விட்டது.

ஒரு வினாடி அவன் கலவரமடைந்தான். ஆனால் அடுத்த நிமிஷம் உண்மையாகவே அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

முதலில் திவிரமாய்ப் போராடி எதிர்த்த அப்பெண்ணின் உடல் கடைசி நிமிஷத்தில் சோர்ந்துப் போய், அதை விட்டுட்டு அவனுக்குக் கட்டுப்பட்டுப் போய் விட்டது.

❋ ❋ ❋

நேரம் கடந்தது. எதிர்ப்பாரத இச்சம்பவத்தால் தானும் பயந்து போய் விட்டாற்போல ரயில் இன்னும் வேகமாய் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது.

மகேந்திரன் எழுந்து சரியாய் உட்கார்ந்து கொண்டு, அப்பெண்ணை மடியில் இழுத்துக் கொண்டான். அதற்குள் சலனம் ஒடுங்கிப் போய்விட்ட உடல் துவண்ட கீரையாய் அவன் கைகளுக்கிடையே தொங்கிற்று.



மகேந்திரன் அப்பெண்ணை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தான். இமைகள் மூடிக்கொண்டு கொஞ்சம் நலிந்துப் போனாற்போல தென்பட்ட அம்முகம், களைத்துப் போய் மயக்கத்தில் ஆழ்ந்திருந்த அவன் கண்களுக்கு மிக அருமையாய், அபாரமாய்த் தென்பட்டது. வெகு நேரம் அப்படியே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். நினைவு தப்பி விட்டிருந்த அந்த நிலையிலும்கூட விம்மிக் கொண்டிருந்தாற்போல அப்பெண்ணின் கழுத்து நரம்புகள் அதிர்ந்து கொண்டேயிருந்தன.

அவன் அன்பாய் அவள் நெற்றியில் படிந்த கேசங்களை விலக்கினான் திடீரென்று அவனுக்கு இரக்கம் ஏற்பட்டது. இதென்னது? அப்படி ஆகிவிட்டதே! மிருகத்தனம் என்று எண்ணாமல் தன்னை ஏன் இவ்வாறு அடிமைக் கொண்டு விட்டாள்? அப்பாவித்தனமான அம்முகத்தைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு மூளையே சுழன்றது. இப்பொழுது அவன் என்ன செய்ய வேண்டும்? அவன் கடமை என்ன? முன்பின் தெரியாத இப்பெண்ணை இப்படியே விட்டுவிட்டுப் போவதா? அல்லது... அல்லது...

அப்பெண்ணின் கண்கள் விரிந்தன.

அவன் சிநேகபூர்வமாய் முறுவல் பூத்தான்.

பயந்து போய் பார்த்த அப்பெண் உடம்பை முறுக்கிக் கொண்டு பின்னுக்குப் பின்னுக்கு நகர்ந்து கொண்டாள்.

'பயப்படாதே!' அவன் மேல் குனிந்து மெதுவாய்ச் சொன்னான். ஆனால் அதைக் கேட்டதாய்த் தெரியவில்லை அவள். மறுமுறை அவள் முகம் களையிழந்து விட்டது.

❋ ❋ ❋

திடீரென்று ரயில் நின்றதால் அவன் திடுக்கிட்டு விட்டான். மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டு, என்ன சப்தம் வரப்போகிறதோ என்று காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

ஆனால் எவ்வளவு நிமிஷங்கள் கழிந்தும் ஒன்றுமே ஆகவில்லை. யாரும் வரவில்லை. பொறுமையின்றிப் போய், பரபரப்பை அடக்க முடியாதவனாய், தன்மடியில் இருந்த அப்பெண்ணை சரியாய்ப் படுக்கவைத்துவிட்டு, எழுந்து போய் ஜன்னல் கதவைத் திறந்தான்.

குளிர்ந்த காற்று ஜன்னல் வழியாய் விர்ரென்று வந்து வீசிற்று. வெளியே காரிருள். ஏதோ ஸ்டேஷன் நெருங்கவிருந்தது போலிருந்தது. சிக்னலுக்காக அனுமதி வேண்டி ரயில் பெரிதாய் ஆத்திரமடைந்து கூவிக்கொண்டிருந்தது. வெளியே பார்த்துக் கொண்டிருந்த அவன் கண்கள் திரும்பி வந்து பெர்த்தின்மேல் சலனமில்லாமல் படுத்துக்கிடந்த அப்பெண்ணின் முகத்தின் மீது நிலைத்தன.

அவளுக்கு நன்றாய் விழிப்பு வருவதற்குள்ளாகவே தான் இறங்கிப் போய் விட்டால்? தப்பு செய்த பிறகு தண்டனையை அனுபவிக்கப் பின் வாங்குபவன் இல்லை அவன். தான் செய்துவிட்ட இத்தவற்றுக்கு எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் வாயைத் திறக்காமல் ஏற்றுக் கொள்வான் அவன். ஆனால்... ஆனால், இந்த வெட்கங்கெட்ட காரியம் இன்னும் யாருக்காவது தெரிந்து, அவர்கள் ஏதாவது தீர்ப்பு அளிப்பதைவிட அந்தத்தண்டனை ஏதோ அதைத்தானே விதித்துக்கொள்வது நல்லது.

அடுத்த ஐந்தாவது நிமிஷம் அவன் ரயிலை விட்டு இறங்கி விட்டான். ஆகாயத்தில் அடர்த்தியாய் கருமேகங்கள் பரவியிருந்தன. லேசாய் குளிர்ந்த தூற்றலுடன் சேர்ந்து வீசிக்கொண்டிருந்த காற்று அவன் உடம்பைத் தொட்டுக் களைப்பாற்றத் தொடங்கியது.



மகேந்திரன் நகரப் போகும் ரயிலடியில் விழுந்து தற்கொலைப் செய்து கொள்ள வேண்டும் என்ற திட சங்கல்பத்துடன் இறங்கினான். ஆனால் பத்து நிமிஷங்கள் ஆகியும் ரயில் நகரக்காணோம். ஒரு முடிவிலிருந்து மாறவும், மனிதன் தேறிக் கொள்ளவும், வாழ்க்கை மீது ஆயிரம் மடங்கு ஆசை தோன்றவும் அந்தப் பத்து நிமிஷங்கள் போதும் அவன் தைரியம் விழித்துக்கொண்டது. சாகப்போவதற்கு முன்னால் வாழ்க்கை மேலும் இனிப்பாய்த் தோன்றி முறுவலுடன் கைகளை நீட்டியது. அதனால் உறுதி கொஞ்சமாய் தளர்ந்தது. அந்தந் தளர்ச்சியால் பலவந்தமாய் கைகளுக்கிடையே பிடித்துச் சிறைப் படுத்தப்பட்டிருந்த 'சாகவேண்டும்' என்ற எண்ணம் குருவியாய், சிறகுகளைப் படபடத்துக் கொண்டு விர்ரென்று பறந்து போய் விட்டது!.

அவன் ஆம், இல்லை என்று மனதில் போராடிக் கொண்டிருந்தபோதே ரயில் போய்விட்டது. போய்க் கொண்டிருந்த ரயிலையே செய்வதறியாது பார்த்துக் கொண்டே நின்று விட்டான் அவன்.

வெகு நேரங்கழித்து மகேந்திரன் தூக்கத்தில் எழுந்து நடப்பவனைப் போலத் தள்ளாடிக் கொண்டே ரயில் பாலத்தையொட்டியே நடக்கத் தொடங்கினான். தொலைவில் மினுக் மினுக் என்று எரிந்துக் கொண்டிருந்த வெளிச்சத்தைக்கொண்டு அங்கே ஏதோ ஸ்டேஷன் இருப்பதாய்த் தெரிந்தது. அந்த ஸ்டேஷனை நெருங்குவதற்கு வெகு நேரம் பிடித்தது.

11352
2968852

# 10

மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்த பிறகு ஏறக்குறைய ஐந்தாறு ஆண்டுகளில் நாட்டில் நிறைய மாறுதல்கள் தோன்றின. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் ஹீனமான அடிமை வாழ்க்கையில் மங்கிப்போய்க் கொண்டிருந்த ஜனங்களுக்கு சுதந்திரம் புதிய ஒளியை வரவழைத்தது.

முஸ்லிம்கள் இந்துக்களோடு போராடித் தனியாய் பாகிஸ்தானை ஏற்படுத்திக் கொண்டார்கள். தேசத் தந்தையான மகாத்மா, இறந்தார். துப்பாக்கி குண்டுக்கு பலியாகித் தரையில் சாய்ந்த அவர் பிரிவால் புதிதாய் கிடைக்கப்பட்ட இந்த வெளிச்சம் கூட அணைந்து விடுமோ என்று பயந்த ஜனங்களுக்கு முன்னால் ஜவஹர்லால் நேரு வந்து. அந்த ஒளியைத் தான் ஏற்றுக்கொண்டு நிமிர்ந்து நின்றார். அவர் தலைமையில் நாடு முன்னேற திட்டங்கள் தயாராயின. சுதந்திரமாய் நிற்க எண்ணி எதிர்த்து சில சமஸ்தானங்கள் சர்தார் பட்டேலின் தலைமையில் ஒரு குடையின் கீழ் வந்து யூனியனுடன் சேர்ந்து விட்டன.

இந்தச் சமயத்தில் ஜனங்களின் வாழ்க்கை நிலைகூட மிகத் தாறுமாறாகி விட்டன. படகுகள் வண்டிகளாயின. வண்டிகள் படகுகளாய் மாறின. லட்சாதிபதிகள் ஓட்டாண்டிகளாய் மாற, அடுத்த வேளைக்கு கதியில்லாத சிலர் கோடீஸ்வரர்களானார்கள். நாட்டில் மெல்ல மெல்ல அமைதியும் பாதுகாப்பும் பெருகின. ஜனங்களிடையே அமைதியான வாழ்க்கை தொடங்கியது.

மகேந்திரனின் வாழ்க்கையில் கூட பெரிய மாறுதல்கள் வந்தன. ராம்நாராயணன் மரணமடைந்து சுமார் ஆறு மாதங்கள் ஆகிவிட்டன கடந்த ஐந்தாறு ஆண்டுகளாய் மகேந்திரன் அவரோடேயே நிழலாய் இருந்து வந்தான்.



சத்தியாக்கிரகம் நடந்த சமயத்தில் அநேக ஆண்டுகள் சிறையில் இருந்து வந்ததால், ஏற்கனவே பூஞ்சையான அவர் ஆரோக்கியம் கெட்டு விட்டது. எவ்வளவு பணம் செலவழித்த போதிலும், எவ்வளவு டாக்டர்களைப் பார்த்த போதிலும் அவர் உடல் நிலை பழைய நிலைக்குத் திரும்பவேயில்லை. நாளுக்கு நாள் குன்றிக் கொண்டே வந்த அவர் உடல்நிலை கடைசியில் காசமாய் மாறி விட்டது.

இது தெரிந்ததுமே இனி அதிகநாள் அவர் பிழைத்திருக்கமாட்டார் என்று உணர்ந்து கொண்டே உறவினர்கள், கழுகாய் வந்து அவரைச் சூழ்ந்துக் கொண்டார்கள். அவர்களிடமிருந்து அவரை மீட்டு அமைதியாய் வாழச் செய்வதே மகேந்திரனுக்குப் பெரிய பிரச்சினையாகி விட்டது.

சில சமயம் அவரை நிழலாய்ச் சுற்றிக் கொண்டேயிருந்த அவனைப் பார்த்து சிலர்—. இது தொற்றுநோய்; மறந்துவிடாதே! — என்று எச்சரித்தார்கள்.

ஆனால் அவன் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. கடைசிக் காலங்களில் பெற்ற மகனைக் காட்டிலும் மேலாய்க் கண்ணின் இமைகளாய் அவரைக் கவனித்து வந்த மகேந்திரனைப் பார்த்து மனம் நெக்குருகிப் போய் விட்ட அவர், அவனுடைய பலமான கைகளைத் தன் மெலிந்த கரங்களில் ஏந்திக் கொண்டு,

'இது எந்த நாளைய பந்தமோ!' என்பார். தன்னலமில்லாத அவன் ஆதரவிற்கும், ஆடம்பரமில்லாத அவன் அன்பிற்கும் அவர் புளகாங்கிதம் அடைந்துவிடுவார். அந்திம காலத்தில் பெற்ற மகன் இல்லாத குறையைச் சகல விதத்திலும் தீர்த்து வைத்துக்கொண்டிருந்த அவனைப் பார்த்தபோது, உள்ளூர ஏற்பட்ட சந்தோஷத்தையும்

திருப்தியையும் அவர் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டார். ஆனால் ஒரு வார்த்தை கூட என்றுமே வெளியே சொன்னதில்லை.

அவர் மரணமடைந்த பிறகு வாரிசுகள் என்று உரிமை கொண்டாடிக் கொண்டு வந்தவர்களையும், மகேந்திரனையும் உட்காரவைத்து லாயர்கள் உயிலைப் படித்தார்கள். அதில், 'ஐதராபாத்தில் அவருக்கு இருந்த பெரிய பங்களாவை, தாம் கணவன் மனைவி இருவர் பெயரிலும் ஏழைகளுக்குத் தர்மமாய் சேவை பண்ணும் ஆசுபத்திரியாய் மாற்றவேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருந்தார். வியாபாரத்தில் தனக்கு வந்த ஆதாயத்தில் முக்கால் பாகத்தை ஆசுபத்திரி செலவிற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும், மீதி கால் பாகம் தன் வளர்ப்பு மகனைப் போல இருந்து வந்த மகேந்திரனைச் சேரவேண்டும் என்றும், மகேந்திரன் தானே சுயமாய் வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டு ஆசுபத்திரியை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும், இது தன் கடைசி ஆசை என்றும் தெரிவித்திருந்தார். அதோடு கூட ஐதராபாத்திலிருந்து நாற்பது மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் உள்ள பத்து ஏக்கர் நிலமும், வழிவழியாய் வந்து கொண்டிருக்கும் அங்குள்ள வீடும் மகேந்திரனைச் சேரவேண்டும் என்றும் தான் மரணமடைந்த அடுத்த நிமிஷத்திலிருந்தே மகேந்திரன் தன் வாரிசாகவே நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமில்லை; கிராமத்திலுள்ள அந்த வீட்டையும் நிலத்தையும் எந்தச் சூழ்நிலையிலும் அவன் விற்க உரிமையில்லை. அவை வாரிசு உடைமையாய் மகேந்திரனின் குழந்தைக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

இந்த உயிலைப்பற்றிக் கேட்டதுமே உறவினர்களோடு சேர்நது மகேந்திரனும்கூட த் திகைத்துப் போய்விட்டான்



அவர் மனதில் இருந்த அன்பு இதுபோல மகனாய் தன்னை ஏற்றுக்கொண்டு உயில் எழுதச் செய்திருக்கும் அவன் கனவிலும் எண்ணியிருக்கவில்லை. இந்த விஷயம் தெரிந்திருந்தால் அவன் அந்த வீடு, நிலம், வியாபாரத்தில் பாகம் எல்லாவற்றையும் மறுத்திருப்பான்.

ஒருக்கால் இது தெரிந்துதான் அவர் என்றுமே அதைப் பற்றிய பேச்சையே அவனுக்கு முன்னால் எடுக்கவில்லை போலிருந்தது.

உண்மையில் அவர் சொன்னது போல் எந்த ஜென்மத்து பந்தமோ? நன்றியாலும் பாசத்தாலும் மகேந்திரனின் கண்கள் பனித்தன.

வந்த உறவினர்கள் எல்லோரும் மகேந்திரனை முகத்திற்கு முன்னாடியே திட்டித் தீர்த்தார்கள்.

'கடைசி சமயத்தில் கிட்டே நெருங்கியிருந்து அது போல எழுதச் செய்து விட்டாய்'—என்றார்கள்.

'சொத்தின் மேல் கண்வைத்துக்கொண்டுதான் அவரை எங்களிடமிருந்து பிரித்துவிட்டாய்' என்றார்கள்.

'ஆனாலும் இப்பொழுதும்ஒன்றும்மிஞ்சிவிடவில்லை, உன்னைக் கோர்ட்டுக்கு இழுத்து ஒரு கை பார்க்காமல் போனால் பார்த்துக் கொள்' என்று சவாலிட்டார்கள்.

'இதையெல்லாம் இழந்து நீ ஏலம் போடும்படிச் செய்கிறோமா இல்லையா பார்' என்று சபதம் செய்தார்கள், லாயர் இடைப் புகுந்து, மகேந்திரனுக்கு எதுவும் தெரியாது என்றும், அவன் அப்பாவி என்றும், சொல்ல முன் வந்தார்.

'போதும்—போதும். நீங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து செய்த சதி இது. இதில் உங்களுக்கும் எவ்வளவு பாகம் இருக்கோ எங்களுக்கென்ன தெரியும்?' என்று கூறி எழுந்து போய்விட்டார்கள் அவர்கள்.

இரண்டு மூன்று நாட்களிலேயே மகேந்திரன் மீது வழக்கு கொண்டு வந்தார்கள் அவர்கள். ஆனால் அவன் இதற்கெல்லாம் சலிப்படைந்து விடவில்லை.

இந்த உலகத்தில் அவனுக்கு இருந்து வந்த ஒரே நெருங்கிய நண்பரும் தந்தைக் கொப்பானவருமான ராம் நாராயணின் பிரிவை எப்படித் தாங்கிக் கொள்வது என்று தான் புரியவில்லை அவனுக்கு.

இத்தனை ஆண்டுகளாய் அவருடைய நெருக்கத்தின் மூலமாய் அவருக்கு அவன் வழங்கிய உதவியைவிட அவருடமிருந்து பெற்றுக் கொண்டதே நிறைய இருந்தன. அன்றைக்கு ரயிலில் எதிர்பாராமல் அந்தச் சம்பவம் நிகழ்ந்த பிறகு, தற்கொலை செய்து கொள்ள துணிச்சல் போதாமல் போகவே, அவனுக்கு வேதனையால் மூளையே சிதறிவிடும் போலிருந்தது. ஆனால் அதிலிருந்து அவனுக்கே தெரியாமல் அவனைக் காப்பாற்றி விட்டார் அவர்.

எத்தனையோ முறை தான் பண்ணிய வெட்கங்கெட்ட காரியத்தை அவரிடம் வாய் விட்டுச் சொல்லி, என்ன பண்ணினால் பிராயச்சித்தம் ஆகும் என்று ஆலோசனை கேட்க நினைத்தான். ஆனால் அவனால் கேட்க முடியவில்லை. நாட்கள் ஆக ஆக, அந்த காயத்தை மெதுவாய் மறந்து போவதற்குத் தேவையான சக்தியை மனம் சம்பாதித்துக் கொண்டுவிட்டது.

அந்த விதமாய் ராம்நாராயணனின் மரணத்தால் மகேந்திரனின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது. அத் திருப்பத்தோடு கூட அவனுக்கு அவர் வியாபாரம், ஆசுபத்திரியாய் மாற்ற வேண்டியிருந்த வீடு, அதன் மூலம் இன்னும் அநேக பொறுப்புக்கள் வந்து சேர்ந்தன. நாட்கள் நிமிஷத்தில் பறக்கத் தொடங்கின.



# 11

செல்வம் என்றுமே தனியாய் வராது. சுற்றத்தையும், சிநேகத்தையும் பெயரையும் புகழையும்கூடச் சேர்த்துக் கொண்டு குடும்ப சமேதமாய் வரும் என்பதுபோல ஆடம்பரமாய் வரும்.

மகேந்திரனுக்குப் புதிதாய் வந்து சேர்ந்த செல்வத்தோடுகூட புதிய சிநேகிதர்களும் நிறையபேர் கிடைத்தார்கள், அவர்கள் அத்தனைப் பேர்களிலும் மகேந்திரனுக்குப் பிடித்தவன் — மனதிற்கு நெருக்கமானவன் 'ப்ரமோத்' என்ற டாக்டர்.

ப்ரமோத் ராம்நாராயணனின் உதவியால் படித்து முன்னுக்கு வந்தவன். அவர் உயிரோடிருந்தபோது ஏற்பட்ட பழக்கம், நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து, நல்ல சிநேகமாய் உருவெடுத்து விட்டது. ப்ரமோதுக்குக்கூட மகேந்திரனின் குணங்கள் மிகவும் பிடித்து விட்டன.

மகேந்திரன அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போய்க் கொண்டிருப்பான். ப்ரமோத் குடும்பத்தில் எல்லாரைக் காட்டிலும் ப்ரமோத் தங்கை ஜமுனாவுக்கு மகேந்திரனை மிகவும் பிடித்துப் போய்விட்டது. குணம் முதலியவற்றிற்கு அதிக இடம் தராதவள் ஜமுனா. மகேந்திரன் குணம் எப்படிப்பட்டதாய் இருந்தாலும் அவளுக்கு அக்கறை இல்லை. அவன் தோற்றம் மட்டும் கண்ணுக்குப்பிடித்துப் போய் அவனை மிகவும் பிடித்து விட்டது. தன் கற்பனைகளுக்கு ஏற்ற ஆண் மகன் என்று நம்பினாள்.

ஆனால் ஜமுனாவின் மனதில் இந்த எண்ணம் இருப்பதை உணராத மகேந்திரன் எல்லோரையும் போலவே அவளுடனும் சரளமாய்ப் பேசிவந்தான்.

ஆனால் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது வாயாடிக் கொண்டும், சதா தன் அழகு எதிராளியைக் கவரவேண்டும் என்றும்° அசட்டுப் பிசட்டுத் தனமாய் ஏதேதோ முயற்சிகள் பண்ணிக் கொண்டேயிருக்கும் ஜமுனாவைக் கண்டால் மகேந்திரனுக்கு வெறுப்பாய் இருக்கும். சிலசமயம் அளவுக்கு மீறிவிட்டால் அருவருப்பாயும் இருக்கும்.

ஆனால் ஜமுனா ஒருத்தியைத் தவிர அக் குடும்பத்திலுள்ள எல்லோருமே அவனுக்கு நெருக்கமானவர்கள் தாம். அதனால் ஜமுனாவின் விஷயத்தைப் பார்த்தும் பாராததுபோல் கவனிக்காமல் இருந்து விடுவான்.

மகேந்திரனின் உதாசினத்தை ஒரு விதமான போஸாக எடுத்துக் கொண்டு தன்னைத் தான் தேற்றிக் கொள்வாள் ஜமுனா. தன் மேல் எந்தக் கவர்ச்சியும் இல்லாமலிருந்தால் அவன் வீட்டிற்கு இவ்வளவு தடவை வருவானோ என்று நம்பினாள்.

## 12

மனித மனம் மிக விநோதமானது. தனியாய் இருந்தாலும் சிலசமயம் உல்லாசமாய் இருக்கும். சிலசமயம் நாலு பேருடன் சுற்றிவந்தாலும் யாருமில்லாமல் தனியாய்ப் பாலை வனத்தில் சுற்றி வந்து கொண்டிருப்பது போலிருக்கும்.

மகேந்திரன் நிலையும் தற்சமயம் அதுபோலத்தான் இருந்தது. தனிமை வருத்தத்தைத் தாங்க முடியாதவனாய் அநேக வியாபங்களை ஏற்படுத்திக் கொண்டான். விருப்பம் இல்லாத போதும் பொழுது போக்கிற்காக ஜமுனாவுடன் பரிச்சயத்தை வளர்த்துக் கொண்டான். வியாபாரத்தைக் கவனிப்பதில் மேலும் அக்கறையை ஏற்



படுத்திக் கொண்டான். ஆனாலும் பூதமாய்ப் பற்றிக் கொண்டிருந்த தனிமையின் தொல்லை அவனை விடவில்லை

சாம்பவி அடிக்கடி நினைவில் வந்து கொண்டேதான் இருந்தாள். அழகாய், ஆனந்தமாய், இருந்த சாம்பவியைப் பார்த்தபோதெல்லாம் அவன் மனம் ஏனோ திடுக்கிட்டுக் கொண்டேயிருக்கும் வாழ்க்கையே சூனியமாய்த் தென்படும்.

சிலசமயம் நள்ளிரவில் திடீரென்று தட்டி எழுப்பினாற்போல விழிப்பு ஏற்பட்டுவிடும். பிறகு தூக்கமே வராது. யோசனைகள் சூழ்ந்து கொள்ளத் தொடங்கிவிடும். அந்த நள்ளிரவில் அந்த அமைதியின்மையைத் தாங்க முடியாமல் எங்கேயாவது ஓடிப்போய் விடவேண்டும் போலிருக்கும்.

ஆனால் எங்கே போவான்? அப்படிப்பட்ட துன்பத்திலிருந்து மீறுவதற்கு வீட்டில் சந்தடி இருக்க வேண்டுமேயொழிய, அதை விலை கொடுத்து வாங்க கடைத் தெருவில் தான் கிடைக்குமா?

அப்படிப்பட்ட சமயங்களில் அநேக ஆலோசனைகளுக்கிடையே அப்பெண்ணின் முகம் நினைவிற்கு வந்து கொண்டேயிருக்கும். எங்கே இருக்கிறாளோ, என்ன பண்ணுகிறாளோ? அவனைப் பற்றிய ஞாபகம் இருக்குமா? எப்பொழுதோ மறந்துப்போயிருப்பாள். சாம்பவியைப் போலவே அந்தப் பெண்ணும் திருமணம் பண்ணிக் கொண்டு குழந்தை குட்டிகளுடன் குடும்பப் பெண்ணாய் இருப்பாள். அவள் மறந்தாலும் அவனால் மறக்கத்தான் முடியுமா? ஒருக்கால் மறக்க நினைத்தாலும் கன்னத்தில் இருக்கும் இந்த வடு மறக்கவிடுமா?

கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் பொழுதெல்லாம் அச்சம்பவம் நினைவுக்கு வந்து வெட்கத்தால் கூசச்

செய்துக் கொண்டிருந்தது உடனே இரையாய்த் துவண்டு நினைவற்றுத் தன் கைகளுக்கிடையே சரிந்த அம்முகம் நினைவுக்கு வந்துவிடும். அது நினைவுக்கு வந்ததுமே அவன் மனமெல்லாம் சுருங்கிவிடும். கடவுள் தான் பண்ணிய பாவத்துக்குத் தன்னை ஏன் தண்டிக்கவில்லை? மாறாக சகல சம்பத்துக்களையும் வேறு தந்து ஆசிர்வதித் திருக்கிறாரே! எதற்காக? ஒருக்கால் என்றாவது ஒருநாள் தாமிருவரும் சந்தித்துக்கொண்டால் எப்படி இருக்கும்? மகேந்திரனும் ஏனோ அக் காட்சியைக் காணவேண்டும் என்ற ஆவல் உறுதியாய் ஏற்பட்டு விட்டது.

இவ்வளவு ஆண்டுகளாய் அவள் எங்கேயாவது தென்படுவாளோ என்று அவன் மனம் ரகசியமாய்த் தேடிக் கொண்டேதான் இருக்கிறது. குறைந்த பட்சம் அதே சாயலுடைய பெண்கூட அவனுக்குத் தென்படவில்லை. ஒன்று மட்டும் உண்மை, இனி வாழ்க்கையில் அப்பெண் தென்பட்டாலும் சரி, இல்லையெனினும் சரி, அவன் மட்டும் வாழ்நாளெல்லாம் அவளை மறக்கவே மாட்டான். அந்த அனுபவம் அவ்வளவு ஆழமாய்ப் பதிந்துப் போய்விட்டது அவன்மனதில்.

அன்று ஜமுனா முதலியவர்கள் சேர்ந்து பிக்னிக்கிற்குக் கிளம்பியபோது அங்கு ஜமுனா சாமாத்தியமாய் முயற்சி செய்து அவனுடன் தனியாய் இருக்க அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டாள்.

சுற்றிலும் நிலா வெளிச்சம், நிசப்தம், அமைதியான சூழ்நிலை!

'உங்கள் முகத்தில் இதென்ன வடு? எப்பொழுது ஏற்பட்டது இது?'

சுண்டு விரலால் அவன் கன்னத்தில் தட்டிவிட்டுக் கேட்டாள்.



ஒரு வினாடி ஜமுனாவை வெறித்துப் பார்த்தவன், சட்டென்று எழுந்து தொலைவில் போய் நின்றுக்கொண்டான். திடீரென்று அவனுக்கு அந்த நிலா வெளிச்சமும், தனிமையும் வெறுப்பைத் தந்தன. பின்னாலிருந்து ஜமுனா கூப்பிட்டுக் கொண்டே இருந்த போதிலும் பொருட்படுத்தாமல் மளமளவென்று எல்லோரும் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்து கொண்டான். எதிர்பாராமல் அவன் மனமெல்லாம் சிதறிவிட்டது. மன அமைதி ஒழிந்தது.

அவனை இத்தனைப்பேரும் இவ்வளவு கௌரவிக்கிறார்களோ! அவன் செய்த இந்தப் பயங்கரமான தவற்றைச் சொல்லிவிட்டால், அவன் முகத்தில் கூட விழிப்பார்களா என்று தெரியாது. ராம் நாராயணனின் சொத்திற்கு அவன் வாரிசாகி விட்டதற்கு மனம் புழுங்கிக் கொண்டிருக்கும் எதிரிகளுக்கு இது எவ்வளவு நல்ல அவகாசமாகி விடும்?

அவன் திருமணமே செய்து கொள்ள மாட்டான். செய்துக் கொண்டாலும் மிக சாமானியமான ஒரு பெண்ணை தன்னிடமிருந்து பாதுகாப்பு, ஆனந்தம், குழந்தைகள் இவற்றைத் தவிர வேறெதையும் விரும்பாத பெண்ணைப் பார்த்து தான் பண்ணிக் கொள்வான். மனதில் சாம்பவிக்குக் கூட இல்லாத தனிச்சிறப்பை அப்பெண் சம்பாதித்துக் கொண்டு விட்டாள். அப்பெண் நினைவிற்கு வந்து விட்டால் வேறு ஒருத்தியைத் தொடக் கூட அருவருப்பாய் இருந்தது அவனுக்கு.

வீடு திரும்பிய பிறகும்கூட அன்றிரவு வெகுநேரம் வரை அவனுக்கு உறக்கமே வரவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னால் எதிர்ப்பாராமல் நடந்து விட்ட இந்த விநோதமான சம்பவத்தைப்பற்றி இவ்வளவு தூரம் ஏன் யோசிக்க வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு

மனிதனின் வாழ்க்கையிலும் ஏதாவது ரகசியமில்லாமல் போகாது அதேபோல அவனாலும் அதை எளிதாய் ஏன் எடுத்துக்கொள்ள முடியவில்லை?

அவன் இவ்வளவு தூரம் அவளைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறானே, அந்தப் பெண்ணிற்கு ஒரு நாளில் ஒரு நிமிஷமாவது அவனைப்பற்றிய ஞாபகம் இருக்குமா?

எது என்னவானாலும் சரி அவள் எங்கேயிருந்தாலும் தேடிப்பிடித்து ஒருமுறை பார்க்க வேண்டும் பார்த்ததுமே அந்த சோகக் கண்களில் தென்படும் அந்நினைவுகளின் பிரதுபலிப்பு எப்படி இருக்குமோ?

மகேந்திரனுக்கு எப்படியாவது செல்வத்தில் புரண்டுக் கொண்டிருக்கும் அவனை — இதற்குள் ஒரிரு குழந்தைகளின் தாயாய்க்கூட ஆகியிருக்கும் அவளை எப்படியாவது பார்த்துத்தீர வேண்டும் என்ற ஆசை ஏற்படத் தொடங்கியது.

## 13

சில நாட்களுக்கு முன்னால் மகேந்திரன் எந்தத் தனிமையைப் பார்த்துப் பைத்தியம் பிடித்துவிடும் போல பயந்தானோ — எந்தத் தனிமையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றே நாலு பேருக்கு முன்னால் வளைய வந்து கொண்டிருந்தானோ, அந்தத் தனிமைக்காகவே இப்பொழுது தவிக்கத் தொடங்கிவிட்டான்.

நாளுக்கு நாள் அவனுக்கு நெருக்கமானவர்களின் எண்ணிக்கைப் பெருகத் தொடங்கியது. அவன் எவ்வளவு தூரம் அவர்களிடமிருந்து விலகிக்கொள்ள முயன்றாலும் சாத்தியப்படவில்லை. அதோடுகூட அவன் ஏதோ வருத்



தத்தில் ஆழ்ந்திருக்கிறான் என்றும், அதனால் தாம் நெருக்கமாய் கூடவே இருந்தால் அந்தக் கவலையைமறக்க முடியும் என்றும் சொல்லி இன்னும் அதிகமாய் நெருங்கத் தொடங்கினார்கள்.

எல்லோரையும் விட ஜமுனாவிடமிருந்து தப்பித்துக் கொள்வதுதான் அவனுக்குப் பெரிய பிரச்சினையாயிருந்தது. அவனைக் கேட்காமலேயே, அவன் சம்மதம் இல்லாமலேயே ஜமுனாவை அவன் மணக்க விரும்புவதாய்ப் பிரசாங்கள் பரவத் தொடங்கிவிட்டன.

ஜமுனாவைப் பிடிக்காத சிலர் — முக்கியமாய் தம் மகள்களையோ தங்கைகளையோ அவனுக்குக் கட்டி வைத்துவிடவேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தவர்கள், ஜமுனாவின் நடத்தை சரியில்லை என்றும், வேண்டுமானால் உதாரணம் காட்டுகிறோம் என்றும், யோசித்துப் பார்த்து விட்டு அடியெடுத்து வைக்கும் படியும் ஆலோசனைகள் சொல்லத் தொடங்கினார்கள்.

இந்த ரகளை ஒரு புறமிருக்க, ஆசுபத்திரிக்கு அபாயின்ட் பண்ண வேண்டியிருந்த டாக்டர்களுக்காகவும் சிபாரிசு செய்தபடி சுயமாய் பலர் வரத்தொடங்கினார்கள்.

அதனால் அவனுக்கு ஒரு நிமிஷம் கூட ஓய்வில்லாமல் ஓய்ச்சலாய் இருந்தது. சில நாட்கள் இவர்கள் எல்லோரையும் விட்டுட்டு எங்கேயாவது தொலைவிற்குப் போனால் தான் பிழைக்க முடியும் என்றும் தோன்றியது.

கடைசியில் யோசித்துப் பார்த்து விட்டு, ராம்நாராயணன் தன் பெயரில் எழுதி வைத்திருந்த அந்தக் கிராமம் எப்படி இருக்கிறது பார்த்துவிட்டு வருவோம் என்று புறப்பட்டு விட்டான்,

* * * *

மிகச் சிறிய கிராமம் அது. தாழ்ந்த வகுப்பினர்தான் அங்கே அதிகமாய் வசித்து வந்தார்கள். அவரவர்களின் தொழிலும், அவரவர்களின் அக்கிரகாரமும் தனித்தனியே இருந்தன. வேலை இருந்தாலேயொழிய மற்றவர்கள் விஷயத்தில் தலையிடமாட்டார்கள். நகரத்திற்கு வெகு அண்மையில் இருந்தபோதிலும் அதன் பிரபாவம் சிறிதும் பிரதிபலிக்காத ஊர். ஐதாரபாத்தில் அலுப்படைந்து போனால் நாலு நாட்கள் இங்கே வந்து தங்கினால் போதும் மனம் ஓய்வு பெற்று, திரும்பவும் உற்சாகத்தை அடைந்து விடும்.

வீடு மிகப் பழமையானது. கட்டிடம் மிகப் புராதன மாய் இருந்தாலும் விசாலமான அறைகளுடன் வசதியாய் இருந்தது. வீட்டைச் சுற்றிலும் இருந்த எல்லையில் இடது பக்கமாய் நாலைந்து மாமரங்களும், இரண்டு கொய்யா மரங்களும், ஒரு வேப்ப மரமும் இருந்தன. அவற்றைத் தாண்டிக் கொண்டு இன்னும் கொஞ்சம் முன்னால் போனால் அடர்ந்து வளர்ந்திருந்த சப்போட்டாமரங்கள் இருந்தன. அதற்கிடையே மெல்லிய ஒற்றையடிப் பாதையையொட்டி நடந்தால் நாலைந்து பர்லாங்கு தூரத்திற்கு மூங்கில் தோட்டம் இருந்தது. அரைமைல் நடந்தால் மூஸி நதியை அடையலாம்.

மூஸி நதியிலிருந்து ஒரு கிளை நதி பிரிந்து இந்த பக்க மாய் ஓடிக்கொண்டிருந்தது. மழை நாட்களைத்தவிர மீதி நாட்களில் வீதிகளில் நீர் அவ்வளவு அதிகமாய் இருந்தது.

அமைதியான அச்சூழ்நிலையையும் இயற்கை அழகை யும் பார்த்த பிறகு மகேந்திரனுக்கு உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது. தற்சமயம் முகாமை இவ்விடத்திற்கு மாற்றிக் கொண்டு விட வேண்டும் என்ற முடிவிற்கு வந்து விட்டான். தன்னிடம் எப்படியும் கார் இருந்தது. நாற்பது கிலோ மீட்டர் தூரம் என்பது அதிக தொலைவில்



இல்லை. காலையில் போய் வேலைகளையெல்லாம் முடித் துக் கொண்டு இரவில் திரும்பியும் விடலாம்.

பல ஆண்டுகளாய் மனித சஞ்சாரம் இல்லாததால் வீடெல்லாம் பாழடைந்துப்போய் பெரியப் பெரிய சிலந்தி வலைகள் பின்னிக் கொண்டிருந்தன. சுவர்கள் பெயர்ந் திருந்தன. வீட்டைச் சுற்றிலும் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுச்செடிகளும் கொடிகளும் புழுப்பூச்சுகளுக்கு வாஸஸ்தலமாகியிருந்தது. அன்று அங்கிருந்து போன மகேந்திரன் நாலு நாட்களுக்குப் பிறகு கம்பெனியிலிருந்து ஒருத்தனை அழைத்து வந்து வீட்டையெல்லாம் காட்டி விட்டு எப்படி மாற்றி அமைக்கலாம் என்று ஆலோசனை சொன்னான். எவ்வளவு செலவானாலும் சரி, பணத்தைப் பார்க்காமல் வீட்டைச் சுற்றிலும் நல்ல தோட்டங்களை அமைக்க ஏற்பாடு செய்யும்படி சொன்னான்.

இரண்டே மாதங்களில் வீட்டின் அமைப்பே மாறிப் போய் விட்டது. மரங்களின் கீழே 'குவிந்திருந்த செத்தை சேதாரங்களை அப்புறப்படுத்தி விட்டார்கள். இப்பொழுது அவ்விடமெல்லாம் கண்ணாடியைப் போலத் துப்புறவாகி விட்டது. சுண்ணாம்பு அடித்து, ஜன்னல் களுக்கும் கதவுகளுக்கும் பூச்சுக்கள் முடிந்து புதிய பங்களா வாய் மாறிவிட்டது. திரும்பி வந்த மகேந்திரன் இதை யெல்லாம் பார்த்து விட்டு திருப்தியுடன் தலையாட்டி னான்.

'ஒரு சின்ன வேண்டுகோள் சார்' என்றார் மேனேஜர்.

'என்ன?'

'நம்ப வீட்டிலிருந்து நதிகரைக்குப் போகும் வழியில் சப்போட்டா தோட்டம் இருக்கு இல்லீங்களா?'

'ஆமாம். அதற்கென்ன வந்தது?'

'அதற்கு இந்தப் பக்கமாய் ஒரு சின்ன ஓட்டு வீடு இருக்கு சார்!'

'இருந்தால்?'

'ரொம்ப பழைய வீடு சார். அதை எப்படியாவது விலைக்கு வாங்கிட்டீங்கன்னால் அங்கேயிருந்தே தோட்டம் போட்டுக்கலாம்.'

'ரொம்ப விலை இருக்காது சார். ரொம்பப் பழைய வீடு. சிதிலமடைந்து போயிருக்கு.'

'விலையைப் பற்றிப் பிரச்னை இல்லை; விற்க அவங்க ஒப்புக்க வேண்டாமா?'

'அவங்க ரொம்ப ஏழைங்க சார் நாம் கொஞ்சம் அதிகமாய் ஆசைக்காட்டினால்...'

'முயற்சி பண்ணிப் பாருங்க' என்றான்.

ஆர்வத்தோடு போன மேனேஜர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பி வந்தார்.

'அவங்க விற்கிறதாய் இல்லை சார்.'

'யாருடைய வீடு அது?'

'ஐதராபாத்தில் ஒரு ஜமீன்தார் வீட்டில் வேலை செய்யும் ஊழியர் ஒருத்தருடையதாம்.'

'அவரைக் கூப்பிடு, நான் பேசுகிறேன்.'

'அவர் இப்ப இல்லையாம் சார். ரஜாக்கர் இயக்கத்தில் செத்துட்டாராம். அவர் மனைவி குழந்தைகள் இருக்காங்க அவங்க ஒப்புக்க மாட்டேங்கிறாங்க.'

'அப்ப என்ன பண்ண முடியும்?'



'இல்லை சார். நீங்க கொஞ்சம் முயற்சிப் பண்ணிப் பாருங்க. அங்கே தோட்டம் நன்றாய் வரும். நீங்க கேட்டால் அவங்க மறுக்க மாட்டாங்கன்னு நம்பறேன்.'

மகேந்திரன் இதுவரை அந்த வீட்டுப் பக்கமாய் போனதேயில்லை. அவனுடைய படுக்கையறையிலிருந்து பார்த்தால் தொலைவில் அடர்ந்த காட்டுச் செடிகளுக்கிடையே சிக்கிக் கொண்டிருக்கும் ஓட்டு வீட்டில் சமைத்துக் கொண்டிருப்பதற்கு அறிகுறியாய் அவ்வப்பொழுது மாலைவேளையில் வளையம் வளையமாய் புகை மேலே எழும்பிக் கொண்டிருக்கும்.

மாலையில் நதிக்கரைப் பக்கமாய் காலாற நடந்து போய் விட்டுத் திரும்பும்போது வேண்டுமென்றே சுற்றிக் கொண்டு அந்தப் பக்கமாய் அவ்வீட்டிற்கு முன்பாய் போனான்.

எந்த காலத்து வீடோ என்று சொல்லும்படியாய் மிகப் புராதனமாய் இருந்தது வீடு. சுண்ணாம்பு அடித்துப் பல ஆண்டுகள் ஆகியிருக்கும் போலிருந்தது. சிதலமடையத் தயாராய் இருந்தது.

வீட்டிற்கு முன்னால் மண் தரையில் மெழுகிக் கோலம் போடப்பட்டிருந்தது. வாசல் கதவிற்கு வெளுத்துப் போன பழைய புடவையைத் திரைச்சீலையாய் போடப்பட்டிருந்தது. வீட்டிற்கு முன் பாகத்தில் இருந்த பந்தலில் ஜாதி மல்லிகைக் கொடியானது படர்ந்து மேலே ஏறிப் போயிருந்தது.

மேனேஜர் சொன்னது உண்மைதான் அந்த வீட்டை வாங்கி விட்டால் அங்கே தோட்டம் மட்டுமேயில்லை; சின்ன மாடி கூட கட்டிக் கொள்ளலாம். அங்கிருந்து நதியும் அதற்கப்பால் இருந்த குறுங்காடும் கண்களுக்கு விருந்தாய் இருந்தன.

வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே மகேந்திரன் மேனேஜரைக் கூப்பிட்டு, 'அந்த வீட்டில் யார் இருக்காங்க?' கேட்டான்.

'தாயும், இரு பசங்களும் சார்.'

'ஆண் பசங்களா, பெண் பசங்களா?'

'ரெண்டுபேருமேதாங்க! பெண் பெரிது, பிள்ளைச் சின்னவன்!'

'தாய்க்கு எவ்வளவு வயதிருக்கும்?'

'ஐம்பதுக்கு மேலே இருக்கலாம்.'
பெண்ணுக்கு?'

மேனேஜர் தலையைச் சொறிந்துக் கொண்டார். 'நான் சரியாய்ப் பார்க்கவில்லை. அதிகமாய் போனால் இருபத்தைந்து இருக்கலாம்.'

'கல்யாணம் ஆகலையா?'

இம்முறை அவர் காதைச் சொரிந்துக் கொண்டார். 'தெரியாதுங்க.'

'ஆண் பிள்ளை?'

'நொண்டிப் பையன் சார். கட்டிலை விட்டு எழுந்திருக்க முடியாது அவனால்.'

'பின்னே யாரோடு பேசுவது? நீங்களே போய் அவங்க அந்த வீட்டை விற்று விட்டால் இந்தப் பக்கமாய் தெருவுக்கு சமீபத்தில் இருக்கிற நம்ப இடத்தைத் தந்து விடுகிறோம்னு சொல்லு.' மேனேஜர் ஆர்வத்துடன் ஓடப் போனார்.



'இதப்பாருங்க!' மகேந்திரன் பின்னாலிருந்து கூப்பிட்டான். 'அந்த இடத்தில் சின்ன வீடு ஒன்றைக் கட்டித் தரும் பொறுப்பைக்கூட நாங்களே ஏற்றுக் கொள்கிறோம்னு சொல்லுங்க' என்றான்.

'சரி!' அடுத்த நிமிஷமே அங்கிருந்து மின்னலாய் ஓடத்தொடங்கினார்.

பத்து நிமிஷங்கழித்து தள்ளாடிக் கொண்டே திரும்பி வந்தார்.

மகேந்திரன் என்ன என்பது போலப் பார்த்தான்,

'லாபம் இல்லை சார். அவங்க விற்க மாட்டாங்களாம்.'

'ஏனாம்? கொஞ்சம் பணம் அதிகமாய்த் தருவதாய் ஆசைக் காட்டவில்லையா?'

'அந்தக் காரியத்தை எப்பொழுதோ பண்ணிப் பார்த்தாச்சு.'

'ஒப்புக்காவிட்டால் அந்த வீட்டு வழியாய் பெரிய பெரிய கால்வாய்களை வெட்டி நதியிலிருந்து நீர் எடுத்துக்கப்போகிறோம்னு பயமுறுத்தினால் போறது' என்றான் மகேந்திரன் கோபமாய்.

அவனுக்கு எண்ணியது நடக்காவிட்டால் மிகக் கோபம் வந்துவிடும். எப்படியாவது அதை சாதித்துக் கொள்ளும் வரை உறக்கமே வராது.

'யாரைப் பயமுறுத்த முடியும் சொல்லுங்க? வீட்டில் இருக்கிறது பெண் பிள்ளைங்க. எதற்கும் பிடி கொடுத்துப் பதில் சொல்ல மாட்டாங்க.'

'பெண்களானால் இன்னும் சுலபம்!' மகேந்திரனின் உதடுகள் கடினமாய் சிரித்தன.

'அவங்களைப் பார்த்தால் அப்படி மசியறவங்களாய் தோணலை' முணுமுணுத்தார் மேனேஜர்.

'சரி, நானே பார்க்கிறேன்!'

இந்த விஷயத்தைத் தானே சுயமாய் முடிவெடுத்துக் கொள்ள தீர்மானித்துக் கொண்டு விட்டான்.

மறுநாள் அதுபோல நதிக்கரையை நோக்கிப் போய் விட்டுத் திரும்பி வரும்போது, தோளில் ஈரத்துணியுடனும், இடுப்பில் தவலையுடனும் ஒரு பெண்மணி எதிர்பட்டாள். வயதையும் தோற்றத்தையும் பார்த்து அவள் யார் என்று எளிதாய் ஊகித்துக் கொண்டான்.

'உங்கள் வீட்டுக் கொல்லையில் கிணறு இல்லையா?

பரிச்சயத்தை வளர்த்துக் கொள்வதற்காக மிக மென்மையாய்க் கேட்டான்.

'இல்லை!' முற்றுப்புள்ளி வைத்தாற்போலச் சொல்லி விட்டு அவள் மளமளவென்று போய்விட்டாள்.

## 14

பிறகு தொடர்ந்தாற்போல இரண்டு நாட்கள் நதிக்கரையில் அவளுக்காகக் காத்துப்பார்த்தான். ஆனால் அவளைக் கண்ணில் காணவில்லை.

கடைசியாய்த் துணிந்து தானே அவர்கள் வீட்டிற்குப் போனான். வராந்தாவில் திரைக்குப் பின்னால் நின்று கொண்டு மெதுவாய் கைத்தட்டினான். பதிலுக்கு உள்ளேயிருந்து,—



'யாரது?' என்று மழலைக்குரல் இன்னும் போகாத ஒரு ஆண் குரல் கேட்டது.

'கொஞ்சம் வெளியே வரீங்களா?'

'மகேந்திரனுக்கு வீட்டிற்குள் போகலாமோ கூடாதோ தெரியவில்லை. 'நீங்களே உள்ளே வாங்க' உள்ளிருந்து அழைப்பு வந்ததால் ஒரு வினாடி தயங்கிவிட்டு திரையை நீக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். விசாலமான அறையில் பழங்காலத்துக் கம்பிகளைக் கொண்ட ஜன்னல் கதவிற்குப் பக்கத்தில் இருந்த கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த சிறுவன், தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பொருள் பொதியப் பார்த்தான்.

அவனுக்கு அதிகமாய் போனால் பதினாலு அல்லது பதினைந்து வயதிருக்கலாம். ஆனால் ஒல்லியாய் இருந்ததால் அவ்வளவு கூட மதிப்பிட முடியவில்லை.

'என் பெயர் மகேந்திரன். நான்...' என்று வாக்கியத்தை முடிக்கக்கூடவில்லை, சிறுவன் மலர்ந்த முகத்துடன் — 'அந்தப் பிசாசு வீட்டின் எஜமானர்தானே?' வாங்க, வாங்க! உங்களைப்பற்றி ஜெகன் தினமும் சொல்லிட்டே இருக்கான்.' என்று நிறுத்தி விட்டுத் தொலைவில் இருந்த ஸ்டூலை விரலால் சுட்டிக்காட்டி, 'அதைக் கொஞ்சம் கொண்டு வந்து இங்கே போட்டுக்கறீங்களா? என்றான். இறுதி வார்த்தைகளில் லேசாய் வருத்தம் தோய்ந்திருந்தது.

மகேந்திரன் ஸ்டூலை எடுக்கப் போனான். 'நீங்க ரொம்ப நல்லவர். என்னால் கட்டிலைவிட்டு எழுந்திருக்க முடியாதுன்னு தெரிந்து என்னைச் சுயமாய் பார்க்க வந்திருக்கீங்க இல்லையா?'

மகேந்திரன் திகைப்படைந்து விட்டான். ஆனாலும் அவனை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கக் கூடாது என்றெண்ணி ஆமாம் என்று தலையாட்டினான்.

'இப்படி, என் கிட்டே போட்டுக்குங்க ஸ்டூலை,

ஜன்னலுக்கு அருகாமையில் தன் கட்டில் பக்கமாய் இடம் காட்டினான் அச்சிறுவன். மகேந்திரன் ஸ்டூலை அவ்விடத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

'நீங்கள் அசல் நான் ஊகித்தாற்போலவே இருக்கிங்க. ஆனால் நீங்கள் இம்மாதிரி மாநிறமாய் இருப்பீங்கன்னு நினைக்கவில்லை. சிவப்பாய் இருப்பீங்கன்னு நினைத்துக் கொண்டிருந்தேன்.'

மகேந்திரன் வீட்டைக் கண்களால் துழாவினார். பக்கத்தில் ஒரு அறை இருந்தது. உள்ளே சமையலறைக்குள் இன்னொரு கதவு தென்பட்டது. அதற்குத் திரைச் சீலை இல்லை.

'அப்பாடா! கொஞ்சம் படித்தவங்களைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு!' மகேந்திரனைத் திருப்தியாய்ப் பார்த்து சொன்னான்.

'இந்த வீட்டுக்குப் பெரியவங்க யார்?' வந்த காரியத்தைத் தாமதிக்காமல் ஒளிவு மறைவின்றி விஷயத்திற்கு வரத் தொடங்கினான்.

'நான் தான். என்ன வேணும் உங்களுக்கு?' பெருமையாய் வந்தது பதிலோடு கேள்வியும் சேர்ந்து; மகேந்திரன் வியப்புடன் பார்த்தான்.

'வீட்டுக்குப் பெரியவங்க என்றால் வீட்டில் இருக்கிற ஆம்பிள்ளைதானே? என்னைத் தவிர இந்த வீட்டில் வேறு ஆண் ஜீவன் கிடையாது.' கட்டிலை விட்டு எழுந்திருக்க



முடியாவிட்டாலும் இந்தப் பெரிய மனுஷனின் வார்த்தைகளில் கம்பீரத்திற்குக் குறைச்சல் இல்லை.

மகேந்திரன் மௌனம் வகித்தான். அச்சிறுவனைப் பார்த்ததுமே அவன் எண்ணமெல்லாம் தலைகீழாகி விட்டது.

'அவ்வப்பொழுது ரேடியோ சப்தம் கேட்கிறதே, உங்கள் வீட்டிலிருந்துதானா?' கேட்டான் திரும்பவும்.

ஆம்! என்று தலையாட்டினான் திரும்பவும்.

'நான் அப்பவே நினைச்சேன். இல்லாவிட்டால் வேறு எங்கேயிருந்து கேட்கும்? இந்த ஊரில் இருக்கிற பட்டிக்காடுகளுக்கு ரேடியோன்னு ஒண்ணு இருக்கிறது கூட தெரிஞ்சிருக்காது. சோற்றுக்குக் கதியில்லாத மனுஷங்க.'

'நீங்க இந்த ஊர் இல்லையா?' ஆர்வம் தாங்காமல் கேட்டான்.

'எங்க ஊரா? இது எப்படி எங்க ஊராகும்? நீங்க என்னைச்சரியாய்ப் பாருங்க, நான் இந்த ஊர்க்காரனைப் போலவா இருக்கேன்?'

மகேந்திரன் இல்லை என்று தலையாட்டினான்.

'பின்னே ஏன் கேட்கிறீங்க? எங்கப்பா நவாபிடம் மிலிடரி ஆபீசராய் வேலை செய்துவந்தார். ஜமீன்தார் ஹோதாவில் வளர்ந்த குடும்பம் எங்களோடது. ஆஃப் கோர்ஸ், சொன்னால் நம்ப மாட்டீங்கன்னு வையுங்க.'

மகேந்திரனால் உண்மையாகவே நம்ப முடியவில்லை.

'ரஜாக்கர் இயக்கத்தில் எங்கப்பாவைச் சுட்டுக் கொன்னுட்டாங்க. அப்பா இருந்தபோது ரொம்ப வசதியாய்த்தான் இருந்தோம். அவர் போய் அந்த ரகளை

யெல்லாம் ஓய்ந்ததுமே கடன்காரங்க சுற்றிக் கொண்டு, கடைசியில் வீட்டில் உள்ள மேஜை நாற்காலிகள் பெஞ்சுக ளோடு கூட சகலத்தையும் எடுத்துட்டுப் போயிட்டாங்க. புயலில் சிக்கிக் கொண்ட சிறகொடிந்த பறவைகளைப் போல கடைசியில் நானும் அக்காவும் எஞ்சி நின்றோம். குரல் திகிலாய் மாறிற்று.

'தற்சமயம் இந்த வீட்டைத் தவிர வேறெதுவும் இல்லையா?'

ஊஹூம் அப்படிப்பார்த்தால் இந்த வீடு கூட எங்களோடது இல்லை. எங்க வேலைக்காரனுடையது. அவ்வப்பொழுது எங்கப்பா அவனுக்கு நிறைய பணம் தருவார். அதன் மூலமாய் வாங்கினது இது! ஆனால் ஒரு தடவை கொடுத்து விட்டதைத் திருப்பி வாங்கிப்பது அழகா என்ன? இல்லை. ஆனால் என்ன பண்றது? தப்பில்லை. நானோ இப்படி கட்டிலை விட்டு எழுந்திருக்க முடியாதவன்.'

'என்னவாச்சு? ஏதாவது ஆக்ஸிடெண்ட் ஆச்சா?,

சிறுவனின் முகத்தைப் பார்த்தபோதுமகேந்திரனுக்குச் சொல்ல முடியாத இரக்கம் ஏற்பட்டது.

'இல்லை. ரஜாக்கர் இயக்கத்தில் எங்கப்பா எங்க வேலைக்காரனைச் சுட்டுக் கொண்டிருந்தபோது பயந்துப் போய் சுவரேறி குதிக்கப்போய், பிடித்தவறி கீழேவிழுந்து விட்டேன் இடுப்பில் எங்கேயோ எலும்பு முறிந்து போய் விட்டது.'

இடையில் வந்த ஊனம் எவ்வளவு பயங்கரமானது என்று மகேந்திரன் அறிவான். அதனால்தான் 'டாக்டர் கள் யாரிடமும் காட்டவில்லையா?' என்று கேட்டான்.



'காட்டாமலா? எங்க அக்கா உடம்பில் இருந்த கொஞ்சநஞ்ச தங்கம்கூட எனக்காகவே போயிடுத்து. லாபமில்ல வறுமை பற்றிக் கொண்டது எங்களை. ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது இந்த மாதிரி நடைப் பிணமாய் வாழ்வதைக் காட்டிலும்...' தொண்டை அடைத்ததால் நிறுத்திக் கொண்டு விட்டான்.

பாவம்! எவ்வளவு வேதனையானது! அவனைப் பார்த்தால் வாழ்க்கை மீது நிறைய ஆசைகளைவைத்துக் கொண்டிருந்து, ஒன்றும் செய்ய வழியில்லாம ஒரு மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறதே என்று ஆதரவில்லாமல் வருந்துவது போலிருந்தது—மகேந் திரனுக்கு அக்குறுகிய பரிச்சயத்திலேயே அச்சிறுவனிடம் இனம் புரியாத இரக்கம் ஏற்பட்டது. தன்னால் முடிந்த உதவியை இச்சிறுவனுக்குப் செய்தே தீரவேண்டும். ஏற்கனவே அவனுக்கு வாயில்லா ஜீவன்களிடமும் உடல்நலமில்லாதவர்களிடமும் அளவுக்கு மீறிய இரக் கமும் அன்பும் ஏற்பட்டு அவர்களுக்கு உதவ அவன் கை முன்னுக்கு வந்துகொண்டிருக்கும். அந்த விதமாய் தான் அவனுக்கு இச்சிறுவனிடமும் இரக்கம் பிறந்தது.

'உங்க அக்கா ஒண்ணும் படிக்கலையா?' இரக்கத் தோடு கேட்டான்.

'படிக்காமலா? எங்க அக்காவைப் போன்ற புத்தி சாலிகள் நூற்றுக்கு ஒருத்தர் கூட இருக்க மாட்டாங்க என்பது என் அபிப்பிராயம்.'

கண்கள் அகல விரிய பதிலளித்தான் சிறுவன்.

'படிப்புக்கும் புத்திசாலித்தனத்துக்கும் ரொம்ப வித்யாசம் இருக்குப்பா!'

'ஆமாந்தான்! ஆனாலும் எங்க அக்கா பி.ஏ.' பாஸ் ஆகியிருக்காள்.'

மகேந்திரன் ஆச்சரியமடைந்தவனாய்ப் பார்த்தான்.

'பி. ஏ. பாஸ் பண்ணியிருக்காளா? அப்படீன்னால் உத்யோகம் பண்ணலாமில்லே?' என்றான் வியப்புடன்.

'பண்ணலாம். ஆனால் இஷ்டமில்லை. பார்க்கப் போனால் இந்த ஐதராபாத்தைக் கண்டாலே எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஏனோ தெரியவில்லை.

அவன் முகம் திரும்பவும் வேதனையாய் மாறிற்று.

'ஏன்? பிடிக்காவிட்டால் வேறு ஊருக்குப் போய் விடலாமில்லே?'

சட்டென்று ஏதோ சொல்ல வாயைத் திறந்த சிறுவன் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே,

'நீங்கள் பலே ஆள் தான்! என் வாயால் எங்க வீட்டு ரகசியத்தையெல்லாம் கேட்டுத் தெரிஞ்சுக் கிட்டீங்களே' என்றான்.

'அடடா! அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனாலும் இதெல்லாம் ஒரு ரகசியமா என்ன? எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயந்தானோ? நான் புது ஆள் ஆதலால் எனக்குத் தெரியலை. அவ்வளவு தானே? 'என்றான் பரபரப்போடு.

சிறுவன் ஆமாம் என்று தலையாட்டினான். ஆனால் திரும்பவும் வாயைத் திறக்கவில்லை. சம்பாஷணை திடீரென்று நின்று விட்டது. கொஞ்ச நேரங்கழித்து மகேந்திரன் போய் விட்டு வருவதாய்ச் சொல்லி எழுந்திருந்தான்.

அவன் புறப்படத் திரும்பியபோது, பின்னாலிருந்து—

'நீங்க ஒன்னும் எண்ணிக்காமலிருந்தால்— உங்க ரேடியோவை இன்னும் கொஞ்சம் சத்தமாய் வைக்கிறீங்



களா? எனக்குப் பாட்டு என்றால் உயிர்.' என்றான் சங்கோஜத்தோடு.

'சரி. அது ரேடியோ இல்லை. டிரான்ஸிஸ்டர் வேணும்னால் நாளைக்குக் கொண்டு வந்து தரேன்.'

'நிஜமாவா? என்றான் முகம் மலர. பிறகு 'திரும்பவும் நீங்க போகும் போது ஜாக்கிரதையாய் எடுத்துப் போயிடுங்க. ஒரு முறை பார்த்துட்டுத் தந்துடறேன் என்றான் ஆர்வத்தோடு.

'சரி' போகத் திரும்பியவன் சட்டென்று நின்று, 'அது சரி, உன் பேரென்ன, நான் இன்னும் தெரிஞ்சுக்கவே இல்லையே' என்றான்.

'கார்த்திகேயன் அக்கா எல்லோரும்' கீர்த்தி என்பார்கள். நீங்களும் அப்படியே கூப்பிடலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை என்றான் ஆர்வத்துடன்.

மகேந்திரன் வாசலைத் தாண்டிக் கொண்டிருந்த போது பின்னாலிருந்து' நாளைக்கு வர மறந்து போயிட மாட்டீங்களே?' பதற்றத்துடன் கேட்டது.

'மறக்க மாட்டேன்' என்பதுபோல தலையாட்டி விட்டு வந்து விட்டான்.

வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகுதான் அவனுக்குப் போன காரியத்தை மறந்து போய் விட்டது நினைவுக்கு வந்தது. மறுநாள் அக்காரியத்தை முடித்துக் கொள்ள தீர்மானித்துக் கொண்டான்.

# 15

மறுநாள் சரியாய் அதே நேரத்திற்குப் போய் டிரான்ஸிஸ்டரைத் தந்து விட்டு, அதை எவ்வாறு உபயோகிப்பது என்று சொல்லித்தந்தான். கீர்த்தியின் மூளை சுறுசுறுப்பானது. ஒரு முறை சொல்லிக் கொடுத்ததுமே புரிந்துக் கொண்டான். திரும்பவும் பேச்சில் காலம் கழிந்தது.

கீர்த்திக்குப் புத்தகங்கள் என்றாலும் விளையாட்டு என்றாலும் உயிர். சினிமாக்கள் என்றால் கேட்கவே வேண்டாம். பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது எல்லாவற்றிலும் முதலாவதாய் வருவான்.

அந்த நாட்களைப் பற்றிச் சொல்லத் தொடங்கிய போது அவன் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. எத்தனையோ நாட்களாய் அடக்கி வைத்துக்கொண்டிருந்த வருத்தத்தை மகேந்திரன் துருவிக் கேட்காத போதே வெளியே கக்கத் தொடங்கி விடுவான்.

'வீட்டில் யாரும் இல்லை போலிருக்கே?'—பேச்சை மாற்ற விரும்பிக் கேட்டான்.

அவன் வந்து எவ்வளவோ நேரமாகியும் எந்த சப்தமும் கேட்கவில்லை.

'யார் இருப்பாங்க? ஆயா தண்ணீர் எடுத்துட்டு வரப் போயிருப்பாள்.

ஆயாவா?'

'ஆமாம் ஏன்? அம்மான்னு நினைச்சுட்டீங்களா? எல்லோரும் அப்படித்தான் நினைக்கிறாங்க! அப்படி நினைச்சுக்கனும்னு தான் எங்க எண்ணம்கூட உண்மையில்



எங்களுக்குப் பெற்றத் தாயைவிட மேல் ஆயா. சொந்தத் தாயை நாங்கள் பார்த்தது கூட இல்லை. எங்க அக்காவைக்கண்டால் ஆயாவுக்கு உயிர். என்னையும் விட.'

மகேந்திரன் கேட்டுக் கொண்டிருந்தான்.

'அக்கா நிலத்தைப் பார்வையிட போயிருக்காளா?'

'நிலத்தைப் பார்வையிடவா?' கீர்த்தி பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஒரு துப்பாக்கி குண்டாய் இருந்தது.

'ஆமாம். நிலம் என்றால் அது ஏதோ பெரிய சாகுபடின்னு எண்ணிடாதீங்க. காய்கறித் தோட்டம். எங்க ஸ்ராவணி அவற்றைப் பட்டிணத்திற்கு அனுப்பி விற்று வருகிறாள்.'

மகேந்திரன் வியப்போடு கேட்டுக்கொண்டிருந்தான். 'யாரிடமிருந்தாவது வெறுமே பெற்றுக் கொண்டால் தப்பு. திருட்டுத்தனம் பண்ணினால் அபச்சாரம். அநியாயமாய் சம்பாதித்தால் பாவம். பணம் சம்பாதிக்க குணத்தை இழந்தால் வெட்கப்படணுமே தவிர, உழைத்துப் பிழைப்பதால் யாருக்குமே தலை வணங்கத் தேவையில்லை'—என்பாள் எங்க அக்கா.

அக்காவைப்பற்றிப் பேசும்பொழுது கீர்த்தியின் கண்கள் பெருமையால் பளிச்சிட்டதை கவனிக்கத் தவறவில்லை மகேந்திரன்.

'ஆனால் உத்யோகம் பார்க்கலாமில்லே?'

பேச்சு மறுபடியும் நேற்றைய இடத்தில்வந்துநின்றது.

'பார்க்கலாம். எங்கள் நிலைமை மோசமாகிவிட்ட பிறகு அக்கா ரெண்டு மூணு இடங்களில் வேலையையும் பார்த்தாள். ஆனால் ஆபீசில் அவளை அவள் வேலை

யுண்டு தானுண்டு என்று இருக்கவிடாமல் அனாவசியமான விஷயங்களில் எல்லாம் தலையிட்டு வந்தாங்க. மேலதிகாரிகள் அத்து மீறி நடந்துக்கிட்டாங்க. எங்க அக்கா ஏற்கெனவே மென்மையான சுபாவம் கொண்டவள்! அந்த வருத்தங்களைத் தாங்கிக்கவே முடியாமல் போயிடுத்து.

வேறு வழியில்லாமல் உத்யோகம் பண்ண வேண்டி இருக்கிற தன் தலையெழுத்தை எண்ணி ராத்திரியெல்லாம் தேம்பிக் கொண்டேயருப்பாள். அக்கா வருத்தப்பட்டால் ஆயாவால் தாங்க முடியாது. கிட்டே இழுத்து வைத்துக் கொண்டு, உத்யோகம் இல்லாவிட்டாலும் வாழமுடியும் என்று தைரியம் சொல்லுவாள். கடைசியில் ஆயாவின் பலவந்தத்தின் பேரில்தான் இந்த ஊருக்கு வந்தோம்.

இந்தக் காய்கறித் தோட்டம், இந்த வியாபாரம் எல்லாம் ஆயாவின் யோசனைதான். உழைப்பு ஒன்றை விட்டால் எங்களுக்கு அதிலிருந்து குடும்பம் நிச்சிந்தையாய் எந்தத் தொந்தரவும் இல்லாமல் தான் கழிஞ்சுக்கிட்டிருக்கு.

கீர்த்தியின் மூலமாய் இந்தக் கதைகளையெல்லாம் கேட்ட மகேந்திரன் வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். பிறகு போய் வருவதாய்ச் சொல்லி எழுந்தான் அதற்குள் ஆயா தோளில் ஈரத் துணியோடும் இடுப்பில் தவலையோடும் உள்ளே வந்தாள். மகேந்திரன் அவளைப் பார்த்து நின்றுவிட்டான்.

'ஆயா, நேற்றுநான் சொன்னேனே அவர்தான் இது! அந்தப் பிசாசு வீட்டைத் தெய்வ வீடாய் மாற்றி அமைத்திருக்கிற மகேந்திரன் என்பவர்.'

கீர்த்தி உற்சாகமாய் அறிமுகம் செய்து வைத்தான்.

மகேந்திரன் நட்பாய் சிரித்தான்.



ஆயா பேசாமல், பார்த்தும் பார்க்காதது போல அங்கிருந்து விடுவிடென்று உள்ளே போய் விட்டாள்

டிரான்ஸிஸ்டரை எடுத்துட்டுப் போகலையா'? பின்னாலிருந்து கீர்த்தியின் குரல் கேட்டது.

'வேண்டாம்ப்பா. வெச்சுக்கோ. நாளைக்கு வாங்கிக்கறேன்.' மகேந்திரன் வெளியே வந்துவிட்டான்

# 16

கீர்த்தியிடமிருந்து வெளியே வந்த மகேந்திரனுக்கு அதற்குள் வீட்டிற்குத் திரும்பிப் போகத் தோன்றவில்லை. காலாற நதிக்கரைப் பக்கமாய்ப் போனான்.

அவன் இந்த ஊருக்கு வந்ததுமே மனதைக் கவர்ந்த இடங்களுள் ஒன்று நதிக்கரை. அவ்விடமெல்லாம் ஈச்சம் புதர்கள், புதர்களைச் சுற்றிக் கொண்டிருந்த காட்டுக் கொடிகள். நதிக்கரையையொட்டி நாணற்புற்கள் கூட அடர்த்தியாய் வளர்ந்திருந்தன.

அமைதியான அச்சூழ்நிலையில் பறவைகளின் கலகல சப்தங்களும் காற்றின் சப்தத்தையும் தவிர வேறெந்த சப்தமும் இல்லாமலிருந்தது-

மாலை வேளைகளில் அவ்விடத்தில் தனியாய் இருந்த ஒரு மரத்தில் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டு, நதிக்கரையில் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியபிம்பத்தையும், அது பரப்பிய ஒளியையும், அதைத் தன்னிடம் பிரதிபலித்துக் கொண்டே வெகுநேரம் நின்று விடுவது அவனுக்குப் பழக்கப்பட்டுப் போய் விட்டிருந்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு இன்றுதான் அவன் மனம் நிம்மதியாய் இருந்தது. சந்தோஷமாய் இருந்த அந்த வேளையில் எங்குமே நிற்கத் தோன்றாததால் பேன்ட்

ஜேபியில் கைகளை விட்டுக் கொண்டு தலை குனிந்தவாறு அப்படியே நடக்கத் தொடங்கினான்.

எவ்வளவு தூரம் நடந்திருப்பானோ அவனுக்கே தெரியாது. திரும்பத்திரும்ப கீர்த்தியின் வார்த்தைகளே நினைவிற்கு வந்துக் கொண்டிருந்தன.

எவ்வளவு வினோதமான குடும்பம்! கௌரவமான குடும்பத்தில் பிறந்து விட்டு, கொஞ்சம் படித்துப் பெண்ணாய் இருந்தும் இது போல உலகத்தை விட்டு வெகு தொலைவிற்கு ஓடி வந்து விட்டாற்போல இந்த மாறு மூலைக்கு வந்து வசிக்க வேண்டிய தலையெழுத்து ஏனோ?

கீர்த்தி சரியாய் சொல்லவில்லை— இதற்குப்பின்னால் ஏதோ பலமான கதை இருக்கிறது.

மகேந்திரனுக்கு ஏனோ ஒரு முறை அந்தப் பெண்ணைக் கண்ணார காண வேண்டும் போலிருந்தது. ஸ்ராலவணியாம்! எவ்வளவு நல்ல பெயர்!

தலை குனிந்தபடி ஏதோ விநோதமான ஓசை கேட்கவே நிமிர்ந்து பார்க்கப் போனான். அதற்குள் எதிரேயிருந்து வேகமாய் ஓடி வந்த ஒரு ஆள் மகேந்திரனின் மேல் மோதிக் கொண்டதும் அந்த ஆள் மகேந்திரனைப் பிடித்து ஒரு பக்கமாய் தள்ளியதும் அந்த மோதலுக்கு இருவரும் பொத்தென்று கீழே விழ நேர்ந்ததும் நொடியில் நிகழ்ந்து போயிற்று.

பார்த்துக் கொண்டிருந்த போதே கொம்பு உடைந்த எருது ஒன்று சீறிக் கொண்டே அந்தப்பக்கமாய் ஓடிப் போயிற்று.

அந்த ஆள் தன் மேல் வந்து மோதி தன்னை ஒருபக்கமாய்ப் பிடித்து இழுத்திருக்காவிட்டால், அந்த எருது



வந்து தன்னைக் குத்தும் வரை அவனுக்குத் தெரிந்தேயிருக்காது. அவனுக்குப் பகீரென்றது.

சட்டென்று தன் மேல் வந்து மோதியது யார் என்று பார்த்தான். ஒரு வினாடி உலகமே நின்று விட்டது. காற்று கூட ஸ்தம்பித்து நின்று விட்டது!

அவன் மார்பின் மேல் குறுக்கே விழுந்து, சட்டையைக் கைக்கு அகப்பட்ட இடத்தில் இரு கைகளாலும் அழுத்தமாய் பற்றிக் கொண்டு பயத்தால் அவனுக்கு அண்மையில் ஒண்டிக் கொண்டே இன்னும் கண்ணை மூடிக்கொண்டிருந்தது ஒரு பெண்.—மகேந்திரன் இன்னும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். இருவருள் முதல் தேறிக் கொண்டது அப்பெண்தான்.

எழுந்து சரியாய் உட்கார்ந்து ஆடைகளைத் தடிட்க் கொண்டாள். எதிர்ப்பாராமல் நடந்து விட்ட இச் சம்பவத்தால் பாவம் வெட்கத்தால் நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல் தலை குனிந்தவாறு இருந்தாள்.

மகேந்திரன் கூர்ந்து பார்த்தான். அகன்ற முகம். திருத்தியமைக்கப்பட்ட மூக்கு. இளமையால் மலர்ந்த அவயவங்கள்.

'சாரீ!' லேசாய் குணுமுணுத்தாள் அப்பெண்.

மகேந்திரன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

'நீங்கள்... நீங்கள் கீர்த்தியின் அக்காவா?'

அவள் சட்டென்று நிமிர்ந்தாள். மேல் உதட்டிலிருந்த மச்சம் பளிச்சென்று தெரிந்தது. மகேந்திரனின் இதயத்தில் பகீரென்றது. அதே தீனமான கணைகள். அதே முகம் எத்தனை வருடங்களுக்குப் பிறகு பார்த்தாலும் அவனால் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய அந்த முகம்

'நீங்கள்...நீங்கள்' மகேந்திரனுக்கு வார்த்தைகள் குழறத் தொடங்கின.

அப்பெண்ணும் கண்கொட்டாமல் பார்த்தாள். உலகமே நின்றுவிட்டது. ஆனாலும் நிமிடங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

மெல்ல மகேந்திரனின் உதடுகளில் முறுவல் தவழ்ந் தது.

ஒரு வினாடி பயந்தவாறு பார்த்த அப்பெண்ணின் முகம் உடனே வெளுத்து விட்டது.

எவ்வளவு மாறிப் போய் விட்டாள்! எவ்வளவு உயர்ந்து விட்டாள்! என்றெண்ணிக் கொண்டான் அவன்.

'நீ...நீங்களா?' கோபம், அருவருப்பு அவமானம் எல்லாவற்றிலும் திணறிக் கொண்டிருந்த அப்பெண்ணின் உதடுகள் லேசாய் அதிர்ந்து கொண்டிருந்தன.

'இதுவரை வாழ்க்கையில் என்றுமே 'ஆமாம் நான் தான்' என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படுவ தில்லை. ஆனால் இன்றைக்கு இந்த நிமிஷத்தில் மட்டும் உண்மையில் இப்படி வெட்கப்படுகிறேன்.'

அவனுக்கே தெரியாமல் அவன் குரல் விநோதமாய் ஒலித்தது.

கொஞ்ச நேரம் குருவிகள் கலகல சப்தத்தையும் காற்றின் சீற்றத்தையும்தவிர, வேறெந்த ஓசையும் கேட்க வில்லை மகேந்திரனுக்கு. உலகமே அப்படியே நின்றுவிட் டாற் போலிருந்தது.

'இவ்வளவு நாட்களுக்குப் பிறகு திரும்பவும் இப்படிச் சிந்திக்க நேர்ந்ததுதான் எத்தனை ஆச்சரியம்!'—என் றான்

'எத்தனை துரதிர்ஷ்டம்!' கடுமையாய் கூரிய அம்பாய் வந்தது பதில்.



சிரித்தான் அவன். அப்பெண் பார்க்கவில்லையே தவிர, பார்த்திருந்தால் பெண்களின் இதயங்களில் ஆயிரம் நிலவைச் சொரிந்து, கோடி இனிய கதவுகளை திறக்கச் செய்யும் அழகான முறுவல் அது.

'உங்களை நான் அவமானப்படுத்திவிட்டது உண்மை தான்! ஆனால் சண்டையைத் தொடங்கியது நீங்கள் தான்னு மறந்துவிட வேண்டாம். இதோ! கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால் தெரியும்—அந்த அடையாளம் நிரந் தரமாய் என் முகத்தில் இன்னும் வடுவாய் தெரிந்துகொண் டிருப்பதைக் காணலாம்!' கன்னத்தில் வடு இருந்த இடத் தைச் சுட்டிக் காட்டினான்.

'ஹூம்!' நாசித் துவாரங்களும், உதடுகளும் ரோஷத்தால் அதிர்ந்தன அவளுக்கு.

'நீங்கள் இன்னும் அதிகமாய் என்னை தண்டிக்க எண்ணினால் இன்னும் அதற்கு அவகாசம் இருக்கிறது. அந்த துரோகி இதோ உங்களுக்கு எதிரேயே இருக் கிறான்.'

கீழே பார்த்துக் கொண்டிருந்த அவள் சரேலென்று நிமிர்ந்தாள். கூரிய அப்பார்வையில் அளவுக்கு மீறிய வெறுப்பும் கடுமையும் நன்றாய்த் தென்பட்டபோதிலும் ஏனோ மகேந்திரனுக்கு அம்முகத்தை இரு கைகளாலும் அப்படியே அள்ளிக் கொள்ள வேண்டும் போலிருந்தது' இந்தப் பெண்ணா கீர்த்தியின் அக்கா? ஸ்ராவணி என்பது இந்தப் பெண்தானா? அவன் மனம் வியப்பிலிருந்து மீள முடியாமல் திணறிக்கொண்டிருந்தது இன்னும்.

'நேற்று —நேற்று... கீர்த்தியிடம் வந்தது—'

'நான் தான்!'

'எதுக்கு? இன்னும் என்னத்தை நாசம் பண்றத்துக்கு?' இம்முறை அக்குரலில் தடுமாற்றமோ வெறுப்போ இல்லை. மகேந்திரன் திகைப்படைந்தவனாய் பின் வாங்கினாற் போல பார்த்தான்.

பார்த்துக் கொண்டிருந்தபோதே அப்பெண்ணின் கண்கள் குளமாகி விட்டன.

'என் தலையில் இன்னும் என்ன எழுதி வைத்திருக்கு? நான் என்ன பாவம் பண்ணினேன்!.

என்று சொல்லிக் கொண்டே கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்

ஒரு வினாடி வாயடைத்து போய் நின்று விட்ட மகேந்திரனுக்கு உடனே அப்பெண்ணைத் தொட்டு சமாதானப்படுத்த வேண்டும் என்றும், 'என்னால் உனக்கு எந்தத் தீங்கும் நேராது, பயப்படாதே' என்று தேற்ற வேண்டும் போலவும் இருந்தது.

கடந்த காலத்தில் எதிர்பாராமல் மிருகமாய் நடந்து கொண்டு விட்ட அச்சம்பவத்தால் பிற்பாடு எவ்வளவு வருத்தப்பட்டான் என்றும், நரகத்தை அனுபவித்து வந்தான் என்றும் விவரிக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவனால் எதுவுமே செய்யமுடியவில்லை. காரணம் சற்று முன்னால அப்பெண்ணின் கண்களில் அவனைப் பார்த்ததுமே தென்பட்ட வெறுப்பால் அவனுக்கு அவளை நெருங்கத் துணிச்சல் இல்லாமல் போய் விட்டது. அவன் அந்தராத்மா அக்குறுகிய நேரத்திற்குள்ளேயே அப்பெண் அவனை எவ்வளவு தூரம் அணுவணுவாய் வெறுத்துக் கொண்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டது. அதனால்தான் மகேந்திரன் செய்வதறியாது சிலையாய் நின்று விட்டான்.



கொஞ்சநேரங்கழித்து அப்பெண், தன் அழுகையை அடக்கிக் கொண்டு, இது கனவா நினைவா என்பது போலச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மகேந்திரன் கைகளைப் பின்னுக்குக் கட்டிக் கொண்டு இன்னும் அப்படியே பொம்மையாய் நின்றுக் கொண்டிருந்தான். ஸ்ராவணி எழுந்து இரண்டு அடிகள் எடுத்து வைத்தவள், சட்டென்று, பின்னாலிருந்து பூதம் துரத்திக் கொண்டு வந்தாற்போல ஓட்டமாய் ஓடிவிட்டாள்.

மகேந்திரன் வெகுநேரம் அவ்விடத்திலேயே சிலையாய், சலனமில்லாமல் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு மூளையே குழம்பினாற்போலிருந்தது. இந்தப் பெண்ணை இவ்விதமாய் சந்திக்க நேர்ந்தது எத்தனை விநோதம்.

ஆனால் இதற்கு முன்னால் எப்பொழுது அவளைப் பற்றி நினைவிற்கு வந்தாலும் மகாராணியைப்போல அளவற்ற ஐஸ்வரியங்களுக்கிடையே, அகம்பாவத்துடன் மிடுக்காய் எல்லோரையும் அதிகாரம் செய்து கொண்டு சுகமாய் இருப்பது போல கண்முன் நிழலாடிக் கொண்டிருக்கும் அவள் உருவம். ஆனால், பொருளாதார நிலைமை இவ்வளவு தாழ்ந்துப் போய் கடைசியில் சோற்றுக்காக காய்கறி வியாபாரம் பார்த்துக் கொண்டிருப்பாள் என்று கனவிலும் எண்ணியிருக்கவில்லை.

அரைமணிக்கு முன்னால் அவனுக்கு ஏற்பட்டிருந்த மன அமைதி முற்றிலும் போய்விட்டது. அவன் அசதியோடு வீட்டிற்கு வந்து சேர்ந்த பொழுது வீட்டிற்கு முன்னால் இரண்டு கார்கள் நின்று கொண்டிருந்தன. வீடெல்லாம் சந்தடியாய் இருந்தது.

## 17

படியேறி வராந்தாவிற்கு வந்து கொண்டிருந்த மகேந்திரனை நோக்கி ஜமுனா ஒட்டமாய் ஓடி வந்து,

'பலே திருடர் நீங்க! சொல்லாவிட்டால் எங்களால் கண்டு பிடித்து விட முடியாதுன்னு நினைப்பா? இப்ப எப்படிக்கண்டு பிடிச்சுட்டோம், பாருங்கள்!' என்றாள் கலகலவென்று சிரித்துக் கொண்டே.

ஜமுனா உடுத்தியிருந்த ஆடை மிக மெல்லியதாய் உடலை ஊடுருவிக் காட்டும்படியாய் இருந்தது.

அவள் தனியாக வரவில்லை. பிக்னிக் என்றபெயருடன் பத்துப் பேருடன் சூழ வந்திருந்தாள். அவர்கள் சிரிப்பா லும் அட்டகாசத்தாலும் வீடே அதிர்ந்து கொண்டிருந் தது.

துரையின் வீட்டிற்கு இரண்டு கார் நிறைய சுற்றத் தார்கள் வந்திருக்கிறார்கள் என்றும், அவர்களில் நிறைய பேர் பெண்கள் தான் என்றும், மிக ஃபேஷனாய் இருக் கிறார்கள் என்றும், ஆண்களுடன் சரிசமமாய் உட்கார்ந்து அரட்டை அடிக்கிறார்கள் என்றும் இரவோடிரவாய் ஊரெல்லாம் பரவிவிட்டது.

சிலர் காய்கறிகளைக் கொண்டு வந்துத் தரும் சாக் கிலும், வேறு சிலர் தயிர் கொண்டுவந்து தரும்சாக்கிலும், இன்னும் சிலர், 'இன்னும் ஏதாவது வேணுமா?'— என்று கேட்க வந்த சாக்கிலும் அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போனார்கள். மறுநாள் பூராவும் கதை கதையாய்ப்பேசிக் கொண்டார்கள் என்று ஜமுனாவுக்கோ அல்லது மகேந்திர னுக்கோ தெரியாது.



மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாய் இருந்ததால் வந்த வர்கள் எல்லோரும் அங்கேயே தங்கி விட்டார்கள். மகேந் திரனின் உடல் அவர்களோடு சுற்றிக்கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தாலும் அவன் மனம் மட்டும் கீர்த்தி வீட்டைச் சுற்றியே வளைய வந்து கொண்டிருந்தது.

'இந்தப் பெண்களைப் பார்த்து ஸ்ராவணி என்ன எண்ணிக் கொள்வாள்? எப்படியாவது பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்து போய்விட்ட ஸ்ராவணிக்குக் கைக் கொடுத்துத் தூக்கிவிட வேண்டும்' என்று அவன் மனது அப்பொழுதே தீர்மானித்துவிட்டது. ஆனால் அப் பார்வையும், அந்த நடத்தையும் நினைவிற்கு வந்துவிட் டால் போதும்; அது அத்தனை சுலபமில்லை என்று பயம் ஏற்படத் தொடங்கிவிடும்.

அந்த ராத்திரி கழிந்துவிட்டால் மறுநாள் காலையில் வந்தவர்கள் எல்லோரும் போய்ச்சேர்ந்து விடுவார்கள். அவர்கள் போனதுமே கீர்த்தியிடம் போகலாம். டிரான் ஸிஸ்டரை அங்கே விட்டு விட்டு வந்தது ஒருவிதத்தில் நல்லதாய்ப் போயிற்று அவர்கள் எப்பொழுது போய்ச் சேர்வார்களோ என்று நேரத்தைக் கணக்கிட்டுக்கொண்டு வேறு யோசனையுடன் நின்று கொண்டிருந்த மகேந்திர னிடம் வந்தாள் ஜமுனா.

'என்ன மகேந்தர்? நின்று கொண்டிருந்த மகேந்திர னிடம் வந்தாள் ஜமுனா.

'என்ன மகேந்தர்? ஏன் அப்படி இருக்கிங்க? உடம்பு சரியாய் இல்லையா?'

'எப்படி இருக்கேன்? நன்றாய்தானே இருக்கேன்?' சிரிப்பை வரவழைத்துக் கொண்டே கேட்டான்.

'வந்ததிலிருந்தே பார்க்கிறேன். மனம் விட்டுப் பேச மாட்றீங்க. இவங்களையெல்லாம் கூட்டிட்டு வந்தேன்னு கோபம் வந்துடுத்தா?'

'இல்லை ஜமுனா இல்லை. நீ நேற்று வராமலிருந்திருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்' இருளை வெறிக்கப் பார்த்துக் கொண்டே மனப்பூர்வமாகத்தான் பதிலளித்தான் மகேந்திரன்.

ஜமுனாவின் கண்களில் சந்தோஷத்தோடு கர்வமும் எட்டிப் பார்த்தது.

'இங்கே இந்த மாறுமூலைக்கு வந்து உங்களைச் சுற்றிலும் சமாதிக் கட்டிக்கொள்வானேன்? அங்கே வந்து எங்கள் எல்லோருடனும் இருக்கக்கூடாதா?'

'எங்கே இருப்பது? இது ஒன்றுதானே எனக்கிருக்கிற வீடு.'

'ரொம்பப் பெரிதாய்ச் சொல்ல வந்துட்டீங்க. என் வாயால் சொல்லணும் என்றா?' ஜமுனா குழைவாய் சிரித்தாள்.

அதற்குள் வேறு யாரோ அங்கு வந்ததால் சம்பாஷணை நின்றுவிட்டது.

ஜமுனா முதலியவர்கள் போய்ச் சேர்ந்து விட்டார்கள். உடனே கீர்த்தியிடம் போவதற்காக உடையணிந்து கொண்டு தயாரானான். ஆனால் அவனால் நகரவும் முடியவில்லை, கீர்த்திக்கு இதற்குள் அவன் யார் என்று தெரிந்து விட்டிருந்தால்? ஸ்ராவணி சொல்லியிருப்பாளா? ஒருக்கால் சொன்னாலும் சரி சொல்லாமலிருந்திருந்தாலும் சரி, அவனோடு பேசக்கூடாது என்று உத்தர விட்டிருந்தால்...?

தயக்கம் ஒருபக்கம் போகவிடாமல் இழுத்தது. அதை விட பலமான சக்தி ஏதோ போகச் சொல்லி தள்ளிற்று. இவ்விரண்டிற்குமிடையில் சிக்குண்டு போராடிக் கொண்டிருந்த மகேந்திரன் கடைசியில் அன்றைக்கும் போகவில்லை.



# 18

இரவெல்லாம் யோசித்து பார்த்துவிட்டு ஒரு முடிவிற்கு வந்தான். மறுநாள் காலையில் கீர்த்தியின் வீட்டிற்குப் புறப்படப் போனபொழுது வேலைக்காரன் டிரான்ஸிஸ்டரைக் கொண்டு வந்துதந்தான். அத்துடன் ஒரு சின்ன சீட்டு கூட இருந்தது. கீர்த்தி எழுதியிருந்தான் அதை:

'அக்கா ஏனோ கோபமாய் இருக்கிறாள். டிரான்ஸிஸ்டரை அனுப்பி விட்டதற்கு ஒன்றும் நினைத்துக் கொள்ளவேண்டாம். எங்கள் வீட்டில் அக்காவின் வார்த்தைகள்தான் வேதவாக்கு' நான் துரதிர்ஷ்டசாலி எழுந்து நடக்க முடியாத துர்பாக்கியசாலி. இல்லாவிட்டால் நேராய் வந்து நன்றி தெரிவித்து விட்டுத் தந்திருப்பேன். எனக்கு உங்களை மிகவும் பிடிக்கும் அதை மறந்துவிடாதீர்கள். எங்கள் அக்காவின் மனதை நோகடிக்க முடியாத என் பலவீனத்திற்கு என்னை மன்னியுங்கள்.— கீர்த்தி.'

மகேந்திரன் மனதில் மிதந்த ஊகம் சரியாகி விட்டது. அதனால் தான் அவனுக்கு அவ்வளவாய் ஆச்சரியம் ஏற்படவில்லை.

அவள் வீட்டிற்குத் திரும்பியதுமே தம்பியின் கையிலிருந்த டிரான்ஸிஸ்டர் யாருடையது என்று தெரிந்து கொண்டு உடனே திருப்பி அனுப்பி வைத்து விட உத்தர விட்டிருப்பாள். அந்தச் சமயத்தில் கீர்த்தியின் முகம் எப்படி இருந்திருக்கும் என்று அவனால் எளிதாகவே ஊகிக்க முடிந்தது.

ஆனால் மனதில் நேற்றைய தினத்திலிருந்து ஸ்ராவணியை இன்னொரு தடவை பார்க்க வேண்டும் என்று ஏற்பட்ட ஆசையை அவனால் தடுக்க முடியவில்லை. ஆனால் ஆசை நிறைவேறும் வழிதான் இல்லை.

ஸ்ராவணி டிரான்ஸிஸ்டரைத் திருப்பி அனுப்பி விட்டு படீரென்று அந்த வீட்டுக் கதவைச் சாத்திவிட்டிருப்பாள். இந்த நிராசை என்ற காரிருளில் கீர்த்தி மட்டும் மினுக் மினுக் என்று மின்னி அணைந்துப் போய்க் கொண்டிருந்தான்.

கீர்த்திக்கு அவனைப் பிடித்துப் போய் விட்டது. அதில் சந்தேகமில்லை. அவனால் முயற்சிப்பண்ணிப் பார்த்தால் கீர்த்தியைச் சந்திப்பது ஒன்றும் கஷ்டமில்லாமல் போகலாம்.

அதனால் துணிந்து டிரான்ஸிஸ்டரை எடுத்துக் கொண்டு தானே அங்குப் போனான்.

கட்டிலில் முகத்தை முறுக்கிக் கொண்டு படுத்திருந்த கீர்த்தியின் முகம் மகேந்திரனைப் பார்த்ததுமே மலர்ந்தது சட்டென்று எழுந்து உட்கார்ந்து.—

'நீங்கள் எவ்வளவு நல்லவர்! இனி ஜென்மத்திலும் உங்களைப்பார்க்க மாட்டேனோன்னு நினைச்சேன்.'

என்றான் மலர்ந்த முகத்துடன்.

'கீர்த்தி! டிரான்ஸிஸ்டரைத் திருப்பி அனுப்பிட்டதற்குக் காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?'

கீர்த்தியின் முகம் வாடிவிட்டது.

'எனக்குத் தெரியாது. அக்கா அந்தமாதிரி வேற்று மனுஷங்களிடமிருந்து எதையும் வாங்கிக் கொள்ளக் கூடாது. திருப்பி அனுப்பி வைச்சுடு— என்று சொல்லி விட்டாள்.'



'பிறக்கும்போதே எல்லோரும் ஆத்மார்ந்த மனுஷங்களாய் ஆயிடுவாங்களா?

'சொல்லு கீர்த்தி! நான் முன்பின் தெரியாத ஆளுன்னு தானே? அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?' ஸ்ராவணி தம்பிடம் வேறு எந்த காரணத்தையாவது சொல்லியிருப்பாளோ என்று தெரிந்து கொள்ள துடித்தான் அவன்.

'எனக்குத் தெரியாது. யாரிடமிருந்தும் எதுவுமே வாங்கிக்கக்கூடாதுன்னு சொன்னாள்' அவ்வளவுதான்! அதான் நான் வாங்கிக்கலில்லை.

'அது நிஜந்தான். யாரிடமிருந்தும்கையேந்திஎதையும் பெற்றுக் கொள்ளக் கூடாதுங்கிற உங்க அக்காவின் அபிப்பிராயத்தை நானும் புரிந்து கொள்கிறேன். அதை மிக மதிக்கிறேன். ஆனால் அது எல்லோர் விஷயத்துக்கும் பொருந்தாது. உன்னிடமிருந்து நான் எதையாவது எதிர் பார்த்து சுயநல ஆசையோடு தந்திருந்தால் நீ வாங்கிக் கொள்ளக் கூடாது. ஆனால் எனக்கு அந்த மாதிரியான எண்ணமே இல்லை. உன்னைப் பார்த்து இரக்கப்பட்டு தான் தந்தேன். என்னிடம் இல்லாத கெட்ட எண்ணத்தை இருப்பதாய் எண்ணிக் கொண்டால் வருத்தமாய் இருக்கு எனக்கு. அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். வரேன்.

'மகேந்திரன் போவதற்கு இரண்டடிகள் எடுத்து வைத்ததுமே கீர்த்தி சட்டென்று கையை நீட்டி அவன் கரத்தை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு '

நில்லுங்கள். என் பேச்சைக் கேளுங்கள் — என்றான் பதற்றத்துடன்.

'நடந்தது போதும் கீர்த்தி நான் இனித் தலறிப் போய் கூட இந்த வீட்டு ஜோலிக்கே வரமாட்டேன். எனக்கு

இப்பப் புரிகிறது. நான் இந்தச் சாக்கில் அடிக்கடி உங்க வீட்டுக்கு வந்துடவேன்னு உங்க அக்காவுக்கு பயம் போலிருக்கு.' அவன் பேசியது கீர்த்தியின் பிஞ்சு மனதில் எப்படிப்பட்ட முத்திரையைப் பதிப்பிக்கும் என்று உணிக்காமல் போகவில்லை அவன்.

'ப்ளீஸ், என் பேச்சைக் கேளுங்க' என்றான் தீனமாய், மகேந்திரன் திரும்பி என்னவென்று பார்த்தான்.

கீர்த்தியின் கண்களில் ஈரம் பளபளத்தது. 'எங்க அக்காவுக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, உங்களை எனக்குப் பிடித்திருக்கு, நீங்க எனக்குத் தேவை. நாமிருவரும் நண்பர்கள். அப்படித்தானே?'

மகேந்திரனைப் பார்த்தபோது அவனுக்குப் பெரிய பக்கபலம் கிடைத்து விட்டாற்போலிருந்தது. இந்தக் கிராமத்தில் எழுத்துப் படிப்புத் தெரியாத கும்பலுக்கிடையே அவன் தெய்வத்தைப் போல கை கொடுத்து வந்தான். தன்னோடு நன்றாய்ப் பேசினான். எல்லாவற்றைக் காட்டிலும் தன் மேல் இரக்கம் வைத்திருக்கிறான். மகேந்திரனோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தால் வேறொரு உலகத்தில் சஞ்சரிப்பது போல அபூர்வமாய் இருக்கிறது.

எப்படியிருந்தாலும், அக்காவுக்குக் கோபம் வந்தாலும் சரி, மகேந்திரனின் சிநேகத்தை விடக்கூடாது என்றெண்ணிக் கொண்டான் கீர்த்தி தனக்குள்.

அக்காவின் வார்த்தையைத் தட்டுகிறோமோ என்ற வருத்தம் ஏற்பட்டாலும் கீர்த்தியின் மனதில் சுயநலந்தான் வென்றது இறுதியில்.

'என்னால் உங்கள் வீட்டில் அமைதியின்மை ஏற்படுவது எனக்குப் பிடிக்கவில்லை கீர்த்தி!'



அதை மகேந்திரன் மனப்பூர்வமாய்த்தான் சொன்னான். தான் பண்ணிக் கொண்டிருக்கும் இக்காரியத்தால் ஸ்ராவணி வருத்தப்பட நேர்ந்தால் அவனால் தாங்கிக் கொள்ள முடியாது.

அக்காவுக்கு நான் நயமாய் எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன். அக்காவின் பயம் என்னன்னு தெரியும் எனக்கு ஆண்கள் எல்லோருமே கெட்டவர்கள் என்றும் மோசக்காரர்கள் என்றும் அக்கா பயப்படுகிறாள். ஆண்களில் உங்களைப் போன்ற நல்லவர்களும் உண்டுன்னு அக்காவுக்குத் தெரியாது. உங்களுக்கென்ன கவலை? நீங்கள் பாட்டுக்கு வந்து போயிண்டிருங்கள். அக்காவே சுயமாய் உங்கள் நல்ல குணத்தைப் புரிஞ்சுக்காமல் போனால் என் பேர் கீர்த்தி இல்லை' என்றான் திடமாய் சவாலிடுவது போல்.

## 19

பட்டிணத்தில் வேலை இருந்ததால் மறுநாள் ஊருக்குப் புறப்படத் தீர்மானித்துக் கொண்டே மகேந்திரன் உடை மாற்றிக் கொண்டு கீர்த்தியிடம் சொல்லி விட்டுப் போவதற்காக வந்தான். வாசலிலேயே பெரிதாய்ப் பேச்சுக் குரல்கள் கேட்டதால் அவன் வராந்தாவிலேயே நின்றுவிட்டான்.

'நான் வேண்டாத காரியம் என்னத்தைப் பண்ணிட்டேன்? அவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா அக்கா? அதை நீ புரிஞ்சுக்காமல் போனது உன் துரதிர்ஷ்டம். எனக்காக இரக்கப்பட்டுதான் இதெல்லாம் பண்றார்னு சொன்னாலும் ஏன் கேட்டுக்கவே மாட்டேங்கிறாய்? உன்னைப் பொருட்படுத்தாமல் அலட்சியமாய் இருக்கிறார் என்று உனக்கு ஆத்திரம்' கீர்த்தி பெரிதாய் அழுது கொண்டே முறையிட்டான்.

'மூடு வாயை. பேசினால் பல்லைத் தட்டிடுவேன். ஜாக்கிரதை. புத்தியில்லாத கழுதை! நீ என்ன பேசுகிறாய்னு தெரிந்துதான் பேசுகிறாயா?' கோபமாய்க் கத்தினாள் ஸ்ராவணி.

'தெரியும். தெரிந்துதான் பேசறேன். அவர் மேல் உனக்கு ஏன் இந்த வெறுப்பு?'

'அது உனக்குத் தேவையில்லை!'

'தேவை! காரணமில்லாமல் நல்லவர்களை வெறுப்பதற்காக நீ வெட்கப்படணும!'

'மூடு வாயை.'

'அப்பப்பா? ஸ்ராவணி!' ஆயா அதுத்துக் கொண்டாள்.

'பாரும்மா! எப்படி வெடிக்கிறான்னு? இதற்கு முன்னால் என்றாவது அவன் இப்படிப் பேசியிருக்கானா? நான் இப்போது இந்த மாதிரி வேற்று மனுஷியாயிட்டேன். இல்லாவிட்டால்...' கடைசி வார்த்தைகளை அழுகை விழுங்கி விட்டது.

ஒரு வினாடி நிசப்தம். ஸ்ராவணி அழுதுகொண்டிருந்த சப்தம் கேட்டது.

'அக்கா, அக்கா' கீர்த்தி கோபத்தை மறந்துபோய் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

'என்னோடு பேசாதே! நான் எதுக்கு இனிமேல்? 'தேம்பிக் கொண்டே முணுமுணுத்தாள்.

'அக்கா!— நீ இப்படிச் சொன்னால் நான் செத்துப் போய் விட்டதற்கு சமம். எனக்கு உன்னைத் தவிர யாருமே இல்லை. தப்பாயிடுத்து இனிமேல் இப்படிப் பேச மாட்டேன். ஆயா, அக்காவைத் தேற்று!' கீர்த்தி அழுதுக் கொண்டே உத்தரவிட்டான்.



'என்னம்மா இது?... நீயும் சேர்ந்து இப்படி சின்னப் பெண்ணைப் போல பண்ணலாமா? அவன் தான் சின்னப் பையன் அப்படிச் சொன்னால்...' என்றாள் ஆயா.

'நான் யாருக்காக வாழணும்? அவனுக்குக் கூட நான் தேவையில்லை.'

'அக்கா!'

'அக்கா செத்தால் தான் உனக்குத் தெரியும்.'

'அப்பப்பா! இதென்ன பேச்சு! உஷ்! சும்மாயிரும்மா, என் கண்ணில்லையா?'

ஆயா கண்டித்தாள் அன்பாய். 'எனக்கு உன்னைத் தவிர வேறு யாருமே தேவையில்லை. இது சத்தியம்.'

கீர்த்தியும் அழத்தொடங்கினான்.

சிலையாய் நின்று கொண்டிருந்த மகேந்திரன் சந்தடி செய்யாமல் திரும்பி வந்து விட்டான்.

'நான் யாருக்காக வாழணும்?'— அந்த வார்த்தைகளிலிருந்த ஏமாற்றம் அவன் இதயத்தைப் பிளந்தது. ஆனால் ஸ்ராவணியின் வாழ்க்கையில் இருந்த ஒரே பற்று கீர்த்தி மட்டுந்தானா? அதைத் தவிர வேறு எதுவுமே இல்லையா?

அவள் அவனை ஏன் நெருங்க விடமாட்டேன் என்கிறாள்? போகட்டும். வெறுப்பாய் இருந்தால் முகத்திற்கு முன்னாடியே அதை வெளிப்படுத்தி விடலாமே! கீர்த்திக்காக இதையெல்லாம் மென்று விழுங்கிக் கொண்டிருக்கிறாள் போலும்! கீர்த்தியிடம் அவள் காட்டிக் கொண்டிருந்த இந்த ஆதரவு அவனுக்குக் கழுத்தறுப்பாய் இருந்தது என்று முதல் முதலாய் தெரியத் தொடங்கியதுமே அவன் இதயம் வேதனையால் கனத்தது.

ஸ்ராவணியின் நிலைமை சரியாய் இருந்து, எல்லாப் பெண்களையும் போல அவளும் இருந்தால், அவன் அவளைப் பொருட்படுத்தியிருக்க மாட்டான். ஆனால் செல்வத்தில் பிறந்து வளர்ந்து விட்டு, தன் மானத்தால் உழைக்கக் கூட தயங்காமல் இந்த மாறுமூலைக்கு வந்து வசிக்கும் ஸ்ராவணியிடம் அவனுக்கு இரக்கத்தோடு அன்பும் ஏற்பட்டது

எது எப்படியிருந்தாலும் சரி கீர்த்தியின் சிநேகத்தைத் தான் விடப் போவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு விட்டான் மகேந்திரன்.

தான் இப்பொழுது ஸ்ராவணியை உத்தேசித்து ஒதுங்கிக் கொண்டு அச்சிறுவனைப் பார்க்காமலிருந்து கொண்டால், அது அப்பிஞ்சு மனதைப் பாதிக்கும். எழுந்து நடமாடவும் முடியாத பேச்சுத் துணைக்குக் கூட யாருமில்லாத அச்சிறுவனுக்கு அவனால் தான் ஓரளவிற்காவது பொழுது போகிறது.

மகேந்திரன் இம்முறை பட்டிணத்திலிருந்து திரும்பிய போது கீர்த்திக்காக ஒரு சக்கரநாற்காலியை வாங்கிக் கொண்டு வந்தான். அவனைப்பார்த்ததும் கீர்த்தியின் முகம் மலர்ந்தது.

'இதப்பார்! உனக்குச் சக்கரநாற்காலி வாங்கி வந்திருக்கேன். இதில் உன்னை உட்காரவைத்து வெளியே நாலு இடங்களுக்கு அழைச்சுப் போய்காட்டப்போறேன்' என்றான்.

கீர்த்தியின் உற்சாகம் கரைப் புரண்டது.

மெதுவாய் கீர்த்தியைத் தூக்கிச் சக்கரநாற்காலியில் உட்காரவைத்தான். வெகு நாட்களுக்குப் பிறகு அசைந்ததால் கீர்த்தி வலியால் வீலென்று அலறினான்.



ஸ்ராவணி கலக்கத்தோடு ஓடிவந்தாள்.

'ஒன்றும் பயமில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு அசைந்ததால் அப்படி வலித்திருக்கும். கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும்' கீர்த்தியின் முகத்தில் படிந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே சொன்னான் மகேந்திரன்.

'பரவாயில்லை. இதைவிட ஆயிரம் மடங்கு வலியாய் இருந்தாலும் தாங்கிப்பேன்— நீங்கள் பக்கத்தில் இருந்தால்' என்றான் கீர்த்தி மகேந்திரனை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே.

மகேந்திரன் கீர்த்தி உட்கார்ந்திருந்த சக்கிர நாற்காலியைத் தள்ளிக் கொண்டே வெளியே வந்தான். பின்னால் சிலையாய் வாடிய முகத்துடன் நின்றுக் கொண்டிருந்த ஸ்ராவணியை ஒருவருமே கவனிக்கவில்லை.

அவர்கள் முற்றிலும் கண்மறைவான பிறகு ஆயா ஸ்ராவணியைப் பார்த்து.

'உண்மையில் அவங்க ரெண்டு பேருக்கும் எந்த ஜென்மத்து பந்தமோ தெரியலை, இல்லாவிட்டால்...' என்று திரும்பிப் பார்த்தவள் அங்கே ஸ்ராவணி இரு கைகளாலும் முகத்தைப் புதைந்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்ததைப் பார்த்து திகைத்துப் போய் விட்டாள்.

# 20

மகேந்திரன் சக்கிர நாற்காலியை நதிக்கரைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தினான். மாலை வெயில் இதமாய் இருந்தது. நதியிலிருந்து வந்து வீசிய குளிர்ந்தக் காற்று தேகத்தை வருடிக் கொடுத்தாற் போலிருந்தது. நிமிர்ந்தால் நீல வானம்! அதில் கும்பல் கும்பலாய் திரண்டு எங்கேயோ ஓடிக் கொண்டிருந்த வெண்ணிற மேகங்கள்! பறவைகள் கொஞ்சநேரத்திற்கு ஒரு கும்பலாய் வரிசையாய் அணிவகுத்துப் பறந்து கொண்டிருந்தன.

கீர்த்திக்கு இதையெல்லாம் பார்த்தபோது சந்தோஷத்தால் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. எவ்வளவு நாட்களுக்குப் பிறகு வெளியுலகத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறான்! இவ்வாறு திரும்பவும் வெளியுலகத்திற்குள் காலடி எடுத்து வைப்போம் என்று கனவிலும் ஊகித்திருக்கவில்லை அவன்.

இந்த ஊருக்கு வந்த பிறகு தனிமையைத் தாங்க முடியாமல் இரவும்பகலுமாய் ஒரே மூச்சாய்க் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டதன் பலனாய் இந்த மகேந்திரன் தன்னிடம் வந்திருக்கிறான் என்று தோன்றிற்று. இல்லாவிட்டால் முன் பின் தெரியாத தன்னிடம் இவனுக்கு இவ்வளவு ஆர்வம் ஏற்படுவானேன்?

'நீங்க தினமும் நிற்கும் இடத்தை எனக்குக் காட்டுங்க' என்றான் கீர்த்தி சுற்றிலும் பார்த்துக் கொண்டே.

'சரியாய் நான் இப்பொழுது நிற்கிற இடந்தான்!'

—சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே சொன்னான் மகேந்திரன். கீர்த்தி திருப்தியோடு பார்த்தான்.



11362
29688 62

'நீங்க எவ்வளவு நல்லவர்! இருந்தால் எதுக்காவது கோபம் வந்து நீங்க இனிமேல் வரமாட்டீங்களோன்னு நினைச்சேன்!' என்றான் நன்றியால் உருகிப்போனவனாய். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்ட மகேந்திரன் தீக்குச்சியைத் தூக்கிஎறிந்து விட்டு.

'மொதல்ல வரக் கூடாதுன்னுதான் இருந்தேன். ஆனால் உன்கடிதத்தைப் பார்த்த பிறகு என்னால் வராமலிருக்க முடியவில்லை' என்றான்.

'என்கடிதமா?' கீர்த்தி வியப்போடு பார்த்தான்.

'ஆமாம். ஏன்?'

'நான் உங்களுக்குக் கடிதம் எழுதி அனுப்பினேனா?' நம்ப மாட்டாமல் கேட்டான்.

'பின்னே இதென்ன?' ஜேபியிலிருந்த கடிதத்தை எடுத்துத் தந்தான்:

அதை எடுத்துப் பார்த்ததுமே கீர்த்தியின் முகம் வாடி விட்டது.

'இது நான் எழுதியதில்லை. அக்கா எழுதியிருக்கிறாள். ஆனால் அந்த வார்த்தைகள் எல்லாம் என்னோட வார்த்தைகள் தான்.'

மகேந்திரன் விக்கித்துப் போய் விட்டான். பார்த்துக் கொண்டிருந்தபோதே கீர்த்தியின் முகம் வேதனையால் மாறத் தொடங்கிவிட்டது.

'சீ, சீ! நான் எவ்வளவு முட்டாள் என்று உங்களுக்குத் தெரியாது. பாவம், அக்காவை எவ்வளவு வார்த்தை பேசிட்டேன்! நீங்கள் வரலைங்கிற கோபத்தால் அவளை என்னென்னவோ சொல்லிட்டேன். எனக்குத் தெரியும். நான் இங்கே சந்தோஷவாய் பேசிட்டிருக்கேன்! அவள் அங்கே வீட்டில் அழுதுகொண்டே உட்கார்ந்திருப்பாள்,

'சந்தோஷமே வற்றிப்போய்விட்ட முகத்துடன் திகிலோடு பார்த்தான்.

மகேந்திரன் பதில் பேசவில்லை. கடிதத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். இந்தக் கடிதத்தை எழுதியது ஸ்ராவணியா? 'அக்காவின் நடத்தைப் பிடிக்காவிட்டால் பொருட்படுத்த வேண்டாம்'— என்ற வார்த்தைகளை ஸ்ராவணியே எழுதினாள் என்றால் அவனால் நம்பத் தான் முடியவில்லை.

'கீர்த்தி! உங்க அக்காவின் வாழ்க்கையில் ஏதாவது நடந்ததா தெரியுமா?' என்று கேட்டான்—அதற்குப் பிறகு குடும்பத்தில் என்ன நடந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்பி.

கீர்த்தி கொஞ்ச நேரம் பதில் பேசவில்லை. பிறகு சொல்லத் தொடங்கினான்:

'ஆமாம். ஐந்து வருஷத்துக்கு முன்னாடி எங்கப்பா உயிரோடு இருந்தபோது அக்கா தன் சிநேகிதியின் கல்யாணத்துக்காக ஊருக்கு போக விரும்பினாள். அப்பா எங்களிடம் வேலை செய்து கொண்டிருந்த வயதான வேலைக்காரனான தாதா என்பவனை அக்கா'வோடுகூட அனுப்பி வைத்தார்! அக்காவுக்கு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கித் தந்து விட்டு, தாதா ஜெனரல் கம்பார்மெண்டில் ஏறிக் கொண்டான். அக்கா பிரயாணம் செய்து கொண்டிருந்த கம்பார்ட்மெண்டில் நள்ளிரவில் ஒருத்தன் எப்படி வந்து சேர்ந்தானோ தெரியாது. அவன்... அவன்...'

மகேந்திரனின் புருவம் உயர்ந்தது. கையிலிருந்த சிகரெட் நழுவி கீழே விழுந்தது. விறைப்பாய் நின்று விட்டான்.

'எங்க அக்காவை அப்பா கண்டித்து கேட்டபோது அக்கா அழுது கொண்டே சொன்ன விஷயங்களைக் கொண்டு எனக்குப் புரிந்தது என்னவென்றால்,—ஒரு



ராஸ்கல்... அயோக்கியன் அவன் எங்க அக்காவை...' கீர்த்தி சிவந்து விட்ட முகத்துடன் அப்படியே நிறுத்திக் கொண்டான்.

'புரிஞ்சுது... அப்புறம்' ரோஷத்தாலும் கோபத்தாலும் முகம் ஜிவுஜிவுக்கக் கேட்டான் மகேந்திரன்.

'ஆனால் எங்க அக்கா என்ன சொல்லிய போதும் எங்கப்பா நம்பவேயில்லை. 'அத்துமீறி சுற்றியதோடு, யாரைப் பொய் சொல்லி ஏமாற்றப் பார்கிறாய்?' என்று அக்காவை அடிக்கப் போனார். அதற்குள் தாதா குறுக்கிட்டு எல்லாம் நிஜந்தான்று சொன்னான். அப்பா தாதாவைக் கூடத் திட்டினார்; அடிக்கப் போனார், அக்காவை இனி காலேஜிற்குப்போகக்கூடாது என்று தடுத்துவிட்டார். அன்றிரவு வீட்டில் எவ்வளவு ரகளையாயிடுத்துன்னு சொல்லவே முடியாது.'

'கீர்த்தி மூச்சு விட நிறுத்தினான். மகேந்திரன் மூச்சு விடவும் மறந்துப் போய் கேட்கத் தொடங்கினான்.

'அப்புறமாய் வீட்டு விஷயமே மாறிப் போய் விட்டது. அப்பா சின்னச்சின்ன விஷயத்துக் கெல்லாம் கூட எல்லோர் மேலும் எரிந்து விழுந்து அடிக்கத் தொடங்கினார். அக்காவோடு சேர்ந்து கணேசன் என்று ஒருத்தன் படித்துக் கொண்டிருந்தான். அவன் கவிதைகள் எழுதுவான். அவன் அவ்வப்பொழுது வீட்டிற்கு வருவான், அப்பாவுக்கு ஏனோ அவனைக் கண்டாலே பிடிக்காது. அக்காவை அவனோடு பேச வேண்டாம் என்றும் திட்டுவார்.

அப்படிப்பட்ட அவர் ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். அப்பொழுது நான் அப்பாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தேன். அவர் கணேசனைப் பார்த்ததுமே மரியாதையாய் வரவேற்று உட்காரச் சொல்லி நாற்காலியைக் காட்டினார்

முதலில் ஓரிரண்டு வார்த்தைகள் காலேஜைப்பற்றி விசாரித்தார். அப்பா எவ்வளவு நிதானமாய் பேசிய போதிலும் கணேசன் கூனிக்குறுகிக் கொண்டே பதிலளித்துக் கொண்டிருந்தான். பிறகு அப்பா என்னைக் கிட்டே இழுத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டு, கணேசனிடம்

'ஸ்ராவணி உன்னைத் தவிர வேறு யாரையுமே கல்யாணம் பண்ணிக்கமாட்டேங்கிறாள். உன் அபிப்பிராயம் என்ன? உனக்குச் சம்மதந்தானே?' என்று கேட்டார்.

கணேசன் வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பா அதையொன்றையும் கவனிக்காமல் என் கேசங்களை நீவிக் கொண்டே,

'என் உடல் நிலை அவ்வளவாய் நன்றாகவேயில்லை. கூடிய சீக்கிரத்தில் ஸ்ராவணியின் கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு நினைக்கிறேன். உங்க ரெண்டுபேருக்கும் பிடித்து விட்டால் லக்னம் வைத்துவிடுகிறேன்' என்றார்.

கணேசன் முகம் மலர்ந்தது. அதுவரை இருந்த பயமும் போய்விட்டது. நாற்காலியில் நிமிர்ந்து மிடுக்காய் உட்கார்ந்து கொண்டான். ஸ்ராவணி என்றால் தனக்கு உயிர் என்று ஏதேதோ கவிதைமொழியில் பேசினான்.

கணேசனுக்கும் அக்காவுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது! அதனால் நான் இந்தச் செய்தியை அக்காவிடம் உடனே சொல்லவேண்டுமென்று சந்தோஷத்தைத் தாங்கமுடியாமல் உள்ளே ஓடினேன். அறைக்குள் அக்காவும் ஆயாவும் உட்கார்ந்திருந்தார்கள். நான் போய் கைக்கொட்டி, 'அக்கா கல்யாணம், அக்கா கல்யாணம்' என்றேன். ஸ்ராவணி சரேலென்று என்பக்கமாய்த்திரும்பி 'என்ன கீர்த்தி?' என்றாள்.



கணேசன் வந்தான் என்றும் அப்பாவுடன் பேசிக் கொண்டிருக்கிறான் என்றும் அக்காவின் கல்யாணம் நடக்கப் போகிறது என்றும் சொன்னேன்.

ஆயாவும் அக்காவும் ஒருவர் முகத்ததை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அதற்குள் அப்பா அறைக்குள் வந்து, அக்காவின் கல்யாணத்தை கணேசனுடன் நிச்சயம் பண்ணுவதாயும், புரோகிதர்களுக்கு விஷயத்தைச் சொல்லியனுப்பி விட்டதாயும் சொன்னார்.

அக்கா ஆயா இருவரும் பதில் பேசவில்லை. அப்பா மறுநாளிலிருந்து ஸ்ராவணியை எப்பொழுதும் போல கல்லூரிக்குப் போய் வரும்படிச் சொல்லி விட்டு அறையை விட்டுப் போய் விட்டார்.

'பார்த்தாயா? என் வார்த்தையை நீ நம்பவில்லையோனோ?'— என்பது போல அக்காவைப் பார்த்தேன். ஆனால் அக்கா அதற்குள் ஆயாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கென்டு தேம்பித் தேம்பி அழுதுக் கொண்டே,

'இந்தக்கல்யாணம் நடக்கக்கூடாது! முடியாதுன்னு சொல்லிடு ஆயா'— என்றாள்.

ஆயா, 'அழாதேம்மா— அழாதே! என்று தேற்றிக் கொண்டிருந்தாள். காரணம் எனக்குத்தெரியாது. ஆனால் அன்றிரவெல்லாம் அக்கா அழுது கொண்டேயிருந்தாள். ஆயா தைரியம் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

லக்னம் வைத்துவிட்டார்கள். திருமணத்திற்கு இன்னும் ஒரே வாரந்தான் இருத்தது. ஏற்பாடுகள் எல்லாம் ஆர்பாட்டமாய், அந்தஸ்துக்குத் தகுந்தாற்போல நடந்து கொண்ருந்தன. அக்கா காலேஜீக்குப் போய்க் கொண்டிருந்தாள். ஆனால் அவள் முன்போல் இல்லை. மிகச் சோர்ந்துபோய் தென்பட்டாள்.

அக்கா கணேசனிடம் என்ன சொன்னானோ தெரியாது அவன் அன்று அப்பாவிடம் வந்து அக்கவைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டான். அப்பா அக்காவைத் திட்டினார்.

'உன்னை மன்னிக்கக் கூட முடியாது என்னால் என் மானத்தைக் கப்பல் ஏற்றிவிட்டாயே!'

என்று திட்டியதோடு நன்றாய் அடித்து விட்டார். அங்கே நிற்க முடியாமல் பக்கத்திலிருந்து கட்டிலில் சரிந்து குப்புற விழுந்து விட்டாள் அக்கா.

நான் பெரிதாய் அழத்தொடங்கி விட்டேன். ஆயாவும் தாதாவும் ஓடிவந்தார்கள். நான் ஆயாவைக் கட்டிக் கொண்டு விட்டேன். அப்பா இன்னும் அக்காவை ஏதேதோ திட்டியபடி அடித்துக் கொண்டேயிருந்தார். தாதா தடுக்க வந்தான் அப்பா அந்தக் கோபத்தால் தாதாவைக் கூட அடித்தார். தாதா அழுதுக்கொண்டே,

'அடியுங்கள்சார். உங்கள் ஆத்திரம் திர அடியுங்கள் ஆனால் பெண்ணை மட்டும் ஒன்றும் பண்ணிடாதிங்க! ஆயா என் கையை உதறிவிட்டு, உள்ளே போய் அப்பாவின் கால்களில் விழுந்து, 'ஸ்ராவணி உங்கள் மகள் இல்லை. இனிமேல் அவள் எங்கள் மகள். அவள் உடம்பில் அடி விழுந்தால் நான் கூட சும்மாயிருக்கமாட்டேன். உங்களுக்குப் பிடிக்காவிட்டால் ஸ்ராவணியை அழைத்துக் கொண்டு நாங்கள் எங்கள் ஊருக்குப் போய் விடுகிறோம்' —என்றாள் பெரிதாய்.

அப்பா உடனே கையிலிருந்த பிரம்பை உடைத்து அங்கேயே விட்டெறிந்து விட்டு வெளியே போய் விட்டார்.

ஆயா பக்கத்து அறைக்குப் போய் அக்காவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டு,



'ஸ்ராவணி! என் கண்ணே' என்றுக் கூப்பிட்டுக் கொண்டே அவள் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். ஸ்ராவணியின் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நினைவுக்கூட தப்பி விட்டாற் போலிருந்தது. தாதா ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தான். ஆயா ஒரு துணியை நனைத்துப் பிழிந்து ரத்தத்தைத் துடைத்தாள்.

'டாக்டரைக் கூப்பிடட்டுமா?' என்றான் தாதா.

'வேண்டாம். நீ போய் அவர் என்னவானார்னு பார்' என்றாள் ஆயா. தாதா அப்பாவைப் பார்க்கப் போய் விட்டான்.

அப்பா எங்கே போனாரோ தெரியாது. அன்றிரவெல்லாம் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் பகலெல்லாம் வரவில்லை. தாதாவும் ஆயாவும் கலக்கமடைந்தார்கள். ஆனால் அன்று மாலையில் வீட்டிற்குத் திரும்பி வந்தார். ஆள் எப்பொழுதும் போலவே தான் இருந்தார். அதே லக்னத்தில் யாரையாவது கூட்டிவந்து திருமணம் பண்ணி வைத்து விடவேண்டும் என்று அன்று முழுவதும் முயற்சித்திருக்கிறார். ஆனால் முடியவில்லை.

'திருமணம் நின்று போய்விட்டது. ஊரெல்லாம் இந்த விஷயம் பரவிப்போய் விட்டது எல்லோரும் எங்களை விரல் சுட்டிக் காட்டும்படியாய்ப் பார்க்கத் தொடங்கினார்கள்' அக்கா தன் அறையைவிட்டு வெளியே வருவதையே விட்டாள். ஓரிரு முறை தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது, கூடவே நிழலாய் இருந்து வந்த ஆயா கண்டுபிடித்துத் தடுத்து விட்டாள்.

'அப்பா அப்புறமாய் ஸ்ராவணியை ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பேசுவதை விட்டுவிட்டார்.

'அப்பா தன்னோடு பேசுவதையே விட்டுவிட்டார் என்றறிந்து அக்கா தேம்பித் தேம்பி அழுவாள். வரவர

அக்காவின் உடல் நிலை கெடத் தொடங்கிற்று. பிழைக்கவே மாட்டாள் என்றுதான் நினைத்தோம். கடைசியில் ஆசுபத்திரியில் பதினைந்து இருபது நாட்கள் இருந்து விட்டு வந்தாள். பிறகு கூட ஆயா கண்ணில் வினக்கெண்ணை விட்டுக் கொண்டு கவனித்து வந்ததால் கொஞ்சம் தேறிக் கொண்டாள். அதற்குள் ரஜாக்கர் இயக்கம் வந்தது. அதில் அப்பாவும் தாதாவும் செத்து விட்டார்கள்.'

கீர்த்தி நிறுத்தி விட்டுக் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். மகேந்திரன் கண்கொட்டாமல் கீர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை அங்கேயிருந்தாலும் அவன் மனம் மட்டும் அங்கில்லை. செவிகள் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதன் பொருளை உணரவில்லை. பேயறைந்தாற் போல அப்படியே நின்று கொண்டிருந்தான். ஆனால் மகேந்திரனின் இந்த மாறுதல் எதையும் கவனிக்காத கிர்த்தி இன்னும் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

'அப்புறமாய் எங்கள் நிலைமை தாறுமாறாகி விட்டன. அப்பா போன பிறகு கொஞ்சத்தை சர்க்கார் பறித்துக்கொண்டு விட்டார்கள். மீதியைக் கடன்காரர்கள் சுற்றிப் பறித்துக் கொண்டார்கள்'.

'எங்களுக்கு அவ்வளவு கடன் இருந்ததாய் அதுவரை தெரியவே தெரியாது.' அவர் போய் விட்டார். உங்கள் கடனில் எங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று அவர்களை எய்க்குப்படி ஆயா சொன்னாள். ஆனால் கேட்டுக்கொள்ளாமல் எல்லாவற்றையும் தீர்த்து விட்டாள்.

'அக்காவின் உடம்பில் கொஞ்சநஞ்சம் இருந்த நகைகள் கூட எங்கள் சாப்பாட்டிற்கும் மருந்துச் செலவுகளுக்கும் செலவாகிவிட்டது அப்புறமாய் வேலைக்கு முயற்சிப் பண்ணினாள். அக்காவின் ஆபீசில் கூட இந்த விஷயம்



எப்படிப் பரவிற்றோ தெரியாது. அவர்கள் நீச்சயமாய் நடந்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இளப்பமாய் பார்த்தார்கள். அக்கா இதையெல்லாம் கூட பொறுத்துக் கொண்டு வேலை பார்த்து, வந்தாள்.

'கடைசியில் ஒரு நாள் ஆபீசில் அக்காவோடு கூட வேலை செய்த ஒருவன் தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள் என்றும் ,இல்லாவிட்டால் இதையெல்லாம் வெளியே சொல்லிவிடுவேன் என்றும் பயமுறுத்தி லெட்டர் போட்டான். அக்கா மறுநாள் காலையில் போய் வேலையை ராஜினாமா பண்ணிவிட்டுவந்து விட்டாள்.

'இன்னொரு ப்ரைவேட் கம்பெனியில் அக்கா சேர்ந்து ரெண்டு மாதங்கூட ஆகவில்லை; கம்பெனி மானேஜர் ஃபைல்களை எடுத்துக் கொண்டு அக்காவை அறைக்குள் வரச்சொல்லிவிட்டு அருவருப்பாய் நடந்துகொண்டாராம். அப்பொழுது எப்படியோ தப்பித்துக் கொண்டு வீட்டிற்கு ஓடிவந்து ஆயாவிடம் அழுது கொண்டே நடந்ததைச் சொன்னாள்

'இந்த மாதிரி சம்பவங்கள் நடந்த பொழுதெல்லாம் அக்கா ஏதோ போல ஆகிவிடுவாள். திரும்பவும் பழைய படி ஆகக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகிவிடும். இம்முறை ஆயா அக்காவிடம் இனி உத்யோகம் செய்ய தேவையில்லை என்று சொல்லிவிட்டாள்.

'நாங்கள் பிறந்த ஊர் ஐதராபாத் தான். அப்பா நிஜாம் மன்னரின் அரசாட்சியில் வேலை பார்த்து வந்தார். எங்களுக்கு சொந்தக்காரர் கூட கிடையாது. நாங்கள் இங்கே ஐத்ராபாத்துக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள இந்த வீட்டிற்கு வந்து காய்கறி வியாபாரத்தைத் தொடங்கினோம்—ஆயாவின் ஆலோசனைப் பேரில். இந்த வீடு கூட தாதாவின் வீடுதான்.

'தாதாவின் மனைவியான ஆயா எங்களை சிறு வயதிலிருந்தே தாயைப் போல வளர்த்து வந்தவள். அதனால்

நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பமாய் இருந்து வர முடிந்தது.'

கீர்த்தியின் கடைசி வார்த்தைகள் மகேந்திரனின் செவிகளில் விழவில்லை. அவன் திடீரென்று வெட்கத்தாலும், ஒன்றும் செய்ய முடியாத, செய்வதறியாத மனத்தாலும் அதள பாதாளத்தில் விழுந்து விட்டவனைப் போல உணர்ந்தான்.

கடவுளே! ஒரே ஒரு நிமிஷம் தான் மிருகமாய் மாறி பலவீனத்திற்கு அடிமையான தன் விளைவு ஸ்ராவணியின் வாழ்க்கையில் இவ்வளவு பயங்கரத்தைத் தோற்று வித்துவிட்டதா? இதுவரை ஏதோ பொருளாதார நிலைமையாலும், ஒருக்கால் தான் திருமணம் பண்ணிக் கொண்டால் கால் சரியாக இல்லாத கீர்த்தியை வரப் போகும் அவள் தம்மோடு வைத்துக் கொள்ள மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற யோசனையால்தான் திருமணம் பண்ணிக் கொள்ளாமல் இந்த மாறுமூலைக்கு வந்து கழித்து வருவதாய் எண்ணியிருந்தான் அவன். இதற்குப் பின்னால் இவ்வளவு பயங்கரமான கதை இருந்தது தெரியாது. மகேந்திரனுக்கு அந்தச் சமயமே ஓடிப்போய் ஸ்ராவணிக்கு முன்னால் மண்டியிட்டு,

'ஸ்ராவணி! என்னை மன்னித்து விடு. இந்தப் பாவம் எல்லாம் என்னோடது. இந்தக் குற்றம் என்னோடது' என்று வேண்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

'அக்கா அதிலிருந்து ரொம்பவும் மாறிவிட்டாள். அவ்வப்பொழுது என்னை இழுத்து அணைத்துக் கொண்டு 'உனக்காகவே நான் வாழ்கிறேன் கீரத்தி. அதுகூட நீ ஊனமாய் இருப்பதால்தான்' என்று கண்ணீர் விடுவாள். எனக்குக் கூட அழுகை வந்து விடும்.

'எங்கக்கா ரொம்பவும் நல்லவள். 'எல்லாம் என் துரதிர்ஷ்டம்' என்று தன்னைத் தான் நிந்தித்துக்கொள்



வாளே தவிர, யாரையும் விரல் சுட்டிக்காட்டி ஒன்றுமே சொல்லமாட்டாள். இதையெல்லாம் உங்களிடம் ஏன் சொன்னேன் என்றால் நீங்கள் ரொம்ப நல்லவர். அதைப் புரிந்துக்காதது அக்காவின் தப்புதான். ஆனால் அதற்குக் காரணம் இதுதான். அக்கா உங்களை அலட்சியமாய் பார்ப்பதாய்க் கவலைப்படாதீங்க. மன்னித்து விடுவீங்களோனோ?'

தீனமாய் பார்த்தபடி கேட்டான். மகேந்திரன் சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவன் உள்ளத்தை ஆயிரம் ரம்பங்களால் அறுத்தாற் போலிருந்தது.

'சொல்லுங்கள். அக்காமேல் கோபித்துக் கொள்ள மாட்டீங்களே?'

'கோவிச்சுக்க மாட்டேன் கீர்த்தி. நீ என் கண்களைத் திறந்து விட்டாய்!'

'அக்கா மேல் நீங்க கெட்ட அபிப்ராயம் ஏற்படுத்திக் கொள்வதை என்னால் தாங்கிக்க முடியாது.'

கீர்த்தியின் கண்கள் குளமாகி விட்டன.

'இல்லை கீர்த்தி! இனி ஒரு போதும் அந்த மாதிரி செய்ய மாட்டேன். ஆனால் நீயும் எனக்கு ஒரு வாக்குறுதி தரணும்.'

'அதென்ன வாக்குறுதி? சொல்லுங்கள்.'

'நீ கூட ஸ்ராவணியை எந்த விதத்திலும் வருத்தப் படுத்தக்கூடாது எதிர்த்துப் பேசவும் கூடாது. நாமிருவரும் சேர்ந்து முடிந்தவரை ஸ்ராவணியை சந்தோஷப் படுத்த முயற்சிக்க வேண்டும்.'

கீர்த்தியின் கண்கள் சந்தோஷத்தால் மின்னின.

'சத்தியம். இனி நான் என்றுமே அக்காவை எதிர்க்க மாட்டேன்' என்றான்.

மகேந்திரன் கிர்த்தியை இழுத்து அணைத்துக் கொண்டே கேசங்களை ஒதுக்கிவிட்டு

'இன்னொன்றைக் கூட நீ மறந்துடாதே. எப்படிப் பட்ட நிலைமையிலும் என்னிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளத் தயங்கவேண்டாம். கூடியவரை ஸ்ராவணியிடம் நயமாய்ப் பேசி எடுத்துச் சொல்வதற்கு முயற்சி செய்.'

கிர்த்தி சரி என்று தலையாட்டினான்

'நான் அடுத்த முறை ஊருக்குப் போகும்போது நல்ல டாக்டரைக் கூட்டிட்டு வந்து காட்டறேன். ஆபரேஷன் மூலமாய் உனக்கு ஏதாவது லாபம் இருக்குமானால், எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை, நான் தரேன்.'

கிர்த்தி நன்றியை அடக்கமுடியாதவனாய் மகேந்திர னின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அவன் கண்களில் நீர் ததும்பிற்று. மகேந்திரனைப் போன்ற நல்ல மனுஷன் இந்த உலகத்தில் எங்காவது உண்டா?

'இந்த விஷயத்தையெல்லாம் நம்மோடு மட்டுமே வைத்துக்க வேண்டும். இன்றையிலிருந்து உனக்கு எந்தக் குறையும் வராமல் பார்த்துப்பது என் கடமை. போதுமா?' கிரத்தியின் முகவாயைப் பற்றித் தூக்கி நிறுத்தி விட்டுச் சொன்னான் நன்றாய் இருட்டி விட்டது' வானத்தில் அதற்குள் சந்திரன் கிளம்பிவிட்டான்.

வீட்டிற்குப் போனதுமே ஸ்ராவணியைக் கூப்பிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சொல்லியும்,



கடிதவிஷயத்தைச் சொல்லக் கூடாது என்றும் கிர்த்தியிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டான்.

அன்றிரவு அவனுக்கு உறக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டேயிருந்தான். கிர்த்தியின் வாயிலிருந்து கேட்ட வேதனை மயமான கதை அவனைப் பைத்தியம் பிடிக்கும்படி செய்துகொண்டிருந்தது. சூனியத்தைப் பார்த்துக் கைநீட்டி

'ஸ்ராவணி! ஸ்ராவணி! என்னிடம் வா! சிதைந்து விட்ட உன் வாழ்க்கையை நான் சரி செய்ய அனுமதி. எனக்கு இந்த சான்ஸைத் தந்து, என்னை இந்த நரகத்தி லிருந்து மீட்டு விடு, என்னை உன்னிடம் வருவதற்கு அனுமதி!'—என்று குமுறிக் கொண்டேயிருந்தது அவன் மனது.

எவ்வளவு நாளானாலும் சரி— எவ்வளவு யுகமா னாலும் சரி திரும்பவும் ஸ்ராவணியின் வாழ்க்கையில் நுழைந்து, அவள் வாழ்க்கையின் மீது பற்றை உண்டாக்க வேண்டும். இதில் வெற்றி பெற்றாலும் சரி, பெறவிட்டா லும் சரி தன் உடம்பில் உயிருள்ள வரை அதற்காகப் பாடுப்பட வேண்டும். இந்த முயற்சியில் தன் வாழ் நாள் பூராவும் பாடுபட வேண்டியிருந்தாலும் சரி; அவன் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. தன் பண்பிற்கு இதைச் சவாலாய் எடுத்துக் கொண்டான் அவன்.

## 21

மகேந்திரன் என்றோ உபசாரத்திற்கா வரச்சொல்லிக் கூப்பிட்டிருந்ததை சாக்காய் வைத்துக் கொண்டு ஒரு நாள் காலையில் சாம்பவியும் அவள் கணவன் சந்திரனும் வந்து சேர்ந்தார்கள். இரு குழந்தைகளின் தாயாகி விட்ட சாம்பவி பசலை நிறத்துடன் மினு மினுத்துக் கொண்டிந் தாள்.

'என் கணவர் ஒரு கேஸைப்பற்றி ஆராயணுமாம். அங்கே அவங்களும் இவங்களும் வருவதால் ஒரு நிமிஷம் கூட ஓய்வே கிடைக்கமாட்டேங்கிறது. இங்கேயானால் அமைதியாய் இருக்கும்னு நினைத்து நான்தான் பலவந்தமாய் இழுத்து வந்தேன்' என்றாள் சாம்பவி

'பட்டிக்காட்டு வீடுன்னால் ஏதோ வவ்வால்கள் தொங்கிட்டிருக்கும்னு நினைச்சுட்டிருந்தேன். வீடு நன்றாய்த் தான் இருக்கு.,

விசாலமான அறைகளை யெல்லாம் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

மகேந்திரன் அவர்கள் வந்து தங்கியிருந்த அவ்விரண்டு நாட்களும் கீர்த்தியின் வீட்டிற்குப் போகவில்லை. உறவினர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் பிஸியாய் இருப்பதாயும் லெட்டர் எழுதி வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பினான் கீர்த்திக்கு. அங்கே போனால் யார் என்ன விஷயம் என்று சாம்பவி துருவிக் கேட்பாள் என்று பயந்தான்.

மூன்றாவது நாள் பிற்பகலில் மாந்தோப்புக்களிலிருந்த மாமரங்களையெல்லாம் பரிசோதித்தபடி காலற நடந்துக் கொண்டிருந்தான். மகேந்திரனின் வீட்டிற்கும் ஸ்ராவணி இருந்த வீட்டிற்கும் குறுக்கே முள் வேலி இருந்தது அதில் உயரமாய்ப் படர்ந்துப் பின்னிக் கொண்டிருந்தன காட்டுக் கொடிகள். ஏதோ யோசித்தபடியே நடந்து கொண்டிருந்த மகேந்திரன் பேச்சுக்குரல் கேட்கவே சட்டென்று நின்று விட்டான்.

இரண்டு பேர்கள் தனியாய் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அதாவது ஏகாந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாற் போலிருந்தது. அதைத் தெரிந்து கொண்டுகூட அவர்களுக்கு ஊறு விளைவிப்பது சிறந்தது



அல்ல என்றெண்ணினான். மகேந்திரன் அங்கிருந்துப் போய்விட இரண்டடிகள் எடுத்து வைத்தான். ஆனால் அங்கே அவ்வளவு தூரம் தனியாய் நின்று பேசிக் கொண்டிருப்பவர்கள் யார்? சரியாய் அவன் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்காகவே என்றாற்போல,

'என் பேச்சைக் கேளு ஸ்ராவணி! உனக்கு இந்த தலையெழுத்து எதுக்கு? என்னோடு வந்துவிடு. உன்னைப் பூவில் வைத்துப் பார்த்துக்கறேன்.'

என்ற பேச்சுக்குரல்கேட்டது. அது சந்திரனின் குரல்! மகேந்திரன் சட்டென்று நின்றுவிட்டான். சந்திரனுக்கும் ஸ்ராவணிக்கும் எப்படிப் பரிச்சயம் ஏற்பட்டது? அவன் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டே கேட்கத் தொடங்கினான்.

'என்ன சொல்கிறாய்?' திருப்பிக் கேட்டான்.

'மன்னித்து விடுங்க சந்திரன்! இதுவரை நீங்க நாலு தடவை இப்படிக் கேட்டு விட்டீங்க. நான் அங்கே வந்து என்ன பண்ணுவேன்? எங்கே இருப்பேன்?'

'இது அர்த்தமில்லாதகேள்வி! என்னிடமே இருந்துக்கலாம். எங்க வீட்டிலேயே வெச்சுக்கறேன்.'

'சந்திரன்!'

'என் மனைவி ஏதாவது நினைத்துக்கப் போகிறாளேன்னு தானே பயப்படுகிறாய்? அதையெல்லாம் என்னிடம் விடு... கல்யாணம் பண்ணிண்டு ரெண்டு குழந்தைங்க பிறந்துட்டதால் மட்டும் நான் சுகமாய் இருக்கிறதாய் எண்ணிவிடாதே. சாம்பவி வந்த பிறகு எனக்குப்பணம் நிறைய வரத் தொடங்கியது உண்மையே. ஆனால் சாம்பவியை நான் என்றுமே காதலித்தது இல்லை

காலேஜில் படிக்கும்போது நான் உன்னை எப்படிப் போற்றி வந்தேனோ அதேபோலவேதான் இப்பொழுதும் போற்றிக் கொண்டிருக்கிறேன்!'

'இதைச் சொல்றத்துக்கு வெட்கமாயில்லையா உங்களுக்கு?'

'வெட்கம் எதுக்கு? உண்மையைச் சொல்றத்துக்கா?' ஆனாலும் சாம்பவிக்கு நான் ஒன்றும் குறைவைக்கலையே! ஒரு கணவனாய் தரக்கூடியதையெல்லாம் தந்துட்டேதான் இருக்கேன்.'

'எல்லாம் என்றால்?'

'வேறென்ன? பணம், ஹோதா, சுகமாயிருக்க வசதிகள், சமூகத்தில் பேரும் புகழும்...'

'இதைக்காட்டிலும் பெண்ணுக்கு வேறெதுவும் தேவையில்லை என்பது உங்கள் எண்ணமா?'

'தேவை இருக்கு, இல்லைங்கலே. ஆனால் பெண்களில் கூட பலதரப்பட்டவங்க இருக்காங்க. சாம்பவி இவற்றால் மட்டுமே திருப்தியடைகிறவள்.'

ஒரு வினாடி நிசப்தம்.

'நான் போகிறேன். யாராவது பார்த்தால் நன்றாயிராது.'

'இங்கே யார் பார்த்துடப் போறாங்க? என் மனைவி அவள் அத்தானுடன் சரஸமாடிட்டிருப்பாள்' அவனைப் பார்த்துட்டால் போதும் இவளுக்குத் தலைகால் புரியாது. உண்மையைச் சொல்லணுமானால் உன்னிடம் எதற்காக மறைத்து வைக்கணும்; என் மனைவிக்கு என் மேல் அன்பே இல்லை. அவளும் அத்தானும் சிறு வயதிலேயே



கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சுட்டிருந்தாங்களாம். இந்த ஆள் ஜெயிலுக்குப் போய் உட்கார்ந்துவிட்டதால் சாம்பவி காற்றுப் போன திசையாய் என்னிடம் அடித்துக் கொண்டு வரப்பட்டாள்.'

'ஜெயிலுக்கா?'

'ஆமாம். அவன் பெரிய கேடி. அது உனக்குத் தெரியாதா?

மகேந்திரன் பற்களை நறநறத்தான். உள்ளங்கைகளை மடக்கிக் கொண்டே கோபத்தை அடக்கிக் கொண்டான். ராஸ்கல்! இப்படியே அவன் மேல் பாய்ந்து பல்லைத் தட்டிவிட்டால்?

'நான் போகிறேன் சந்திரன்.'

'என் பேச்சைக் கேளு கொஞ்சம் யோசித்துப்பார்.'

'நிறைய யோசித்தாகி விட்டது.' இந்தப் பட்டிக்காட்டில், இந்த மாறுமூலையில் எனக்கு நிம்மதியாய் இருக்கிறது. கல்யாணம் பண்ணிக்கணும் என்ற ஆசை எனக்கு இல்லை. நாலு பேர்களுக்கு இடையே வளைய வரணுங்கிற தவிப்பும் இல்லை. எந்த தொல்லையும் இல்லாமல் நிம்மதியாய்க் கழிந்துப்போயிட்டிருக்கிறது என் வாழ்க்கை. அது போதும் எனக்கு.'

'நீ வேண்டுமென்றே இவ்வளவு வைராக்கியத்தை வரவழைத்துக்க வேண்டிய தலையெழுத்து ஏன் என்றுதான் புரியலை எனக்கு?'

'வாழ்க்கையில் இன்னொரு தடவை அடிப்பட்டு விட்டால் தாங்கிக்க முடியாதோங்கிற பயத்தால்தான்?'

'அழகாயிருக்கு. மனிதர்களாய்ப் பிறந்து விட்டால் கஷ்ட சுகங்கள் அநேக விதங்களில் வந்துட்டேதான் இருக்கும்!'

'எனக்கு வந்த கஷ்டத்தைப் போல உலகத்தில் எந்தப் பெண்ணுக்குமே என்றுமே வரக்கூடாது.' ஸ்ராவணியின் குரல் நடுங்கிற்று.

'பைத்தியக்காரியாய் இருக்காயே! உலகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறவங்க எல்லோருமே சுகமாய் வாழ்ந்துட்டிருக்காங்களா என்ன! எந்தக் கஷ்டம் வந்தாலும் தைரியமாய் இருக்கணுமே தவிர...'

'அந்த ரெண்டுமே என்னிடம் இல்லை.'

'வாழ்க்கையை வெறுத்துக் கொண்டே வாழ்வதால் என்ன லாபம்?'

'அதான் எனக்கும் தெரியலை. சில சமயம் யோசித்துப் பார்த்தால் நான் எதுக்காக வாழ்ந்துட்டிருக்கேன் என்றே எனக்கே புரியலை. கீர்த்தி மட்டும் இல்லாவிட்டால் —அவனுக்கு என் தேவைமட்டும் வேண்டாம் என்றிருந்தால்—'

'அவன் ஒருத்தன் உன் தலையில் பாரமாய் உட்கார்ந்துட்டான்.'

'தவறாய் புரிஞ்சுக்கிட்டீங்க' இந்த உலகத்தில் எனக்கு இருக்கிற ஒரே ஒரு பந்தம் அவன்தான்.

'அதென்னவோ, உன் பேச்சு தோரணையே மாறிப் போயிடுத்து. சுறுசுறுப்பாய் வளைய வந்து கொண்டிருக்கும் அந்த மின்னல் கொடி ஸ்ராவணிதானான்னே சந்தேகமாய் இருக்கு.'



'இப்பவாவது அதைப் புரிந்துக்கிட்டால் சந்தோஷம் வரேன்சந்திரன்!'

'சாயந்திரமாய் வீட்டுப்பக்கமாய் வரமாட்டாயா?'

'வரமாட்டேன்!'

ஒரு வினாடி நிசப்தம் திரும்பவும் ஸ்ராவணியின் குரல் கேட்டது.

'சந்திரன்! ஒன்று மட்டும் வேண்டிக்கிறேன் உங்களை! நம் பரிச்சயத்தைப் பற்றி இங்கே யாரிடமும் சொல்லி விடாதீங்க.'

'ஏன்? பிடித்தவர்கள் யாராவது பொறாமைப்பட்டு பிரிந்துப் போயிடப் போறாங்களேன்னு பயமா?'

'சரி, உங்களிஷ்டம்.'

ஸ்ராவணி போய்விட்டதை காலடியில் புரண்ட காய்ந்த சருகுகள் எழுப்பிய சலசலப்பு சப்தத்தால் தெரிந்து கொண்டான் மகேந்திரன்.

## 22

தன் மேல் எவ்வளவு வெறுப்பு இருந்தாலும் கீர்த்திக்காக ஸ்ராவணி அவற்றைப் பொருட்படுத்தமாட்டாள் என்று புரிந்தது மகேந்திரனுக்கு.

ஸ்ராவணியிடம் குடிக் கொண்டிருக்கும் இந்த கடுமையைத் தளர்த்த வேண்டுமானால் கீர்த்தி ஒருத்தன் தான் ஆதாரம். அதனால்தான் மகேந்திரன் அந்த ஆதாரத்தை அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டான். அவனுக்குப் பிடிவாதம் அதிகம். எதையாவது நினைத்து விட்டால்

சாதித்தே தீரவேண்டும். அதுவரை உறங்கவும் மாட்டான். நினைத்தது நடக்கத் தாமதமானால் ஏமாற்றத்தால் அந்த முயற்சியைக் கைவிட்டு விடும் ஆள் அல்ல அவன். அவன் நூற்றுக்கு நூறு சதவீதம் திடமான நம்பிக்கையுடனேயே கடைசி வரைக்கும் முயன்று கொண்டேயிருப்பான். அதில் அலுப்போ சலிப்போ இராது.

அறிந்தோ அறியாமலோ ஸ்ராவணிக்குத் தன்னால் மிகப் பெரிய அநியாயம் ஏற்பட்டு விட்டது. அதை சரிப் பண்ண வேண்டிய பொறுப்பு தன்னைச் சேர்ந்தது என்றெண்ணினான். ஸ்ராவணியின் வாழ்க்கையைத் திருத்தியமைத்து, அவளுக்கு ஒரு ஆதாரத்தை ஏற்படுத்தி, திரும்பவும் அவள் வாழ்க்கை என்ற பட்டுப்போன மரத்தில் தளிர்களைத் துளிர்க்கச் செய்து பூக்களைப் பூக்கச் செய்ய வேண்டியது தன் தர்மம் என்று நம்பினான். அதற்காகவே தீவிரமாய் முயற்சி செய்யத் தொடங்கினான்.

அவளுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்த வேண்டுமானால் எந்த விஷயத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதை நுட்பமான அவன் மனது ஊகித்தறிந்து கொண்டது. என்றாவது ஒரு நாள் கீர்த்தி மூலமாய்தான் அவன் ஸ்ராவணியை வெல்ல வேண்டும்.

பதினைந்து நாட்களுக்குள்ளாகவே ஐதராபாத்தில் தனக்குத் தெரிந்தவர்கள் முலமாய் முயன்று ஸ்பெஷலிஸ்ட் ஒருவரைக் கூட்டிவந்து காட்டினான். அவர் கீர்த்தியைப் பரிசோதித்து விட்டு ஆபரேஷன் பண்ணினால் அவன் கால் குணமாகலாம் என்றும், ஆனால் ஆறு ஏழு வாரங்கள் ஆசுபத்திரியிலேயே சிகிச்சைக்காகத் தங்கியிருக்க வேண்டும் என்றும் சொன்னார். ஸ்ராவணியும் ஆயாவும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

கீர்த்தியின் ஆபரேஷனைப்பற்றி ஒரு முடிவிற்கு வருவதற்கு சுமார் ஒரு மாத காலம் வாத விவாதங்கள்



நடைப்பெற்றன. ஆபரேஷனுக்குத் தேவையான செலவையெல்லாம் தற்சமயம் தானே ஏற்பதாயும், பிற்பாடு சௌகரியப்படி தன் கடனைத் தீர்க்கும்படியும் சொன்னான் மகேந்திரன்.

'அக்கா! உன்னிஷ்டம். நீ வேண்டாம் என்றால் நான் ஒன்றும் நினைத்துக்கமாட்டேன்.' என்றான் கீர்த்தி திகிலோடு. ஆயா கூட கீர்த்தி பக்கம் இருந்து வாதாடியதால் கடைசியில் ஸ்ராவணி வேறு வழியில்லாமல் 'உம்' என்று சம்மதத்தைத் தெரியப்படுத்த வேண்டியிருந்தது.

அன்று தான் கீர்த்தி ஆபரேஷனுக்குப் புறப்பட வேண்டிய நாள். மகேந்திரன் தானே சுயமாய் காரில் அழைத்துச் செல்லவிருந்தான். பின் சீட்டில் மெத்தென்ற திண்டுகளைப் பரப்பித் தயாராய் வைத்தான் கார் வந்து வீட்டிற்கு முன்னால் நின்றது. மகேந்திரன் இறங்கி உள்ளே வந்தபோது ஸ்ராவணி வெளுத்துப் போன முகத்துடன் கீர்த்தியின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். ஆயா கீர்த்திக்கு வேண்டிய சாமான்களைக் காரில் வைத்துக் கொண்டிருந்தாள். மகேந்திரன் மெதுவாய். கட்டிலுக்கருகில் வந்தான்.

'அக்கா! போயிட்டு வரட்டுமா?'

கீர்த்தி ஸ்ராவணியின் முகத்தைப் பார்த்துக் கேட்டான். ஸ்ராவணி மெதுவாய்க் குனிந்து கீர்த்தியின் இரு கன்னங்களிலும் நெற்றியிலும் முத்தமிட்டாள்.

'சீ! அழாதே. நீ அழுதால் எனக்குப் போகவே தோணாது.

அக்காவின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சொன்னான்.

'ஆபரேஷனுக்கு பயப்படமாட்டாயே?'

'ஊஹூம். எனக்கென்ன பயம்?'

'நீ ஒருக்கால் பயந்தால் தைரியம் சொல்றத்துக்கு நான் பக்கத்தில் இருக்கமாட்டேனே. அதான்...'

'நீ இல்லாவிட்டால் என்ன? மகேந்திரன் தான் இருக்காரே'' ஸ்ராவணியின் முகம் பொறாமையால் முறுக்கிக் கொண்டதை கீர்த்தி கவனிக்கவில்லை.

'ஆனால் பார்த்துண்டேயிரு, நான் ஒரே மாதத்தில் ஓடிவராவிட்டால் பார்.' கீர்த்தி உற்சாகமாய் சொன்னான்.

'ஒரு மாதம்!'

ஸ்ராவணி மனம் பாரமாய் முனகிற்று. மகேந்திரன், 'நேரமாயிடுத்து' என்று கீர்த்தியை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு காரை நோக்கிப் போனான்.

'வலிக்கிறதா?' கீர்த்தியின் நெற்றியில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே கேட்டான்.

'இல்லை. வலித்தாலும் பரவாயில்லை,' மகேந்திரன் கீர்த்தியின் கழுத்தைச் சுற்றிலும் கரங்களைப் போட்டுக் கொண்டே வலிய சிரித்தான் அவன் காட்டிய தைரியத்தையும் பொறுமையையும் கண்ட எல்லோர் கண்களும் பனித்தன.

கார் கிளம்பப் போகும் முன்னால் மகேந்திரன் ஸ்ராவணி பக்கமாய்த் திரும்பினான். ஸ்ராவணியின் பார்வை கீர்த்தியின் முகத்தில் நிலைத்துப் போயிருந்தது, மிகப் பிரியமான பொருள் ஏதோ தன்னை விட்டுப் பிரிந்துப் போனாற் போலவும்— கடைசி முறையாய் மனதார பார்த்துக் கொள்ள நேர்ந்தாற் போலவும் கண்கள் வேதனையாய் மாறின.

'வரச்சொன்னாலும் வரலை.' உங்க அக்கா வந்தால் நன்றாயிருக்கும்' என்றான் மகேந்திரன் வருத்தமாய்.



'அக்காவையா சொல்றீங்க? வராததே நல்லது. ஒருக்கால் நான் வலி தாங்கமுடியாமல் கத்தி அழுதால் அதைப் பார்த்துத் தாங்கிக்கவே முடியாது அக்காவால்' என்றான் கீர்த்தி.

கார் தொலைவில் மறைந்ததுமே சூனியத்தைப் பார்த்தபடி சிலையாய் நின்று விட்டாள் ஸ்ராவணி.

இந்த உலகத்தில் தனக்கு எஞ்சியிருந்த ஒரே பந்தத்தைக் கூட மகேந்திரன் பிரித்து வெகு தூரத்திற்குக் கூட்டிச் சென்று விட்டாற்போலவும் தன்னை தனியாளாக்கி விட்டாற் போலவும் தோன்றிற்று.

## 23

கீர்த்தியை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்தார்கள். வெளியே சொல்லிக் கொள்ளா விட்டாலும், கீர்த்தியின் முகம் பயத்தால் வெளுத்து விட்டது.

பக்கத்திலேயே இருந்த மகேந்திரன் கீர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டு அன்போடு பார்த்தபடி, 'பயப்படவில்லையே?' என்றான்.

'ஊஹூம். பயம் எதுச்சு? எல்லாம் நல்லபடியாய் முடிந்தால் உங்கள் எல்லோரையும் போல நானும் வாழ முடியும். இல்லாவிட்டால்... இல்லாவிட்டால்... நொண்டியாய் ஒவ்வொரு நிமிஷத்தையும் கணக்கிட்டுக்—கொண்டே அந்தக் கட்டிலோடு கட்டிலாய் இருப்பதைவிட உயிர் போய் விட்டாலே...'

'உஷ். அப்படிச் சொல்லக்கூடாது. தைரியமாய் இருக்கணும்' கீர்த்தியின் முகத்தில் படிந்த கேசங்களை ஒதுக்கிக் கொண்டே சொன்னான்.

கீர்த்தி மகேந்திரனின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டே,

'ஆனால் ஆபரேஷன் தியேட்டருக்குள் போவதற்கு முன்னால் உங்களை ஒன்று கேட்பேன். நீங்கள் வாக்குத் தரணும் 'என்றான்.

'என்ன சொல்லு? என்றாவது நான் நீ கேட்டதை மறுத்திருக்கேனா?'

'இல்லை தான்...ஆனால்' கீர்த்தி தயங்கினான்.

'சொல்லு கீர்த்தி;

'ஒருக்கால்— ஒருக்கால்... எனக்கு ஏதோவது ஆயிட்டால் அக்காவைப் பார்த்துக்கிற பொறுப்பு உங்களுடையது.' மகேந்திரனின் விரல்கள் அந்த வார்த்தைகளைக் கேட்டதுமே முறுக்கேறிக் கொண்டன. கீர்த்தியின் கண்கள் குளமாகி விட்டன.

'எங்க ஸ்ராவணி ரொம்ப அப்பாவி. நீங்க அவளோட கடுகடுப்பை மாத்திரந்தான் பார்த்திருக்கீங்க. அவளோட நல்ல குணத்தைப் பார்த்ததேயில்லை. கடவுள் அவளை எல்லா விதத்திலும் மோசம் பண்ணிடார். எனக்கு ஏதாவது ஆயிட்டால், ஸ்ராவணியை என்னால் தன்னந்தனியாய் ஊகிச்சுப் பார்க்கவே முடியலை. அவளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் நீங்க பார்த்துப் பீங்களா?,

'இப்ப அதெல்லாம் எதுக்கு கீர்த்தி?'

'சொல்லுங்கள். எனக்குக் கவலையில்லாமல் இருக்கும்.'

'சரி. ஆனால்...'

'சும்மா சொன்னால் போதாது. என் கைமேல் அடித்து சத்தியம் பண்ணிச் சொல்லுங்கள்.'



'சரி சரி'

'இல்லை, சத்தியம். போடணும்.'

'உன் மேல் சத்தியம். போதுமா?''

கீர்த்தியின் தலைமேல் கைவைத்துச் சிரிக்கப் போனவன் கண்கள் குளமாகி விட்டதால், சட்டென்று கீர்த்தியை மார்போடு அணைத்துக் கொண்டு, முகத்தை மறைத்துக் கொண்டான். 'நீங்கள் எவ்வளவு நல்லவர்! ஸ்ராவணி என்றாவது உங்களைப் புரிஞ்சுக்காமல் போகமாட்டாள்.'

நர்ஸ் கீர்த்தியை அழைத்துப் போக வந்தாள். கீர்த்தியும் மகேந்திரனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டே இருந்து விட்டார்கள். திடீரென்று கீர்த்தி மகேந்திரனின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டு அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டே,

'ஒருக்கால் எல்லாம்... எல்லாம் நல்லபடியாய் நடந்தால் எனக்குத் திரும்பவும் நினைவு வந்ததுமே நீங்கள் தான் முதல் முதலில் என் கண்ணில் படணும்.'

'உன் ஆபரேஷன் முடியும் வரை நான் இவ்விடத்தை விட்டு நகரமாட்டேன். எல்லாம் நல்லபடியாய் முடியும், தைரியமாய் இரு கீர்த்தி' கீர்த்தியின் தோள்களைச் சுற்றிலும் கைப் போட்டு அழுத்தமாய் மார்ப்போடணைத்துக் கொண்டான் மகேந்திரன்.

'அக்கா விஷயத்தை மறந்துடாதீங்க.' இது கீர்த்தியின் கடைசி வார்த்தை. நர்ஸ் கீர்த்தியைக் கூட்டிச்சென்று விட்டாள். ஆபரேஷன் அறைக் கதவுகள் மூடிக் கொண்டு விட்டன. வெளியே தனியாய் நின்று விட்டான் மகேந்திரன்.

என்றுமில்லாதவாறு பயத்தால் அவன் உடல் சிலிர்த்தது. ஸ்ராவணியின் முகத்தை அவனால் பார்க்கமுடியுமா?

# 24

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆசுபத்திரிக்கு ஆயாவும் ஸ்ராவணியும் வந்தார்கள். வெள்ளைநிற படுக்கை மீது ரத்தம் வற்றிய முகத்துடன் படுத்துக் கொண்டிருந்த போதிலும், முகத்தில் பலவீனம் நன்றாய்த் தென்பட்ட போதிலும் கீர்த்தியின் கண்களில் மட்டும் உற்சாகம் பளபளத்துக் கொண்டிருந்தது.

'அக்கா'

'கீர்த்தி!' ஸ்ராவணியின் கண்கள் அதற்குள் குளமாகி விட்டன. கண்ணீர் பொலபொலவென்று கீர்த்தியின் நெற்றியில் விழுந்தன.

'சீ! எதுக்கு? அதான் எல்லாம் நன்றாய் முடிந்துப் போயிடுத்தே! அக்கா! நான் ஷேமமாய் பிழைத்துத் தேறியதற்கு உனக்கு சந்தோஷமாய் இருக்கா? சொல்லு!'

கீர்த்தி கேட்ட தோரணையைப் பார்த்து ஸ்ராவணி அசந்து விட்டாள்.

'நிஜமாய், மனப்பூர்வமாய் நீ சந்தோஷப்பட்டால், நீ சுயமாய் மகேந்திரன் சாருக்கு நன்றி சொல்லு. அவரோட நன்றியை நாம்ப எத்தனை ஜன்மம் எடுத்தாலும் தீர்க்க முடியுமா, நீயே சொல்லு'!

அக்காவின் மனதில் மகேந்திரனிடம் நல்ல அபிப்பி ராயத்தை ஏற்படுத்தி 'ஆமாம் என்று ஒப்புக் கொள்ளும் படிச் செய்ய வேண்டும் என்றெண்ணிய கீர்த்தி, இதையே நல்ல சந்தர்ப்பமாய் பயன்படுத்திக் கொண்டாள்.

ஒரு வினாடி தடுமாறி விட்ட ஸ்ராவணி, வாய் வார்த்தை வெளிவராமல் தம்பியையே பார்த்தபடி நின்று



விட்டாள். கீர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டு ஸ்ராவணி பார்க்கப் போகும் ஒரு குளிர்ந்த பார்வைக்காகப் பரபரப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரனுக்கு ஏமாற்றந்தான் எதிர்ப்பட்டது.

அங்கிருந்து நகர்ந்து வாசலில் போய் நின்றான், அவன் ஏன் வருந்தவேண்டும்? கீர்த்தி மூலமாய் ஸ்ராவணிக்கு நேர்ந்த அநியாயத்திற்குப் பரிகாரம் பண்ண வேண்டும் என்றெண்ணினான் பண்ணிவிட்டான். அவ்வளவுதான்.

ஸ்ராவணி நன்றி செலுத்தாவிட்டாலும் போகட்டும், அவன் தன்னால் முடிந்ததைச் செய்வான். அவ்வளவே!

'ஹலோ மகேந்த்ரா.'

மகேந்திரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். ஜமுனா ஓடி வந்தாள்.

'மகேந்திரா, நீங்க இங்கே...' ஆச்சரியத்தையெல்லாம் கண்களாலும் புருவத்தாலும் எடுத்துக் காட்டிக் கொண்டே உரிமையுடன் அவன் கையை பிடித்துக் கொண்டே கேட்டாள்.

'மொதல்ல நீ எதுக்கு இங்கே வந்தாய், அதைச் சொல்லு' என்றான் மகேந்திரன்.

'என் ஃபிரெண்ட் ஒருத்திக்கு ஆபரேஷன் ஆச்சு. நீங்க இங்கே எதுக்கு வந்தீங்க?'

'எனக்குத் தெரிஞ்சவங்களோட பையனுக்கு ஆபரேஷன் ஆச்சு.'

ஸ்ராவணி திரும்பி அவர்களைப் பார்த்தாள்-

'யார் அந்தத் தெரிஞ்சவங்க?'

'உனக்குத் தெரியாது.'

'எனக்குத் தெரியாத உங்க சிநேகிதர் யாரோ?'—

ஜமுனா உள்ளே எட்டிப் பார்த்தாள். இந்த பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ராவணியின் பார்வையும் ஜமுனாவின் பார்வையும் கலந்தன,

'யாரு?' என்று கேட்டுக் கொண்டே மகேந்திரனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள் ஜமுனா.

ஸ்ராவணி சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'அட! நீயா? வேறு யாரோன்னு நினைச்சேன்.' வியப்பைக் காட்டிக் கொண்டாள் ஜமுனா.

'நீங்களிருவரும் தெரிஞ்சவர்கள்தானா? அப்படீன்னால் எனக்குப் பரிச்சயம் பண்ணவேண்டிய தேவையே இல்லாமல் போயிடுத்து.' மகேந்திரனும் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான்.

'அவ்வளவு ஸ்பெஷலாய் அறிமுகம் பண்ணிக்க வேண்டிய பிரமுகர்கள் யாருமில்லை. ஆமாம் மகேந்திரா, இவங்களைப் போய் எங்கே பிடிச்சீங்க நீங்க?' ஜமுனா மகேந்திரனைப் பார்த்து பயமின்றிக் கேலியாய் கேட்டாள். மகேந்திரன் திகைப்படைந்தவனாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

'அதெல்லாம் உனக்குத் தேவையில்லை. மொதல்ல நீ இந்த அறையை விட்டுப் போ.' கீர்த்தி கோபத்தால் பெரிதாய் கத்தி விட்டாள்.

'கீர்த்தி!' ஆயா கலக்கத்துடன் கிட்டே போனாள். ஜமுனா கீர்த்தியை நோக்கி அலட்சியமாய் ஒரு விஷப்



பார்வை பார்த்து விட்டு ஸ்ராவணியிடம்—' உம்! அப்படீன்னால் அக்காவும் தம்பியும் நல்ல ஆளைப் பார்த்துதான் பிடிச்சிருக்கீங்க போலிருக்கு' என்றாள்.

'ஜமுனா!' மகேந்திரன் கடுமையாய் அழைத்தான்.

'உனக்குத் தெரியாது-எனக்கு எந்தப் பயமும் இல்லை. இவங்க சங்கதியெல்லாம் எனக்குத் தெரியும். எங்கே, துணிச்சல் இருந்தால் நிமிர்ந்து பார்த்து என்னோடு பேசச் சொல்லுங்கள், பார்ப்போம். உங்களுக்குக் கடுமையாய்ச் சொல்கிறேன். நீங்க சிநேகம் வைக்கக் கூடிய தகுதி படைத்தவங்க இல்லை இவங்க.'

அதற்குள் மகேந்திரன் ஜமுனாவின் தோளைப் பற்றி தரதரவென்று வெளியே இழுத்துக் கொண்டு போய் விட்டான்.

'ராட்சசி!' இங்கே எப்படி வந்தாள்? மகேந்திரனுக்கு எப்படிப் பரிச்சயம்? 'என்றாள் கீர்த்தி பல்லைக் கடித்துக்கொண்டே.

ஸ்ராவணி அதற்குள் முகத்தைக் கரங்களால் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழத்தொடங்கி விட்டாள். ஆயா அக்கா, தம்பி இருவரையும் தேற்றத் தொடங்கினாள்,

## 25

'ஜமுனா, உனக்கு புத்தி இருக்கா? படித்துப் பண்பாடுள்ளவங்க பேசுகிற பேச்சா இது?மரியாதையா இது?'

வெளியே வந்த பிறகு மகேந்திரன் கோபமாய்க் கேட்டான்.

'அவங்க மூஞ்சி! அவங்களுக்கு மரியாதை வேறு கேடா? அந்தப் பொண்ணு எவ்வளவு பாசாங்குக்காரின்னு உங்களுக்குத் தெரியாது'— அலட்சியமாய் பதிலளித்தாள் ஜமுனா.

மகேந்திரன் அவள் பேச்சைக் கேட்கப் பிடிக்காதவனாய் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

'அவங்க போய் உங்களை எப்படிப் பிடிச்சாங்க?'

'ஏன், அவ்வளவு தூரம் சிநேகம் பண்ணிக்கக் கூடாத மனுஷங்களா?'

'ஆமாம். அவங்க மனுஷங்களா? இல்லை விஷப்பாம்புகள்! ரொம்ப பயங்கரமானவங்க! அந்தப்பொண்ணு கல்யாணம் கில்யாணம் ஆகாமலேயே குழந்தையைப் பெற்றெடுத்தாள். அது உனக்குத் தெரியுமா?'

மகேந்திரனின் முகத்தில் திடீரென்று ரத்தம் குப்பென்று பொங்கிற்று கடவுளே ஸ்ராவணியை இவர்கள் எல்லோருமாய் சேர்ந்து வேட்டை நாயாய் துரத்துகிறார்கள். அதில் சந்தேகமில்லை ஆனாலும் ஜமுனாவுக்கும் ஸ்ராவணிக்கும் எப்படிப் பரிச்சயம்.?

அதையே கேட்டான் 'உங்க ரெண்டு பேருக்கும் எப்படிப் பரிச்சயம்?' என்று.

'ஒரே காலேஜில் படித்தோம். சே! காலேஜில் படித்த காலத்தில் இவள் லீலையையெல்லாம் என்னவென்று கேட்கிறாய்? அவள் உடையும், பெரிய நவாப்பின் மகளைப் போல அந்த மிடுக்கும், ஜமீன்தார் வீட்டிற்குரிய அந்த சாரட் வாகனமும், ஓ ஹோ ஹோ! கேட்காதீங்க அதற்கு மேல்! பாவம் அத்தனைத் திமிரும் அந்த ஒரே அடியால் தணிஞ்சுப் போயடுத்து.'

மகேத்திரன் பதில் பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டான்.

ஜமுனா சந்தேகத்துடன் பார்த்து,



'இதெல்லாமே பொய் என்று தானே எண்ணுகிறீங்க? ஆமாம்! நீங்க ஆம்பிள்ளைகளே அப்படித்தான்! கொஞ்சம் சிவப்பாய் அழகாய் இருந்துட்டால் போதும்; கண்கள் குருடாகிவிடும். நான் பொய் சொல்கிறேன்று நீங்கள் நினைத்தால், எனக்கு ஆத்திரம் வருகிறது. அனவசியமாய் பிறரை வம்புக்கு இழுக்கிற குணம் என்னிடம் கிடையாது. வேண்டுமானால் வாங்க, அழைத்துட்டுப் போய் காட்டறேன்.'

'எதைக் காட்டுவாய்?' மகேந்திரன் துணிந்துக் கேட்டான்.

'இவள் பெற்றுப் போட்டிருக்கும் புத்திர ரத்தினத்தை.'

'பொய்!' ரத்தம் வற்றிவிட்டது மகேந்திரன் முகத்தில்.

'பொய்யா? ஐயோ ரமா! நீங்க அவங்க வலையில் நன்றாய் விழுந்துட்டீங்க போலிருக்கு! பொய் சொல்ல வேண்டிய தேவை எனக்கு ஏன் வந்தது? வேண்டுமானால், உண்மையைத் தெரிஞ்சுக்கணும்னு உங்களுக்கு உறுதியாய் இருந்தால் என்னோடு வாங்க, இப்போதே காட்டுகிறேன்.' பொறாமையால் கொதித்துக் கொண்டிருந்தது ஜமுனாவின் இதயம்

'காட்டா விட்டால்?'

'என் பெயர் ஜமுனா இல்லை. நீங்கள் திரும்பி என் முகத்தில் கூட விழிக்கவேண்டாம்.'

மகேந்திரன் இமைக்காமல் அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். 'ஏன் வரத்துக்கு உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணையா?' சவாலிட்டாள்.

'இல்லை.'

'அப்படீன்னால் இப்போதே கிளம்புங்கள்.'— விடுவிடென்று நடந்தாள். மகேந்திரன் பின் தொடர்ந்தான்.

அவன் இதயம் வேகமாய் படபடத்தது. உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் கொதித்து முகத்தில் வந்து பொங்கினாற் போலிருந்தது. உ ண் மை ய ா ? உண்மையாகவே ஸ்ராவணியின் மகன் உயிரோடுதான் இருக்கிறானா? ஆனால்... ஆனால் கீர்த்தி ஏன் சொல்லவில்லை? சொல்லப் பிடிக்கவில்லையா? அதனால் சொல்லாமலேயே விட்டு விட்டானா? காரில் ஏறி அமர்ந்துக் கொண்டு ஸ்டீரிங்கின் மேல் வைத்த அவன் கைகள் லேசாய் நடுங்கின. கார் புறப்பட்டது...

போகும் வழியில் ஜமுனா சட்டென்று ஏதோ நினைவிற்கு வந்துவிட்டவளைப் போல,—

'மகேந்தர், நீங்க ஒரு சின்னப் பொய் சொல்லணும்' என்றாள்.

'என்ன பொய்?'

'நீங்க அச்சிறுவனுக்குத் தந்தைன்னு சொல்லணும். இல்லாவிட்டால் அவங்க காட்டமாட்டாங்க. இதெல்லாம் உனக்குத் தெரியவே தெரியாது என்றும்' அந்தச் சமயத்தில் நீங்கள் வெளிநாட்டில் இருந்ததால் இப்படி நடந்து விட்டது என்றும் பொய் சொல்லணும்.

இதெல்லாம் இப்படி நடந்து விட்டதற்கு ரொம்பவும் வருத்தப்படுவது போல நடிக்கணும். பையனைக் கூட்டிட்டு வந்து காட்டினால் ஆசுபத்திரிக்கு பத்தாயிரம் நன்கொடை தருவதாய் ஆசைக் காட்டணும். பையனைப் பார்க்கத் துடித்துடிப்பது போல காட்டிக்கணும்.'

மகேந்திரனின் முகம் இறுகிவிட்டது.

'சரி, எனக்கு ஆட்சேபணை இல்லை.'



கம்மிய அவன் குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்த ஜமுனா—

'தாங்கஸ். எனக்குத் தெரியும். உங்களுக்குக் கொஞ்சம் சிரமமாய் இருக்கும்னு தெரியும். ஆனால் அரைமணி நேரந்தானே? பக்கத்திலேயே நானும் இருக்கேன். எல்லாவற்றிற்கும் நானே பதில் சொல்றேன்' என்றாள்.

ஸ்ராவணியை மகேந்திரனுக்குத் தெரியும் என்ற உண்மையை அவளால் தாங்கிக் கொள்ளவும் முடியாமலிருந்தது. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஸ்ராவணியின் நிஜ சொருபத்தை அவன் அறியும்படிச் செய்து விடவேண்டும் என்று இனறிக் கொண்டிருந்தாள் அவள்.

## 26

'அக்கா! மகேந்திரன் இன்னும் வரலையா?' கீர்த்தி சோர்ந்துபோய்க் கேட்டான். இன்றைக்கு மகேந்திரனும் ஸ்ராவணியும் அன்பாய்ப் பேசிக் கொள்வார்கள் என்றும், தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் அவர்களைத் திருப்தியோடு பார்க்கலாம் என்றும் நினைத்துக் கொண்டிருந்தான். ஜமுனா திடீரென்று வந்து எல்லாவற்றையும் நாசம் பண்ணிவிட்டுப் போய் விட்டாள்.

'ஒருக்கால் சிநேகிதி விடாமல் பிடித்துக் கொண்டிருப்பாள்' என்றாள் ஸ்ராவணி கடுகடுப்பாய்.

'மகேந்திரன் நம்மை விட நல்ல சிநேகிதியாய் இருப்பாள் என்றா நினைக்கிறாய்?'— பொறாமையோடு கேட்டான்.

'ஏன் இருக்கக்கூடாது? ஆனாலும் நீ ஒரு பைத்தியம்! நாம் சிநேகிதர்கள் எப்படிடா ஆவோம்? அவரிடமிருந்து

தர்மம் பெற்றுக் கொள்ளும் யாசகர்கள்தானே தவிர! பிச்சைக்காரங்களுக்கும் சிநேகிதர்களுக்கும் வித்தியாசம் தெரியாதா உனக்கு?'

ஸ்ராவணியின் இதயத்தில் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது. ஆனால் மேலுக்கு அமைதியாய் தம்பி யின் கேசங்களைத் தடவிக் கொண்டிருந்தாள்.

'கடவுளே! தான் இங்கே எதற்காக வந்தாள்? ஆனா லும் அவனுக்கும் ஜமுனாவுக்கும் எந்த விதத்தில் தொடர்பு இருந்து வருகிறது? அவனிடம் அவள் என் னென்ன சொல்லுவாளோ? வேறென்ன சொல்லுவாள்?... இருக்கும் விஷயத்தைச் சொல்லுவாள். சொல்லிக்கட்டும்; பயமா? தன்னுடைய இந்த சர்வ நாசத்திற்கும் காரணம் யார் என்று அந்த முட்டாளுக்கு எப்படித் தெரியும்?

அறைக்குள் நுழைந்ததுமே கட்டிலில் கீர்த்தி க்ஷேம மாய்ப் படுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததுமே முதல் முதலாய் அவன்பால் நன்றியால் நெகிழ்ந்தது மனம். அதற்குள் ஜமுனா வந்து விட்டாள். இப்பொழுதோ மகேந்திரனின் பெயரைச் சொன்னாலே மனம் ரோஷத் தால் வெவெலத்துப் போய்க் கொண்டிருக்கிறது.

ஏனோ விதியால் தன் வாழ்க்கை வீணாகி விட்டதே என்று வருந்திக் கொண்டிருக்கும்போது நடுவில் இவர் களின் தொல்லைகள் வேறா? ஜமுனா... மகேந்திரன் இரு வரும் மிக நெருங்கியவர்கள் போலும்! எப்படி மறுக்க முடியும்?

ஜமுனா வந்து அதுபோல அவன் கையைப் பிடித்துக் கொண்டதிலிருந்தே தெரிகிறது. ஆனாலும் அவனுக்குந் தான் எவ்வளவு பேர் வேண்டும்? பெண்களைப் பார்த்து விட்டால் போதும்: கட்டுப்பாட்டை இழந்து விடும்



மிருகம்! திருமணமான சாம்பவியோடு காதல் நாடக மாடுகிற கயவனுக்குத் திருமணம் ஆகாத ஜமுனாவோடு இருப்பதில் ஆச்சரியம் என்ன! இவன் திரும்பவும் தன் வாழ்க்கையில் நுழைந்திருக்கிறானே, எதற்காக?—

ஸ்ராவணிக்கு அந்தச் சமயத்தில் மகேந்திரன் பெண்களை வேட்டையாடுபவன் என்றும் மிகக் கொடுமையானவன் என்றும் தோன்றிற்று.

'அக்கா, அவர் இன்றிரவு இங்கு வரமாட்டாரா? ஹீனஸ்வரத்துடன் கேட்டான் கீர்த்தி.

'எனக்கென்னடா தெரியும்?'

'ஒருக்கால் அவர் வந்தால் என்னை எழுப்ப மறந்துடாதே!' கீர்த்தியன் கண்கள் தூக்க மயக்கத்தால் செருகிக்கொண்டு போயின. 'அவனுக்குக் கிட்டேயிருந்த அக்கா தேவையில்லை. அங்கே இல்லாத மகேந்தின்தான் வேண்டும். ஸ்ராவணியின் இதயம் பொறாமையால் வெடித்தது. தன்னை விட மகேந்திரனை அதிகமாய் விரும்புகிறானா கீர்த்தி?

அவனிடம் என்ன இருந்தது என்று எல்லோரும் இதுபோல கவரப்படுகிறார்கள்? கீர்த்தி மட்டுமேயில்லை. ஊரிலிருந்த கொல்லன், குடியானவன், கூலியாட்கள் அத்தனைப் பேரும் அவனிடம் வந்து சொந்த விஷயங்களைச் சொல்லி விட்டு, 'தொரை! என்ன பண்ணலாமுங்க?' —என்று ஆலோசனை கேட்கிறார்கள் இப்படிப்பட்ட கீழ்த்தரமானவர்களுக்குக் கடவுள் ஏன்தான் இந்த மாதிரிக் கவர்ச்சியை வழங்குகிறாரோ தெரியவில்லை — ஸ்ராவணியின் மனம் இவ்வாறு யோசித்தது.

# 27

மகேந்திரனும் ஜமுனாவும் காரை விட்டிறங்கி நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்தார்கள். சுமார் இருபது முப்பது வருஷங்களுக்கு முன்னால் இந்தியாவுக்கு வந்து நிரந்தரமாய்த் தங்கிவிட்ட ஓர் ஆங்கிலேயர், இந்தியாவில் மண்ணோடு மண்ணாகிப் போன தன் மனைவியின் நினைவாகக் கட்டியிருந்த கட்டிடம் அது. அங்கு நர்கஸுள் இலவசமாய் சேவை செய்து வந்தார்கள். பிரசவித்த பிறகு எந்தக் காரணத்தாலாவது வேண்டாம் என்று நிராகரித்துக் கைவிட்டுவிட்டுப் போன குழந்தைகளை எடுத்து வளர்த்து கிருஸ்துவ மத போதகர்களாய் திருதிக் கொண்டு வந்தார். சாதாரணமாய் இந்த நர்ஸிங் ஹோமிற்கு ஏழைகள், திக்கற்றவர்களைத் தவிர உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ, கௌரவமானவர்களோ வரமாட்டார்கள்.

ஜமுனா வெள்ளையாய், குள்ளமாய் இருந்த ஒரு நர்ஸை சந்தித்து, பிரமோத் என்னும் பெயரைச் சொல்லி, தன்னைப் பரிச்சயம் பண்ணிக் கொண்டாள்.

ஸ்ராவணியின் விஷயத்தைச் சொல்லி, மசேந்திரனைப் பரிச்சயம் பண்ணி வைத்தாள்.

முதலில் சிறுவனைப் பற்றி எதுவும் சொல்லாமலேயே நர்ஸ் இருவரையும் சந்தேகத்தோடு பார்த்தபடி ஆயிரம் கேள்விகள் கேட்டாள். ஜமுனா எல்லாவற்றிற்கும் மிகச் சாமர்த்தியமாய் தயங்காமல் பதிலளித்தாள்.

'மன்னிக்கனும். அந்தச் சமயத்தில் நான் இல்லை. ரொம்பத் தப்பாயிடுத்து.' குரல் தழுதழுக்கச் சொன்னான் மகேத்திரன்.



'அதற்கென்ன வந்தது சார்! தப்பு பண்றது மனுஷ குணந்தானே! அதைத் தெரிந்துக் கொண்டு திருத்திக் கொள்வது தான் உத்தமகுணம். உங்கள் ஜாடை சிறுவனிடம் நன்றாய்த் தெரிகிறது. எனக்கு வேறு சாட்சிகள் கூடத் தேவையில்லை.'

ஜமுனா எல்லா விஷயங்களையும் மிகச்சாமர்த்தியமாய் சொன்னதைக் கேட்டுத் திருப்தியடைந்த சிஸ்டர், மலர்ந்த முகத்துடன் இருவரையும் உட்கார வைத்துவிட்டு, சிறுவனை அழைத்துக் கொண்டு வர உள்ளே போனாள்.

'கிழித்தாள். உண்மையிலேயே நீங்கதான் தந்தைன்னு நம்பிட்டாள் போலிருக்கு.' ஜமுனா பழித்துச் சொன்னது மகேந்திரனின் செவிகளில் விழுந்ததாய்த் தெரியவில்லை. அவன் மார்பு வேகமாய்ப் படபடத்தது. மகிழ்ச்சி, வியப்பு இரண்டும் கலந்த அபூர்வமான உணர்ச்சியில் அவன் அந்தராத்மா சுழற்காற்றில் சிக்கினாற் போலச் சிக்குண்டு கிர்ரென்று சுழன்று கொண்டேயிருந்தது. இது உண்மையா என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தது.

பத்து நிமிஷங்களில் சிஸ்டர் திரும்பி வந்தாள். அவளோடு கூடவே அவள் சுண்டு விரலைப் பிடித்துக் கொண்டே நாலைந்து வயது சிறுவன் ஒருவன் நடந்து வந்து கொண்டிருந்தான். நல்ல போஷணையில் வளர்ந்து வந்ததற்கு அடையாளமாய் சிவப்பாய் அழகிய பொம்மையைப் போலிருந்த அவனைப் பார்த்த மகேந்திரனுக்குத் தலை சுற்றத் தொடங்கிற்று.

'குட் ஈவினிங் சொல்லு!' என்றாள் சிஸ்டர். அவள் சொன்னதைக் கேட்டு கைகளைத் தூக்கிக் குவித்து, 'குட்ஈவினிங்' என்றான் கிறுவன் வெட்கத்தோடு.

தன்னை நோக்கி நீண்டிருந்த அப்பிஞ்சுக் கரங்களைத் தொடுவதற்கு மகேந்திரனின் கை லேசாய் நடுங்கிற்று.

ஆனால் சட்டென்று தன்னை யறியாமலேயே இரு கைகளையும் நீட்டி கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவன் ஸ்பரிசம் பட்டதுமே தேகம் சிலிர்த்தது.

'ரொம்பக் கெட்டிக்காரப் பையன். நானே சுயமாய் அவனை வளர்த்து வருகிறேன்.' சிறுவனைப் பார்த்து அன்போடு சொன்னாள் சிஸ்டர்;

'ஸ்ராவணியின் கண்கள் அப்படியே அமைந்திருக்கிறது எவ்வளவு அழகான சிறுவன்.' என்றாள் ஜமுனாகூட.

'இல்லை! இல்லை! அந்தப் பொண்ணுக்குத் தெரியாது; பிரசவித்ததுமே உடம்பு ரொம்ப மோசமாயிடுத்து. பிழைக்கமாட்டாள் என்றே நினைத்தோம். பிரசவித்த நாலைந்து நாளிலேயே இந்த நர்சிங் ஹோமிலிருந்து வீட்டிற்குக் கூட்டிச் சென்று விட்டார்கள். ஸ்ராவணிக்குக் குழந்தை பிறந்த விஷயமே தெரியாதவாறு நான் எடுத்துச் சில நாட்கள் வளர்ப்பது போல ரகசியமாய் ஏற்பாடு பண்ணியிருந்தார் அவள் தந்தை. அப்புறமாய் ரஜாக்கர் இயக்கம் வந்து விட்டது. அவரைச் சுட்டு விட்டாதாய்த் தெரிந்தது. அப்புறமாய் நான் எவ்வளவு முயன்றும் அந்தப் பெண் எங்கே யிருக்கிறாள் என்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை. இப்ப எங்கே யிருக்கிறாள்? உங்களுக்குத் தெரியுமா?'

ஜமுனாவும் மகேந்திரனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

'தெரியாது. அந்த ரகளை நடந்த பிறகு கொஞ்சநாட்கள் வரை இந்த ஊரில்தான் இருந்தாள். அப்புறமாய் எங்கே போனாளோ எங்களுக்குத் தெரியாது' என்றாள் ஜமுனா மிகவும் சகஜமாய்.



'அப்படியா? அந்தச்சமயத்தில் எனக்குக்கூட உடம்பு சரியில்லாமல் இருந்ததால் மெட்ராசுக்குப் போயிட்டு, சில நாள் இருந்தேன். திரும்பி வந்த பிறகு விசாரித்தபோது எந்த விஷயமுமே தெரியவில்லை.

மகேந்திரனின் செவிகள் இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அவன் கவனம் அங்கில்லை. அவன் கண்கள் அச்சிறுவனையே அணுவணுவாய்ப் பரிசீலித்துக் கொண்டிருந்தன.

சிஸ்டர் சொன்ன வார்த்தைகளில் மிகை இல்லை. அவனுடைய சிறுவயது போட்டோக்களில் அவன் இதே போலவேதான் இருந்தான் ஆனால் அந்தப் புருவங்களும் அந்த உதடுகளும் ஸ்ராவணியை நினைப்பூட்டின. சிறுவனின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சிலுவையைப் பார்த்ததுமே அவன் மனம் இனம் புரியாத வேதனையால் துடிதுடித்தது. அவனுக்கு இந்த உண்மை தெரியாமலிருந்திருந்தால் இச் சிறுவன் சிஸ்டர் நிழலில் வளர்ந்து பெரியவனாகி ஏதாவது கிருஸ்துவ மிஷினரியில் ஃபாதராக மாறியிருப்பான்... கடவுளே!

அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை அவனால்.

'மகேந்தர்! போவோமா?' இன்னும் உட்கார்ந்திருந்தால் எங்கே சிஸ்டர் வேறென்ன கேள்விகள் கேட்பாளோ, எங்கே பிடிப்பட்டுவிட நேருமோ என்று பயந்த ஜமுனா எழுந்திருந்தாள். ஆனாலும் வந்த காரியம் எப்படியோ முடிந்து விட்டது. இனி இங்கே என்ன வேலை? ஜமுனா அவசரப்பட்டதால் மகேந்திரனும் எழுந்திருக்க வேண்டியிருந்தது.

இருவரும் விடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சிஸ்டரின் கழுத்தைச் சுற்றிக் கரங்களைப் போட்டு செவியில் ஏதோ ரகசியமாய்க் கேட்டான் சிறுவன்.

'என்ன?' என்றான் மகேந்திரன் ஆர்வத்தோடு.

நீங்க யாருன்னு கேட்கிறான். வயது சின்னதானாலும் ஒவ்வொன்றையும் தெரிஞ்சுக்கணுங்கிற ஆர்வம் அதிகம்' என்றாள் சிஸ்டர்— சிறுவனின் கன்னங்களில் முத்தமிட்ட படி.

'தந்தை என்று சொல்லுங்கள்!' என்றான் மகேந்திரன் ஜமுனா சிரித்து விட்டு அவனை வெளியே கிளப்பிக் கொண்டு வந்துவிட்டாள்.

சிஸ்டரின் அறையைத் தாண்டி வந்ததுமே அதுவரை அடக்கி வைத்துக் கொண்டிருந்த சிரிப்பை அதற்கு மேல் அடக்க மாட்டாதவளாய்ப் பெரிதாய் வாய் விட்டுச் சிரித்து விட்டு, 'பலே ஆள்தான் நீங்கள்' என்றாள்.

'ஏன்?' என்றான் மகேந்திரன் புருவங்களை நெறித்து.

'எவ்வளவு நன்றாய் நடிச்சீங்க? உண்மையில் நீங்க தான் தந்தைன்னு அவன் நம்பிவிடுவான், மகேந்தர். நீங்க இவ்வளவு நன்றாய் நடிக்கக் கூடியவர்னு கண்ணாரக் கண்ட பிறகும் கூட நம்ப முடியவில்லை என்னால்'— என்றாள் வந்து காரில் அமர்ந்துகொண்டே.

மகேந்திரனோ சிரிக்கவில்லை சம்பீரமாய் வந்து ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்துக் கொண்டான். கார் போய்க் கொண்டிருந்தபோது,

'இப்பச் சொல்லுங்கள், ஸ்ராவணியை உங்களுக்கு எப்படித்தெரியும். எப்பொழுதிலிருந்து?' — கேட்டாள்.

'ப்ளீஸ். வேறு எப்போழுதாவது பதில் சொல்றேன். இப்ப மட்டும் என்னை எதுவும் கேட்காதே!' என்றான்.

அவன் பார்வை தெருவையே சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தது. ஜமுனா ஏதோ புரிந்து கொண்டாற்போலச் சிரித்தாள். உடனே,



'ஆல் ரைட்! விடுங்க. இப்பொழுதாவது இந்த ஜமுனாவிவாய் பொய் சொல்லுகிறவள் இல்லைன்னு நம்புகிறீங்களோனோ?' என்றாள் கர்வமாய்.

'உன் நன்றியை இந்த ஜென்மத்தில் என்னால் தீர்க்க முடியாது. ரொம்ப நல்லது செய்திருக்கிறாய்; ஜென்ம ஜென்மத்திற்கும் உனக்கு நன்றி'— என்றான் மகேந்திரன் பதிலுக்கு.

'அதற்கென்ன வந்தது? எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இனிமேல் என் பேச்சை சந்தேகப்படாமலிருந்தால் போதும்; அதுவே சந்தோஷம்.' என்றாள்.

சிறுவனைப் பார்த்ததுமே மகேந்திரன் ஏதோ போல ஆகிவிட்டதை ஜமுனா கவனிக்காமல் போகவில்லை. அப்படியென்றால் தற்போதைய இந்த மாறுதலுக்குக் காரணம் ஸ்ராவணி என்று புரிந்து விட்டது. அவ்விரு வருக்கும் எப்படிப் பரிச்சயம் ஏற்பட்டதோ? எப்படியிருந் தால் என்ன? இந்த உதையால் அவன் இனி ஸ்ராவணியின் நிழலைத் தீண்டக் கூட அருவருப்பு அடையத் தொடங்கி விடுவான். அதில் சந்தேகமில்லை-என்றெண்ணிக் கொண் டாள்.

'ஜமுனா' இந்தச் சிறுவன் விஷயம் உன் ஒருத்திக்கு மட்டுந்தான் தெரியுமா? அல்லது உங்கள் எல்லோருக்குமே...'

'ஊஹூம்! எங்கள் குடும்பத்திற்கு மட்டுந்தான் இந்த விஷயம் தெரியும். வேறு யாருக்குமே தெரியாது. எங்களுக்குக் கூட தெரிஞ்சே இருக்காது.

ஆனால் ஸ்ராவணி நர்ஸிங்ஹோமில் இருந்த அதே சமயத்தில் எங்கள் ஊரிலிருந்து வந்திருந்த சொந்தக்கார அம்மாள் ஒருத்தியை, அவளுக்கு உடம்பிற்கு வந்தபோது, யாருமே இல்லாததால் நாங்கள் நர்ஸிங்ஹோமில் சேர்ப்

பதற்காக வந்தோம். அங்கே ஸ்ராவணியைப் பார்த்தோம் ஸ்ராவணியின் ஆயா எங்களைப் பார்த்ததுமே திருட்டுத் தனமாய்ப் பதுங்கிப் பதுங்கிப் போய்க் கொண்டிருந்தாள். எங்க ப்ரமோத் அண்ணா அப்புறமாய் வந்து எங்க அம்மா விடம் ஸ்ராவணி விஷயத்தைச் சொன்னான். அதுமட்டு மில்லை; இந்த விஷயத்தை வெளியே எங்கேயும் சொல்ல வேண்டாம் என்றும், ஒன்றுமே தெரியாது போல இருந்து கொள்ளும்படியும் மிரட்டிச் சொன்னான். ஆனாலும் அவங்கவங்க தொல்லை அவங்கவங்களுக்கு! எங்களுக்கு அதில் என்ன சம்பந்தம்? எங்கள் அப்பா மிகவும் நல்ல பயிற்சியில் வளர்த்திருக்கிறார் எங்களை!'—கார் ஜமுனா வின் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

'உள்ளே வந்து அம்மாவைப் பார்த்துட்டுப் ! போகக் கூடாதா?' என்றாள் ஜமுனா.

'இல்லை ஜமுனா, வேலையிருக்கு அப்புறமாய் வரேன்.'—

'அப்புறமாய் என்றால்? நாளைக்கு வரீங்களா?'

'பார்க்கலாம்.'

'இல்லை— கண்டிப்பாய் வரணும்.'

'சரி' மகேந்திரன் அதற்குள் காரைத் திருப்பி விட்டான். ஜமுனா கர்வமாய் நிமிர்ந்து கையை ஆட்டினாள். போகட்டும்! பாவம்! தேறிக்கொள்ள டயம் வேண்டும்! இந்தச் சமயத்தில் அவனை எந்த விஷயத்தி லும் தொந்தரவு செய்து எரிச்சலை உண்டாக்கக்கூடாது என்றெண்ணிக் கொண்டாள்.

மகேந்திரன் அங்கிருந்து நேராய் நர்ஸிங்ஹோமிற்குப் போனான். அவனுக்கு இப்பொழுது உலகத்திலிருந்த ஆசை எல்லாம் அச் சிறுவனாய் உருவெடுத்து அவனை நோக்கி இழுத்துச் சென்று கொண்டிருந்தாற் போலிருந் தது.



# 28

இரவு வெகு நேரங்கழித்து மகேந்திரன் ஆசுபத்திரிக்கு உற்சாகத்துடன் திரும்பி வந்தான். அடிக்கடி வந்து நன்கு பழக்கப்படுத்திக் கொண்ட பிறகு சிஸ்டர் சிறுவனைத் தருவதாய் ஒப்புக் கொள்ளும்வரை அவன் விடவில்லை.

அதன் பலனாய் அவன் நர்ஸிங்ஹோமிற்குப் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தருவதாய் வாக்களித் தான்.

இப்பொழுது அவனுக்கு அபூர்வமான பொருள் எதையோ பெற்றுவிட்ட திருப்தியும் சந்தோஷமும் ஏற்பட்டன.

இம்முறை அவன் ஸ்ராவணியை நிமிர்ந்து பார்க்க அதைரியப்படவில்லை. அச் சிறுவனைப் பார்த்த பிறகு ஸ்ராவணி தன் ரத்தத்தில் ரத்தமாயும் சரீரத்தில் ஒரு பக்க மாகவும் தோன்றிற்று.

இப்பொழுது இருவருக்குமிடையே ஒரு தொடர்பு இருந்தது. சிஸ்டரின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டு மார்பில் முகத்தைப் பொத்திக் கொள்வது போல அச் சிறுவன் என்றைக்காவது ஸ்ராவணியின் கழுத்தைச் சுற்றிலும் அதுபோல கைக ளைப் போட்டுக் கொள்வானா? இருவரும் அவ்வாறு சேர்ந்து இருக்கும் காட்சியைத் தன்னால் காண முடியுமா? என்றாவது ஒரு நாள் எதிர்காலத்தில் அந்த நாள் வந்து தீர வேண்டும். அந்த நாளுக்காக அவன் தீவிரமாய்ப் பாடுப்படப் போகிறான்! அவசியமானால் வாழ்க்கை யையே பணயமாய் வைப்பான்.

'எப்படி இருக்கு?' கீர்த்தியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு நெற்றியில் கை வைத்துப் பார்த்துக் கேட்டான்.

உங்களுக்காகத் தான் இவ்வளவு நேரமாய்க் காத்துட்டிருந்தான்.' என்றாள் ஆயா.

அப்படியா?'

'வந்ததுமே எழுப்பும்படி திரும்பத் திரும்பச் சொல்லி விட்டுத் தூங்கி விட்டான்.'

'பன்னெண்டு மணிக்கு எப்படியும் மருந்து கொடுக்கணுமோனோ? அப்ப நான் கிட்டே இருக்கேன்.' மகேந்திரனுக்கு கீர்த்தியைப் பார்த்தபோது இதற்கு முன்னால் என்றுமில்லாத அளவிற்கு சகோதர உணர்ச்சி பெருக்கெடுத்தது. இடையே கீர்த்தி என்ற பாலம் இல்லாமலிருந்திருந்தால் அவனுக்கு இந்த விஷயம் என்றைக்குமே தெரிய நேர்ந்திருக்காது. இந்தப் பாலத்தின் மூலமாய்த்தான் அக்கரையில் தனியாய் நின்று கொண்டிருக்கும் ஸ்ராவணியை அவன் நெருங்க வேண்டும். கிர்த்தி மட்டும் இல்லாவிட்டால் அந்த ஆசை கானல் நீராய் தொலைவிற்குப் போய்க் தன்னை, கேலிபண்ணியிருக்கும்.

'நாளைக்காலையில் நாங்கள் போய் விடுகிறோம்' என்றாள் ஆயா.

ஸ்ராவணியின் வார்த்தைகளைத் தான் அவள் அதுபோல ஒப்புவிக்கிறாள் என்று உணர்ந்து கொண்ட மகேந்திரன் சட்டென்று ஸ்ராவணிலைத் திரும்பிப் பார்த்தும்,

'ஏன்?' என்றான்.

'போய் விடுகிறோம்' முற்றுப்புள்ளி வைத்தாற்போல சொல்லிவிட்டுப் பேசாமலிருந்து கொண்டாள் ஆயா.



ஸ்ராவணி ஜன்னலுக்கருகில் உயிரில்லாத பொம்மையைப் போல நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். மகேந்திரனுக்கு இன்றைக்கு ஸ்ராவணியைத் தொட வேண்டும் போலிருந்தது. கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டு ஏதேதோ பிதற்ற வேண்டும் போலிருந்தது. குறைந்தது கிட்டே போய் நிற்கவேண்டும் என்ற ஆவலையாவது நிறைவேற்றிக் கொண்டு தீர வேண்டும் எனறெண்ணினான். எழுந்து ஸ்ராவணி கிட்டே போய் நின்று 'ஏன் ஸ்ராவணி? எதுக்கு?'—கேட்டான்.

ஸ்ராவணி சரேலென்று திரும்பிப் பார்த்தாள். ஒரு வினாடி அக் கண்களில் உலகத்திலிருந்த அத்தனை வெறுப்பும் துவேஷமும் தென்பட்டாற் போலிருந்தது. அதுமட்டுமில்லை. சீ இவனும் ஒரு மனுஷனா? என்ற கீழ்த்தரமான உணர்ச்சி திரம்பிய பார்வை அது!

அதுவரை கற்பனை அலைகளில் மிதந்து கொண்டு, மனக்கோட்டைகளைக் கட்டிக் கொண்டு மேகங்களில் ஊர்ந்து சென்று கொண்டிருந்த மகேந்திரனின் மனம், சுருக்கென்ற அப்பார்வையால் தொப்பென்று கீழே வந்து விழுந்தது. உண்மையை உணர்ந்து கொண்ட அதற்குமேல் அங்கே நிற்க முடியாதவனாய் சரேலென்று திரும்பி வந்து விட்டான்.

## 29

'அன்புள்ள அக்காவுக்கு —

நான் இங்கு நலமாய்த்தான் இருக்கிறேன். அடுத்த வாரம் டிஸ்சார்ஜ் பண்ணிவிடுவதாய் டாக்டர் சொன்னார். ஆறு வாரங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் ஓடி மறைந்து விட்டது! அக்கா, எனக்கு விவரம் தெரிந்த பிறகு இவ்வளவு நாள் உன்னைவிட்டுப் பிரிந்திருந்ததே

இல்லை. எப்பொழுது உன்னிடம் ஓடிவந்து சேருவேனோ என்றிருக்கிறது. ஒரே வாரந்தானே!

'காலுக்காக டாக்டர் சொல்லித் தரும் எக்ஸர்சைஸ் வேண்டாமே என்றால், மகேந்திரன் கேட்டுக் கொள்ள மாட்டேங்கிறார். அக்கா! திரும்பவும் என் இரண்டு கால்களாலும் நான் நடந்தபோது எவ்வளவு நன்றாயிருக்கிறது! பழைய வாழ்க்கையெல்லாம் பயங்கரக் கனவாய்த் தோன்றுகிறது. படுத்துத் தூங்கவே பயமா யிருக்கிறது. திரும்பவும் விழித்து எழும்போது நொண்டியாகவே படுக்கையில் இருந்து விடுவேனோ, இதெல்லாம் கனவு தானே என்று தோன்றுகிறது. அப்படி நினைத்து விட்டால் போதும் மைல் கணக்காய் ஓடவேண்டும் என்று மனம் பரபரக்கிறது. இதை மகேந்திரனிடம் சொன்னால் அவர் சிரித்து விட்டு என் கன்னத்தைத் தடவி, 'உனக்கு யோசனைகள் அதிகம், வேறொன்றுமில்லை' —என்கிறார்.

'அக்கா, அவர் எவ்வளவு நல்லவர்! இது எந்த ஜென்மத்துக் கடனோ! நாம் கேட்காமலேயே கடவுள் அனுப்பிய தூதரைப் போல வந்து என் வாழ்க்கையைத் திருத்திக் கொடுத்து விட்டார். நாம் என்ன செய்தால் அவர் செய்த உதவிக்குக் கைம்மாறாகுமோ சொல்லு! நீயோ ஒரு நல்ல வார்த்தை கூட சொல்லவில்லை அவரைப் பார்த்து அவ்வப்பொழுது இது நினைவிற்கு வந்து நான் வெட்கத்தால் செத்துக் கொண்டிருக்கிறேன். அவர் நல்லவராதலால் இதைப் பொருட்படுத்தவில்லை.

அக்கா, யாரோ உன் வீட்டிலுள்ள பொருளைத் திருடிவிட்டார்கள் என்றெண்ணி உலகத்திலுள்ள எல்லோரையுமே திருடர்களாய்ப் பாவித்தால் நன்றா இருக்கிறதா? எனக்குத் தெரியும், பிற்பாடு இந்த உலகத்தில் உனக்கு அவர் ஒருத்தர்தான் நெருக்கமானவர் அதை நீ எப்பொழுது உணரப் போகிறாயோ தெரியவில்லை. நீ எவ்வளவு அலட்சியமாயிருந்தாலும் அவர் கொஞ்சமாவது



பொருட்படுத்துகிறாரா? அவ்வளவு பரந்த மனம் யாருக்குத்தான் இருக்கும், சொல்லு? இந்த ஒரே விஷயமே போதாதா அவர் நல்ல குணத்தைத் தெரிந்துக் கொள்வதற்கு?

'நான் ஆதரவில்லாமல் இருப்பதைப் பார்த்து இரக்கப்பட்டு, சிதைந்துப் போய்விட்ட நம் குடும்பத்தின் மேல் பரிதாபப்பட்டுதான் அவர் இதெல்லாம் பண்ணுகிறாரே தவிர அவராக இதையெல்லாம் பண்ணவேண்டிய அவசியந்தான் என்ன?

'எனக்கு ஏனோ நீங்கள் இருவரும் சிநேகமாய் இருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது. எனக்குத் தெரியும், நான் இவ்வாறு சொன்னால் உனக்குக் கோபம் வந்துவிடும் என்று. ஆனாலும் என்னால் சொல்லாமலிருக்க முடியாது.

அக்கா! சொல்ல வேண்டியதை மறந்துவிட்டேனே! நேற்று இந்த ஆசுபத்திரிக்கு மோகன் வந்தான். அவன் மாமாவுக்கு ஆக்ஸிடென்ட ஆகி கை உடைந்து விட்டதால் இங்கே சேர்த்திருக்கிறார்களாம். நான் வராந்தாவில் நடந்துக் கொண்டிருந்தபோது தென்பட்டான். நான் திரும்பவும் நடப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு விட்டான்.

அவன் இப்பொழுது பத்தாம் வகுப்புப் படிக்கிறானாம். கிரிக்கெட் ஆட நன்றாய் வந்து விட்டதாம். அவன் மூஞ்சி! அவனுக்குக் கிரிக்கெட் ஆடும்போது பேட் பிடித்துக் கொள்ளக் கற்றுத் தந்ததே நான்தான். எனக்கு இந்தக் கால் ஊனமாகாமலிருந்திருந்தால் நான் கூட அவனுக்குச் சமமாய் இருந்திருக்க வேண்டியவன் தானே, 'இன்னும் ஒன்றும் மிஞ்சிப்போய் விடவில்லை. திகிலடையாதே! — என்கிறார் மகேந்திரன்.

இந்த மாதிரி சமயத்தில் கூட நான் சோர்ந்துப் போய் விடாமல் எனக்குத் தைரியம் சொல்கிற அவரைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும். அக்கா, கால்தான் சரியாகி விட்டதே, இனி நான் தொடர்ந்து படிக்கலாமில்லையா? நீ என்னை ஸ்கூலில் சேர்ப்பாயா? திரும்பவும் புத்தகத்தை எடுத்துக் கொண்டு எல்லோரையும் போல ஸ்கூலுக்குப் போகும் காட்சி கண் முன் நிழலாடுகிறது.

'கடவுளே' ஸ்ராவணியைப் போன்ற அக்காவையும் மகேந்திரனைப் போன்ற சிநேகிதரையும் பெற்ற நான் போன ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்தேனோ? நீங்களிருவரும் அத்தனை நல்லவர்கள். எனக்கு மிகப் பிடித்தவர்கள்.

ஆயாவைக் கேட்டதாய்ச் சொல். நாலைந்து நாளில் ஓட்டமாய் ஓடி வந்து விடுவதாய்ச் சொல்.

இப்படிக்கு

கீர்த்தி—'

நீண்ட அக்கடிதம் பூராவும் மகேந்திரனின் புராணந் தான். என்ன விநோதம்! துவேஷத்தாலும் அவமானத்தாலும் அக்காவின் மனது துடித்துக்கொண்டிருக்கும் போது நன்றியாலும் நட்பாலும் தம்பியின் மனது நெகிழ்ந்துக் கொண்டிருக்கிறது.

கடிதத்தை எத்தனை தடவை படித்த போதிலும் அக்கா நீ எப்படி இருக்கிறாய்? என்ன பண்ணுகிறாய்?'— என்று ஒரு வார்த்தை கூட காணோம்?

மாலையில் காய்கறித். தோட்டத்திற்கு நடுவே சிந்தனையுடன் நின்று கொண்டிருந்த ஸ்ராவணி பிற்பகலில் தம்பியிடமிருந்து வந்த கடிதத்தை அடிக்கடி படித்து மனப்பாடம் பண்ணிக் கொண்டிருந்தாள்.



கீர்த்தியின் கால் நலமாகிக் கொண்டிருக்கிறது என்ற வார்த்தைகள் விழுங்கி விட்டன. அப்போழுது இன்னொரு புதிய பிரச்னை தலையெடுக்கும். அவனுக்கும் படிக்க வைக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. ஆனால் எப்படி? எதைக்கொண்டு? வேறு ஊருக்குப் போய் படிப்பது என்றால் முடியுமா? எவ்வளவு பணம் வேண்டும்! இந்தக் காய்கறி வியாபாரத்தில் வருவதைச் சிக்கனமாய்ப் பயன்படுத்தினால் வாய்க்கும் வயிற்றுக்குமே சரியாயிருக்கிறது. இன்னும் மேல் செலவுக்கு எங்கே மிஞ்சும்?

ஸ்ராவணியின் பார்வை தோட்டத்தின் மேல் நிலைத்தது. செடிகளும் புதர்களும் வளர்ந்து அறுவடைக்குத் தயாராயிருந்தன. பூக்களும் பிஞ்சுக்களும் தளதளவென்று இருந்தன.

இத்தோட்டம் ஸ்ராவணிக்குக் கைக் குழந்தையைப் போல. கஷ்டப்பட்டு வாழ்வதில் தான் எத்தனை திருப்தியிருந்தது? முதல் முதலாய் இந்த உழைப்பிற்கு உடம்பு எதிர்த்து நிற்கத் தொடங்கிய பிறகு, மெல்ல மெல்ல பழக்கப்பட்டுப் போய்விட்டது. இப்பொழுது கஷ்டமாயில்லை. ஆனந்தமாயிருந்தது.

இந்த இடத்தையே இன்னும் கொஞ்சம் பண்படுத்தி தோட்டத்தை அந்தப் பக்கமாய் விஸ்தரித்துவிட்டால் மிக நன்றாயிருக்கும். ஆனால் ஏகப்பட்ட செலவு. கைக்குக் கீழே இன்னொரு ஆள் தேவைப்படும். இப்பொழுதே அவளும் ஆயாவுமாய்ச் சேர்ந்து மிதமிஞ்சி பாடுப்பாடுகிறார்கள். பணத்தை மூலதனமாய்ப் போடவேண்டும். எல்லாமே பிரச்சனை மயந்தான்! அதற்காக கீர்த்தியைப் படிப்பு விஷயமாய் நிராசைப்படுத்தக் கூடாது.

கீர்த்தி படித்து விட்டு முன்னுக்கு வந்த பிறகாவது தனக்கு இந்தக் கஷ்டம் தீரலாம். வயோதிக காலத்திலாவது நிம்மதியாய்க் கழியும். எவ்வளவு நாட்கள்தான்

அவளாலும் இதுபோல உழைத்துக் கொண்டிருக்க முடியும்? அதனால் அதற்குள் கீர்த்தி இந்த பாரத்தைக் கொஞ்சம் குறைக்கக்கூடிய அளவிற்கு அவளைப்படிக்க வைக்க வேண்டும். சரி, போகட்டும். திரும்பவும் ஐதராபாத்திற்குப் போய் உத்யோகம் பார்த்தால் என்ன? ஊஹூம், கூடாது. கூடவே கூடாது. திரும்பவும் பழைய மனிதர்கள், பழைய முகங்கள்; பழைய விஷயங்கள்! அதெல்லாம் இதயத்தைத் துளைத்தெடுத்து வாழ்க்கை மீதே விரக்தியைத் தோற்றுவித்தன.

ஸ்ராவணியின் கண் முன்னால் ஜமுனாவின் முகம் மிதந்தது. படிக்கும் காலத்தில் ஜமுனாவுக்கு அவள் மேல் காரணமில்லாமல் துவேஷம் இருந்து வந்தது.

அன்று ஆசுபத்திரியில் தன்னைச் சந்தித்த பிறகு வெளியே போய் மகேந்திரனிடம் என்ன சொல்லியிருப்பாள்! அதைத் தவிர சொல்லுவதற்கு எந்த விஷயமும் இல்லையே! ஆனால் இந்தத் துர்பாக்கியத்திற்கெல்லாம் காரணம் யார்?

வாழ்க்கையை யெல்லாம் நிர்மூலமாக்கிக் கொண்டு இந்த மாறுமூலைக்கு வந்து வசிக்கும்படி செய்தது யார்?

எல்லோரையும் போலின்றி இப்படித் தன்னந்தனியாய் வசிக்க நேர்ந்ததற்கு மூல காரணம் யார்?

யார் என்று அந்த நீச்சனுக்கு என்ன தெரியும்? யார் சொல்லுவார்கள் அவனுக்கு?

'எல்லாவற்றையும்விட அவள் மிக அருமையானதாய் பாவித்து வந்தது தந்தையின் அன்பைத் தான். அந்தத் தந்தை கூட கடைசிக் காலத்தில் அவளை அலட்சியமாய் குடும்ப மானத்தைக் கெடுக்க வந்த ராட்சசியாய்ப் பார்த்து வந்தார். அவர் பார்வையையும் கண்களில்



மிதந்த வெறுப்பையும் நினைத்துப் பார்த்தாலே குலை நடுங்குகிறதே! தந்தையின் அன்பை இழந்து அவள் அனுபவித்த நரகத்தைப் பற்றி யாருக்குத் தெரியும்?

[library stamp]

கீர்த்திக்கு அவன் காலை நலமாக்கியதால் [illegible] தெய்வமாய்த் தோன்றலாம். ஆனால்—தன் வாழ்க்கையை தயை இன்றி நசுக்கி நாசமாக்கி விட்ட அவனை, அவளால் வெறுக்காமல் எப்படி இருக்க முடியும்?

ஆனாலும் இதென்ன துரதிர்ஷ்டம்! அவனே வந்து இவ்வளவையும் கீர்த்திக்குப் பண்ணுவது எவ்வளவு விநோதம். அதுவே வேறு யாராவதாயிருந்தால் நன்றியால் தன் சரீரத்தையே செருப்பாய் தைத்துப் போட்டிருப்பாள். இப்பொழுது வேறு.

11352/2968852

கீர்த்திக்கு அவளுடைய இந்த வருத்தமெல்லாம் எப்படித் தெரியும்? வெட்கத்தை விட்டு அவளால் சொல்லத்தான் முடியுமா? நிசப்தமாய் இதை ஜீரணித்துக் கொண்டு மௌனமாய் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அவளுக்கு வேண்டியது கீர்த்தியின் நலன். அவனை குணமாக்கித் திரும்பவும் வாழ்வு கொடுப்பவர்கள் பரம விரோதியாயிருந்தாலும் அவள் மண்டியிட்டு கை நீட்டிப் பிச்சை வாங்கிக் கொள்வாள். வெட்கப்பட மாட்டாள். அவமானத்தை விழுங்கிக் கொள்வாள்.

மகேந்திரன் மீது அவளுக்கு இருந்த வெறுப்பும், அவன் தந்த பொருட்களைப்பார்க்க அருவருப்படைவதும் பற்றி ஆயாவுக்குக் கூட காரணம் புரியாது. விநோதமாய்ப் பார்ப்பாள். கண்களாலேயே, 'என்ன காரணம் சொல்லும்மா,' என்று கெஞ்சுவாள்.

ஆனால் வாய்விட்டுக் கேட்கமாட்டாள். காரணம் என்ன தான் பெற்ற தாயாய் வளர்த்தாலும் சில வஷயங்

களில் எஜமானி— வேலைக்காரி என்ற வரம்பு தடுத்து நிறுத்திவிடும்.

அதற்குள் மேகங்கள் திரண்டு கொண்டிருந்த வானத்திலிருந்து படபடவென்று தூறல்கள் விழத் தொடங்கியதுமே ஸ்ராவணி நிமிர்ந்து பார்த்தாள். ஆகாயத்தில் மேற்குத் திசையிலிருந்து மழை மேகங்கள் கும்பல் கும்பலாய்த் திரண்டு இந்தப் பக்கமாய் வேகமாய் வந்து கொண்டிருந்தன. நல்ல மழை வரப்போவதை உணர்ந்து கொண்ட ஸ்ராவணி, விடுவிடென்று வீட்டிற்குப் புறப்படத் தொடங்கினாள்.

## 30

'பெரிய மழை வரும் போலிருக்கு. நீ நனைந்து போய் விடுவாயோன்னு பயந்தேன்' என்றாள் ஆயா எதிரே வந்தபடி. அதற்குள் காற்று வலுத்தது. பார்த்துக் கொண்டிருந்தபோதே கும்பவர்ஷமாய் மழை பெய்யத் தொடங்கி விட்டது. இருட்டியும் விட்டது. வேகமாய் வீசிய காற்றுக்குக் கதவுகளும் ஜன்னல்களும் அடித்துக்கொணடன. வானத்தில் மின்னலும் இடியும் உருமிக்கொண்டேயிருந்தன.

தோட்டமெல்லாம் பூவும் பிஞ்சுமாய் இருக்கிறது. இந்தக் காற்றையும் மழையையும் பார்த்தால்...' என்றாள் ஸ்ராவணி திகிலோடு.

ஆயா பதில் பேசவில்லை. இத்த மழையில் தோட்டத்திற்கு ஏதாவது ஆகிவிட்டால் அது ஸ்ரவாணியின் மனதை எவ்வளவு பாதித்துவிடும் என்று அறிவாள் அவள். மழை என்றும் வெயில் என்றும் பாராமல் எவ்வளவு பாடுபட்டுப் பலனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்று அவள் அறியாதவளா என்ன?



இரவெல்லாம் மழை பெய்துகொண்டேயிருந்தது. காலையிலும்கூட குறையவில்லை. மாறாகக் காற்றின் அழுத்தமும் அதிகரித்துவிட்டது. பகலெல்லாம் ஒரு நிமிஷம் கூட விடாமல் 'சோ' வென்று பெய்துகொண்டே இருந்தது. மாலை ஆனதும் 'ஒருமுறை தோட்டத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு வரேன்' என்றாள் ஸ்ராவணி.

'இந்த மழையிலா? உனக்கு மூளைகீளை பிசகிடுத்தா?'

ஆயா கடிந்துகொண்டாள்.

இவ்வூருக்கு வந்தபிறகு இந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இதுபோலப் பெரிய மழை பெய்ததே இல்லை. வீடு கட்டிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டிருத்ததால் ஓட்டு சந்துகளின் வழியாய் மழைநீர் வீட்டிற்குள் சொட்டிக்கொண்டு இருந்தது.

'இருட்டி விட்டது. ஆயா ஏற்றி வைத்த லாந்தர் விளக்கு காற்றுக்குப் படபடத்துக் கொண்டிருந்தது. இந்த ராத்திரி கூட மழை குறையாது போலிருந்தது. கீர்த்தி படுக்கும் கட்டிலில் முடங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ஸ்ராவணி.

ஆயா, வீட்டிலிருந்த தவலைகளையும் பெரிய பெரிய பாத்திரங்களையும் எடுத்து வந்து மழை நீர் சொட்டிய இடங்களிலெல்லாம் வைத்தாள். வீடெல்லாம் வெள்ளக்காடாகி விட்டது. சுவரிலிருந்தும் மழை நீர் ஊறிக் கசியத் தொடங்கிற்று.

ஸ்ராவணி சிலையாய் உட்கார்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். வாசல் கதவைத் திறந்தாற் போலச் சப்தம் கேட்டது.

'யார்?' என்றாள் ஆயா உரக்க.

'யாருமில்லை. உனக்கு எல்லாமே சந்தேகந்தான். காற்று சப்தம். வேறில்லை.' என்று அலுத்துக் கொண்டாள் ஸ்ராவணி.

'எனக்கு யாரோ கூப்பிட்டாற் போலிருந்தது.'

'வேணுமானால் போய் பார்த்துட்டு வாயேன்.' இந்த இருட்டில் யார் வருவார்கள் இங்கே என்றெண்ணிக் கொண்டாள் ஆயா போய் கதவைத் திறந்ததுமே மகேந்திரன் ரெயின் கோட்டிலிருந்து நீர்ச் சொட்டச் சொட்ட உள்ளே வந்தான். அவனைப் பார்த்ததுமே ஸ்ராவணி சரேலென்று எழுந்து நின்றாள்.

திடீரென்று கதவைத் திறந்ததால் விர்ரென்று உள்ளே வந்த காற்றிற்கு லாந்தர் படபடத்தது. ஆயா சட்டென்று போய் கைகளைக் குறுக்கே வைத்து அணையாமல் தடுத்தாள்.

மகேந்திரன் உள்ளே வந்ததும் கதவைச் சாத்தினான்.

'நீங்க ஊரிலிருந்து எப்போ வந்தீங்க?' கேட்டாள் ஆயா.

'காலையிலேயே வந்தேன். வெளியே வரமுடியாதபடி ஒரே மழை!' சாதாரணமாய் அவன் ஊரிலிருந்து வந்ததுமே ஸ்ராவணியின் வீட்டிற்கு வந்து கீர்த்தியின் க்ஷேம சமாசாரத்தைப் பற்றித் தெரிவிப்பான்.

மகேந்திரன் வீடெல்லாம் பரப்பி வைத்திருந்த பாத்திரங்களை வியப்போடு பார்த்தான். நீண்ட ரெயின் கோட்டில் அவன் இன்னும் உயரமாய் பருமனாய்த் தென் பட்டான. மழை நீரில் நனைந்த கேசங்கள் நெற்றியில் ஒட்டிக் கொண்டிருந்தன. அதுவும் ஒரு அழகாய் இருந்தது. அடிக்கடி 'எவ்வளவு அழகாய் இருக்கிறது!' என்று மெய்மறந்து திரும்பத் திரும்பப் பார்க்கத் தோன்றும் தனிச் சிறப்பு இருந்தது அக்கேசங்களுக்கு.



'ஒரே மழை; இன்றிரவு கூட குறையாது போலிருக்கு' என்றாள் ஆயா.

'வீடெல்லாம் ஒழுகுகிறது போலிருக்கே!' ரெயின் கோட்டை அவிழ்த்துக் கொண்டே கேட்டான். அதிலிருந்து சொட்டிய நீர் கால்வாய் கட்டிக்கொண்டிருந்தது.

'இவ்வளவு மழையில் இந்த இருட்டில் வராவிட்டால் என்ன குடிமுழுகிப் போய் விடுமோ?' ஸ்ராவணி முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

'உள்ளேயெல்லாங்கூட ஒழுகுகிறதா?' மகேந்திரன் உள்ளே எல்லாம் சுவாதீனமாய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு, 'அடடா! சுவர்கள் எல்லாங்கூட தண்ணீரில் ஊறிக் கசிகின்றதே!' என்றான்.

ஆயா பதில் பேசவில்லை.

'இன்றிரவு மழை விடாது' என்றான்.

திரும்பவும் யாருமே பதில் பேசவில்லை. ஸ்ராவணி குனிந்த தலையை நிமிர்த்தவேயில்லை.

'நதி இப்பவே கரையையொட்டி ஓடிக்கொண்டிருக்கிறது. எந்தச் சமயத்திலும் பொங்கலாம். கரையில் இருந்தவங்க எல்லோரும் குடிசைகளைக் காலி பண்ணி விட்டு ஊருக்குள் வந்துட்டாங்க.

இன்றிரவெல்லாம் மழை பெய்தால் நாளைக்கு நதி பொங்காமலிருக்காது. மொதல்ல இந்த மழையிலேயே இந்த வீடு மூழ்கிப் போயிடும் போலிருக்கே.'— முறுவலுடன் சொல்லிக் கொண்டிருந்த போதே மேலேயிருந்து படபடவென்று நீர்த்துளி வந்து தலையில் விழுந்தன. அதிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பி மகேந்திரன் ஸ்ராவணி இருந்த பக்கமாய் ஒதுங்கினான்.

'இந்த ராத்திரி வேளையில் எங்கே போக முடியும் எங்களால்?' என்றால் ஆயா தயக்கத்தோடு.

'எங்க வீட்டுக்கு வாங்க. விடிந்ததும் திரும்பி வந்துக்கலாம்' என்றான் மகேந்திரன்.

'பரவாயில்லை. மழை குறைந்து விடும்.'

முதல் முதலாய் வாயைத் திறந்தாள் ஸ்ராவணி.

லாந்தர் வெளிச்சத்தில் ஒரு வினாடி ஸராவணியையே பார்த்த மகேந்திரனுக்கு ஸ்ராவணி தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்த விதத்தைப் பார்த்ததும், கிட்டே போய் முகத்தைத் தூக்கி நிறுத்தித் தன்னை நிமிர்ந்து பார்க்கச் சொல்லி உத்தரவிட வேண்டும் என்று தோன்றிற்று. அவ்வாறு பார்க்கும்பொழுது—' நான் என்ன செய்தால் உன் வெறுப்பு போகும் என்று சொல்லு. ஏழுகடல்களையும் நீந்தி வரட்டுமா? பனிமலைகளிலிருந்து கீழே குதிக்கட்டுமா? எரிமலைகளுக்கிடையே நின்று புன் முறுவலுடன் நடக்கட்டுமா? என்ன பண்ணலாம்? என்ன செய்தால் உன் முகத்திலுள்ள கருமை நீங்கி மலர்ச்சி ஏற் படும் என்று சொல் ஸ்ராவணி!'

—என்று கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் மேலுக்கு மட்டும் சாதாரணக் குரலோடு மிகச் சாதாரண மாம்' 'நள்ளிரவு நேரத்தில் ஏதாவது ஆச்சுன்னால்?...' என்றான்.

'ஒன்றும் ஆயிடாது' உறுதியாய் வந்தது பதில்.

எதையும் நல்லதாகவும் கெட்டதாகவும் ரெண்டு விதத்திலும் பார்த்து ஜாக்கிரதையாய் இருந்துட்டால் நஷ்டமில்லையே. இன்றிரவு ஒன்றுமாகாதுன்னு நீங்கள் சும்மாயிருந்தாலும், ஏதாவது ஆயிடுமோன்னு பயமா யிருக்கு எனக்கு. மனுஷனுக்கு எப்போதுமே தன்னம்



பிக்கை மேல் குருட்டு நம்பிக்கை இருந்துட்டால் போதாது. கடவுள் சில சமயம் நாம் ஊகித்திருப்பதற்கு எதிர்ப்பதமாய் நடத்திவிடுவார்.'

இறுதி வார்த்தைகளிலிருந்த சிலேடை ஸ்ராவணிக்கு மட்டுமே புரிந்தது. ஒரு வினாடி நிசப்தம் சூழ்ந்தது.

'லாந்தர் திரியைச் சரி பண்ணிக்கொண்டிருந்த ஆயா, ஸ்ராவணியை நோக்கித்திரும்பினாள். இந்த மழை நீரால் சுவர்கள் ஊறிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது அவளுக்குப் பயத்தால் உயிரே போய்விடும் போலிருந்தது.

குறைந்தபட்சம் போர்த்திக் கொள்ளக் கூட நல்ல உடைகள் இல்லை.

'என்ன சொல்கிறாய் ஆயா?' மகேந்திரன் தான் ஏதாவது செய்ய நினைத்துக் கொண்டால் ஆயாவைத் தான் கேட்பான்.

'எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.' தயக்க மாய் வந்தது ஆயாவின் பதில்.

'அப்படீன்னால் உடனே கிளம்பு. சின்னவர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது தான். இல்லலங்கலை. ஆனால் பெரிய மனுஷத் தன்மையோடு உத்தரவிடக்கூடிய சில காரியங்களும் உள்ளன.'

ஸ்ராவணியின் முகம் சிவந்ததை யாருமே கவனிக்க வில்லை.

உயிரே போனாலும் சரி; நான் இங்கேயதான் இருப் பேன். உங்கள் வீட்டிற்கு வர மாட்டேன். இங்கிருந்துப் போய் விடுங்கள்' என்று பெரிதாய்க் கத்திவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் விவேகம் கோபத்தை அடக்கி விட்டது. ஆயாவை 'நீ பேசு' என்பதுபோலப் பார்வை யால் கெஞ்சினாள். ஆனால் ஆயாவோ குளிரால் வெட வெடவென்று நடுங்கிக்கொண்டே பயந்தபடிப் பார்த்துக்

கொண்டே 'போவோம்' என்று கெஞ்சுவது போலத் தீனமாய் பார்க்கவே ஸ்ராவணி இறங்கி வந்தாள். இந்தக் காற்றிற்கும் மழைக்கும் ஆயாவுக்கு ஏதாவது நோய் வந்து விட்டால் இன்னும் கஷ்டம்.

ஸ்ராவணி ராஜியாக வேண்டியிருந்தது.

எப்படியோ ஒருவாறு கிளம்பினார்கள்.

நீங்கள் இருவரும் இந்த ரெயின் கோட்டைப் போர்த்திக்குங்க. தலை நனையாமல் இருக்கும்.

மகேந்திரன் ரெயின் கோட்டைத் தந்தான்.

ஆயா வாங்கிக் கொண்டாள்.

'தேவையில்லை. நான் இப்படியே வந்துகொள்வேன்.'

தன் தலையைத் திருப்பிக் கொண்டாள் ஸ்ராவணி. அவ்வாறு சொன்ன பொழுது அக்கண்களில் தென்பட்ட அருவருப்பை மகேந்திரன் கவனிக்கத் தவறவில்லை. ஆயாவிற்கு கோட்டைப் போர்த்தினான்.

வீட்டைப் பூட்டிவிட்டு வராந்தாவில் இறங்கியபோது ஸ்ராவணியின் கால் சேற்றில் சருக்கிற்று.

'ஆ! ஜாக்கிரதை!' பின்னால் வந்து கொண்டிருந்த மகேந்திரன் சட்டென்று தோளைப் பிடித்து விழுந்து விடாமல் தடுத்தான். அந்த முயற்சியால் ஸ்ராவணியின் தலை வந்து அவன் மார்பில் பட்டது. சரியாய் நின்றபடி மகேந்திரனின் கையை விடுவித்துக் கொள்வதற்குள்ளாகவே அவனே விட்டுவிட்டான். அவன் ஸ்பரிசம் அருவருப்பாய் இருந்தது உண்மையே. ஆனால் மின்னலாய் அவளைப் பற்றித் தடுத்து நிறுத்தியிருக்கா விட்டால், அவள் சேற்றில் குப்புற விழுந்திருப்பாள். அதனால்தான் ஸ்ராவணியால் அளவுக்கதிகமாய் அருவருத்துக் கொள்ள முடியவில்லை.



# 31

எப்பொழுதும் தொலைவிலிருந்து பார்த்ததேயொழிய கிட்டத்தில் அந்த வீடு எப்படி இருந்தது என்று ஸ்ராவணியோ ஆயாவோ பார்த்ததே யில்லை. வராந்தாவைத்தாண்டி ஹாலுக்குள் அடியெடுத்து வைத்ததுமே புலுபுலு வென்று நிறைய பேர் தென்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர் வேலைக்காரர்கள் தாம். கூலியாட்களும் நிறையபேர் கம்பளியைப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களையெல்லாம் பார்த்த பிறகு ஸ்ராவணி நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள்.

தமக்குப் புகலிடம் தருவதற்கு மகேந்திரன் தனிப்பட்ட அக்கறை ஒன்றும் எடுத்துக் கொண்டு விடவில்லை. நிறையபேர் அனாதைகளோடு கூட அவளும் ஒருத்தி; அவ்வளவே!

'வாங்க!' என்று உள்அறைக்கு அழைத்துச் சென்று, 'கோபால்' என்று கத்தினான்.

'வரேன்!' உள்ளேயிருந்து குரல் கேட்ட இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு கோபால் வந்தான். அவன் தனியாய் வரவில்லை. சிவப்பாய், கொழுகொழு வென்றிருந்த நாலைந்து வயது சிறுவன் ஒருவனைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

'அட! நீ இன்னுமா தூங்கலை?' கைகளை நீட்டினான் மகேந்திரன்.

'ஊஹூம். நீ எங்கே போயிட்டாய்?' தந்தையின் கைக்குத்தாவிய சிறுவன் ஸ்ராவணி முதலியவர்களைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

'கோபால்! இவங்களுக்கு உள்ளே இடது பக்கத்தி லுள்ள அறையைக் காட்டு' என்றான் மகேந்திரன்.

'பையன் யார்?' அழகாய் இருந்த சிறுவனைப் பார்த்து ஆயாவால் கேட்காமலிருக்க முடியவில்லை.

'என் மகன்!' எவ்வளவு சகஜமாய் இருக்க வேண்டு மென்று விரும்பிய போதிலும் அவன் குரல் ஏதோ போல் ஆகிவிட்டது.

ஸ்ராவணி திடுக்கிட்டாள்.

ஆயா விநோதமாய்ப் பார்த்தாள்.

'ஏன்? கல்யாணம் கார்த்திகை ஆகாமலேயே குழந்தை எப்படி வந்தான் என்றா? அவன் என் மகன் என்று தெரிந்தது. உடனே வரவழைத்துக் கொண்டேன். தாய் எங்கே இருக்கிறாளோ தெரியாது.' அவன் வார்த்தைகளில் இருந்த சிலேடை எல்லோருக்கும் புரியவே ஆச்சரிய மடைந்தவர்களாய்ப் பார்த்தார்கள்.

'மது! ஆயாவிடம் போகமாட்டாயா?' மகனை ஆயா விடம் நீட்டிக் கொண்டே கேட்டான். அவன் போனாற் போலவே போய்விட்டுத் திருப்பவும் தந்தைக்காக கை களை நீட்டினான்.

'அசல் உங்க ஜாடையே தான்!' ஆயா சிரிப்பை மகேந்திரன் தன் மகன் என்று சொன்னதற்கு ஏற்றாற் போலவே சிறுவனிடம் அவன் ஜாடை நன்றாய்த் தெரிந்தது.

'என் ஜாடை ரொம்ப இருக்கு, உண்மைதான். ஆனால் கூர்ந்து கவனித்தால் அந்த உதடு, மூக்கு இரண்டி லும் தாயின் சாயல் தெரிகிறது.'

அவன் முகம் இருட்டில் இருந்ததால் அதில் என்ன உணர்ச்சி தென்பட்டது என்று யாருக்கும் தெரியவில்லை.



அந்த சம்பாஷணையை அதற்கு மேல் கேட்கப் பிடிக்காதவளாய் ஸ்ராவணி கோபாலுடன் உள்ளே போய்விட்டாள்.

'குழந்தையை யார் பார்த்துக்கறாங்க?' கேட்டாள் ஆயா.

'இன்னும் யாரும் கிடைக்கலை. ஆயாக்களைத் தேடிட்டிருக்கேன். நான் இருந்தாலும் சரி, இல்லாவிட் டாலும் சரி, கண்ணுங் கருத்துமாய் பார்த்துக்கொள்கிற ஆள் வேணும்' என்றான் மகேந்திரன்.

'ஆமாமாம்.' ஆயாவும் அங்கிருந்து உள்ளே போய் விட்டாள்.

அவர்கள் போன பிறகு மகேந்திரன் சிறுவன் மதுவை மார்போடு அழுத்திக் கொண்டே அங்கிருந்த சோபாவில் சரிந்தான். என்ன விநோதம்! ஸ்ராவணிக்கு இவனைக் காட்டி என் மகன் என்று எப்படிச் சொல்லிக் கொள்வது என்ற பிரச்னை, இத்தனை சுலபமாய்த் தீர்ந்துப் போய் விடும் என்று அவன் கனவிலும் எண்ணியிருக்க வில்லை. இன்றைக்குத்தான் அவனை சிஸ்டரிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தான் அவன். இன்றைக்கே ஸ்ராவணி கூட எதிர் பாராமல் இங்கே வந்து விட்டாள்.

'என்மகன்' என்று சொன்னபொழுது ஸ்ராவணியின் முகத்தில் தென்பட்ட இனம்புரியாத உணர்ச்சியை அவன் கவனிக்காமல் போகவில்லை. என்றாவது என் மகனை அழைத்துக் கொண்டு போய் ஸ்ராவணியிடம் தந்து— 'இவன் உன் மகன் தான் ஸ்ராவணி'— என்று சொல்லக் கூடிய தருணம் வருமா.?

சிறுவனைப் பழக்கப் படுத்திக்கொள்வதற்கு அவன் எவ்வளவு பாடுபட்டிருப்பான் என்று யாருக்கும் தெரியாது தினமும் நர்ஸிங் ஹோமுக்குப் போவான். போனபொழு

தெல்லாம் அவனைக் காரில் உட்காரவைத்துக் கொண்டு ஊரெல்லாம் சுற்றி வருவான். சாக்லெட், பிஸ்கெட், பொம்மைகள், துணிமணிகள் என்று அவன் கண்களைக் கவர்ந்தவைகளை வாங்கித் தருவான். அதனால் அவன் பழக்கத்திற்கு வர அதிக நாள் பிடிக்கவில்லை. நாளடைவில் மதுவிற்கு மகேந்திரனைக் கண்டால் தனக்கு ஊரையெல்லாம் சுற்றிக் காட்டும் ஒரு மனிதனாய்— கேட்டதையெல்லாம் வாங்கித் தருகிற ஒரு நெருங்கியவனாய்த் தெரியத் தொடங்கியது. அதனால்தான் சிஸ்டர் 'அவரோடு போகிறாயா?'— என்று கேட்டபொழுது, சரி என்று தலையாட்டி விட்டான்.

பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவையோ மாதம் ஒரு முறையோ மதுவைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டி, குழந்தை ஏங்கவில்லை என்பதை மெய்ப்பிக்கும்படி எச்சரித்து அனுப்பினாள் சிஸ்டர்.

அவனை கிட்டே இழுத்து அணைத்துக் கொள்ளும் பொழுதோ, மடியில் உட்கார வைத்துக் கொண்ட பொழுதோ மணிக்கணக்கில் அவனையே பார்த்தபடி யோசனையில் மூழ்கிவிடுவது மகேந்திரனின் வழக்கம்.

இப்பொழுதும் அதே போல்தான். குழந்தையை ஸ்ராவணியிடம் போகும்படி செய்வதுஎப்படி என்பது பற்றிதான் குழம்பிக் கொண்டிருந்தான் அவன். அவன் மனம் அதற்காக ஆயிரம் வழிகளைத் தேடிக் கொண்டிருந்தது.

அறைக்குள் வந்து படுக்கப் போவதற்கு முன்னால்—

'உண்மையிலேயே மகனாய்த்தான் இருக்கும் என்கிறாயோ?' என்று கேட்டாள் ஆயா— இன்னும் அதையே யோசித்துக் கொண்டே நம்ப மாட்டாதவளாய்.

ஏன்? ஏன் இருக்கக்கூடாது?' கடுமையாய்க் கேட்டாள் ஸ்ராவணி'



'பின்னே, தாய்?'

'காவேரியில் குதித்திருப்பாள்! இல்லாவிட்டால் வேறு கல்யாணம் பண்ணிண்டு மறந்து போயிருப்பாள்!'

'என்னவானாலும் குழந்தை மட்டும் தங்க விக்கிரகமாய் இருக்கான். அந்தக் கேசங்களும், அந்த நெற்றியும், தலையும் அசல் அப்பாவேதான்!' என்றாள் ஆயா.

ஸ்ராவணி பதில் பேசவில்லை. மனமெல்லாம் பயங்கரமான யோசனைகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. 'தனக்குக்கூட ஒருக்கால் அந்த மகன் உயிரோடு இருந்திருந்தால்...' அவள் உடல் பயத்தால் சிலிர்த்துச் சட்டென்று அருவருப்பால் முறுக்கேறிக்கொண்டது. சீ,சீ! இதுவரை இந்த மாதிரி யோசனைகளே வந்ததில்லையே!

ஆனாலும் அவனுக்கு வெட்கமில்லை? எவ்வளவு பெருமையாய்ச் சொல்லிக் கொள்கிறான்! ஸ்ராவணிக்கு அத் தந்தையும் மகனும் சேர்ந்திருந்த காட்சி கண்களில் மிதந்த போது உடம்பெல்லாம் தேளும் பாம்பும் ஊர்ந்தாற்போல அருவருப்பு ஏற்பட்டது. அவன் வாழ்க்கையில்தான் எத்தனை பெண்களாம். நாளுக்கு நாள் இந்தப் பெண்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகிறதே! சாம்பவி, ஜமுனா, இந்தச் சிறுவனின் தாய், தான் அப்பப்பா! என்ன மனுஷன் இவன்! ஸ்ராவணிக்கு அவன் மேலிருந்த துவேஷம் வளரத் தொடங்கிற்று.

ஆனாலும் இதென்ன தலையெழுத்து! இந்த வீட்டிற்குள் அவள் ஏன் அடியெடுத்து வைத்தாள்! கடவுளே, நான் என்ன தவறு பண்ணிவிட்டேன், என்னை ஏன் இது போல தண்டிக்கிறாய்?'—இருட்டில் மழையின் ஓசையை கேட்டுக் கொண்டே படுத்திருந்த அவள் கண்களிலிருந்து நிசப்தமாய் சூடான கண்ணீர் வழிந்து தலையணையை நனைக்கத் தொடங்கியது.

# 32

மறுநாள் மழையின் தீவிரம் கொஞ்சம் தணிந்தது. ஆனால் காற்றின் சீற்றம் மட்டும் குறையவில்லை. நேற்றிரவு மகேந்திரனின் வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் இன்றும் அங்கேயே இருப்பதற்காக ஏற்பாடு பண்ணினான் அவன். அவ்வளவு வேலைகள் இருக்கும் போது பார்த்துக் கொண்டே சும்மாயிருக்கப் பிடிக்காத ஆயா, தானும் சமையலறைப் பக்கம் போய்விட்டாள். அதற்கு முன்னால் ஸ்ராவணி தான் ஒரு முறை போய் தோட்டத்தைப் பார்த்து விட்டு வருவதாய்ச் சொன்னாள். அந்த மழையில் வெளியே போகக்கூடாது என்று கடுமையாய்ச் சொல்லிவிட்டாள் ஆயா.

அறையில் தனியாய் உட்கார்ந்திருந்த ஸ்ராவணி, ஆயா சமையல் வேலையில் தீவிரமாய் மூழ்கிப் போய் விட்டதைப் பார்த்ததுமே, மெதுவாய் வெளியே நழுவி, புடவைத்தலைப்பைத் தலைமேல் போட்டுக் கொண்டு தோட்டத்தை நோக்கி விடு விடென்று நடக்கத் தொடங்கினாள். யோசனையில் மூழ்கியபடியே வேகவேகமாய் நடந்து வந்து கொண்டிருந்த ஸ்ராவணி கொஞ்சம் தூரத்திலேயே எதிரே தென்பட்ட காட்சியைப் பார்த்து விட்டு, தூக்கி வாரிப்போட அப்படியே நின்று விட்டாள். கண்கள் அகலவிரியப் பார்க்கத் தொடங்கினாள்.

அவ்விடமெல்லாம் ஜலப் பிரவாகமாய் இருந்தது. தண்ணீருக்குமேல் தெப்பங்களைப் போல மிதந்துகொண்டிருந்த பூக்களையும் பிஞ்சுகளையும் பார்த்துத் தான் அவ்விடத்தில் தோட்டம் இருந்ததாய் நினைத்துக் கொள்ளவேண்டும்'

பந்தலுக்கு மேல் படர்ந்திருந்த கொடிகள்கூட தாறுமாறாய் விழுந்து விட்டிருந்தன.



சிலையாய் நின்றுவிட்ட அவள் மனது எவ்வளவு முயன்ற போதிலும் அந்தப் பயங்கரமான உண்மையை ஒப்புக்கொள்ள மறுத்தது. காற்றிற்குத் தலை மேல் போர்த்திக் கொண்டிருந்த முக்காடு நழுவி விழுந்தது. அதைச் சரியாய்ப் போட்டுக் கொள்ளும் நினைப்புக்கூட இல்லை.

அந்த மழையில் அங்கே எவ்வளவு நேரமாய் நின்று கொண்டிருந்தாளோ அவளுக்கே தெரியாது. எத்தனை நாளைய உழைப்பு! பாடு! எவ்வளவு எதிர்பார்ப்புக்கள்! அத்தனையையும் ஏமாற்றம் என்ற பிரவாகம் விழுங்கி விட்டது.

சோர்ந்துப் போய்விட்ட உள்ளத்துடன், கால்கள் தள்ளாட நேராய்த் தன் வீட்டிற்கு வந்து பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். வீடெல்லாம் நீர்! தளர்ந்து போய்க் கீர்த்தியின் கட்டில்மீது சரிந்தாள். வாசலிலிருந்து ஊதற்காற்று மழையோடு சேர்ந்து விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. மழையால் தலையும் ஆடைகளும் தெப்பலாய் நனைந்து விட்டன. எவ்வளவு அடக்கிக் கொள்ள முயன்ற போதிலும் முடியாமல் உடம்பெல்லாம் குளிருக்கு வெடவெடவென்று நடுங்கிக் கொண்டேயிருந்தது.

ஸ்ராவணிக்கு திடீரென்று வெறி பிடித்தாற்போல சிரிக்க வேண்டும் போலிருந்தது. தோட்டமெல்லாம் நிர்மூலமாகி விட்டது. இனி எதைச் சாப்பிடுவது? திரும்பவும் எவ்வளவு பணம் செலவழித்து, பாடுபட வேண்டும், தோட்டத்தை இந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு! விதி தன்னை ஏன் எந்தப் பக்கமாய்ப் போனாலும் இது போலக் குரூரமாய் தண்டிக்கிறது? அவள் அழத் தொடங்கினாள்.

திடீரென்று பெருத்த சப்தம் கேட்டது. பயங்கரமான அந்த சப்தம் என்னவென்று தெரியாத ஸ்ராவணி வீலென்று கத்திக்கொண்டே கட்டிலோடு கட்டிலாய் முடங்கிக் கொண்டாள்.

திடீரென்று மழைத் தாரைகள் வந்து வேகமாய் ஸ்ராவணியின் முகத்தின் மேலெல்லாம் பட்டு மேன்மேலும் நனைத்துக் கொண்டேயிருந்தன. மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். ஒரு பக்கமாய் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்து விட்டது எழுந்து அங்கிருந்து வெளியே ஓடிவிட வேண்டும் என்று முயற்சித்தாள். ஆனால் ஊசிகளாய் வந்து மோதிக்கொண்டேயிருந்த மழைத்தாரைகள் கண்களைத் திறக்க முடியாமல் செய்தன. கால்கள் நடுங்கின. எழுந்திருக்கப் போனவள் திரும்பவும் பொத்தென்று கீழே விழுந்தாள். கண்களில் மயக்கத்தைப் போல வந்து சூழ்ந்தது. அது முற்றிலும் தன்னை வசப்படுத்திக் கொளவதற்குள்ளாகவே இங்கிருந்து வெளியே போய் விட வேண்டும்.

இடிந்து விழுந்த வீட்டில் அவள் தனியாய் இருக்கிறாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வேறு பாகங்கள்கூட இடிந்து விழலாம். அதில் சந்தேகமில்லை.

அவள் உடனே இவ்விடத்தை விட்டு ஓடிப் போகாவிட்டால் இதற்கடியில் நசுங்கிச் சாக வேண்டியதுதான். அவள் உடம்பு நூறு சுக்கல்களாகி விடும். ஸ்ராவணி என்னவானாள் என்று யாருக்குமே தெரியாது. என்றாவது ஒரு நாள் சிதிலமான இந்த வீட்டைத் துப்புறவு பண்ணும்போது ஏதாவது எலும்புகள் வெளிப்பட்டால் அப்பொழுதுதான் தெரிந்து கொள்வார்கள்.

இந்த நினைவு வந்ததுமே அவள் நடுங்கி விட்டாள். மேலும் கலவரத்துடன் எழுந்து இரண்டடிகள் எடுத்து வைக்கப்போனவள் திரும்பவும் தள்ளாடி, கட்டில் மேல்



விழுந்தாள். பழங்காலத்து கீல்கள் உள்ள கட்டில். ஸ்ராவணியின் தலை ஒரு பக்கமாய் இருந்த கட்டிலின் கீல் மீது மோதிக் கொண்டது. 'ஐயோ' என்று கத்துவதற்கு வாய் திறந்து கொண்டது. ஆனால் சப்தம் வெளியே வரவில்லை... ஸ்ராவணிக்கு நினைவு தப்பி விட்டது.

# 33

எவ்வளவு நேரம் அவ்வாறு இருந்தாளோ ஸ்ராவணிக்குத் தெரியாது. மெல்ல மெல்ல நான்கு மூலைகளிலிருந்தும் நீர் வந்து சூழ்ந்துக் கொள்ளத் தொடங்கின. அந்த நீரில் இலைகள், பூக்கள், பிஞ்சுகளோடு கூட அவள் உடலும் மிதந்து கொண்டிருந்தது. நீரெல்லாம் அந்த பக்கமாகவே அடித்துக் கொண்டு போகத் தொடங்கிற்று. ஆனால் பயம் ஏற்படவில்லை. இன்னும் நிம்மதியாயும் இருந்தது எனலாம்.

நீர் எல்லாம் பெரிய பாலைவனத்திற்குள் நுழைந்து அங்கிருந்து மணலில் வற்றிப் போய்விட்டன. பஞ்சைக் காட்டிலும் மிருதுவாய், மிக மெத்தென்று இருந்த அந்த மணலில் ஸ்ராவணியின் உடல்குப்புற விழுந்துகிடக்கிறது. எவ்வளவு முயன்றாலும் அவளால் எழுந்திருக்கவே முடியவில்லை. ஆளரவமில்லாத அந்தப் பாலைவனத்தில் திடீரென்று விநோதமான ஒரு கத்தல் கேட்டது.

அது என்ன, எங்கிருந்து வருகிறது என்று தெரிந்து கொள்ள விரும்பி, சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு போராடியபடி தலையைத் தூக்க முயன்ற போதிலும் பிரயோஜனமில்லை.

விநோதமான அந்த சப்தம் மெல்ல கிட்டே வந்து 'ஸ்ராவணி' என்ற அழைப்பாய் மாறிற்று.

யாரோ வந்திருக்கிறார்கள் அவளுக்கா! யாராயிருக்கும்? கீர்த்தியா? கீர்த்தியின் குரலில் இவ்வளவு கம்பீரம் ஏது? மகேந்திரனா? மகேந்திரனுக்குத் தன்னைத் தேட வேண்டிய அவசியமென்ன? பின்னே யாராயிருக்கும்.?

ஏதோ 'ஸ்ராவணி' என்ற கத்தலால் திசைகள் அதிருகின்றனவே! முழங்கைகளை ஊன்றிக் கொண்டே எழுந்திருக்க முயன்ற ஸ்ராவணி திரும்பவும் குப்புற விழுந்தாள்.

சுற்றிலும் 'ஸ்ராவணி' என்ற குரல் ஆயிரம் முழக்கங்களாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. புரிபடாத அந்த ஆர்வத்தால் ஸ்ராவணியின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கிற்று. ஸ்ராவணியின் கண்கள் மங்கத் தொடங்கித் திரும்பவும் மயக்கம் போல வந்து ஆட்கொண்டது.

அம்மாடா! அவள் செத்துப் போய்க் கொண்டிருக்கிறாள், பரவாயில்லை.

ஆனால் — ஆனால் கீர்த்தி! கீர்த்தியிடம் சொல்லிக் கொள்ளவேயில்லையே! இவ்வாறு அவள் செத்துக் கொண்டிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்? யார் சொல்லுவார்கள்? ஸ்ராவணியின் மனம் கீர்த்திக்காக ஏக்கமடைத்துக் கொண்டிருந்தபோதே அவளுக்கு முற்றிலும் நினைவு தப்பிவிட்டது

மறுபடியும் நினைவு திரும்பிய போது கண்களுக்கு முன்னால் பளீரென்ற வெளிச்சம் தெரிந்தது. அது சூரிய ஒளியைப் போலச் சுளீரென்று இல்லை. நிலாவைப் போல குளிர்ச்சியாய் இருந்தது.

ஆனால் அது நிலா வெளிச்சம் இல்லை. அந்த குளிர்ந்த வெளிச்சத்தில் காட்டுப்பூக்கள் கலகலவென்று காற்றுக்கு இசைந்து கொண்டிருந்தன. பறவைகள்



வானத்தில் வளையம் வளையமாய்ப் பறந்து சென்று கொண்டிருந்தன.

ஸ்ராவணிக்குத் தான் எங்கே இருக்கிறோம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று ஊகித்துப் பார்ப்பதற்குக் கூட முடியாத அளவிற்கு மிகச் சோர்வாய் இருந்தது. கண்களைத் திறந்தபோது—

'அக்கா' என்று கீர்த்தி அவளுக்கருகில் குனிந்து கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

'கீர்த்தி!' சூனியத்தைப் பார்த்துத் தடவிக் கொண்டே கைகளை நீட்டினான்.

'அக்கா! விழிப்பு வந்துடுத்தா?

'கீர்த்தி! நிஜமாய்... நிஜமாய் நீதானா? அல்லது...'

'நிஜமாய் நான்தான் அக்கா!' கீர்த்தியின் குரல் துக்கத்தால் நடுங்கிற்று.

ஸ்ராவணிக்கு நினைவு நன்றாத் திரும்பிவிட்டது. கீர்த்தி அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

கீர்த்தி! நீ இங்கே எப்பொழுது வந்தாய்?'

'அதையெல்லாம் அப்புறமாய்ச் சொல்றேன்; மொதல்ல நீ மருந்தைச் சாப்பிடு!'

கீர்த்தி எழுந்து பக்கத்திலேயே மேஜை மேலிருந்த மருந்தையும் தண்ணீரையும் கொண்டு வந்து தந்தான்.

'கீர்த்தி! நீ— நீ' ஸ்ராவணி சட்டென்று எழுந்திருக்கப் போனாள்.

'எழுந்திருக்காதே!' தலைமாட்டிலிருந்து கம்பீரமான குரல் கேட்டது. ஸ்ராவணி கழுத்தை நன்றாய்த் திருப்பி

அந்தப் பக்கமாய்ப் பார்த்தாள். அங்கே மகேந்திரன் கட்டிலைப் பிடித்துக் கொண்டே நின்றிருந்தான். ஒரு வினாடி ஸ்ராவணியின் கண்ணோடு கண் கலந்த அவன் பார்வையில் உலகத்திலுள்ள அன்பையெல்லாம் திரட்டிக் கொண்டு அங்கே ஸ்ராவணிக்காகப் பதுக்கிக் கொண்டிருந்தது. அவன் பார்வையிலிருந்து திரும்பிக் கொண்ட ஸ்ராவணி சட்டென்று புருவங்களை நெறித்தாள். திரும்பவும் பின்னுக்குச் சாய்ந்து தலையணைமேல் தலையை வைத்துக்கொண்டாள். கீர்த்தி மருந்தைக் கொடுத்து விட்டு, 'சாப்பிடுகிறாயா?' என்றான்.

'கீர்த்தி' ஷராவணியின் கண்கள் ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் மின்னின. கீர்த்தி திரும்பவும் நடக்கிறான். அதை முதல் முதலாய் பார்க்கிறாள். அக்காவின் கண்களில் அந்த உணர்ச்சியைப் புரிந்து கொண்ட கீர்த்தி, 'பார்த்தாயா! நான் நடக்கிறேன். முதல் முதலாய் நான் இங்கே வந்ததுமே நினைவில்லாத உன்னைப் பார்த்து எவ்வளவு கலங்கிப் போயிட்டேன் தெரியுமா? பார் எப்படி நடக்கிறேன்னு!' என்று கீர்த்தி மளமளவென்று நடந்து அறையெல்லாம் சுற்றி வந்துகாட்டினான்.

'ஆங்! போதும் போதும்! அதிகமாய்க் களைப் படையக் கூடாதுன்னு டாக்டர் சொல்லலையா?' மகேந்திரன் கண்டித்தான்.

'ஆல்ரைட் ஹானர்!'

கீர்த்தி சமர்த்துப் பையனாய் வந்து அக்காவுக் கருகில் உட்கார்ந்து கொண்டான்.

மகேந்திரன் மூலமாய்த் தன் வாழ்க்கை நாசமடைந்தாலும் அவன் மிருகத் தனத்தால் பெண்ணாய் தனக்கு எந்தச் சுகமும் இல்லாமல் போய் விட்டாலும், இப்



பொழுது இதுபோல் கீர்த்தியை ஒரு ஆளாக்கி வாழ்வு கொடுத்ததற்கு ஸ்ராவணியின் மனம் நன்றியால் இளகியது.

கொஞ்ச நேரத்தில் மகேந்திரன் அறையை விட்டுப் போய் விட்டான். அவன் போனதுமே கீர்த்தி சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு, 'அக்கா! வீட்டில் இருக்கிற அந்தச் சின்னப் பையன் யாரு? மகேந்திரன் தன் மகன் என்கிறாரே, நிஜவாகவா?' என்று கேட்டான்.

ஸ்ராவணியின் இளகிப் போயிருந்த மனம் உடனே கடினமாய் மாறிவிட்டது. இமைக்காமல் தம்பியையே பார்க்கத் தொடங்கினாள்.

'ஒருக்கால் வேடிக்கைக்குச் சொல்றாரோன்னு எண்ணி, 'வளர்ப்பு மகனா?' என்றுகூடக் கேட்டேன். 'இல்லை சொந்த மகன் தான் என் ரத்தம் என்றார். அக்கா இதெப்படி முடியும்? இவருக்குக் கல்யாணமே ஆகலையே? குழந்தை எப்படிப் பிறந்தது? சொந்த மகன் என்றால் எப்படி நம்ப முடியும்?'

'ஏன் நம்பக்கூடாது?' கம்பீரமாய்க் கேட்டாள் ஸ்ராவணி.

'ஆனால் அக்கா— மகேந்திரனைப் போன்றவங்க...'

'அப்படிப்பட்டவங்க என்ன வேணுமானாலும் பண்ணுவாங்க. நீ இதைப்பற்றி ரொம்பவும் யோசிக்காதே.'

'அப்படித்தான் இருக்கும் என்கிறாயா? நிஜமாய் மகன் தான் என்கிறாயா?' கீர்த்தியின் குரலில் பொறாமை தென்பட்டது.

ஸ்ராவணி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்தச் சிறுவனைப் பார்த்து இவனுக்கு என்ன வருத்தம்!

'ஆனால்— அக்கா... மகேந்திரனைப் போன்றவங்க...'

'கீர்த்தி! என்னைக் கொஞ்சம் படுக்க விட மாட்டாயா? தூக்கம் வருகிறது' அலுத்துக் கொண்டாள்.

'சரி, தூங்கு. நான் இங்கேயே உட்கார்ந்திருக்கேன்' என்றான் கீர்த்தி, பிறகு ஆயா மூலமாய் நடந்ததையெல்லாம் தெரிந்து கொண்டான். ஸ்ராவணி எவ்வளவு நேரமாகியும் அவன் வீட்டிற்குத் திரும்பாததால் மகேந்திரன் தேடப் போனான். கடைசியில் தேடித் தேடிப் பார்த்து விட்டு எங்கேயுமே தென்படாமல் போகவே, வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, — வழியில் ஸ்ராவணியீன் வீடு பாதி இடிந்து விழுந்திருந்தது தென்பட்டது. கதவுகள் திறந்திருந்தன. பரபரப்புடன் உள்ளே ஓடிப்போய் பார்த்தால் அங்கே இடிந்த வீட்டில் ஒரு மூலையில் கீர்த்தியின் கட்டிலுக்கருகில் நினைவில்லாமல் விழுந்துக் கிடந்த ஸ்ராவணி தென்பட்டாள். உடனே இரு கைகளாலும் அள்ளித் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தானாம்.

மழையில் தலை கூட நன்றாய் நனைந்து விட்டிருந்ததால் நிமோனியா வந்து விட்டது. ஒரு நாள் ஐதராபாத்திற்குக் கூட்டிச் செல்லாமல் போனால் ஆபத்து என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அன்றெல்லாம் பார்த்து விட்டுக் குறையாவிட்டால் மறுநாள் கூட்டிச் செல்ல ஏற்பாடாயிற்று. ஆனால் அதற்குத் தேவையில்லாமல் ஜுரம் குறைந்ததுமே கீர்த்தி வீட்டிற்கு வந்துவிட்டான்.

ஜுரம் திவிரிமாய் இருந்த நாலைந்து நாட்கள் மகேந்திரன் பக்கத்திலேயே இருந்து மருந்தெல்லாம் கொடுத்து இரவும் பகலுமாய்ப் பார்த்துக் கொண்டானாம்.

அவ்வளவு ஜுரத்திலும் கூட ஸ்ராவணி அவனை வெறுத்துப் பேசினாளாம் மருந்து குடிக்க மாட்டேன்



என்று அவனைப் பிடித்துத் தள்ளி விடுவாளாம். கிட்டே உட்கார்ந்திருக்கும் அவனை உள்ளங்கையை குவித்துக் கொண்டு குத்துவாளாம், இதையெல்லாம் பார்த்து ஆயாவும் கீர்த்தியும் பயந்தார்களாம்.

'ஒன்றுமில்லை. ஜுரம் தீவிரம். பயப்படவேண்டாம்' என்று தைரியம் சொல்லுவானாம்.

ஒரு நிமிஷம்கூட அவன் அவள் கட்டிலை விட்டு அப்பால் போகவேயில்லையாம். அவள் மருந்து சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடித்தால் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவள் தலையைத் தன் மடிமேல் இழுத்து வைத்துக் கொண்டு பலவந்தமாய் குடிக்க வைக்க அவன் ஒருவனால்தான் முடிந்ததாம். இதையெல்லாம் ஆயா வாய் மூலமாய்க் கேட்ட ஸ்ராவணிக்கு வெட்கத்தால் உயிரே போய்விட்டாற் போலிருந்தது.

## 34

ஸ்ராவணியின் உடம்பு தேறுவற்கு அதிக நாள் பிடிக்கவில்லை. இடிந்த வீட்டைத் திருப்பிக் கட்டிக் கொள்ள வேண்டுமானால் கொஞ்சம் நஞ்சம் இடியாமலிருக்கும் பாகத்தையும் இடித்துவிட்டு முழுவதுமாய்க் கட்டிக் கொள்ளவேண்டும் என்றும் இல்லாவிட்டால் இன்னொரு முறை மழை வந்தால் இந்தப் பாகங்களும்கூட இடிந்து விழுந்துவிடும் என்றும் மேஸ்திரி சொன்னார்.

மகேந்திரன் தெருப்பக்கமாய் இருந்த தனக்குச் சொந்தமான இடத்தில் சிறிய வீடு ஒன்றைக் கட்டுவதற்குப் 'பிளான்' வரையச் செய்தான். தன்னிடம் வீடு கட்டுவதற்குப் பணம் இல்லாததால் ஸ்ராவணி வேறு வழியில்லாமல் ஆயா மூலமாய் மகேந்திரனிடம் இதற்கு முன்னால்

தம் வீட்டை விலைக்கு வாங்கிக்கொள்வதைப் பற்றி கேட்டிருந்த விஷயத்தை நினைவுபடுத்தினாள். மகேந்திரன் ஒப்புக் கொண்டான்.

ஆனால் அவன் போட்டிருந்த அந்தப் பிளானுக்கும், கட்டப் போகும் அந்த வீட்டிற்கும் ஆகும் செலவுக்கு தான் விற்ற வீட்டின் தொகை எந்த மூலைக்கும் காணாது என்று ஸ்ராவணிக்குத் தெரியாது. மகேந்திரன் அதைச் சொல்ல விரும்பவில்லை.

என்னதான் ஆனாலும் வீடுகட்டி முடிக்க நாலைந்து மாதங்கள் ஆகலாம். அதுவரையிலும் வேறு வழியில்லாததால் மகேந்திரன் வீட்டிலேயே இருந்து தீர வேண்டியிருந்தது.

இந்த விதமாய் நிலைமை எல்லாம் எதிர்த்து நின்று பலவந்தமாய் ஸ்ராவணியை மகேந்திரன் பக்கமாய்த் தள்ளிக் கொண்டிருந்தன.

ஆயாவுக்கு நாளடைவில் மதுலை மிகவும் பிடித்து விட்டது. அவனுடைய குழந்தைத் தனமான சேஷ்டைகளும், மழலைகளும், குறும்புகளும் எல்லோரையும் கவர்ந்த போதிலும் ஸ்ராவணியை மட்டும் கவரவில்லை.

மதுவுக்குத் தலைவாருவது, குளிப்பாட்டி உடை அணிவிப்பது, வேளைக்கு ஆகாரம் தருவது எல்லாவற்றையும் ஆயாவைக் கவனித்துக் கொண்டாள்.

அதுமட்டுமில்லை, கோபாலின் மனைவியைச் சமையல் வேலையிலிருந்து நிறுத்தி விட்டு, அந்தக் காரியத்தைத் தானே பார்க்கத் தொடங்கினாள்.

ஸ்ராவணி குறுக்கிட்டபோது 'நீ சும்மாயிரு, மூவரும் உட்கார்ந்து சாப்பிடுகிறோம். இவ்வளவாவது செய்ய வேண்டாமா? என்று எரிந்து விழுந்தாள். ஆயா இந்த



வேலைகளால் திணறிக் கொண்டிருக்கும்போது ஸ்ராவணி தானும் போய் வேலையில் ஒத்தாசை பண்ணுவாள். ஆயா மதுவின் காரியங்களைக் கவனிக்கும்படிச் சொல்லுவாள். அவனைத் தொடுவதற்கே ஸ்ராவணிக்கு ஏதோ போலிருக்கும். அவனைப் பயந்தபடிப் பார்ப்பாள்.

இதொன்றையும் அறியாத மதுவுக்கு ஏனோ ஸ்ராவணியைக் கண்டால் பிடித்துப் போய்விட்டது. ஏதாவது விதத்தில் அவளிடம் போகத் துடிப்பான்.

அன்றைக்கு ஸ்ராவணி தன் அறையில் ஜன்னலுக் கருகில் நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். தொலைவில் மாமரத்தடியில் நின்றபடி கிர்த்தி பட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் நின்றபடி நூல்கண்டைப் பிடித்துக் கொண்டிருந்த மது காற்றாடியைக் காட்டி ஏதோ கேட்டான்.

கிர்த்தி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மது உடனே நூல்கண்டை கீழே வீசி யெறிந்தான். கிர்த்தி சட்டென்று மதுவின் முதுகில் பட்பட் டென்று இரண்டு அறை கொடுத்தான் ஸ்ராவணி வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மது உடனே அழத் தொடங்கி விட்டான் மகேந்திரன் வீட்டில்தான் இருந்தான். மகனின் அழுகையைக் கேட்டால் சும்மாயிருப்பானா? அதற்குள் ஆயா அங்கே ஓட்டமாய் ஓடி வந்தாள்.

அழுது கொண்டிருந்த மதுவைத் தூக்கிக் கொண்டு, காரணம் கேட்டாள். அவன் ஒரு கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டே இன்னொரு கையால் கிர்த்தியைச் சுட்டிக் காட்டினான்.

ஆயா கீர்த்தியைக் கேட்டாள். அவன் அலட்சியமாய்த் தலையைச் சிலிர்த்துக் கொண்டு ஏதோ சொன்னான். உடனே ஆயா கீர்த்தியின் தோளைப் பிடித்துக் கொண்டே தரதரவென்று உள்ளே இழுத்து வந்தாள். ஸ்ராவணி கூட கலக்கத்தோடு வெளியே வந்தாள்.

'என்ன? ஏன் அழுகிறான்?', அதற்குள் அங்கே வந்த மகேந்திரன் கேட்டான். அவன் அப்பொழுது தான் போலிருந்தது. பொடிப் பொடியாய் இருந்த கேசங்கள் லேசாய் நெற்றியில் வந்து தவழ்ந்து கொண்டிருந்தன. உடம்பில் சட்டைக்குப் பதில் தோளில் துவாலை இருந்தது.

'நூல் உருண்டையைச் சரியாய்ப் பிடித்துக் கொள்ளவில்லைன்னு மதுவைப் பிடித்து அறைந்துட்டானாம்! சின்னக் குழந்தைக்கு என்ன தெரியும்?' என்றாள் ஆயா.

'ஏன் கீர்த்தி? அடித்தாயா?' கேட்டான் மகேந்திரன். குழந்தையை ஆயாவிடமிருந்து வாங்கிக் கொண்டே.

'ஆமாம் அடித்தேன்.' பயமில்லாமல் பதிலளித்தான் கீர்த்தி அவன் பிடிவாதத்திற்கு ஆயாவும் ஸ்ராவணியும் அசந்து விட்டார்கள்.

'ஏன் அடித்தாய்? நீங்களிருவரும் சிநேகமாய் இருக்கணும்னு சொல்லியிருக்கேனில்லையா?'

'எனக்கும் அவனுக்கும் என்ன சிநேகம்? நான் பெரியவன்; அவன் சின்னவன்.'

'அதற்காக அடிப்பாயா?'

'அடிக்கிறது மட்டுமேயில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் கொன்றும் விடுவேன். அவனை எனக்குப் பிடிக்கலேயில்லை.'



மகேந்திரன் கீர்த்தியிடம் வந்தான். ஆயா கூட பயந்து விட்டாள்.

'ஏன் வெறுப்புன்னு கொஞ்சம் விவரமாய் சொல்றீங்களா கார்த்திகேயன் சார்?' கம்பீரமாய்க் கேட்டான் மகேந்திரன்.

கீர்த்தி சரேலென்று நிமிர்ந்தான். உடனே கண்கள் குளமாகி விட்டன. பற்களைக் கடித்துக் கொண்டே— வெறுப்பு இல்லாமல் எப்படி இருக்கும்? இந்தச் சனியன் வந்ததிலேருந்துதான் நீங்கள் எவ்வளவு மாறிப் போயிட்டீங்க? நான் வந்ததிலேருந்தே பார்க்கிறேன். என்னோடு நீங்க ஒரு தடவைகூட சரியாய்ப் பேசவே இல்லை. ஒரு நிமிஷம்கூட என் கிட்டே வந்து உட்காரவேயில்லை.'

தொண்டை அடைத்ததால் நிறுத்திக் கொண்ட கீர்த்தி கண்களைத் துடைத்துக் கொண்டான்.

ஸ்ராவணி திகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். மகேந்திரன் ஒரு வினாடி கண்கொட்டாமல் பார்த்து விட்டுச் சட்டென்று கீர்த்தியை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

'நீங்க... நீங்க என்னைச் சரியாய்க் கவனித்தால் நான் அவனை ஒன்றுமே பண்ணமாட்டேன். அவன் மேல் எனக்கு எந்த வெறுப்பும் இல்லை.'

—தேம்பிக் கொண்டேவெளி வந்தது அவன் குரல்.

'புரிஞ்சுடுத்து கீர்த்தி! புரிஞ்சுடுத்து. தப்பு என்னோடதுதான்! இனி ஒரு நாளும் இப்படிப் பண்ணமாட்டேன்! கீர்த்தியின் கேசங்களில் விரலை விட்டு அன்பாய்ச் சொன்னான்.

'நான்— நானும் அவனை இனி ஒரு நாளும் அடிக்க மாட்டேன்.' வாக்குறுதி அளித்தான் கீர்த்தி மகேந்திரனின் கைகளைக் கட்டிக் கொண்டே'

ஆயா மெதுவாய் உள்ளே போய்விட்டாள். ஸ்ராவணியும் தன் அறைக்குத் திரும்பி வந்தாள். இந்தச் சம்பவத்தால் ஸ்ராவணிக்குப் புதிய உண்மை தெரியத் தொடங்கிற்று.

கீர்த்திக்கு மகேந்திரனின் அன்பு அவ்வளவு அவசியமாய் தோன்றுகிறதா? சொந்த அக்கா உயிராய் பாவிப்பது போதாதா? அப்படிப் பார்த்தால் அவன் தன்னைவிட மகேந்திரனை அதிகமாய் விரும்புகிறானா? இதுவரை கீர்த்தி தான் பக்கத்தில் வந்து உட்கார வேண்டும், பேச வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்த்ததில்லையே! ஒருக்கால் என்றாவது பலவந்தமாய் இழுத்து உட்கார வைத்துக் கொண்டால்கூட அவன் மனம், உயிர் இரண்டும் மகேந்திரன் மீதேதான் இருக்கும் கடவுளே!

அவள் என்ன பாவம் பண்ணி விட்டாள் என்று கடைசியில் கீர்த்திகூட அவளை விட்டுத் தொலைவிற்குப் போக வேண்டும்? இவ்வாறு எண்ணிய ஸ்ராவணியின் மனம் உடைந்து விட்டது.

## 35

'என்னை அவர் ஸ்கூலில் சேர்க்கிறேன் என்கிறார்' என்றான் கீர்த்தி—உற்சாகமாய் அக்காவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு.

'வேண்டாம்.'

'ஏன்?'—விநோதமாய்ப் பார்த்தான்.

'நம்மிடம் அவ்வளவு பணம் இல்லை.'

'அவர்தான் தரேன் என்கிறாரே!'

ஸ்ராவணி சரேலென்று எழுந்திருந்தாள்.



வாங்கிக் கொள்வதற்கு ஒரு எல்லை இல்லை கிடையாதா?'

கீர்த்தியின் முகம் வாடிவிட்டது; அறையை விட்டுப் போய்விட்டான்.

கால் குணமானதுமே எவ்வளவு கனவு கண்டிருப்பான்! திரும்பவும் பள்ளியில் சேர்ந்துவிடலாம் என்றும், இதையெல்லாம் ஒரு தீயக் கனவாய் மறந்து போய் விடலாம் என்றும், இன்னும் என்னென்ன ஆசைப்பட்டிருப்பான்!

இவ்வளவு கஷ்டங்களுக்கு நடுவே கடவுள் தந்த வரத்தைப் போல மகேந்திரனின் நிழல் கிடைத்திருக்கிறது. ஏன்? மகேந்திரனிடமிருந்து ஏன் வாங்கிக் கொள்ளக் கூடாது? மூவர் சாப்பாட்டுச் செலவையும் அவரே பார்த்துக்கொள்ள வில்லையா? வாங்கிக் கொள்ளவே கூடாது. ஆனால் வாங்கிக்கொள்ளத் தொடங்கிவிட்டால் கொஞ்சமாய் வாங்கிக் கொண்டால் என்ன, நிறைய வாங்கிக் கொண்டால் என்ன? ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டா எப்படியோ அப்படியே தான் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டாலும்!

ஸ்ராவணியை எதிர்த்துக் கேள்வி கேட்டால் கோபித்துக் கொண்டு விடுவாள். மெதுவாய் நயமாய்ச் சொல்லி ஒப்புக் கொள்ளச் செய்யவேண்டும். அறைக்கு வெளியே கொஞ்சநேரம் அப்படியும் இப்படியும் அலைந்து திரிந்த கீர்த்தி திரும்பவும் அக்காவிடம் வந்தான்.

'சரி போகட்டும், கடனாக வாங்கிப்போம்.'

'வாங்கிக்கொண்டு விட்டால் போதுமா? கடனைத் தீர்க்கத் தேவையில்லையா?

'நான் படிச்சு உத்யோகம் செய்து கடனைத் தீர்த்து விடுகிறேன்.'

'தீர்த்துக் கிழிப்பாய் இப்ப வாங்கிக் கொண்டதையெல்லாம் முதலில் தீரு.'

கீர்த்திக்குக் கோபம் வந்தது.

'அப்படீன்னால் வாழ்நாளெல்லாம் அவர் தோளில் ஏறி உட்கார்ந்துட்டு, அவர் செலவிலேயே சாப்பிட்டுட்டிருக்கலாம். அது தான் உனக்குப் பிடித்திருக்கிறது!'

'வாயை மூடு. வாழ்நாளெல்லாம் ஏன் இருப்போம்? அந்த நிலத்தைத் திரும்பவும் பண்படுத்தித் தோட்டம் போட்டுக்கலாம் வீடு கட்டி முடிந்ததுமே அந்த வீட்டுக்குப் போயிடலாம். காய்கறி வியாபாரத்தில் பணம் வரத் தொடங்கியதுமே கொஞ்சங் கொஞ்சமாய்க் கடனைத் தீர்த்து விடுவோம்.'

'சரி, அப்படியே வைத்துப்போம். அது கூட எவ்வளவு நாளைக்கு? நீ உயிரோடிருக்கிற வரையிலும் இப்படியே உழைச்சுப் பிழைச்சுட்டிருக்கப் போகிறாயா?'

'எப்போதும் ஏன் பண்ணிட்டிருக்கப் போறேன்? நீ பெரியவனாகிற வரைக்கும் செய்வேன். பெரியவனானதும் நீ செய்ய மாட்டாயா?'

கீர்த்தி விக்கித்துப் போய்ப் பார்த்தான். 'நானா? என்னால் முடியுமா? பளுவான வேலைகளை எப்பொழுதுமே செய்யக்கூடாதுன்னு டாக்டர்கள் சொன்னதை மறந்துட்டாயா?'

ஸ்ராவணி பதில் பேசவில்லை.

கீர்த்தி கெஞ்சத் தொடங்கினான். 'அக்கா! என் பேச்சைக் கேளேன்.'

'இந்த விஷயத்தில் கேட்கப் போவதில்லை கீர்த்தி! இதுவரைக்குமே வேறு வழியில்லாமல் நிறைய பொறுத்துக்



கொண்டேன். இனியும் என்னால் பொறுத்துக்க முடியாது. எனக்கு அந்த சக்தி இல்லை.'

'அப்படீன்னால் நான் படிக்கிறது உனக்குப் பிடிக்கலையா?' ஏமாற்றத்தோடு கேட்டான். ஸ்ராவணி மௌனம் வகித்தாள். கீர்த்தியின் முகம் கோபத்தால் சிவந்தது.

'ஆமாமாம். நான் கஷ்டப்பட்டு சிரத்தையாய்ப் படிக்கிறேன் என்றாலும் கேட்டுக்க மாட்டாய். எப்படியாவது கொஞ்ச நாள் பொறுத்துட்டு காலத்தைக் கழிக்கலாம் என்றாலும் நீ ஒப்புக்க மாட்டாய். உன் பாரமான வேலையை என்னால் செய்ய முடியாது. நீ செய்தாலும் பார்த்துட்டு சும்மாயிருக்க என்னால் முடியாது. என்றாவது ஒரு நாள் உனக்கு உதவப் போய் இடுப்பு எலும்பு உடைந்து திரும்பவும் கட்டிலோடு படுத்து விடப் போகிறேன். அப்ப உன் மனம் குளிர்ந்து விடும்.'

'கீர்த்தி! ஸ்ராவணி பெரிதாய்க் கத்திவிட்டாள்.

'அதான் என் தலையெழுத்து. அப்படித்தான் எழுதி வைத்திருக்கிறது. அப்படி நடக்காவிட்டால் பார் நீயே.'

கீர்த்தி கோபமாய் அங்கிருந்து போய் விட்டான்.

'கீர்த்தி! 'ஸ்ராவணியின் குரல் நடுங்கிற்று. கீர்த்தி திரும்பவும் கட்டிலோடு படுப்பதா! அவனுக்குப் புனர் ஜென்மம் தருவதற்காக அல்லவா அவள் தன்மானத்தைக்கூட கொன்று கொண்டாள். கீர்த்தி திரும்பவும் ஒரு மனிதனாய் மாறவேண்டும் என்று கருதித்தானே அவள் தன் வெறுப்பையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டாள். இல்லாவிட்டால் மகேந்திரனின் நிழலைக்கூட அவள் கண்ணெடுத்தும் பார்த்திருப்பாளா?'

இதெல்லாம் கீர்த்தி திரும்பவும் கட்டிலோடு படுத்து நொண்டியாய்க் கழிக்க வேண்டும் என்பதற்காகவா அவள் செய்தாள்?

அன்றிரவு கீர்த்தி சாப்பிடவில்லை. முகத்தை முறுக்கிக் கொண்டு கட்டிலில் படுத்து விட்டான். ஆயா வந்து கூப்பிட்டபோது, 'உதைப்பேன். போ தூர!' என்று கத்தினான்.

ஸ்ராவணி தானே வந்து வெகுநேரம் கெஞ்சிப் பார்த்தாள். ஆனாலும் கேட்கவில்லை. கடைசியில் படிக்க ஒப்புக் கொண்டதாய் சம்மதத்தைத் தந்துவிட்டாள்.

'நிஜமாகவா?' சட்டென்று எழுந்து அக்காவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

'நிஜந்தான்!'

'நான் சாப்பிட்ட பிறகு திரும்பவும் மனம் மாறிவிடமாட்டாயே?'

'மாட்டேன். நீ எழுந்து வந்து சாப்பிடு.' —கடுமையாய் வந்தது ஸ்ராவணியின் குரல். கீர்த்திக்குச் சிறகு முளைத்துவிட்டது. பறக்கத் துடிக்கிறான். ஆகாசத்தில் பறந்து போகத் துடிதுடித்தபடிச் சிறகுகளை அடித்துக் கொள்ளும் குருவியைப் பிடித்துத் தடுக்க விரும்புவதைப் போன்ற முட்டாள்தனம் வேறொன்றில்லை....

## 36

கீர்த்தியை ஐதராபாத்திற்கு அழைத்துச் சென்று பள்ளியில் சேர்த்துவிட்டு, வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துமுடித்துவிட்டுத்திரும்பி வந்தான் மகேந்திரன்.

வீடு கட்டிக்கொண்டிருந்த மேஸ்திரியின் மனைவி இறந்துவிட்டதால் வீடு கட்டும் வேலை நின்றுவிட்டது.



மகேந்திரன் வீட்டில் எப்படியும் சாப்பாட்டுக்கடனை வைத்துக் கெள்ளவில்லை ஆயா. சமையல் வேலைகளைக் கவனித்து வந்தாள். மதுவின் வேலைகளையெல்லாம் கூட இப்பொழுது ஸ்ராவணிதான் பார்த்து வந்தாள். தாய்மைக்கு நிரந்தரமாய்த் தூரமாகிவிட்டோமே என்ற நினைவாலா? எல்லாப் பெண்களையும் போல இன்றித் தன் வாழ்க்கை ஏன் இதுபோலக் கோணலாக வேண்டும்?

கீர்த்தி போய் விட்ட பிறகு தனிமையால் தவித்த ஸ்ராவணியின் மனம் மெல்ல மெல்ல அவளுக்கே தெரியாமல் மதுவினிடம் திரும்பத் தொடங்கியது. மகேந்திரன் விரும்பியதும்— மிகப் பொறுமையாய்க் காத்துக் கொண்டிருந்ததும்கூட இதற்காகவேதான். எவ்வளவோ தடவை ஸ்ராவணிக்கு உண்மையைச் சொல்லிவிட முயன்றான். ஆ னா ல் அவன் தயார் செய்து கொண்டிருந்த சம்பாஷணைகள் எல்லாம் ஸ்ராவணியின் புருவங்கள் நெறிவதைப் பார்த்ததுமே தொலைவிற்குப் பறந்து போய் விடும்.

ஸ்ராவணிக்கு சாவதானமாய் உட்கார்ந்துக் கொண்டு தான் மகேந்திரனின் வீட்டில் இருப்பதாய் நினைத்துப் பார்த்துக் கொண்டாலொழிய சாதாரணமாய் அந்த நினைப்பே வராது.

ம கே ந் தி ர ன் சாதாரணமாய் வீட்டில் இருக்க மாட்டான். இருந்தாலும் தன் அறையை விட்டு வெளியே வர மாட்டான்.

மாதத்தில் இருபது நாட்கள் அவன் பட்டணத்தில் இருந்து கொண்டு செய்யும் காரியம் என்னவென்று தான் ஸ்ராவணிக்குத் தெரியவில்லை. பல விதமாய் ஊகித்துப் பார்த்துக் கொண்டு இன்னும் அருவருப்பு அடைவாள்.

ஆனாலும் அவன் வீட்டில் இல்லாதது அப்பாடா என்று நிர்ச்சிந்தையாய் இருக்கும்.

அவன் நேரமெல்லாம் ஓய்வு சமயத்தில் ராட்டினத்தில் நூல் நூற்பதிலேயே கழிந்தது. அந்த நூலை விற்று வரும் பணத்தை ஆயா மூலமாய் மகேந்திரனுக்கு அனுப்பி வைத்து விடுவாள். ஆனால் சல்லிக்காசு கூட அவன் அதிலிருந்து எடுத்துக் கொள்ளவில்லை என்றும், ஆயா விடமே வைத்திருக்கும்படிச் சொல்லி விட்டான் என்றும், ஆயா அதுபோலவே சேமித்து வைத்துக் கொண்டிருக் கிறாள் என்றும் ஸ்ராவணிக்குத் தெரியாது.

நாளாக ஆக ஆயாவுக்கு மட்டும் மகேந்திரனிடம் தாய்மையோடு கூடிய அன்பு ஏற்படத் தொடங்கிவிட்டது. புத்திசாலியான அவனை ஸ்ராவணி கணவனாய் அடைந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று ஊகித்துப் பார்க்கத் தொடங்கினாள். ஆனால் வெளியே சொன்னால் ஸ்ராவணி எங்கே சீறி விழுவாளோ என்றஞ்சி உள்ளுக் குள்ளேயே அந்த எண்ணத்தை மென்று விழுங்கிக் கொண்டாள்.

ஆனால், சில நாட்கள் அவனோடு சேர்ந்து வசித்தால் அவன் குணத்தால் கவரப்பட்டு விடுவாள் என்ற நம்பிக்கை யும் ஏற்பட்டது. அதனால்தான் இந்த வீட்டிற்கு வந்து தங்க நேரிட்டதற்கு மகிழ்ச்சியடைந்தாள்.

## 37

எல்லோரையும் போலவே மதுவும் ஸ்ராவணியைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினான். அதைப் பார்த்த மகேந்திரன் ஒரு முறை தனியாய் இருந்தபோது அப்படிக் கூப்பிடக்கூடாது, தப்பு' என்று சொன்னான்.

'பின்னே எப்படிக் கூப்பிடணும்?' தந்தையின் மடியில் உட்கார்ந்துக் கொண்டு கைக் கடியாரத்தோடு ஆடிக் கொண்டிருந்த மது நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.



மகேந்திரன் ஒரு வினாடி தடுமாறி விட்டு, அம்மான்னு கூப்பிடு'— என்றான்.

'அம்மா என்றால்?'

மகேந்திரனால் பதில் சொல்லமுடியவில்லை.

'சொல்லு. அம்மா என்றால்?' ஒவ்வொன்றையும் விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற துடிப்பு அதிகம் அவனுக்கு. தெரிந்து கொள்ளும் வரை விட மாட்டான்.

'அம்மா என்றால் ரொம்ப நல்லவள். அழகாய் இருப்பாள். உன்னை நன்றாய்ப் பார்த்துப்பாள்.'

'ஸ்ராவணி போலவா?'

மகேந்திரன் ஆம் என்று தலையாட்டினான். தந்தையின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண் டிருந்தவன் கன்னத்தில் இருந்த வடுவைத் தொட்டுக் காட்டி, இதென்னது?' என்றான்:

மகேந்திரன் மகனையே கூர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தான். 'சொல்லு. கீழே விழுந்தாயா?'

'இல்லை.'

'பின்னே? யாராவது அடிச்சாங்களா?'

ஆம் என்பது போலத் தலையாட்டினான்.

'யாரு?'

'ஸ்ராவணி.'

மதுவின் கண்கள் வியப்பால் விரிந்தன. 'ஏன் காற்றா டியைக் கிழிச்சு விட்டாயா'

கிழிக்கவில்லை என்று தலையாட்டினான் மகேந்திரன்.

'பின்னே? எண்ணெய் தேய்த்துக் குளிக்கலையா?'

அதுவும் இல்லையென்று தலையாட்டினான்.

'எல்லாச் சாக்லேட்டையும் தின்னுட்டியா?'

'ஊஹூம்' என்று மறுத்துத் தலையசைத்தாள்.

'பின்னே எதுக்கு அடித்தாள்?' உலகத்தில் அடி வாங்குவதற்கு இன்னுங்கூட காரணங்கள் இருந்தன என்றால் அப் பிஞ்சு மனம் நம்ப மறுத்தது.

'நீயே கேளு!'

'யாரை? ஸ்ராவணியையா?'

'ஸ்ராவணின்னு சொல்லக் கூடாதுன்னு சொன்னேனில்லையோ?'

'சொன்னால் என்ன ஆகும்?'

'கண் அவிஞ்சு போயிடும்.'

ஒரு வினாடி தந்தையின் முகத்தைப் பார்த்த மது சட்டென்று மடியிலிருந்து இறங்கிச் சமையலறையை நோக்கி ஓடினான்.

## 38

'அம்மா, அம்மோவ்!' புதிதாய்க் கற்றுக்கொண்ட வார்த்தைகளை உடனடியாய்ப் பயன்படுத்திக் கொண்டே ஆர்வத்தோடு பெரிதாய்க் கத்திக்கொண்டே வந்தான் மது.

தோய்த்து உலர்த்திய ஆடைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்த ஸ்ராவணி சரேலென்று திரும்பிப் பார்த்தாள்.



'எங்கப்பா கன்னத்தில் ஏன் அடிச்சாய்?' தீவிரமாய்க் கேட்டான்.

ஸ்ராவணி விநோதமாய்ப் பார்த்தாள்.

'சொல்லும்மா.'

'அம்மாவா?'

'ஆமாம். உன் பேர் ஸ்ராவணி இல்லை. அம்மா!' கைகளைக் கட்டிக்கொண்டு உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும் என்பது போல மிடுக்காய்ச் சொன்னான்.

ஸ்ராவணிக்கு இழுத்துக் கன்னத்தில் ஒன்று கொடுக்க வேண்டும்போல ஆத்திரம் வந்தது.

ஆனாலும் கட்டுப்படுத்திக்கொண்டு, 'யார் சொன்னாங்க?' என்று கேட்டாள்.

'அப்பா!' அவன் வார்த்தைகளை முடிக்கக்கூட விடவில்லை. ஸ்ராவணி கைவேலையைப் போட்டுவிட்டுவந்து அவன் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு மகேந்திரனின் அறைக்கு வந்தாள்.

மகேந்திரன் படித்துக்கொண்டிருந்த பேப்பரை மூடி வைத்துவிட்டு, 'என்ன பண்ணினான்?' —என்று கேட்டான் ஏதும் அறியாதவனைப் போல.

'ஆயாவை அம்மான்னு கூப்பிடுவது அசிங்கம் இல்லையா?'

'அவன் குழந்தை. ஆயாவுக்கும் அம்மாவுக்கும் வித்தியாசம் அவனுக்கெப்படித் தெரியும்?' மகேந்திரன் மதுவின் கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டான். ஸ்ராவணி இழுத்து வந்ததால் பயந்துபோன மது, தந்தையின் கழுத்

தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டான். அவ்விருவரையும் அவ்வாறு பார்த்தபோது ஸ்ராவணியின் முகம் பொறாமையால் வெடித்தது. அவன் மேல் மகேந்திரனுக்கு ஏன் இவ்வளவு உயிரோ? அவன் தாயை அவ்வளவு தூரம் நேசித்திருப்பானோ? அந்த அன்பின் மறு உருவமாதலால் அவன் மேல் அத்தனைப் பிரியமோ? ஆனாலும் பெண்பித்தனான மகேந்திரனுக்கு இப்படிப் பட்ட மென்மையான உணர்ச்சிகள்கூடத் தெரியுமா?

உடைந்த உள்ளத்துடன் ஸ்ராவணி அறையை விட்டு வேகமாய்ப் போய் விட்டாள்.

'மது, உனக்கு அம்மாங்கிறது பிடிச்சிருக்கா, ஸ்ராவணிங்கறது பிடிச்சிருக்கா?' மகனைக் கேட்டான் மகேந்திரன். மது திரும்பிப் பார்த்து விட்டு, ஸ்ராவணி அறையை விட்டுப் போய் விட்டாள் என்று திட்டமாய்த் தெரிந்து கொண்டதும் தந்தையின் செவியில் ரகசியமாய், 'அம்மாதான் பிடிச்சிருக்கு' என்றான்.

'அப்படியே கூப்பிடு.'

'ஆனால் ஸ்ராவணி அடிப்பாளே!'

'அடிக்க மாட்டாள். அடித்தால் என்னிடம் சொல்லு.'

'என்ன பண்ணுவாய்?'

'ஸ்ராவணியின் காதைப் பிடித்துத் திருகுவேன்.'

மதுவின் கண்களில் ஆர்வத்தோடு கூடிய மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது.

அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில்— 'அம்மா தண்ணீர்!' என்றான்.

'எவ்வளவு தரம் சொல்றது? அம்மா இல்லை, ஆயா!' தண்ணீர்தம்ளரைக் கொண்டு வந்து வைத்து விட்டுக் கோபமாய்ச் சொன்னாள் ஸ்ராவணி.



'ஆயாங்கறது எனக்குப் பிடிக்கலை.' பிடிவாதமாய் வந்தது மதுவின் பதில்.

'ஏன் பிடிக்கலை?'

'நன்றாயில்லை. ஆயா என்றால் கருப்பாய், அசிங்கமாய் உங்க ஆயா மாதிரி இருப்பாள்.'

'அம்மா என்றால்?'

'உன்னைப் போல வெள்ளையாய் அழகாய் இருப்பாள்' அவன் மூகத்தைப் பார்த்ததுமே ஸ்ராவணியின் கோபம் பறந்துவிட்டது. சிரிப்பை அடக்கிக் கொண்டே அவன் கன்னத்தை நிமிண்டிவிட்டு, 'அப்படீன்னால் ஸ்ராவணி என்றே கூப்பிடு' என்றாள்.

'ஊஹூம்.'

'ஏன்?'

'கண் அவிஞ்சு போயிடும்.' மது இரு கண்களையும் பொத்திக்கொண்டான். கொள்ளை அழகாயிருந்த அவன் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த அவளுக்குத் திரும்பவும் அதே வருத்தம் மனதின் மறு மூலையில் எங்கேயோ மளுக்கென்று ஏற்பட்டது.

இச் சிறுவன் மீது அவளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இந்த ஜென்மத்தில் மதுவைப் போன்ற குழந்தையை அவளால் பெறவும் இயலாது. அந்த வருத்தம்தான் அவன்மேல் ஏற்பட்ட பொறாமைக்கு உண்மையான காரணம்.

மகேந்திரன் மேல் எவ்வளவு வெறுப்பு இருந்தபோதிலும் ஸ்ராவணியை மது வெகுவாய்க் கவர்ந்து விட்டான். கூப்பிடாமலேயே வந்து மேலே விழுந்து ரகளை செய்து தன்னையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்த அவனைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

கீர்த்தி படிப்பிற்காக தொலைவிற்குப் போன பிறகு தனிமையில் உழன்று கொண்டிருந்த அவனுக்கு மது வரவர ஒரு தனி உலகத்தை ஏற்படுத்திவிட்டான். அவன் சுறு சுறுப்பும் மழலையும் அவனையே அறியாமல் கவரத் தொடங்கிவிட்டன.

இப்பொழுதெல்லாம் ஒரு அரைமணிநேரம் அவனைக் காணாவிட்டால் போதும்; மதுவை அவன் கண்கள் வீடெல்லாம் தேடத்தொடங்கியது. கொஞ்ச நேரம் அவன் வந்து என்னென்னவோ கேள்விகள் கேட்டு, மேலே விழுந்து ரகளைப் பண்ணி, குறும்பு சேஷ்டைகள் செய்யா விட்டால் எதையோ இழந்து விட்டாற்போலப் பாவிக்கத் தொடங்கினாள். இதையெல்லாம் அவ்வப்பொழுது நினைத்துப் பார்த்தால் ஸ்ராவணிக்கு ஏதோ போல் ஆகிவிடும்.

மதுவை மதுவாய் இன்றி, மகேந்திரனின் மகனாய்ப் பார்த்து வெறுக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தாள். ஆனால் லாபமில்லாமல் போய் விட்டது.

## 39

'அன்புள்ள மகேந்திரனுக்கு—

சாம்பவி எழுதிக்கொண்ட கடிதம். நானும் குழந்தை களும் இங்கே நலமாகவே இருக்கிறோம். உங்கள் நலனைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. நீங்கள் அந்தக்கிராமத்தை விட்டுவிட்டு இந்தப் பக்கமே வருவதில்லையா? அல்லது ஒருவேளை வந்தாலும் என் கண்ணில் படாமல் போய் விடுகிறீர்களோ தெரியவில்லை.

'சமீபத்தில் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட சில செய்திகளைக் கொண்டு பார்த்தால், இரண்டாவது தான்



உண்மை என்று தோன்றுகிறது. உன் வீட்டில் நீ யாரையோ கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக் கிறாயாமே! இதை அவரே கண்ணாரக் கண்டு விட்டு வந்தாதாய்ச் சொன்ன போதும் என்னால் நம்பவே முடியவில்லை. அதோடு உன் நன்மையைக் கருதி உன்னை ஏதோ எச்சரிக்கப் போனபோது, நீ அவரை அடிக்காத குறையாய் நன்றாய்த் திட்டினாயாம். அவர் வீட்டிற்கு வந்து' நீ இனிமேல் உன் அத்தானுடன் கடிதப் போக்கு வரத்தோ, பார்க்கப் போவதோ கூடாது நிறுத்திவிடு'— என்று என் மாமியார் முதலியவர்களுக்கு முன்னால் சொன்னபோது எனக்கு அவமானத்தாலும் துக்கத்தாலும் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. வேண்டியவர் களைக்கூட அவமானப்படுத்தி அனுப்பி வைத்து விடும்படி அவ்வளவு நெருக்கமாகி விட்டாளா உனக்கு அந்தப் பெண்? அவள் யார்?

'எனக்கு அந்த ஊரில் கொஞ்சம் படித்த பெண்ணாய் யாருமே தென்படவில்லையே? இறுதியில் நீங்கள் ஒரு கிராமத்து தனுக்கு மேனியாளின் வலையில் விழுந்து அவள் கைப் பாவையாகி விட்டீர்கள் போலிருக்கிறது.

'நல்ல குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டு எங்கள் எல்லோரையும் போல குழந்தைக் குட்டிகளோடு குடும்பம் நடத்தாமல் இவ்வாறு தாழ்ந்து போக வேண்டுமா? எவ்வளவு யோசித்தாலும் எனக்கு எதுவுமே புரியவில்லை. அவள் யாரோ! இந்த நிமிஷமே அவளை உங்கள் வீட்டிலிருந்து துரத்தாவிட்டால் நானே வந்து அந்தக் காரியத்தைச் செய்கிறேன், உங்கள் மருமானாய்— உங்கள் சிறுவயது தோழியாய், இந்த உலகத்தில் உங் களுக்கு உள்ள ஒரே நெருக்கமான உறவாய் என் கடமை என்ன என்று எனக்குத் தெரியும்.

'உங்கள் வாழ்க்கை இப்படிக் கோணல் வழியில் திரும் பிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே என்னால்

சும்மாயிருக்க முடியாது. நீங்கள் இதுபோல ஆகிவிட்டதற்குக் காரணம் நான்தானோ என்றுகூடத் தோன்றுகிறது. அதனால் தான் என் கடமையை நான் நிறைவேற்றத் தீர்மானித்துக் கொண்டு விட்டேன்.

'இப்பொழுதுதான் தெரிகிறது. அந்த கிராமத்திலேயே உங்களைச் சமாதியாக்கி விட்ட கவர்ச்சி இதுதான் போலிருக்கிறது. இந்த நிமிஷமே அவளை உங்கள் வீட்டிலிருந்து துரத்தாவிட்டால் உங்கள் இந்த சாம்பவி செத்து விட்டதற்குச் சமானம். என் குழந்தைகள் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். நீங்கள் அந்த ஊரிலிருந்து ஜாகையை மாற்றிக் கொண்டு உடனே இங்கே வந்து சேருங்கள்.

'எங்கள் எல்லோருடனும் கலந்து கலகலப்பாய் இருந்தால் திரும்பவும் வாழ்க்கை அதே ஒரு நிலைக்கு வந்துவிடும். அத்தான்! என்னைப் புரிந்து கொண்டு என் இந்த மனதிலிருக்கும் பாரத்தைக் குறைக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். எனக்காக நீங்கள் சொல்லப்போகும் நல்ல வார்த்தையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னை ஏமாற்றத்திற்கு உள்ளாக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன்—

உங்கள் சிறுவயது தோழியான
மருமான்
சாம்பவி—'

கடிதத்தைப் படித்து முடித்ததும் மகேந்திரனின் முகம் சிவந்து விட்டது. கோபத்தை அடக்கிக் கொண்டது தாடை எலும்புகள் புடைத்துக் கொண்டதன் மூலம் தெரிந்தது.

சாம்பவிக்குத் திடீரென்று இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அன்பும்— அதிகாரமும் நினைவிற்கு வந்தது எவ்வளவு விநோதம்!



கடிதத்தை எரிச்சலுடன் மேஜை மேல் வீசி யெறிந்து விட்டு எழுந்து ஜன்னலுக்கருகில் போய் நின்று கொண்டான்.

பத்து நாட்களுக்கு முன்னால் ஜமுனா திருமணப் பேச்சை எடுத்தபோது, கண்டிப்பாய் மறுத்துவிட்டுத் தனக்கு இப்பொழுது திருமணம் செய்து கொள்ளும் உத்தேசமே இல்லை என்று மறுத்துவிட்டு, ஜமுனா அதற்காக அவமானப்பட்டு விடாமலிருப்பதற்காக, மெதுவாய் இதமான வார்த்தைகளைப் பேசிவிட்டு அன்று மாலையே திரும்பி வந்து கொண்டிருந்தான்.

ஊருக்குச் சரியாய் ஆறு மைல் தூரம் இருந்தபொழுது கார் டயர் பஞ்சராகிவிட்டது. டிரைவர் இறங்கி வேறு டயரைப் பொருத்தத் தொடங்கினான். சூரியன் மலைவாயிலில் விழுந்து கொண்டிருந்தது. குளிர்ந்த மாலைப் பொழுது. ஆளரவமில்லாத ரோடு. மகேந்திரன் கைக் கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். அரை மணி நேரம் நடந்தால் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து விடலாம். அமைதியாய் இருந்த அச்சூழ்நிலையில் அவனுக்கு நடக்க வேண்டும் போலிருந்தது.

தன் மறுப்பை ஜமுனா எப்படி எடுத்துக்கொள்வாளோ? இச் சம்பவத்தால் பிரமோத்தின் நட்பில் ஏதாவது மாறுதல் ஏற்படுமோ? என்றெல்லாம் அந்த விஷயத்தைப் பற்றியே யோசித்தவாறு நடந்துகொண்டிருந்த அவன், அந்தக் கொஞ்ச தூரத்தை எப்படித்தான் நடந்து வந்திருப்பானோ அவனுக்கே நினைவில்லை. ஊருக்குள் நுழைந்ததுமே...

'என்ன தொரை இது? நடந்து வரீங்களே?'

என்று யாரோ கேட்கவே திடுக்கிட்டான். வீதிகளைக் கடந்து, முனைகளைத் திரும்பி, வீட்டிற்குள் நுழையப்

போன அவன் வியப்படைந்து விட்டான். சந்திரனின் கார் வீட்டிற்கு முன்னால் நின்றிருந்தது. அன்று பிற்பகல்தான் சந்திரனைக் கடைவீதியில் சந்தித்தான் அவன். 'ரெண்டு நாள்தான் இருப்பீங்களா?' என்று அவன் கேட்டதற்கு, 'இல்லை இன்று ஒருநாள்தான் இருப்பேன்' என்று பதில் சொன்னான். தன்னோடு ஏதாவது வேலை இருந்தால் சந்திரன் அங்கேயே சொல்லியிருக்கலாமே! ஆனாலும் மகேந்திரன் ஐதராபாத்தில்தான் இருக்கிறான் என்று தெரிந்தும் இவன் இங்கே வரவேண்டிய காரணம் என்ன? சந்தேகத்தில் அவன் புருவம் நெறிந்தது.

வீடு திறந்து கிடந்தது. எங்குமே சந்தடி இல்லை. ஸ்ராவணி எங்கே? சந்திரன் எங்கே இருக்கிறான்? சமையலறையை நோக்கிப் போனவன் சமையலறைக் கதவு சாத்தப்பட்டிருந்ததைக் கண்டான். வீட்டில் ஆயாவோ மதுவோகூடக் காணோம். இவர்கள் எல்லோரும் இப்படி கதவுகளையெல்லாம் திறந்துப் போட்டுவிட்டுத் திடீர் என்று எங்கே போய் விட்டார்கள்? சமையலறையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த மகேந்திரன் ஸ்ராவணியின் அறைக்கு முன்னால் நின்று விட்டான். உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கேட்டது. அவனுக்கு ஏனோ திடீரென்று உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் வற்றிவிட்டாற் போலிருந்தது. உள்ளங் கையை மடக்கிக் கொண்டு கதவின்மேல் ஓங்கி குத்தப் போனான். அவன் கை கதவை நோக்கிப் போவதற்குள்ளாகவே இடையிலேயே நின்று விட்டது.

'சந்திரன்!' மரியாதையாய் வழியை விடு. கதவைத் திற!?

கோபமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள் ஸ்ராவணி.

ஊஹூம். மாட்டேன். நீ என் கேள்விக்குப் பதில் சொல்கிற வரைக்கும் இந்த அறையின் கதவு திறந்து கொள்ளாது.'



'பதில் சொல்லியாகிவிட்டது.'

'எனக்குத் தேவையானது பதில் இல்லை. சம்மதம்.' ஒரு வினாடி நிசப்தம்.

மகேந்திரன் வெளியே பொம்மையாய் நின்று கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரங் கழித்துக் கோபத்தை அடக்கிக் கொண்ட குரலோடு—'நீ இந்த மாதிரி கெட்ட எண்ணத்துடன் வந்திருப்பது தெரிந்தால் வீட்டிற்குள்ளேயே வர விட்டிருக்க மாட்டேன் உன்னை. ஒருக்கால் வரவிட்டிருந்தாலும் ஆயாவைப் பால் வாங்கிக்கொண்டு வர அனுப்பியிருக்க மாட்டேன்' என்றாள்.

சந்திரன் சிரித்த சப்தம் கேட்டது.

'மகேந்திரனுக்கு இந்த விஷயம் தெரிந்தால் உன்னைக் கொன்றுப் போட்டு விடுவார்.'

'ஏன்? நீ மகேந்திரனின் மனைவியா, அக்காவா தங்கையா?'

'ஒன்றும் ஆகாவிட்டாலும் உன்னைப் போன்ற அயோக்கியனிடம் இல்லாத நல்ல குணம் அவரிடம் இருக்கு.'

'ஆஹா! நல்ல குணம்! சரி நான் இப்போது உன் வாயால் அவன் புகழ்ச்சியைக் கேட்க வரலை. அதை விட்டுட்டு நம்ப விஷயத்துக்கு வருவோம். நீ என்னோடு ஐதராபாத்துக்கு வந்தாலும் சரி, வராவிட்டாலும் போகட்டும். நானாவது அல்லப்பொழுது இங்கே வந்துட்டிருக்கேன். எப்படியாவது நீ எனக்கு வேண்டும். அவ்வளவுதான். நீ இதுபோல மகேந்திரனின் வீட்டில் இருக்கக்கூடாது.'

'நீ யார் அதைச் சொல்ல?'

'நான் யாரா?' ஒரு வினாடி நிறுத்திவிட்டு—

'உன் வாழ்க்கையில் உள்ள பயங்கரமான ரகசியம் ஒன்று என்னிடம் இருக்கு.'

'பயமுறுத்துகிறாயோ?'

ஊஹூம். என் பேச்சைக் கேட்டு என்னுடையவளாய் இருக்கச் சொல்கிறேன். நீ இதுபோல மகேந்திரனோடு சேர்ந்து இருக்கிறாய்னு தெரிந்தால், என் மனைவி ஒரு நிமிஷம்கூட சும்மாயிருக்க மாட்டாள். உடனே வந்து உன் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத வரை பச்சைத் தண்ணீரைக்கூட பல்லில் விட்டுக் கொள்ள மாட்டாள். அனாவசியமாய் ஏன் அவமானப்படணும்? அந்த அத்தான்— மருமானுக்கு நடுவில் நீ எதுக்குக் குறுக்கிடணும்?'

'நீ கதவைத் திறக்கப் போகிறாயா இல்லையா?'

'நான் திறக்க மாட்டேன். வேண்டுமானால் நீயே வந்து திறந்து கொள். எனக்கு ஆட்சேபணை இல்லை'

'நீ குறுக்கே நிற்காதே, தள்ளு.'

'எல்லாம் நீ சொல்கிறபடியே கேட்டுத் தீரணுமா?'

'அப்படீன்னால் நானே திறக்கிறேன்.'

அடுத்த நிமிஷம் கதவைத் திறக்கப் போன சப்தமும், தொடர்ந்து 'ஸ்ராவணி? என் ஸ்ராவணி!' என்ற சந்திரனின் குரலும்...

'சீ! விடு! விடு!' என்ற ஸ்ராவணி திமிறிய சத்தலும், இவ் விரண்டிற்கு மிடையே,



'ஸ்ராவணி என்று மகேந்திரனின் குரல் உறுமிய சப்தமும், அவன் கை இடியாய் கதவை ஓங்கி அறைந்ததும் ஏலலாமாய்ச் சேர்ந்து ஒரே கசாமுசா வென்று நிகழ்ந்து போயின.

'ஸ்ராவணி! உன்னைத்தான் — கதவைத் திற' —மகேந்திரன் கத்தினான். அவன் முகத்தில்கூட வியர்வை வழிந்தோடிற்று.

உடனே கதவு திறந்து கொண்டது. திறந்த கதவிற்கிடையே மருண்ட விழிகளுடன் மூச்சிறைக்க ஸ்ராவணி நின்று கொண்டிருந்தாள்.

தன்னைக் கண்டதுமே ஸ்ராவணியின் கண்களில் தென்பட்ட உணர்ச்சிகளைப் பார்த்துச் சட்டென்று ஓடிவந்து தன் கைகளில் சரிந்து விடுவாள் என்றெண்ணினான். ஆனால் ஸ்ராவணி அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கதவைப் பிடித்துக் கொண்டே நின்று விட்டாள்.

'ஹலோ மகேந்தர்! எப்ப வந்தாய்?' சந்திரன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டே கேட்டான். மகேந்திரன் வாசலை நோக்கி ஆள்காட்டி, 'ஐந்து நிமிஷத்தில் நீ இந்த வீட்டு எல்லையைத் தாண்டிப் போயிடணும்' என்றான் கடுமையாய்.

சந்திரன் கண்கள் வியப்பால் விரிந்தன. சிரிப்பை வரவழைத்துக் கொள்ள முயன்றபடி, 'நான் ஒண்ணும் நீ இல்லாத சமயம் பார்த்து வந்து உன் பொருளைத் திருடிட்டுப் போக வரலை. நானும் ஸ்ராவணியும் பழைய சிநேகிதர்கள். ஏன் ஸ்ராவணி?'

அவன் வார்த்தைகள் முடியவில்லை. மகேந்திரன் காலரைப் பிடித்து இழுத்து — 'கெட் அவுட் ராஸ்கல்!' என்றான்.

மகேந்திரனின் வார்த்தைகள் முடிவதற்குள்ளாகவே சந்திரனின் கை வந்து மகேந்திரன் கன்னத்தைப் பதம் பார்த்து விட்டது. ஒரு வினாடி அறையில் பயங்கரமான நிசப்தம் ஏற்பட்டது. அவ்வளவுதான்! அடுத்த நிமிஷம் மகேந்திரன் ஓரடி முன் நோக்கி வைத்து சந்திரனின் ஷர்ட்டைப் பிடித்துக் கொண்டான்.

முதலில் சந்திரனின் இரு கன்னங்களும் மாறி மாறி அதிரத் தொடங்கிற்று பிறகு மகேந்திரன் தள்ளிய தள்ளலுக்குப் போய்ச் சுவரோமாய் விழுந்தான் அவன் ஒருவாறு எழுந்திருக்க முயன்று கொண்டிருந்த போது மகேந்திரனே வந்து டையைப் பற்றித் தூக்கி நிறுத்தினான். உன்னங் கைகளை மடக்கிக் கொண்டு திருப்பவும் வயிற்றில் மாறி மாறிக் குத்து விட்டான். சந்திரன் கீழே விழுந்தான். கோபத்தால் விவேகத்தை இழுந்து விட்ட மகேந்திரன் திரும்பவும் கையை ஓங்கப் போனான். ஆனால் அதற்குள் சுதாரித்துக் கொண்டிருந்த ஸ்ராவணி வீலென்று அலறிக் கொண்டே அவன் தூக்கிய கையைக் கீழே இறக்கி, அதைப் பலமாய் முறுக்கிப் பிடித்து கொண்டு விட்டாள்.

மூச்சு விட்டுக் கொள்வதற்காகக் கொஞ்சம் நின்ற மகேந்திரனுக்குச் சட்டென்று ஆத்திரத்தால் தான் செய்த காரியம் நினைவிற்கு வந்தது.

'நீங்கள்— நீங்கள் அவனைக் கொன்று விட்டீங்க!' என்றாள் ஸ்ராவணி தேம்பிக் கொண்டே

'ஒன்றுமில்லை.' மகேந்திரன் ஸ்ராவணியின் கைகளை விடுவித்துக் கொண்டு சமையலறையை நோக்கிப் போனான். அவன் தண்ணீர் தம்ளருடன் திரும்பி வரும் போது ஸ்ராவணி முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு சந்திரனின் தோளை உலுக்கிக் கொண்டே 'சந்திரன்— சந்திரன்?'



—என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

'கொஞ்சம் தண்ணிர் குடிக்கச் செய்தால் போதும், தானே சரியாயிடுவான்.'

தானும் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு அவனுக்குத் தண்ணீரைக் கொடுக்கப் போனான்.

ஸ்ராவணி அவனைக் கூர்ந்து பார்த்து விட்டு அவன் கையிலிருந்த தம்ளரைப் பிடுங்கிக் கொண்டாள்.

'சந்திரன்! சந்திரன்'— என்று மென்மையாய் அழைத்தபடி ஒருவாறு தண்ணீரைக் குடிக்கச் செய்தாள். ஒரு வினாடி ஸ்ராவணியை மாறி மாறிப் பார்த்த மகேந்திரன், மெதுவாய் எழுந்து அங்கிருந்து போய் விட்டான்.

அவனது தொண்டையும் கூட வரண்டு விட்டது. அவனுக்குக்கூட தாகம் எடுத்தது. சமையலறையில் தண்ணீரை எடுத்துக் குடித்ததுமே அவனால் உடனே வெளியே வரமுடியவில்லை. தாங்க முடியாத அசதி— தன் மீதே தனக்குக் கோபம்— தன் பலவீனத்திற்கு வெட்கம் ஏற்பட்டன.

அவன் திரும்பி வந்தபோது, சந்திரன் எழுந்து ஸ்ராவணியின் உதவியோடு ஹாலுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

'சந்திரன்' இன்று இங்கேயே இருந்துட்டு நாளைக்குப் போகலாமே. எப்படி டிரைவ் பண்ணுவாய்!'

'ஸ்ராவணி கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'இன்னுமா இங்கே?' சந்திரன் ஸ்ராவணியின் கையை உதறி விட்டுத், தள்ளாடிக் கொண்டே காரை நோக்கிப்

போனான். அடுத்த ஐந்தாவது நிமிஷம் கார் போய் விட்டது.

'டிரைவர் இன்னும் வரலை போலிருக்கே?' என்றான் மகேந்திரன்.

சரேலென்று திரும்பிப் பார்த்த ஸ்ராவணி கோபத்தாலும் ரோஷத்தாலும் கொதித்தெழுந்தபடி— 'நீங்கள்... நீங்கள் இதுவரை ஒரு காரியத்தில்தான் கை தேர்ந்தவர் என்று நினைச்சுட்டிருந்தேன். இப்பத் தெரிஞ்சுது. தேவையானால் கொலை செய்யக் கூடத் தயங்கமாட்டீங்கன்னு.'

'ஸ்ராவணி!' தணிந்து போனவனாய்ப் பார்த்தான்.

'சந்திரன் இன்றைக்குப் பிழைத்தது என் அதிர்ஷ்டம்.'

ஸ்ராவணி விருட்டென்று உள்ளே போய்விட்டாள். மகேந்திரன் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான் வெகு நேரம் வரை.

அந்தச் சம்பவத்தின் விளைவுதான் இன்று சாம்பவி எழுதிய கடிதம்! ஒருக்கால் சொன்னபடியே சாம்பவி இங்கே வந்து ஏதாவது ரகளை பண்ணினால்? அவன் உதட்டில் கடினமான ஒரு முறுவல் தவழ்ந்தது. வரட்டும்; வந்தால் இதுவரை தெரியாத உண்மை ஒன்றைத் தெரிந்து கொண்டுத் திரும்பிப் போவாள்.

'ஐயா எங்கே? எங்கே இருக்கார்?' என்று வெளியே குரல் கேட்டதால், ஜன்னலுக்கருகில் நின்றபடி வெகுநேரமாய் யோசனையில் மூழ்கிவிட்டிருந்த மகேந்திரன் திடுக்கிட்டான்.

'அறையில் இருக்கார். ஏன்?' ஆயா பதிலைச் சொல்லி விட்டுக் கேள்வியும் கேட்டாள்.



11352
2968852

'வேலை யிருக்கு.' பரபரப்புடன் சொன்னான் கோபால். மகேந்திரன் அதற்குள் வெளியே [illegible] பார்த்து விட்டு.

'என்ன விஷயம் கோபால்?' என்று கேட்டான்.

கோபாலின் உடைகள் எல்லாம் புழுதி படிந்திருந்தன. முகத்தில் வியர்வை வழிந்துகொண்டிருந்தது. ஓடி வந்ததால் மூச்சிறைத்துக் கொண்டிருந்தது. அவன் மகேந்திரனைப் பார்த்ததுமே — 'நீங்கள்... நீங்கள்... உடனே வரணும். கிழக்குத் தெருவில் கருமான்களும் கூலிகளும் அடிதடிச் சண்டை போட்டுட்டிருக்காங்க.'

'எதுக்கு? வா, வா, சீக்கிரமாய்ப் போவோம்.'

மகேந்திரன் செருப்புக்கூட மாட்டிக்கொள்ளாமல் விடுவிடென்று வெளியே ஓடினான்.

❋ ❋ ❋

'அம்மா! அம்மா! கீர்த்தி மாமாக் கிட்டே இருந்து லெட்டர் வந்திருக்கு.' மது கதவிற்கருகில் வந்து எட்டிப் பார்த்துவிட்டுக் கத்தினான் பெரிதாய்.

'எங்கே, இப்படிக் கொண்டா!' கட்டிலில் படுத்துக் கொண்டு புத்தகம் படித்தவாறிருந்த ஸ்ராவணி புத்தகத்தைச் சட்டென்று வீசியெறிந்துவிட்டு, எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

'இதோ!'

'இங்கே கொண்டு வா!' பொறுமையின்றி அழைத்தாள்.

'ஊஹூம்' மது மறுத்துத் தலையசைத்துவிட்டுக் கடிதத்தைப் பின்னுக்கு மறைத்து வைத்துக் கொண்டான்.

ஸ்ராவணி எழுந்து வந்தாள். மது தொலைவிற்கு ஓடினான்.

'என் கண்ணில்லையா?' கெஞ்சினாள்.

'ஊஹூம். என்னைத் தொட்டுட்டால் தரேன்.' ஸ்ராவணியை அழவைப்பதும் ஓட வைப்பதும் மதுவுக்கு மிகவும் பொழுதுபோக்கு; அது ஒரு விளையாட்டு. ஸ்ராவணி வேறு வழியின்றி மதுவை நெருங்கினாள். மது கொஞ்ச நேரம் கைக்கு அகப்படாமல் அங்குமிங்கும் ஓடினான். கடைசியில் ஒருவாறு அவனைப் பிடித்துக்கொண்டு, கடிதத்தைப் பற்றிக் கொண்டாள். உறை கிழிந்தே இருந்தது.

அப்படியானால் மகேந்திரன் படித்துவிட்டு அனுப்பியிருக்கிறான் போலும்! முதலில் தன்னிடம் தராமல் அவன் படித்ததற்குக் கோபம் வந்தது. கவரிலிருந்து பரபரப்புடன் கடிதத்தை உருவிப் படித்தவள் அப்படியே நின்று விட்டாள். கையெழுத்து கீர்த்தியுடையதில்லை. வேறு யாருடையதோ, உருண்டையாய்ப் பெரிதாய் இருந்தது. ஸ்ராவணி அதைப் படிக்கத் தொடங்கியவள நின்று விட்டாள். அது சாம்பவி மகேந்திரனுக்கு எழுதியிருந்தது.

தான் படிக்கக் கூடாது என்று மனம் எச்சரிப்பதற்குள்ளாகவே கண்கள் இரண்டும் எழுத்துக்களின் வரிசை மேல் ஓடத் தொடங்கி விட்டன.

கடிதத்தை முழுவதுமாய்ப் படித்து முடிக்காமலிருக்க முடியவில்லை அவளால். படித்த பிறகு அவள் முகத்தில் ரத்தமே வற்றிப் போய் விட்டாற்போல் ஆகிவிட்டது.

ஒவ்வொரு வார்த்தையும் ஒரு சூலம். இந்த அவமானத்தால் அவள் என்ன செய்ய வேண்டும்! தெரிந்தும் இப்படிப்பட்ட ஹீனமான நிலையில் இந்த வீட்டில் அவளால் எப்படி இருக்க முடியும்? அன்று இங்கே மகேந்



திரனால் அவமானப்பட்ட சந்திரன் ஒன்றுக்குப் பத்தாய் பொய்யைப் புனைந்து சொல்லியிருப்பான் தன் மனைவியிடம்.

ஒருக்கால் சொன்னதுபோலவே சாம்பவி வந்து விட்டால்? வரட்டும்! என்னதான் சொல்கிறாள் என்று சுயமாய்ப் பார்த்து விடலாம். ஸ்ராவணிக்குக் கசப்பை விழுங்கினாற் போலிருந்தது. மது அதற்குள் அங்கிருந்து போய் விட்டான்.

வெகு நேரங்கழித்து லாந்தரை ஏற்றிக் கொண்டு வந்து ஹாலில் இருந்த இரும்புக்கம்பியில் மாட்ட வந்த ஆயா ஸ்ராவணியைப் பார்த்து அதிர்ந்து போய், 'ஸ்ராவணி' என்று கூப்பிட்டாள்.

ஸ்ராவணியின் கண்கள் இயந்திர கதியில் ஆயாவின் பக்கமாய்த் திரும்பின.

'இதென்ன? ஏன் இப்படி இருக்கிறாய்? எங்கேயிருந்து கடிதம்?' கிட்டே வந்து கேட்டாள்.

'நமக்கில்லை இது.'

ஆயாவின் குரலைக் கேட்டு இந்த உலகிற்குத் திரும்பி வந்தாள் ஸ்ராவணி.

'அதில் ஏதாவது விசேஷம் இருக்கா?' சந்தேகத்தோடு கேட்டாள் ஆயா?

'இல்லை. மது எங்கே? என்ன பண்றான்?'

'இப்பத்தான் சாப்பிட்டான்.' ஆயா உள்ளே போய் விட்டாள்.

ஆயா சமையலறைப் பக்கமாய் வந்தாள். மது சாப்பிட்டு முடித்து விட்டு அவ்விடத்திலேயே ஆயா போட்ட

சாதத்தைத் தின்று கொண்டிருந்த பூனைக்குட்டியின் வாலைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அது மியோவ் என்று கத்திக் கொண்டிருந்தது.

'மது! இந்த லெட்டரை எங்கேயிருந்து எடுத்து வந்தாயோ அங்கேயே கொண்டு போய் வை.'

'நான் வைக்கமாட்டேன். நீயே வை.' பிடிவாதமாய்ப் பதிலளித்தான்.

'நல்ல பையனில்லே!' ஸ்ராவணியின் குரலையும் அதைச் சொன்ன விதத்தையும் கேட்டு விட்டு, மது நிமிர்ந்து பார்த்தான். பிறகு என்ன எண்ணிக் கொண்டானோ தெரியாது. பூனையின் வாலை விட்டு விட்டுக் கடிதத்தை வாங்கிக் கொண்டான். எந்தச் சமயத்தில் ஸ்ராவணியை அழவைக்க வேண்டும் என்றும், எந்தச் சமயத்தில் சொன்னத்தைக் கேட்க வேண்டும் என்றும் அவனுக்கு நன்றாய்த் தெரியும்.'

'எடுத்த இடத்திலேயே வைக்கணும், மறக்காதே' ஸ்ராவணி எச்சரித்தாள். சரி என்று தலையாட்டிவிட்டு, தந்தையின் அறைக்கு ஓடினான் மது.

❋ ❋ ❋

உடம்பெல்லாம் காயத்துடனும், கலைந்த கேசங்களுடனும், உடையில் ரத்தக்கறைகளுடனும், நெற்றியில் காயத்துடனும் மகேந்திரன் சோர்வுடன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

கலக்கத்துடன் வந்து விசாரித்த ஆயாவுக்கு, கலாட்டா நடந்ததாயும், தனக்குப்பட்ட அடி ஒன்றும் பெரியதில்லை என்றும் தைரியம் சொல்லி விட்டு, கொஞ்சம் வெந்நீரும், சுத்தமான தோய்த்த துவாலையும் கொண்டு வந்து தரச் சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டான்.



அவன் அறைக்குள் நுழைந்தபோது மது அறைக்கு நடுவே நின்று வாயில் கையை வைத்துக் கொண்டு கேள்விக் குறியுடன் அறை முழுவதையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

'என்ன மது? என்ன வேணும் உனக்கு?'

மகனைச் சரியாய்க் கவனிக்காமலேயே கட்டிலை நோக்கிப் போனான். தந்தையின் வார்த்தை காதில் விழுந்ததுமே சரேலென்று திரும்பிய மது,

'வந்து... வந்து, இந்தக் கடிதத்தை எடுத்த இடத்திலேயே வைக்கச் சொன்னாள் ஸ்ராவணி. எனக்கென்னவோ எங்கேயிருந்து எடுத்தேன்னு ஞாபகமே இல்லை.'

கட்டிலில் உட்காரப்போன மகேந்திரன் சட்டென்று திரும்பிப் பார்த்து,— 'அதென்ன கடிதம்?' என்றான்.

'இதுவா? கீர்த்தி மாமா எழுதியது.' அப்பாவியாய் தந்தையிடம் போய்க் கடிதத்தைக் காட்டிவிட்டுச் சொன்னான்.

'இது எங்கேயிருந்தது? யார் கொடுத்தாங்க உன்னிடம்?' கோபமாய்க் கேட்டான்.

என்றுமில்லாமல் தந்தை கடித்து கொண்டதைப் பார்த்துப் பயந்துபோன மது, 'நான் தான் எடுத்தேன் இங்கேயிருந்து. கீர்த்தி மாமா எழுதியிருந்தார்னு...'

'ஸ்ராவணியிடம் தந்தாயா இதை?'

மது ஆம் என்று தலையாட்டினான்.

மகேந்திரன் தளர்ந்து போய்க் கட்டிலில் சரிந்தான். ஸ்ராவணி அந்தக் கடிதத்தைப் படித்து விட்டாளா?

அவனுக்குக் கடிதத்தை அங்கேயே போட்டு விட்டுப் போன தன் முட்டாள் தனத்திற்குத் தன் மீது கோபம் வந்தது.

'வந்து— வந்து...' மது ஏதோ சொல்ல வந்தான்.

'என்னைத் தொந்தரவு படுத்ததே, போ தூர.'

மகேந்திரன் திரும்பவும் எரிந்து விழுந்ததால் மது தொங்கிய முகத்துடன் அங்கிருந்து போய்விட்டான்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு ஆயா வெந்நீரையும் துவாலையையும் கொண்டு வந்து தந்தாள்.

'என்ன ரகளையாம்? என்ன நடந்தது?' கேட்டாள் விவரம் தெரிந்துகொள்ள விரும்பி.

'ஒன்றுமில்லை. ஏதோ பசங்கள் விளையாட்டிற்கு நடுவில் தொடங்கிய ரகளை, பெண்கள் ஒருத்தரை யொருத்தர் திட்டிக்கொண்டு, குடும்பங்களைப்பற்றி ஏசிக் கொள்ளும் அளவிற்குச் சண்டையாய் முற்றிப் போயிடுத்தாம். அதில் ஆண்களுக்கு ரோஷம் வந்து நீயா நானா பார்த்துடலாம் என்று களத்தில் இறங்கிட் டாங்களாம்.'

சுருக்கமாய்ச் சொன்னான் மகேந்திரன்.

அவன் மனமெல்லாம் ஸ்ராவணியைச் சுற்றியே இருந்து வந்தது.

'ஸ்ராவணி எங்கே? என்ன பண்றாள்'

சாப்பிட உட்காரப் போனபொழுது தாங்கமுடியாத வனாய்க் கேட்டு விட்டான். அவன் வீட்டிற்குத் திரும்பி வந்ததிலிருந்தே சந்தடியையே காணோம்.



'தலை வலியாய் இருக்குன்னு படுத்துக் கொண்டிருக் கிறாள்' என்றாள் ஆயா. ஸ்ராவணியின் தலைவலிக்குக் காரணம் ஆயாவுக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். அவ னால் ஊகிக்காமலிருந்துவிட முடியுமா?'

இரவு படுக்கப் போவதற்கு முன்னால் ஆயா கொண்டு வந்து தந்த சூடான பாலைக் குடித்துவிட்டுத் தம்ளரைத் திருப்பித் தந்தவன், 'ஸ்ராவணி சாப்பிட்டாளா?' என்று மென்று விழுங்கிக்கொண்டே கேட்டான்.

'இல்லை. தலைவலி குறையலையாம்.'

என்றுமில்லாதவாறு மகேந்திரன் ஸ்ராவணியைப் பற்றிக்கேட்டதைப் பார்த்து ஆயாவுக்கு உள்ளூர வியப்பா யிருந்தது.

'கூப்பிடட்டுமா? ஏதாவது வேலை இருக்கா?' போவ தற்குத் திரும்பியவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

'வேண்டாம், வேண்டாம்;வெறுமேதான் கேட்டேன்.'

அவன் விழித்துக்கொண்டான். வேறென்னத்தைச் சொல்லுவான் அவன்? மேலுக்கு சாதாரணமாய் வேண் டாம் என்று சொல்லிவிட்டாலும் அவனுக்கு அந்த நிமி ஷமே போய் ஸ்ராவணியைக் கட்டிலிலிருந்து எழுப்பித் தோளைக் குலுக்கி, நடந்த எல்லா விஷயத்தையும் சொல்லி, அவள் முற்றிலுமாய்ப் புரிந்துகொள்ளும் வரை அவளை விடாமல் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அவனுக்கே தெரியாத ஏதோ சக்தி ஒன்று அவனைப் பலவீனப்படுத்திச் சலனமில்லாமல் இருந்துவிடச் செய்துவிட்டது.

'இதோ! என்ன வேணும்னு கேட்டாலும் சொல்ல மாட்டேங்கறான். தூங்காமல் அழுதுட்டே யிருக்கான்.'

'ஆயா மதுவைத் தூக்கிக் கொண்டு வந்து மகேந்திர னிடம் தந்தாள்.

'ஏன்? ஏன் அழுகிறான்? ஏன் மது?'

மகேந்திரன் மகனை வாரி அணைத்துக்கொண்டான். மது பதிலுக்குத் தந்தையின் மார்போடு ஒட்டிக்கொண்டு இன்னும் பலமாய் அழத் தொடங்கினான்.

'ஏன்? யாராவது ஏதாவது சொன்னாங்களா? மகேந்திரன் கலக்கத்துடன் ஆயாவைப் பார்த்தான்.

'இதுவரை நன்றாய்த்தான் இருந்தான்?' பயந்தவாறு சொன்னாள் ஆயா.

'என்னு என்னிடம் சொல்லு, என் கண்ணில்லையா?' மகனை மார்போடு அழுத்திக் கொண்ட மகேந்திரனுக்குச் சற்று முன்னால் கடிதத்தை எடுத்ததற்காகத் தான் கடிந்து கொண்டதும் அவன் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு போனதும் நினைவிற்கு வந்தது.

பிஞ்சு மனம் ரோஷமடைந்திருக்கும்! எவ்வளவு மென்மையான உள்ளம்! மதுவுக்கு வெளித் தோற்றத்தில் தன் சாயல் நிறைய வந்திருந்தாலும், சுபாவங்களில் மட்டும் ஸ்ராவணியையே கொண்டிருக்கிறான்.

மகேந்திரனுக்கு அந்தச் சமயத்தில் பக்கத்து அறையில் சாப்பாடு வேண்டாம் என்று கோபித்துப் படுத்துக் கொண்டிருக்கும் ஸ்ராவணியை மார்போடணைத்துக் கொண்டு தேற்ற வேண்டும் போல இருந்தது.

## 40

நாட்கள் ஆக ஆக மகேந்திரனுக்குத் தான் ஸ்ராவணியை அடைய முடியும் என்ற நம்பிக்கையே போய்க் கொண்டிருந்தது. மதுவின் மூலமாய் ஸ்ராவணியை அடைய எண்ணியிருந்த மகேந்திரன் அந்த முயற்சியும் பலிக்காததோடு, மதுவைக்கூட இழந்து விடுவோமோ என்ற அச்சத்திற்கு ஆளாக நேர்ந்தது.



அவன் எண்ணிய உண்மையே ஸ்ராவணியும் மதுவும் நெருக்கமானவர்களாய் ஆகி விட்டார்கள். இப்பொழுது சேர்ந்தாற்போல நாலைந்து நாட்கள் தந்தையைக் காணா விட்டால் கூட மது ஏங்கிப் போவதில்லை. அவன் ஸ்ராவணியிடம் நன்றாய்ப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றெண்ணி எந்தச் சாக்குடன் தொலைவில் இருந்து வந்தானோ, அதுவே மதுவை அவனிடமிருந்து பிரித்து கொண்டிருந்தது. அவன் எண்ணியது வேறு நடக்காததோடு கூட மனமும் அமைதியின்றி வெலவெலத்துப் போய்க் கொண்டிருந்தது.

ஸ்ராவணி தன்னைச் சுற்றிலும் போட்டுக்கொண்டிருக்கும் கோட்டைத் தாண்டி ஓரடி கூட அவனால் எடுத்து வைக்கமுடியவில்லை. மதுவையும் வேறு அக் கோட்டிற்குள் இழுத்துக் கொண்டு விட்டாள். ஸ்ராவணியின் மனத்தில் அவன்பால் இருந்த வெறுப்பு சற்றும் குறையவே இல்லை.

காலம் ஓடிக் கொண்டேயிருந்தது. ஆண்டுகள் கழிந்து கொண்டேயிருந்தன. இந்தக் காலச்சக்கரத்தைப் பார்த்தபடி செய்வதறியாது நின்று கொண்டிருப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை அவனால். மனத்தளவில் வயோதிகம் வந்து சேர்ந்து விட்டாற் போலவே உணரத் தொடங்கினான்.

ஸ்ராவணி அடியெடுத்து வைத்த விசேஷமோ, அல்லது மகன் வந்த வேளையே தெரியாது, மகேந்திரனின் வியாபாரம் நன்றாய்க் கொழிக்கத் தொடங்கியது; அவன் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று.

ஆனால் என்ன லாபம்? மனநிம்மதியைத் தரமுடியாத அச் செல்வத்தை வைத்துக் கொண்டு அவனால் என்ன செய்ய முடியும்? அதனால்தான் மதுவின் பெயரில் பாங்கில் போட்டு வைக்கத் தொடங்கினான்.

தீபாவளிப் பண்டிகை நெருங்கி வந்தது. வீட்டிலிருந்த எல்லோருக்கும் துணிமணிகளை வாங்கி வந்தான் அவன். நான்கு நாட்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அவன் இதயத்தைத் தூள் தூளாக்கிவிட்டது.

அன்று அவன் சாப்பிட்டு முடித்த பிறகு, தன் அறையில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். மது அவ்விடத்திலேயே உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

ஸ்ராவணி அந்த அறைக்கு வந்தவள், அங்கே மகேந்திரன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போகத் தொடங்கினாள். அதற்குள் மது ஓடிப் போய் 'அம்மா' என்று அவள் புடவைத் தலைப்பைப் பிடித்தான். ஸ்ராவணி அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு போக முயன்றாள். மது விடவில்லை. மேலும் அழுத்தமாய்ப் பிடித்து இழுத்தான். ஏற்கனவே பழைய புடவை, கொஞ்சம் நைந்திருந்தது போலும்! மது இழுத்ததுமே டர்ரென்று கிழிந்துத் தொங்கி விட்டது. ஒரு வினாடி தூக்கி வாரிப் போட்டபடி நின்று விட்ட ஸ்ராவணி உடனே கைகளால் மார்பைப் பொத்திக் கொண்டாள்.

தன் கையில் கிழிந்துத் தொங்கிய புடவைத் தலைப்பை பார்த்து மது கடகடவென்று சிரித்துக் கொண்டிருந்தான். மகேந்திரன் விக்கித்துப் போனவனாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஸ்ராவணி உடனே குனிந்து அவன் முதுகில் பலமாய் ஒரு அறை கொடுத்து விட்டுத் திரும்பி மின்னலாய்த் தன் அறைக்குள் ஓடிவிட்டாள். மகேந்திரன் எழுந்து வந்து அழுது கொணடிருந்த மதுவை இழுத்து அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினான்.



அன்றிரவு சாப்பிட்டு முடித்து விட்டு அப்பால் வந்து கொண்டிருந்தபோது, சமையலறை கதவிற்கருகில் வந்து நின்ற ஸ்ராவணி தலைகுனிந்தபடியே கால் கட்டை விரலால் தரையில் கோலமிட்டுக் கொண்டே,

'மன்னிச்சுக்குங்க 'என்றாள்.

'எதுக்கு?' வியந்துபோய் கேட்டான்.

'புடவை கிழிந்து விட்டதேங்கிற கோபத்தில் மதுவை நன்றாய் அடித்து விட்டேன்; அது என் தப்புதான்.'

'உனக்கு அந்த உரிமை இருக்கு.'

மேற்கொண்டு பேச இடந்தராமல் அங்கிருந்து வந்து விட்டான். மறுநாள் அதே புடவையைப் பார்த்த அவன் மனம் சுக்கு நூறாகிவிட்டது.

அதனால்தான் இன்றைக்குத்துணிந்து ஸ்ராவணிக்குக் கூட புடவைகளைவாங்கி வந்தான் அதிக விலைகொடுத்து வாங்கியிருந்தால் முகத்தில் விட்டெறிந்து விடுவாளோ என்ற பயம். அதனால்தான் சாதாரணப் புடவைகளையே வாங்கி வந்தான்.

'என்ன இது?' என்றாள் ஸ்ராவணி புடவைகள் இருந்த பாக்கெட்டை அவனிடம் தந்தபோது. அதில் இருந்தவை புடவைகள் என்று இருவருக்குமே தெரியும்.

'உனக்குத்தான்!' சுவர்ப் பக்கமாய்த் திரும்பிக் கொண்டே பதிலளித்தான் அவன். ஸ்ராவணியின் முகத்தில் தென்படப்போகும் உணர்ச்சியை அவன் அறிவான் அதைப் பார்த்துத் தாங்கக்கூடிய சக்தி நாளுக்கு நாள் நசிந்துப் போய்க் கொண்டிருந்தது. இப்பொழுதெல்லாம் மிகவும் தளர்ந்து போய்க் கொண்டிருந்தான் அவன்.

'எனக்கு எதற்கு?' சூள் கொட்டினாள் ஸ்ராவணி.

'தீபாவளிக்கு வீட்டில் எல்லோருக்கும் துணிகள் வாங்கியபோது உனக்கும் வாங்கினேன். இதில் ஸ்பெஷலாய் ஒன்றும் பண்ணலை.' குறைந்தது இப்படிச் சொன்னாலாவது வாங்கிக் கொள்வாளோ என்ற ஆசை.

'ஓஹோ?'

ஸ்ராவணி அலட்சியமாய் சொன்ன 'ஓஹோ' என்ற வார்த்தை அவன் இதயத்தைப் பிளந்தது. அதைத் தாங்கக் கூடிய சக்தி அவனிடம் நசிந்துப் போய்க் கொண்டிருந்ததை ஸ்ராவணி எப்படி அறிவாள்?

இன்னும் எவ்வளவு நாட்கள் தான் அவனுக்கு இந்த நரகம்? அணுவணுவாய் இந்தச் சித்திரவதை இன்னும் எவ்வளவு நாள்? மகேந்திரன் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டே நின்றான்.

'நீங்கள் ஸ்பெஷலாய் அக்கறை காட்டினீங்களா இல்லையான்னு கேட்பதற்கு நான் வரவில்லை. இது எனக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டுப் போகத் தான் வந்தேன்!'

பாக்கெட்டை கட்டிலில் விட்டெறிந்து விட்டுப் போய் விட்டாள். சட்டென்று இந்தப் பக்கமாய் திரும்பிய மகேந்திரன் கையை நீட்டி அவளைத் தடுத்தான். ஸ்ராவணி திடுக்கிட்டதை அவன் கவனிக்காமல் போக வில்லை.

'ஸ்ராவணி! ஒன்று மட்டும் கேட்கிறேன், பதில் சொல்!' என்றான்.

ஸ்ராவணி பதில் பேசவில்லை. திரும்பியும் பார்க்க வில்லை. ஆடாமல் அப்படியே நின்றாள்.



'என் மேல் வெறுப்பு இருந்தால் ஏன் பழிவாங்கிக்க மாட்டேங்கிறாய்? குறைந்தது வாயைத் திறந்தாவது என் முகத்திற்கு முன்னால் ஏன் சொல்லமாட்டேங்கிறாய்? அணுவணுவாய் உன் அலட்சியத்தால் என்னை ஏன் இப்படிக் கொல்லுகிறாய்?'

ஸ்ராவணி பதில் பேசவில்லை.

'ஸ்ராவணி, சொல்லு.' கையை இன்னும் அழுத்த மாய்ப் பிடித்துக் கொண்டான்.

அதற்கும் ஸ்ராவணியின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

'நான் உனக்கு அநியாயம் பண்ணிவிட்டது உண்மை தான். நான் மறுக்கவில்லை. அதைப் புரிந்துக் கொண்டு உன் வாழ்க்கையைத் திருத்தி அமைக்கணும்னு எவ்வளவோ முயற்சி செய்தே வரேன். நீ ஏன் அதைப் புரிஞ் சுக்க மாட்டேங்கிறாய்?'

'— — — — —'

'ஏன் பேசமாட்டேங்கிறாய்? எனக்கு அந்த சான்சை ஏன் கொடுக்க மாட்டேங்கிறாய்?'

'எனக்குப் பிடிக்கலில்லை. யார் என்ன பண்ணினா லும் நான் இழந்துவிட்டதைத் திருப்பிப் பெற முடியாது. அதனால் எனக்கு அது தேவையில்லை.'

இருவருக்குமிடையே நிசப்தம் ஏற்பட்டது. அவன் கையை விட்டுவிடுவான் என்றெண்ணினாள். ஆனால் அவன் தளர்த்தினாற் போலவே தளர்த்திவிட்டுச் சட் டென்று இன்னும் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

இரண்டு கைகளையும் தோளின் மேல் வைத்து அழுத் தமாய்த் தன் பக்கமாய்த் திருப்பிக் கொண்டான்.

எதிர்பாராமல் செய்த இக் காரியத்தால் ஸ்ராவணி அவன் மார்பிற்கு வெகு அருகாமையில் நேருக்கு நேராய் வந்தாள்.

ஒரு விநாடி இருவரும் ஒருவர் கண்ணை இன்னொருவர் பார்த்தபடி நின்றுவிட்டார்கள்.

'ஸ்ராவணி! இப்பவே சொல்லிட்டேன். எவ்வளவு நாள் பொறுத்திருக்கணுமோ அதுக்கும் மேலேயே பொறுத்துப் பார்த்துவிட்டேன். இனி என்னால் ஆகாது. நீ என்னை நல்ல வழியில் உன் வாழ்க்கையில் நுழைய அனுமதிக்காமல் போனால் பலவந்தமாய் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கும். என் ஆத்திரத்தைத் தூண்டி விடாதே! அது உனக்கு நல்லதில்லை.'

ஸ்ராவணியின் கண்களில் தீப்பொறிப் பறந்தன.

'இப்ப மட்டும் நீங்க அப்படிப் பண்ணாமலா போயிட்டீங்க? படிப்பு என்ற சாக்கில் கீர்த்தியைப் பிரித்து விட்டீர்கள். நல்ல குணத்தை இரையாய்க் காட்டி ஆயாவைக் கையில் போட்டுக் கொண்டு விட்டீர்கள். அறியாச் சிறுவனை 'அம்மா' என்று கூப்பிடச் செய்து விட்டீர்கள். உங்கள் உத்தேசந்தான் என்ன? உங்கள் மனதிலுள்ள நீச்சமான எண்ணம் எனக்கா தெரியாது? இன்னும் நீங்க எனக்குப் பண்ணக் கூடிய தீங்கு வேறென்ன இருக்கு? சிங்கத்தோடு ஆட்டுக்குட்டியால் எதிர்த்து நிற்க முடியாதுன்னு தெரிஞ்சுக்க முடியாத முட்டாள் இல்லை நான். தாழ்ந்துப் போய் விட்ட என் நிலைமையை ஆதாரமாய் எடுத்துக் கொண்டு, ஆபத்தில் கைக்கொடுத்தேன் என்ற சாக்கில், என்னிடமிருந்து நீங்கள் எதையும் விரும்பலாம்! உங்கள் மிருக பலத்தால் என் உடம்பைத் திரும்பவும் கைக்குள் போட்டுக் கொண்டாலும் போட்டுப்பீர்கள்! ஆனால், ஆனால்... என் உடலில் உயிர் உள்ளவரை என்னை — என் மனதை உங்களால் வென்று விட முடியாது.'



'ஸ்ராவணி!' மகேந்திரன் அடியுண்டவனாய் கையை விட்டுவிட்டான்.

ஸ்ராவணி உடனே விர்ரென்று திரும்பிப் போய் விட்டாள். அவ்வாறு போனதில் கலக்கமோ பயமோ சற்றும் இல்லை. கர்வமாய், மகாராணியைப் போல மிடுக்காய் நிமிர்ந்து, மெதுவாய்ப் போய்விட்டாள்.

மகேந்திரன் சோர்வுடன் கட்டிலில் சரிந்தான்.

அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று. அந்த நிமிஷத்தில் ஸ்ராவணி பார்க்கவில்லையே தவிர, பார்த்திருந்தால் அவள் மனமும் கூட உருகிப் போகக்கூடிய அளவிற்குத் தீனமாய் இருந்தது அவன் முகம்.

கடவுளே, என்ன செய்வது? இருவருக்கு மிடையே உள்ள இந்தப் பிளவு ஒன்று சேர வழியே யில்லையா?

பயங்கரமான பிரம்ம ராட்சதன் கொஞ்சங் கொஞ்சமாய் வாயைப் பெரிதாய்த் திறந்து கொண்டேயிருந்தாற் போல நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே போகிறதே! இதைச் சரியாக்க வழியே யில்லையா? ஒருக்கால் வாழ்க்கையையே பணயமாய் வைத்து அரும்பாடுபட்டு இதைச் சரியாக்க முயன்றாலும் கூட ஸ்ராவணி அன்பாய் மட்டும் தன்னை நெருங்க மாட்டாள். அது இன்றே மிகத் தெளிவாய்ப் புரிந்துப் போய்விட்டது.

பெண்களை மென்மையான குணம் படைத்தவர்கள் என்றும் இளகிய மனம் படைத்தவர்கள் என்றும் சொல்கிறார்களே! ஸ்ராவணியின் மனதில் இவை இல்லையா? விஷத்தைப்போலக் கடினமாய் உள்ள இந்த ஸ்ராவணிக்கு உயிரூட்டுவது எவ்வாறு? எவ்வாறு? இது அவனால் முடியாது என்பது உறுதிதானா?

ஸ்ராவணியை அடைய வேண்டும் என்ற தன் முயற்சியில் தோல்விதான் எழுதி வைத்திருக்கிறதா? கடவுளே! என்ன செய்வேன் நான்?

மகேந்திரன் மனதில் தோன்றிய இந்த நெருப்புப் பொறி மெதுவாய் படர்ந்து விசுவரூபம் எடுத்தது. கடவுள் தான் செய்த இந்த அபராதத்திற்கு தண்டிக்கவில்லையென றும், போதாததற்கு அபரிமிதமான செல்வத்தையும் கொடுத்து ஆசி வழங்கியிருக்கிறார் என்றும் தவறாய்ப் புரிந்து கொண்டு விட்டாரே! எவ்வளவு பிரமை! வட்டியோடு சேர்த்துத் தீர்ப்பளித்து விட்டார்!

இவ்வளவு செல்வம் இருந்தது. வாழ்க்கையை அனுபவிக்க இவ்வளவு அவகாசங்கள் இருந்தன. ஆனால் அவன், ஏதாவது சுகத்தை உணர்ந்திருக்கிறானா? அவன் மனம் ஆயிரம் சுக்கல்களாய் உடைந்துவிட்டது.

# 41

மேற்கண்ட சம்பவம் நடந்த பிறகு மகேந்திரன் ஸ்ராவணியை விட்டுத் தொலைவில் இருக்கத் தொடங்கினான்.

அவன் மேலுக்கு எவ்வளவு சாதாரணமாய் இருப்பது போல நடித்து வந்தாலும் உள்ளூர எரிமலை வெடித்துக் கொண்டிருந்ததால் அவன் உடல்நலம் கெடத் தொடங்கின்று. நிறம் மாறத் தொடங்கியது. அவன் கண்களுக்குக் கீழே கறுப்பு வளையங்கள் தோன்றத் தொடங்கின உடல் இளைத்தது. ஆயா இம் மாறுதலைக் கவனிக்காமலில்லை. ஆனால் காரணத்தை அவளால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை.



அவன் வாயிலிருந்து உண்மை விஷயத்தைவரவழைக்க எத்தனையோ விதமாய் முயன்றும் லாபமில்லாமல் போய் விட்டது.

ஸ்ராவணியும்கூட எப்பொழுதும் போலவேதான் இருந்தாள். அன்றைக்கு அச்சம்பவத்திற்குப் பிறகு அவனிடம் எந்த மாறுதலும் ஏற்படாததைப் பார்த்து தனக்குள் ஆச்சரியமடைந்தாள்.

தீபாவளிக்காக கீர்த்தி வீட்டிற்கு வந்தான். அவன் இருந்த அந்த நான்கு நாட்களும் பொழுது நன்றாய்ப் போயிற்று. மதுவின் மேல் அவனுக்கு இப்பொழுதும் பாசம் ஏற்பட்டிருந்தது. மது மகேந்திரனைவிட ஸ்ராவணியிடமே அதிக ஒட்டுறவுடன் இருந்தான்.

அது அவன் கவனத்தைக் கவராமல் போகவில்லை. அதனால் மனம் பொறாமைப்படவும் இல்லை. இன்னும் சந்தோஷமாயும் இருந்தது. இருந்த அந்த நான்கு நாட்களும் மது கீர்த்தியையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

ஊருக்குத் திரும்பிப் போவதற்கு முன்னால் கீர்த்தி அக்காவிடம் வந்து உட்கார்ந்துக் கொண்டான். 'அக்கா! அவர் ஏன் அவ்வளவு இளைத்துப் போயிட்டார்?' என்றான்.

'என்னவோ, எனக்கென்ன தெரியும்?' அலட்சியமாய்ச் சொன்னாள் ஸ்ராவணி.

ஒரு வாரத்திற்கு முன்னால் ஜமுனாவின் திருமண அழைப்பிதழ் வந்தது. மகேந்திரன் திருமணத்திற்குப் போகவில்லை. ஒருக்கால் அந்தக் கோபம் அல்லது ஏமாற்றமாய் இருக்கலாம்,

'எனக்கென்ன தெரியும்?'

'உனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? நீயும் ஆயாவும் வீட்டில் இருந்து கொண்டு என்ன பண்றீங்க?' கீர்த்தி கோபமாய்க் கேட்டான். ஸ்ராவணி பதில் பேசவில்லை.

'ஏனோ தெரியலை, அவர் முன்போல் இல்லவே இல்லை. உடம்பு சரியாய் இல்லையா என்று கேட்டதற்கு 'இல்லை, நன்றாய்தான் இருக்கேன்' என்றார். நன்றாய் இருந்தால் ஏன் அவ்வளவு இளைத்துப் போகணும்? இவ்வளவு நிசப்தமாகவும் சிந்தனையில் மூழ்கியபடியும் நான் அவரைப் பார்த்ததேயில்லை. உள்ளுர ஏதே குமுறிக் கொண்டிருக்கிறார். நம்மிடம் வெளியே சொல்லிக் கொள்வதில்லையே தவிர...; என்றான் கீர்த்தி நிகிலோடு.

ஸ்ராவணி கேட்டு விட்டுப் பேசாமலிருந்து விட்டாள். கீர்த்தி திரும்பவும் தொடர்ந்தான்.

'நீங்க அவரோடு நன்றாய்ப் பேசக்கூட மாட்டீங்க. நீயோ கேட்கவே வேண்டாம்' என்றான் பழித்தபடி.

'என்னை என்ன பண்ணச் சொல்றேடா?'

'என்ன பண்றதா? சிரித்துப் பேசி நட்பாய் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அவர் அப்படி ஆனதற்குப் பாதிக் காரணம் நீயாய்தான் இருக்கும்.'

'வாயை மூடு.'

'இவ்வளவு நாளாய் மூடிட்டுதானே இருந்தேன்! அவர் நமக்கு எவ்வளவு பண்ணியிருக்கார்? உனக்குக் கொஞ்சங் கூட நன்றியேயில்லை.'

'கீர்த்தி!'

'கீர்த்தி பெரிதாய்க் கத்திவிட்டால் பயந்துட மாட்டேன் நான். அவர் ஏன் அப்படி 'இருக்கார்னு கேட்டால்



தெரியாதுங்கிறாய். இதைச் சொல்ல உனக்கு வெட்கமா யில்லை? அவர் வீட்டை நம் சொந்த வீட்டைப் போலப் பயன்படுத்திட்டிருக்கோம். அவர் பணத்தை சொந்தப் பணத்தைப் போல செலவழிச்சுட்டிருக்கோம். அவர் மனதில் என்ன கவலை இருக்குன்னு தெரிஞ்சுக்கொள்வதற்கு மட்டும் நாம்ப வேற்று மனுஷங்களாயிட்டோம்! அவர் உடம்பு சரியாயிருக்கா இல்லையான்னு தெரிஞ்சுக்கக் கூட உன்னால் முடியாமல் போயிடுத்து.'

'கீர்த்தி! தயவுசெய்து நீ இங்கேயிருந்து போகப்போகிறாயா இல்லையா?'

வாடிய முகத்துடன் வேண்டிக் கொண்டாள் அவள்.

'ஆனால்— உனக்கு இது நல்லதில்லை அக்கா. போன ஜென்மத்தில் யாரையாவது இதுபோல வருத்தப்படுத்தியிருப்பாய். அதனால்தான் இந்த ஜென்மத்தில்—'

கீர்த்தி சட்டென்று நிறுத்தி விட்டான்.

அதற்குள் ஸ்ராவணி கண்கள் அகலவிரிய அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கீர்த்தி உடனே தணிந்தவனாய்,

'அக்கா, தப்பாய் சொல்லிட்டேன். மன்னித்துவிடு, மன்னிக்க மாட்டாயா?'

என்று கிட்டே வரப்போனான்.

'நீ மொதல்ல இங்கிருந்து போய்விடு.'

'அக்கா, நான் தான் ஏதோ தப்பாய்ச் சொல்லிட்டேன்னு மன்னிக்கச்சொல்கிறேனே! ஏதோ உளறிட்டேன். நான் வெறும் முட்டாள். கோழை.' கிட்டே வரப் போனான்.

'சீ, என்னிடம் வராதே.' ஸ்ராவணி உறுமியபடி கீர்த்தியைப் பிடித்துத் தள்ளிவிட்டு, சட்டென்று கட்டிலில் விழுந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

கட்டிலில் ஸ்ராவணியின் பக்கத்தில் உட்கார்ந்து இவ்வளவையும் பார்த்துக் கொண்டேயிருந்த மது ஒரே பாய்ச்சலாய் அறையை விட்டு வெளியே ஓடினாள்.

## 42

'அப்பா! அப்பா! ஸ்ராவணி அழறாள்!'

'ஏன்?' அறையில் உட்கார்ந்து ஏதோ காகிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரன் பதற்றத்தோடு நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.

'வந்து ... வந்து ... கீர்த்திமாமா ... என்னவோ ... ஸ்ராவணியை என்னவோ... வந்து ...'

'நீ போய் சட்டென்று கீர்த்தியை நான் வரச் சொன்னேன்னு கூப்பிடு.'

தந்தையின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவருவதற்குள்ளாகவே மது ஓட்டம் பிடித்தாள். ஸ்ராவணி அழுகிறாளா? ஏன்? என்னவாயிற்று? கிட்டே போய் உடனே விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு விட வேண்டும் என்று துடித்த மனதை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டான். என்ன பிரயோஜனம்? போனால் இன்னும் அதிகமாய் வெறுப்பாள். அதைத் தவிர வேறென்ன நடக்கும்.?

கீர்த்தி வந்தான்.

'என்ன கீர்த்தி?' காகிதங்களை மேஜைமேல் வைத்துவிட்டு விசாரித்தான்.



கீர்த்தியின் முகம் வாடிவிட்டது. மகேந்திரனிடம் வந்து கையைப் பிடித்துக் கொண்டு.

'அக்கா அழுகிறாள். நான் என்ன சொன்னாலும் கேட்கவேயில்லை. நீங்க போய்க் கொஞ்சம் பேசுங்க' என்றான் தீனமாய்.

'ஏன்? என்னவாச்சு? என்ன சொன்னாய் நீ?'

செய்வதறியாதவனாய்க் கேட்டான் மகேந்திரன்.

என்னத்தைச் சொல்லுவான் கீர்த்தி? அதனால் மௌனமாய் இருந்தான்.

'சொல்லு கீர்த்தி, என்ன சொன்னாய்?' குழைவாய்க் கேட்டான்.

பிறகு ஒருவாறு தேற்றி நடந்ததைச் சொல்லிப் பலவந்தம் செய்த பிறகு எல்லாவற்றையும் சொல்லிவிட்டான் கீர்த்தி.

'எவ்வளவு தவறுபண்ணிவிட்டாய் கீர்த்தி? ஸ்ராவணியின் மனம் மிகவும் நுட்பமானதுன்னு எப்படி மறந்து போனாய்?' கீர்த்தியைக் கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டே கேட்டான். கீர்த்தியின் உள்ளத்திலிருந்த போராட்டத்தை அவன் புரிந்து கொள்ளாமலில்லை.

'மறக்கலை. ஆனால் நீங்க ரொம்ப நல்லவர். இவ்வளவு உதவி பண்றீங்க. அதை அக்கா ஏன் புரிஞ்சுக்கலையில்லை?' அழுகையை அடக்கிக் கொண்டே வருத்தமாய்ச் சொன்னான் கீர்த்தி.

'அது என் துரதிர்ஷ்டம். உனக்கு உதவி பண்றதை ஸ்ராவணி புரிஞ்சுக்கணும், ஸ்ராவணி என்னை அதற்காக மதிக்கணும்னும் விரும்பி நான் பண்ணலை கீர்த்தி.'

'எனக்குத் தெரியும். அதனால்தான் எனக்குஇவ்வளவு வருத்தம். அது நினைவுக்கு வந்தால் அக்கா மேல் கோபம் வந்து விடுகிறது. உண்மையில் உங்க அரவணைப்பு இல்லாவிட்டால் நாங்கள் என்னவாகியிருப்போம்? அதை நினைத்தாலே பயமாயிருக்கு. அக்காவை நான் மட்டும் என்ன திட்டிட்டேன் நீங்களே சொல்லுங்கள். நமக்கு இவ்வளவு உதவி பண்ணியவங்களிடம் கொஞ்சம் அன்பாய் இருக்கச் சொன்னால், தப்பா?'

'கிர்த்தி!' மகேந்திரன் பரிவோடு கிர்த்தியின் முதுகைத் தடவிக் கொடுத்தபடியே இருந்து விட்டான். கிர்த்தி காட்டும் அன்பில் நூற்றில் ஒரு பங்காவது ஸ்ராவணி தன்னிடம் காட்டினால், எவ்வளவு திருப்தியாயிருக்கும்! இல்லை. இல்லை; ஸ்ராவணியின் அன்பிற்குத்தான் அருகதையில்லாதவன்; அதை மறக்கத்தான் முயன்று கொண்டிருக்கிறான்.

கொஞ்ச நேரங்கழித்து மகேந்திரன் மதுவைத் தூக்கிக் கொண்டு கிர்த்தியோடுகூட ஸ்ராவணியின் அறைக்கு வந்தான். ஸ்ராவணி இன்னும் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதவாறிருந்தாள்.

'ஸ்ராவணி.' மகேந்திரன் கூப்பிட்டான். மது தந்தையின் கையிலிருந்து நழுவி ஸ்ராவணியிடம் ஓடி வந்தான்.

'ஸ்ராவணி மன்னித்துவிடு'-கிர்த்தியின் சார்பில்தான் சொல்லத் தொடங்கினான் மகேந்திரன்.

'நீங்கள் தான்— நீங்கள் தான் அவனைத் தூண்டி விட்டு...' ஸ்ராவணியின் வார்த்தைகள் முடியக்கூட வில்லை.

'பொய். எல்லாவற்றையும் நானே தான் சொன்னேன்' —என்று கோபமாய்க் கத்தினான் கிர்த்தி.



'உஷ்!' மகேந்திரன் வாயில் கையைவைத்து அவனைப் பின்னுக்கு இழுத்தான்.

'நான் ஏதாவது கேட்க நினைத்தால் நேராய் உன்னிடமே கேட்டு விடுவேனே! இவ்வளவு நாள் பரிச்சயத்தில் நீ இவ்வளவிற்காவது என்னைப் புரிஞ்சுக் கொண்டிருப்பாய். என் மேல் உனக்கு எவ்வளவு வெறுப்பு உள்ளதுன்னு தெரியும் எனக்கு. அதை ஒரு நாளும் மறந்து விடமாட்டேன். என்னை எவ்வளவு வெறுக்கணும்னு நினைக்கிறாயோ வெறுத்துக்கொள். அதிலாவது உனக்கு நிம்மதி கிடைத்தால் தாங்கிக் கொள்கிறேன். ஆனால் கிர்த்தியின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே.'

தலைகால் புரியாத இந்த சம்பாஷணையின் அர்த்தம் எதுவுமே கிர்த்திக்குப் புரியவில்லை. அதற்குள் ஆயா அங்கு வந்ததால் மகேந்திரன் அங்கிருந்து போய் விட்டான். விஷயம் என்னவென்று தெளிவாய்த் தெரியாவிட்டாலும் ஸ்ராவணி —மகேந்திரன் இருவருக்குமிடையே நடந்த இந்த சம்பாஷணைக்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது கிர்த்திக்கு. ஆனால் என்ன யோசித்துப் பார்த்தபொழுதும் அது என்னவாயிருக்கும் என்றுதான் புரியவில்லை கிர்த்திக்கு.

## 43

கிர்த்தி பள்ளிக்குத் திரும்பிப் போய்விட்டான். மகேந்திரன் இப்பொழுதெல்லாம் வீட்டில் இருப்பதையே விட்டுவிட்டான் ஸ்ராவணிக்காகக் கட்டிக்கொண்டிருந்த வீடு கூட முடியும் தறுவாயில் இருந்தது. ஸ்ராவணி ஒரு முறை இந்த வீட்டைவிட்டுப் போய் விட்டாளானால் அது நிரந்தரமாய் அவன் வாழ்க்கையை விட்டே விலகிப் போனாற்போலத்தான் என்று அறிவான்.

புது வீட்டிற்குப் போனதுமே அந்த வீட்டின் கதவுகள் தன் முகத்தில் ஓங்கி அறைந்தாற் போலப் படீரென்று சாத்திக் கொண்டுவிடும்.

தோல்வியை ஒப்புக் கொள்ளப் பிடிக்காத அந்தராத்மா எதிர்த்து நிற்கத் தொடங்கியது. பலவந்தமாகவாவது ஸ்ராவணியை அடைந்தே தீர வேண்டும் என்ற பிடிவாதம் ஏற்பட்டது இல்லாவிட்டால் இத்தனை நாள் அனுவித்த இந்த சோதனைக்கும் பாட்டிற்கும் அர்த்தமே யில்லை என்றது. எஞ்சிய வாழ்க்கையை யெல்லாம் தன்னந்தனியாய், சூனியமாய்க் கழிப்பதற்காகவா கடந்த காலத் துன்பத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டான்—என்று அந்தராத்மா குத்திக் காட்டியது.

பல நாட்களாய் அவன் மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு வந்திருக்கிறான். இன்றைக்கு அந்த மனமே அவனை எதிர்த்து நின்று உலுக்கி எடுக்கத் தொடங்கி விட்டது. தான் காட்டிய அன்பைப் புரிந்துகொண்டு மனைவியாகப் பிடிக்காவிட்டால் அதிகாரத்தைக் காட்டிப் பலவந்தமாகவாவது அடிமைப் படுத்திக் கொள் என்று எச்சரிக்கத் தொடங்கியது.

ஒவ்வொரு நிமிஷமும் தன் வீட்டில் கூடவே இருந்து வந்து கொண்டிருந்த ஸ்ராவணியை அடைய முடியாத அவன் அகம் தன்னையே அறியாமல் ஏதாவது அக்கிரமச் செயலில் இறங்கி விடுமோ என்று அஞ்சித் தொலைவில் இருக்கத் தொடங்கினான். பத்து அல்லது இருபது நாட்களுக்கொரு முறை வந்து மதுவைப் பார்த்துவிட்டுத் தேவையானவைகளைத் தீர்த்து விட்டுத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

ஏறக்குறைய இருபது நாட்களுக்குப் பிறகு அன்று தான் ஐதராபாத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்த மகேந்திரன் மாலையில் நதிக்கரைக்கு உலாவப்போனான்.



அவன் திரும்பி வரும்போது வீட்டிலிருந்து பேச்சுக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. என்றுமில்லாதவாறு ஸ்ராவணியின் குரல் பெரிதாய்க் கேட்டுக்கொண்டிருந்தது.

மகேந்திரன் தன்னையறியாமல் சமையலறைப் பக்கமாய் போனான். அவள் காதுகளைத் தீட்டிக் கொண்டு அதைக் கேட்கத் தொடங்கினான்.

'திரட்டுப்பாலை எல்லாவற்றையும் ஒரேயடியாய் சாப்பிட்டால் வயிறு கெட்டுவிடும்னு எத்தனை தடவை சொல்லுவேன்?' அடிக்கப் போனபடி மிரட்டிக் கொண்டிருந்தாள் ஸ்ராவணி.

'அடிச்சாயானால் பார், அப்பாவிடம் சொல்லுவேன். மது ஆள்காட்டி விரலைக் காட்டிப் பயமுறுத்தினான். அவன் முகமெல்லாம் கன்னம்வரையிலும் திரட்டுப்பால் ஒட்டிக் கொண்டிருந்தது. ஸ்டூலின் மேல் நின்று கொண்டிருந்தான். அதன் மேல் ஏறி அலமாரிக் கதவைத் திறந்திருந்தான் போலிருந்தது.

ஒரு வினாடி அவனைக் கோபமாய்ப் பார்த்த ஸ்ராவணி, அவன் முகத்தையும், நின்று கொண்டிருந்த தோரணையையும் பார்த்துவிட்டு, அடக்க மாட்டாமல் சிரித்துவிட்டாள். சிரித்துக் கொண்டு, கைகளை நீட்டி அவனைக் கிட்டே இழுத்து முத்தமிட்டாள். மதுவும் சிரித்துக் கொண்டிருந்தான்.

'சீ, போ!' உன் எச்சிலையெல்லாம் என் மேல் ஒட்ட வைக்காதே! 'திரும்பவும் கோபத்தை வரவழைத்துக் கொண்டே அவனைத் தொலைவிற்குத் தள்ளினாள். மது விடவில்லை. ஸ்ராவணியின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப்போட்டுக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டான். அவனை தூரத்தில் நிறுத்திவிட்டு ஒரு வினாடி பார்த்த ஸ்ராவணி உடனே கிட்டே இழுத்து மார்போடு

அழுத்திக் கொண்டாள். மது கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தான்.

மகேந்திரன் சட்டென்று திரும்பி வந்துவிட்டான். இருவரும் சேர்ந்து ஆனந்தமாய் இருந்த காட்சி அவன் இதயத்தில் அழியாத முத்திரையை ஏற்படுத்தி விட்டது. அவனை அதுபோல அனாமத்தான ஆளாய் விட்டு வைப்பதே நல்லது. திரும்பவும் உன் மகன்தான் அவன் என்று சொன்னால் நிலைமை எவ்வாறு மாறுமோ! அதைத் தாங்கும் சக்தி அவனிடமில்லை. தந்தை இல்லை விட்டால் மது ஸ்ராவணிக்கு இன்னும் நெருக்கமாயிருப்பான் என்பதில் சந்தேகமில்லை நெறித்துக் கொண்டிருக்கிறதோ? அதிலிருந்து மீளமுடியாமல் தத்தளிக்கிறானா?

ஆயாவுக்கு இரண்டு நாட்களாய் உடம்பு சரியாவில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் சாதாரணமாய் வீட்டு வேலையெல்லாம் ஸ்ராவணியின் மீது தான் விழும் இன்றிரவு தன் படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்ட மதுவை மகேந்திரனின் அறையில் படுக்க வைப்பதற்காகத் தோளில் போட்டுக் கொண்டு போனாள் ஸ்ராவணி. மகேந்திரன் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து எழுதிக்' கொண்டிருந்தான். மதுவைப் படுக்கவைத்து விட்டு நிசப்தமாய்த் திரும்பப் போனாள்.

'ஸ்ராவணி' திடீரென்று பின்னாலிருந்து கேட்டது. பிடித்து இழுத்து இழுத்துத் தடுத்து நிறுத்தினாற் போலவே நின்று விட்டாள் ஸ்ராவணி.

'நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன்.

ஸ்ராவணி பதில் பேசவில்லை.

'பணம் ஏதாவது தேவையானால் பீரோவில் வைத்திருக்கிறேன்.' அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை.



'ஆயாவைக் கூப்பிடுகிறேன்' என்று அறையைத் தாண்டப் போனாள்.

'நில் இம்முறை மதுவின் பொறுப்பை உன்னிடந்தான் ஒப்படைக்கப்போகிறேன்.' அவன் குரல் பிசிறின்றி வெளி வந்தது.

ஒருக்கால் நான் வெகு நாட்கள் திரும்பி வரமாட்டேன். உனக்கு ஏதாவது தேவையானால் கோபால் மூலமாய் கம்பெனிக்குச் செய்தி சொல்லியனுப்பு.' ஸ்ராவணி கதவிற்கருகில் அப்படியே நின்றுவிட்டாள். அறையில் நிசப்தம் ஏற்பட்டது.

நிமிஷங்கள் கழிந்தன. நிசப்தத்தைப் பிளந்துக் கொண்டு வெளி வந்தது அவன் குரல். 'ஸ்ராவணி! நான் வெகு தூரம் போகிறேன், ஜாக்கிரதை.'

ஸ்ராவணியால் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இவன் உத்தேசந்தான் என்ன? ஏன் இந்த ஒப்படைப்பெல்லாம்? நிமிர்ந்து பார்த்த ஸ்ராவணி, மகேந்திரன் லாந்தரைப் பெரிது பண்ணிக் கொண்டும் சிறிது பண்ணிக் கொண்டும் அதையே உற்றுப் பார்த்தபடி இருந்ததைக் கண்டாள்.

நம்பிக்கைக்கும் ஏமாற்றத்திற்குமிடையே அவன் முகத்தில் ஏதோ அமைதியும் கடினமும் இழைந்து தென்பட்டன. ஸ்ராவணிக்கு ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் என்ன சொல்வது என்றுதான் வாய் புரளவில்லை.

'அவ்வளவு தான். வேறொன்றுமில்லை' என்று அவன் திரும்பவும் எழுதத் தொடங்கிவிட்டான்.

இனி நீ போகலாம் என்பது போலிருந்தது அவன் தோரணை.

அதற்குப் பிறகு அவ்வறையில் இன்னும் எவ்வளவு நேரந்தான் அவளால் இருக்க முடியும்? அதனால் அவள் மெதுவாய் வெளியே வந்து விட்டாள். ஆனால் கால் முன்னுக்கு நகரவில்லை. இன்றைக்கு அவனுக்கு என்ன வந்து விட்டது? ஏன் இவ்வாறு பேசுகிறான்? கொஞ்சமும் பிசிறில்லாத கடின தன்மை எப்படி வந்தது?

'கல்லைப் போலக் கடினமாயிருந்தாலும் அம் முகத்தைப் பார்த்தபோது ஸ்ராவணியின் மனம் ஏதோ போலாகி விட்டது.

சாதாரணமாய் அவன் அவ்வாறு இருக்கமாட்டான். வியாபாரத்தில் ஏதாவது நஷ்டம் வந்துவிட்டதா? அல்லது பழைய சிநேகம் ஏதாவது தூக்குக் கயிறைப் போலக் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறதோ? அதிலிருந்து மீளமுடியாமல் தத்தளிக்கிறானோ?

உண்மையில் என்னதான் காரணம்? தற்சமயம் அவன் எப்படிப்பட்டவனாய் வேண்டுமானாலும் இருந்து கொள்ளட்டும், அவன் குணநலன்களைக் கண்டால் அவனுக்கு மதிப்பு உண்டு. அவனிடம் அந்தப் பெண் பித்து மட்டும் இல்லாமலிருந்தால் அவன் ஆண் இனத்திற்கே ஒரு ரத்தினத்தைப் போன்றவன்.

ஆனாலும் மனிதன் என்றால் ஏதாவது ஒரு கெட்ட குணம் கூட இல்லாமலிருப்பார்களா? அவன் நடத்தைக்கு அவனே சுயமாய் காரணகர்த்தாவாய் இல்லாமலிருக்கலாம். அது வம்ச பரம்பரையாய் வந்திருக்கலாமோ.?

இவ்வளவு நாளைய இந்த நெருக்கத்தில் மனத்தளவில் அவனிடம் எவ்வளவு துவேஷம் இருந்தாலும், ஒரு முறை கூட அவன் முகத்திற்கு முன்னால் எடுத்தெறிந்துப் பேச அவளால் முடியவில்லை. அவ்வப்பொழுது தன் இந்த பலவீனத்திற்குக் காரணம் என்றுகூட யோசித்துப்



பார்த்திருக்கிறாள். ஆனால் பதில் தான் கிடைக்காது. சிலர் முகவிலாசம் அப்படிப்பட்டது போலும் என்றெண்ணிக் கொண்டாள்.

அவன் எப்படிப்பட்டவனாய் வேண்டுமானாலும் இருந்து கொள்ளட்டும்; ஆனால் அவன் சுகமாய் இருக்கட்டும். அது போதும்.

அவன் மூலமாய் தன் வாழ்க்கை சின்னாபின்னமாகி விட்டது உண்மையே. ஆனாலும் அவன் சந்தோஷமாய், கவலையில்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் அவள் விரும்புகிறாள். நடந்ததைத் தன் துரதிர்ஷ்டத்தால் நடந்ததாய் ஏன் எண்ணிக் கொள்ளக்கூடாது? அவரவர்களின் பாவ புண்ணியத்திற்கேற்றாற் போல்தான் நல்லது கெட்டதும் நடக்கும்? மகேந்திரனைத் தான் எதற்கு துவேஷிக்க வேண்டும்?

முதல்முதலாய் அவளுக்கு அப்படிப்பட்ட யோசனை வந்ததுமே ஏதோ போலாகிவிட்டது. வெகு நேரமாய் அவன் அறைக்கு வெளியேயே நின்று கொண்டிருந்து விட்டது நினைவுக்கு வரவே வெட்கமடைந்தவளாய்ச் சரேலென்று அங்கிருந்து போய்விட்டாள்.

படுக்கப் போவதற்கு முன்னால் தலையணையை சரிபண்ணிக் கொண்டிருந்தபோது ஸ்டூலுக்குமேல் வைத்திருந்த தண்ணீர் சொம்பு கண்ணில் பட்டதுமே, அவன் அறையில் தண்ணீர் வைக்கவில்லை என்று நினைவுக்கு வந்தது. நள்ளிரவு நேரத்தில் எழுந்து தொந்தரவுபடவேண்டும். ஏற்கனவே ஒரு மாதிரி இருக்கிறான்.

ஸ்ராவணி தண்ணீர் கொண்டுவந்தபொழுது அறைக் கதவு திறந்துகிடந்தது. உள்ளே லாந்தர் எரிந்துகொண்டேதானிருந்தது.

மகேந்திரன் மேஜைக்கு முன்னால் குனிந்தபடி அதற்குமேல் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு முகத்தைப் பொத்திக்கொண்டிருந்தான். எதிர்பாராமல் அவனை அந்த விதாமாய்ப் பார்க்க நேர்ந்ததற்கு திடுக்கிட்டு விட்ட ஸ்ராவணி, கதவிற்குப் பக்கத்திலேயே சிலையாய் நின்றுவிட்டாள்.

இதென்னது? என்னவாகி விட்டது இவனுக்கு? ஏன் இவ்வாறு இருக்கிறான்? என்ற கேள்விகள் எழுந்தன அவள் உள்ளத்தில்.

இதற்கு முன்னால் கால் ஊனமாகிக் கட்டிலோடு கட்டிலாய் கிடந்தபோது கீர்த்திகூட இதே போல்தான் ஏமாற்றத்திற்கும் அவநம்பிக்கைக்கும் ஆளானபடி ஜீவனில்லாமல் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடப்பான். மகேந்திரனின் தயவால் கீர்த்திதிரும்பவும் பழைய ஆளாகி விட்டான். அப்படியென்றால் மகேந்திரன் கூட கீர்த்தி அப்போழுது இருந்த நிலையில்தான் தாங்க முடியாத வேதனையில் ஆழ்ந்திருக்கிறானா?

இவனுக்கு உள்ள பிரச்னைதான் என்ன? இப்பொழுதெல்லாம் அடிக்கடி இதுபோல்தான் தென்படுகிறான். காரணம் என்ன? கைநிறைய சம்பாதிக்கிறான். சமூகத்தில் நல்ல அந்தஸ்து இருக்கிறது. எத்தனையோ சிநேகிதர்கள் இருக்கிறார்கள். வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இதைவிட வேறு அவகாசம் வேண்டுமா? இவற்றையெல்லாம் மீறி வெளிவர முடியாதபடி படும் அத் துன்பம் என்னவாயிருக்கும்? யாருக்காகத் துன்பப்படுகிறான்.

ஸ்ராவணியின் பார்வை, கலைந்த அவன் கேசங்களின் மேல் பட்டது முதல் முதலாய் அவளைத்தாக்கி அக்கேசங்களைத் தடவி விடவேண்டுமென்று அவள், மனப்பூர்வமாய் இரண்டு இதமான வார்த்தைகளைச் சொல்லித் தேற்ற வேண்டும் போலவும் இருந்தது.



முழங்கைவரை மடித்து விடப்பட்டிருந்த சட்டையை, சாப்பிட்ட பிறகு திருப்பி உருவிவிட்டுக் கொள்ள வேண்டும் என்றுகூட அவன் நினைவிற்கு வரவில்லை போலிருந்தது.

ஸ்ராவணி மெதுவாய் சந்தடி செய்யாமல் உள்ளே வந்து தண்ணீர்ச் சொம்பை மேஜைமேல் வைத்தாள் விளக்கு வெளிச்சத்தில் மிக அருகாமையில் தென்பட்ட அவன் முகத்தில் வேதனையும் சோர்வும் நன்றாய்த் தெரிந்தன.

தண்ணீர் சொம்பை வைத்த ஓசையைக் கேட்டதும் மகேந்திரன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். இருவர் பார்வையும் கலந்துகொண்டன. அந்த நேரத்தில் அவன் முகத்தில் தென்பட்ட உணர்ச்சியைப் பார்த்தால் இனம் புரியாத துக்கத்தில் தவித்து, அமைதியின்மையையும், தனிமையையும் தாங்க முடியாமல் போய் வாழ்க்கை மீதே விரக்தி ஏற்பட்டு, தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து விட்ட மனிதனாய்த் தோன்றினான்.

ஸ்ராவணியின் உதடுகள் அதிர்ந்தன. ஆனால் சப்தம் வெளியே வரவில்லை. மகேந்திரன் முதலில் ஸ்ராவணியை அவ்வளவு கிட்டத்தில் பார்த்தபொழுது திகைப்படைந்து விட்டான். வெகு நேரமாய் வேற்று யோசனையுடன் இருந்த அவனுக்கு ஒரு வினாடி தான் பார்த்துக் கொண்டிருப்பது கனவா நினைவா என்றும்புரியவில்லை. தன்னையறியாமல் அவன் கை முன்னுக்கு நீண்டு ஸ்ராவணியின் கையைப் பிடிக்கப்போய் அதற்குள் திரும்பி தன் நிலைக்கு வந்துவிட்டது.

'நீயா?' என்று எழுந்து சரியாய் உட்கார்ந்துக் கொண்டான்.

ஸ்ராவணிக்கு முதல் முதலாய் அவனிடம் இருந்த ஏளன மனப்பான்மை இருந்த இடம் தெரியாமல் விநோ

தமாய் மறைந்து விட்டது. அவன் கைகளைத் தானே இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு 'உங்களை வருத்தப் படுத்தும் வேதனை என்ன? என்னிடம் சொல்லுங்கள். தயங்கவேண்டாம்' என்று கேட்கவேண்டும் போலிருந்தது. அடுத்த நிமிஷமே கேட்டும் இருப்பாள்.

ஆனால் மகேந்திரன் ஸ்ராவணி வாயைத் திறக்க அவ காசமே தராமல் நாற்காலியை விட்டு எழுந்து விட்டான். தொலைவிற்குப் போய் நின்று கொண்டு, 'ஸ்ராவணி! இன்றைக்கு மது என்னிடம் வேண்டாம். உன் அறைக்கு எடுத்துச் சென்று படுக்க வை' என்றான் — அதே குரல், அதே பிசிறின்மை.

ஸ்ராவணி சொல்ல நினைத்த வார்த்தைகள் நாக்கின் நுனியிலேயே நின்றுவிட்டன. மௌனமாய்ப் போய் மதுவை எடுத்துக் கொள்ளப் போனாள்.

'நீ இரு, நானே தூக்கிக்கொண்டு வரேன். என் கையால் நானே தூக்கிக்கொண்டு வரேன். என் கையால் நானே தூக்கிக் கொண்டு வந்து படுக்க வைக்கிறேன்.'

மகேந்திரன் அவளைத் தடுத்து விட்டுத் தானே கட்டி லிடம் வந்தான்.

அவன் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிக் கொஞ்ச மும் புரிபடாத ஸ்ராவணி, அவன் முகத்தை விநோதமாய்ப் பார்த்தாள். மகேந்திரன் அப்பார்வையைப் பொருட்படுத் தாமல் எந்தப் பக்கமும் திரும்பிப் பார்க்காமல் மதுவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டான்.

ஸ்ராவணியின் அறைக்குள் கொண்டு வந்து வைத்து விட்டு, திரும்பிப் போகும்பொழுது நின்று அவளைக் கூர்ந்து பார்த்தான். அப் பார்வையில் மிகப் பிரியமான பொருள் எதையோ கடைசி முறையாய்ப் பார்த்துக்கொள்



வது போன்ற உணர்ச்சி இருந்தது. மதுவையும் ஸ்ராவணி யையும் ஒரு நிமிஷம் மாறி மாறிப் பார்த்த அவன், 'வரேன்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். நடு வில் கதவிற்கருகில் ஒரு வினாடி நின்று,

'நான் விடியற்காலையில் போய் விடுவேன். நீ தூங்கிக் கொண்டிருப்பாய். அதனால் இப்பொழுதே சொல்லிக் கொண்டு விடுகிறேன்' என்றான்.

ஸ்ராவணி, ஏதோ சொல்ல வேண்டும் என்று வாயைத் திறப்பதற்குள்ளாகவே அவன் கதவைச் சாத்தி விட்டுப் போய்விட்டான்.

## 44

மகேந்திரன் விடியற்காலையில் எழுந்திருந்து சமைய லறைப் பக்கமாய் வந்தான். அதற்கும் முன்பே எழுந் திருந்து அங்கு வேலை செய்து கொண்டிருந்தாள் ஸ்ராவணி.'

'நீயா?' ஆயாஎன்று நினைத்து உரிமையோடு உள்ளே வரப்போன மகேந்திரன், கதவிற்கப்பாலேயே நின்று வியப்போடு பார்த்தான்.

'ஆயா எழுந்திருக்கப் போனபொழுது நான் தான் வேண்டாம் என்று தடுத்தேன்.' கொதிக்கும் நீரை எடுத்து காபி ஃபில்டரில் ஊற்றிக் கொண்டே பதிலளித்தாள் ஸ்ராவணி இடுப்பைச் சுற்றித் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். நீண்ட கூந்தல் நடக்கும் பொழுது இருபக்கமும் நெளிந்து ஆடிக்கொண்டிருந்தது. தூக்கத்தில் கலைந்த கேசங்களில் ஒன்றிரண்டு கன்னத்தில் வந்து விழுந்து கொண்டிருந்தன.

பின்னாலிருந்து ஸ்ராவணியை கவனித்துக் கொண்டிருந்த மகேந்திரனுக்கு அறைக்குள் நுழையலாமா அல்லது திரும்பிப் போய் விடலாமா என்று புரியவில்லை. குழப்பமடைந்தான். ஒன்றும் புரியாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

'நீங்கள் ஷேவ் பண்ணிக் கொண்டால் அதற்குள் குளிப்பதற்கு வெந்நீர் தயாராய் வைக்கிறேன்' என்றாள் ஸ்ராவணி. அவன் எப்பொழுதும் ஊருக்குப் போவதற்கு முன்னால் குளித்துவிட்டுப் புறப்படுவதுதான் வழக்கம்.

மகேந்திரன் ஷேவ் பண்ணிக்கொள்வதற்குள் வெந்நீர் தயாராய் வைத்திருந்தாள். அவன் குளித்து உடைமாற்றிக் கொண்டு சமையலறைக்கு வந்தபொழுது காபியைக் கொண்டு வந்து கொடுத்தாள். காபி தம்ளரை வாங்கிக் கொள்ளும்பொழுது தன் விரல் அவன் கையில் பட்டு விடாமல் ஜாக்கிரதையாய் வாங்கிக்கொண்டான். ஆனால் நிமிர்ந்து அவள் முகத்தை மட்டும் அவனால் பார்க்காமலிருக்க முடியவில்லை. நிமிர்ந்து தன்னை நேருக்கு நேராய்ப் பார்த்த அக் கண்களில் அமைதியைத் தவிர வேறெதுவும் தென்பட வில்லை அவனுக்கு.

மகேந்திரன் காபி தம்ளரை வாங்கிக் கொண்டு புழக்கடைப் பக்கமாய்ப் போய் நின்றான். கிராமத்துச் சூழ்நிலையில், அதிகாலை நேரத்து நிசப்தத்தையும் அழகையும் சுயமாய்ப் பார்த்து அனுபவித்தால் தான் புரியுமே தவிர, வாயால் சொன்னால் புரியாது.

கொல்லையில் கொத்தாய் மலர்ந்திருந்த நந்தியாவட்டைப் பூக்கள் நிலா வெளிச்சத்தோடு போட்டிப்போட்டுக் கொண்டு பளிச்சிட்டன.

'இன்னும் கொஞ்சம் காபி வேணுமா?'

மகேந்திரன் வேண்டும் என்று தலையாட்டினான்.



ஸ்ராவணி இன்னொரு தம்ளர் காபியைக் கொண்டு வந்து தந்துவிட்டு, காலியான தம்ளரைத் திருப்பிஎடுத்துக் கொண்டு போகத் திரும்பினாள்.

'நீ குடித்தாயா?' தன்னையறியாமல் கேட்டுவிட்டான். ஸ்ராவணி இல்லை என்று தலையாட்டிவிட்டு, இன்னொரு தம்ளரில் காபியை ஊற்றிக்கொண்டு வந்து மகேந்திரனுக்கு எதிராய் நின்றாள்.

இருவர் பார்வையும் கலந்தன. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே அப்படியே நின்றுவிட்டார்கள்.

தொலைவில் அப்பொழுதுதான் விழித்துக்கொண்ட கோழி கொக்கரக்கோ என்று கூவியதும், மரங்களில் துயின்று கொண்டிருந்த குருவிகளின் கலகலப்பு சப்தத்தையும் தவிர வேறெந்த சப்தமும் இல்லை.

ஸ்ராவணியின் முகம் அமைதியாய் — நிர்மலமாய், ராத்திரியில் பனியில் நனைந்த நந்தியாவட்டைப்பூவைப் போல் இருந்தது. அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அக்கண்களில் லேசாய் விருப்பம்கூட எட்டிப் பார்த்தாற்போலிருந்தது அவனுக்கு.

ஆனால் இரவெல்லாம் தூங்காத தன் கண்கள் தான் பிரம்மை படுகிறதோ என்றெண்ணிக் கொண்டான் மகேந்திரன். தான் எப்படியும் திரும்பி வரப்போவதில்லை; போவதற்கு முன்னால் மிக நிர்மலமாயும், அமைதியாயும் இருந்த இந்நேரத்தில் ஸ்ராவணியை ஒரு தடவை கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டால்? ஒரு முறை அத்தோள்களைச் சுற்றிக் கைகளைப் போட்டுகிட்டே இழுத்துக் கொண்டு மார்போடு அழுத்திக் கொண்டால்?

'நீ என்னுடையவளாய் இல்லாவிட்டாலும், என்னுடையவளாக முடியாவிட்டாலும் நான் மட்டும்

என்றுமே உன்னுடையவன்தான். இதைவிட ஆயிரம் மடங்கு துன்புறுத்தினாலும் சரி, ஜென்ம ஜென்மத்துக்கும் எனக்கு நீதான் வேண்டும்'— என்று சொன்னால்?

வழக்கம் போலவே ஸ்ராவணி கடினமாகவும் அலட்சியமாகவும் இருந்திருந்தால் அவன் தயங்கியிருக்க மாட்டானோ என்னவோ? ஆனால் ஸ்ராவணியின் கண்களில் தென்பட்ட இந்த நூதனமான அமைதி அவனைப் பயமுறுத்தித் தொலைவிலேயே நிறுத்தி வைத்து விட்டது. அவ்வாறு மிகச் சாதாரணமாய் எந்த வெறுப்பும் இல்லாமல் ஸ்ராவணி பார்ப்பது இதுதான் முதல் முறை

எவ்வளவு நன்றாயிருந்தது! எவ்வளவு அப்பாவியாய் அன்பே உருவெடுத்தவளாய்த் தோன்றுகிறாள்! இது வேடிக்கையாய் அல்லவா தோன்றுகிறது! எப்பொழுதும் அக் கண்களில் மிதந்து வந்த வேதனைச் சலடுகளைக்கூட காணோமே!

'ராத்திரி நீங்கள் ஏன் ஒரு மாதிரியாய் இருந்திங்க?' திடீரென்று கேட்டாள் ஸ்ராவணி.

மகேந்திரன் திடுக்கிட்டான். 'எப்படி இருந்தேன்?' என்றான்.

'ஏதோ போல இருந்திங்க'—காபி தம்ளவுக்குள் பார்த்துக் கொண்டே பதிலளித்தாள்.

மகேந்திரன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே தோட்டத்தைப் பார்த்தபடியே இருந்துவிட்டான். அவனுக்கு உடனே ஸ்ராவணியின் இரு தோள்களையும் பற்றி, அழுத்தமாய் உலுக்கி விட்டு,

'நான் எப்படி இருந்தால் உனக்கென்ன வந்தது? உனக்கு ஏதாவது தோன்றுகிறதா? சொல்லு!'



என்று கேட்கவேண்டும் போலிருந்தது. திடீரென்று ஸ்ராவணி காட்டத் தொடங்கிய அப் பார்வை அவனுக்கு ஏதோ போலிருந்தது. ஒருக்கால் ராத்திரி தன்னை அது போலக் காண நேர்ந்ததற்கு இரக்கப்பட்டிருப்பாளோ? அது கேவலம் இரக்கமாக மட்டுமே இருந்தால் அதைக் காட்டிலும் தாங்கமுடியாத வருத்தம் வேறொன்றில்லை அவனுக்கு. இரக்கத்தைக் காட்டிலும் ஸ்ராவணி காட்டும் துவேஷமே மேல் என்றுபட்டது அவனுக்கு. ஏனெனில் துவேஷத்தில் இருவருக்கு மிடையே ஒரு பந்தமாவது இருந்து வந்தது.

மகேந்திரன் தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாததோடுகூட விருட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டதைப் பார்த்ததுமே, ஸ்ராவணிக்கு முகம் சிறுத்து விட்டது' ஆம் அவள் கேட்டதற்கு உடனே பதில் சொல்ல வேண்டுமென்று என்ன அவசியம்? பதில் சொல்ல வேண்டிய தேவைதான் ஏன்?

அவன் வருத்தத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கும், கேளாமலேயே பதில் சொல்லுவதற்கும் அவள் யார்? பந்தமா? சிநேகமா, நெருக்கமா, என்ன இருந்தது? அந்த வீட்டில் தன் நிலைமையை உணர்ந்து அத்துமீறி நடந்து கொண்டு விட்டோமோ என்று வெட்கத்தோடு தலை குனிந்தாள்.

சுமார் அரைமணி நேரம் கழித்து அவன் ஆயாவைக் கூட எழுப்பி, போய்விட்டு வருவதாய்ச் சொல்லிக் கொண்டு வெளியே வந்தான்.

கோபால் அதற்குள் சாமான்களையெல்லாப் தயாராய் காரில் எடுத்து வைத்திருந்தான்.

ஆயா எழுந்து வரப்போனபொழுது அவன் பரிவோடு வேண்டாம் என்று தோளில் தட்டித் தடுத்து நிறுத்தி விட்

டான். உடம்பு ஜாக்கிரதை என்று எச்சரித்தான். அவன் குரல் கம்பீரமாய் இருந்ததால் இமைக்கோடிகள் ஈரத்தால் பளபளத்ததை யாரும் கவனிக்கவில்லை.

அதே அறையில் ஒரு மூலையில் இருந்த கட்டிலில் படுத்தபடி உறங்கிக்கொண்டிருந்த மதுவிடம் வந்தான். ஒரு வினாடி அவன் மீது நிலைத்தது அவன் பார்வை. அடுத்த நிமிஷம் திரும்பி வெளியே வந்து விட்டான். தன் பின்னாடியே வந்து கொண்டிருந்த ஸ்ராவணியை வேண்டாம் என்று தடுத்து நிறுத்த வேண்டுமென முயன்றான். ஆனால் அவனால் அதைச் சொல்ல முடியவில்லை.

வராந்தா இறக்கத்தில் இருந்த படிக்கட்டிற்கருகில் திரும்பவும் இருவரும் நின்றுவிட்டார்கள்.

ஸ்ராவணி மேல் படியில் நின்று கொண்டிருந்தாள்; கீழ்ப் படியில் நின்றபடி அவளைப் பார்த்தான் மகேந்திரன்.

திரும்பவும் ஒரு நிமிஷம் காலம் நின்று போய்விட்டது மேலேயிருந்து வந்து பட்டுக்கொண்டிருந்த நிலாவெளிச் சத்தில் மைதிட்டிய ஸ்ராவணியின் கண்கள் புன்னகைப் பூத்தாற்போலிருந்தன. அவன் இதயம் லயம் தப்பி விட்டது. ஏதோ சொல்வதற்காகத் திறந்துகொண்ட உதடுகள் அதற்குள் நின்றுவிட்டன. உடனே விருட் டென்று திரும்பி மளமளவென்று படியிறங்கிப் போய்க் காரில் உட்கார்ந்து கொண்டான் ஸ்ராவணி இன்னும் அவ்விடத்திலேயே சிலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் எந்த விதமான சலனமும் ஏற்படவில்லை.

இதே புன்முறுவல் சில மாதங்களுக்கு முன்னால் ஸ்ராவணியின் முகத்தில் தென்பட்டிருந்தால், அவளைப் பலவந்தமாகவாவது தன்னுடையவளாக்கிக் கொண்டிருப்



பான் அவன். இப்பொழுது வேறு. வெகு நேரமாய்ப் பனிக்கட்டிக்கிடையே அமுக்கி வைக்கப்பட்ட தேகத்தைப் போல அவன் மனம்கூட மரத்துப் போய் விட்டது. எந்த உணர்ச்சியும் இல்லை. எவ்வளவோ முயற்சிசெய்து, எவ்வளவோ சாதனைகளை மேற்கொண்டு அவன் இந்த நிலைக்கு வந்திருக்கிறான்.

கிழக்கே இருள் நன்கு சிதறிப் போய்க் கொண்டிருந் தது. உலகமெல்லாம் செந்நிற ஒளியால் திகழ்ந்தது. கார் வீதி முனையையும் தாண்டிவிட்டது. மகேந்திரன் பின் னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

வெகு நாள்களாய்த் தன் சக்தியை யெல்லாம் பயன் படுத்திச் சீர்ப்படுத்தி வந்துகொண்டிருந்த வருத்தமெல் லாம் ஒரு கண்ணீர்த் துளியாய் மாறி, பலவந்தமாய் மூடிக் கொள்ள முயன்று கொண்டிருந்த பாரமான இமை களையும் மீறி வெளியே வந்தது.

# 45

மகேந்திரன் போய் சுமார் இரண்டு மாதங்கள் ஓடி விட்டன. எங்கே இருந்தான், என்ன செய்து கொண்டிருந் தான் என்றுகூடப் பதில் இல்லை.

ஆயா கலக்கமடைந்து விட்டாள். கோபால் மூலமாய் கம்பெனியில் விசாரித்துப் பார்த்த பொழுது பிஸினெஸ் டூர் விஷயமாய் கல்கத்தாவிற்கருகில் ஏதோ ஊரில் இருப் பதாய்ச் சொன்னார்கள்.

எங்கே யிருந்தாலும் மதுவின் க்ஷேமத்தைப் பற்றியா வது விசாரித்துக் கடிதம் போடாதது ஸ்ராவணிக்கு ஆச்சரியமாய்த் தான் இருந்தது. கடைசி நாள் அவன் நடந்து கொண்ட விதமும் பேச்சும் நினைவிற்கு வந்த போது ஏதோ போல் ஆயிற்று.

வீடு கட்டி முடிந்து விட்டது. ஆனால் மகேந்திரன் இல்லாமல், அவனிடம் சொல்லிக் கொள்ளாமல் எப்படிப் போவது என்று சொன்னாள் ஆயா.

மகேந்திரனின் கடிதத்திற்காக ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்ராவணி. அவ்வாறு காத்திருப்பது அவளுடைய தினசரி கடமைகளுள் ஒன்றாகி விட்டது. மகேந்திரன் பெயருக்கு வேறு யாரோ எழுதியிருந்த கடிதம் ஒன்று வந்தது. அவன் கடிதத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த ஸ்ராவணி எரிச்சலுடன் அதை ஒதுக்கி வைத்தாள்.

சாதாரணமாய் என்றாவது அதிசயமாய்த் தான் அவனுக்கு இந்த வீட்டிற்குக் கடிதம் வரும்.

'திறந்துப் பார், யாரோ என்னவோ, ஏதாவது முக்கியமான விஷயமாயிருந்தாலும் இருக்கும். இதில் தப்பென்ன இருக்கு?'

என்று ஆயா சொன்னதும் ஸ்ராவணி வேண்டா வெறுப்பாகவே கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். கடிதம் ஆங்கிலத்தில் இருந்தது

'மிஸ்டர் மகேந்திரன்!

'நான் இந்தப் புது ஆசுபத்திரிக்கு மாறிய பிறகு உன்னைப்பற்றி எந்த விஷயமுமே தெரியவில்லை. உங்கள் ஆசுபத்திரி எப்படி நடந்து வருகிறது? மது எப்படி இருக்கிறான்? அவனைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டது. தற்சமயம் என் உடல் நலம் நன்றாயில்லை. டாக்டர் ஏதாவது அமைதியான இடத்திற்குச் சென்று சில மாதங்கள் ஓய்வெடுத்துக்கச் சொல்லியிருக்கிறார்.

எனக்குத் தெரிந்தவரை அப்படிப்பட்ட அமைதியான இடம் எதுவும் இருப்பதாய்த் தெரியவில்லை. நீ இருக்கும்



கிராமம் மிக அமைதியானது என்றும் உன் வீடு விசாலமான வீடு என்றும், உன் பேச்சிலிருந்து அறிந்திருக்கிறேன்.

'மதுவோடு சில நாட்கள் பொழுது போக்கினாற் போலவும் இருக்கும்; எனக்கும் ஓய்வு கிடைக்கும் என்றெண்ணி அங்கு வந்து ஒரு வாரம் பத்து நாட்கள் தங்கியிருக்க விரும்புகிறேன். எனக்கு இதைப்பற்றி உடனே தெரியப்படுத்து. உனக்கு ஆட்சேபணை இருக்காது என்றே நம்புகிறேன்.

இப்படிக்கு
சிஸ்டர்.'

அக்கடிதத்தை ஒன்றிற்கு மூன்று முறையாய்ப் படித்த ஸ்ராவணி புருவங்களைச் சுளித்து யோசனையில் ஆழ்ந்து விட்டாள்.

'யாரிடமிருந்து?'—ஆயா பதற்றத்தோடு கேட்டாள். சொன்னாள் ஸ்ராவணி.

'அப்படீன்னால் உடனே வரச்சொல்லி எழுது. அவர் இல்லாவிட்டால்தான் என்ன; அவள் அவ்வளவு ஆசையாய் எழுதியிருக்கும்போது!

அதோடு மகேந்திரன் போய்க்கூட வெகு நாளாகி விட்டது. இன்றோ நாளையோ கூட வந்துவிடலாம். ஒருக்கால் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, இந்தப் பெரிய வீட்டில் கொஞ்சம் சந்தடியாகவாவது இருக்கும்.' என்று சொன்ன ஆயா, ஸ்ராவணி பதில் எழுதிப்போடும் வரை விடவில்லை.

தான் மதுவுக்கு ஆயாவாய் இந்த வீட்டில் இருப்பதாயும், மகேந்திரன் தற்சமயம் ஊரில் இல்லை என்றும், தற்

சமயம் தன்னையும் தன் அம்மாவையும் தர வேறு யாரும் இங்கு இல்லை என்றும், மதுவின் குறும்புகளையெல்லாம் பார்த்து மகிழ வேண்டியதுதான் என்றும், இரண்டு வாரமென்ன, நான்கு வாரம்கூட தங்கலாம் என்றும் பதில் எழுதிப் போட்டாள் ஸ்ராவணி.

அவள் வரவால் வீடு கொஞ்சம் கலகலப்பாகும் என்று ஆயா எதிர்பார்த்தாள்.

ஆனால் ஸ்ராவணியோ அவள் மூலமாய் மதுவின் பிறப்பு ரகசியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று ஆசைப்பட்டாள்.

## 46

அன்று மாலையில் மதுவை நன்றாய் அலங்கரித்தாள் ஸ்ராவணி. மூவரும் வரப்போகும் அதிதிக்காகக்காத்திருந்தார்கள். அதற்குள் இருட்டத் தொடங்கிவிட்டது.

'இன்னும் வரக் காணோமே?' என்றாள் ஆயா. சொல்லி வாய் மூடுவதற்குள் வாசலில் கார் வந்துநின்றது. காரிலிருந்து பழுத்த பறங்கிப் பழத்தைப் போன்ற சாயலுடன் வெண்ணிற சிஸ்டர் யூனி:பாரத்துடனும் கழுத்தில் சிலுவையுடனும் இறங்கி வந்தார் சிஸ்டர். ஸ்ராவணி சொன்னதுமே மது கையை ஆட்டினான். சிஸ்டரும் கையை ஆட்டிக்கொண்டே முறுவலுடன் படியேறி வந்தார். ஸ்ராவணி மதுவைத் தூக்கிக் கொண்டு எதிரே போனாள்.

'ஐயோ, கர்யமே' சட்டென்று வாய்விட்டே சொல்லிவிட்டாள் ஆயா.

ஸ்ராவணியின் கையிலிருந்து மதுவை வாங்கிக் கொண்ட சிஸ்டர்,



'உன்னை எங்கேயா பார்த்தாற் போலிருக்கே!' என்றார். சிஸ்டரைக் கூர்ந்து கவனித்த ஸ்ராவணியின் முகம் வாடிவிட்டது.

சிஸ்டருக்கும் கூட ஞாபகம் வந்துவிட்டது. நம்பமாட்டாதவளாய்,

'அட, நீ இங்கேயா இருக்கிறாய்?' என்றாள் வியப்போடு.

ஸ்ராவணி பதில் பேசவில்லை. சிஸ்டரையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். சிஸ்டரின் முகத்தில் பழைய நினைவுகள் ஏதேதோ நாட்டியம் பயின்று கொண்டிருந்தனவாம்.

'நீ இங்கேதானா இருக்காய்? மகேந்திரன் சொல்லவேயில்லை என்னிடம்.'

சிஸ்டர் மதுவைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்தார். ஸ்ராவணியும் இயந்திர கதியல் அவரை அனுசரித்தாள்.

'என்னம்மா இது? என்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமலேயே மறைச்சு வைச்சுட்டீங்க?' என்று பழித்தார் சிஸ்டர்.

உடனேயே ஏதோ புரிந்தாற் போல— 'ஓஹோ! புரிஞ்சுடுத்து. திடீர்னு என்னை ஆச்சரியத்தில் திளைக்க வைக்கணும்னு தானே கணவன்—மனைவி இருவரும் இந்த மாதிரித்திட்டம் போட்டுக்கிட்டீங்க? அதானே?' என்றார் முறுவலுடன்.

'சிஸ்டர்! நீங்க என்ன சொல்றீங்களோ எனக்குப் புரியவேயில்லை' வேதனையுடன் பார்த்தபடி சொன்னாள் ஸ்ராவணி.

'தெரியாதா? என்ன வேடிக்கை? மதுவைக் காட்டி உன் மகன் என்று சொன்ன பொழுதாவது அவனை யார் வளர்த்து ஆளாக்கினாங்கன்னு மகேந்திரன் உன்னிடம் சொல்லவே யில்லையா?'

'ஸிஸ்டர்!'

'இந்த ரத்தினம் போன்ற மகனை நீங்கள் அப்போது விட்டு விட்டுப் போயிட்டபோது, புழுதியில் கலந்து விடாமல் எவ்வளவு ஜாக்கிரதையாய் எடுத்து வளர்த்தேன் தெரியுமா நான்? உன்னைப் பார்த்தால் உடனே எனக்குத் தெரிவிக்கும்படி படித்துப் படித்துச் சொல்லியிருந்தேனே மகேந்திரனிடம்! ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே.

'ஸிஸ்டர்!'

'அதுசரி, நீங்களிருவரும் எப்படி சந்தித்துக் கொண்டீர்கள்? எப்பொழுது? என்றவர் ஸ்ராவணியைத்திரும்பிப் பார்க்காமலேயே — மதுவின் கன்னத்தைநிமிண்டிவிட்டு- 'என் தங்கக்கட்டி! சொந்தத் தாய் தகப்பனிடமே அவங்க நிழலிலேயே வளர்ந்து வருகிறான்னு தெரிந்ததுமே எவ்வளவு சந்தோஷமாயிருக்கு '

'ஸிஸ்டர்!' பொறுமை யின்றிக் கத்தி விட்டாள் ஸ்ராவணி!

'நீங்கள் என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியவே யில்லை. மது மகேந்திரனின் மகனாய் இருக்கலாம். அவனைப் பெற்ற தாய் நான் இல்லவே இல்லை!'

ஸ்ராவணி ஆவேசமாய் சொன்னதைக்கேட்டு ஸிஸ்டர் விக்கித்துப் போய்விட்டார். மதுவைக் கீழே இறக்கி விட்டு—

'என்ன சொல்கிறாய் நீ?' என்றார். 'அவன் மகேந்திரனின் மகன். நான் பிழைப்பிற்காக அவனுக்கு உழைக்கும்



ஒரு வேலைக்காரிதானே தவிர வேறில்லை. நீங்கள் ஏனோ தவறாய்ப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. நான் அவனுக்கு ஆயா! அவ்வளவுதானே தவிர எங்கள் இருவருக்குமிடையே எந்த சொந்தமோ பந்தமோ கிடையாது.'

ஸிஸ்டர் ஆச்சரியத்தோடு வாயைப் பிளந்தார். தன் ஆவேசத்தைப் பார்த்து ஒரு வினாடி வெட்கமடைந்து விட்ட ஸ்ராவணி, உடனே தலையைக் குனிந்துக் கொண்டு மெதுவாய்,

'உங்க ஆசுபத்திரிக்கு வரத்துக்கு முன்னாடியே தொடங்கி [விட்ட என் துரதிர்ஷ்டம் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. எங்கள் நிலைமை ரொம்பவும் தாறுமாறாகி விட்டது தான் இப்பொழுது இங்கே சம்பளத்துக்காக வேலை செய்துகிட்டிருக்கேன்.'

'அப்படீன்னால்— இவன் உன் மகன் என்று உனக்கு இதுவரை தெரியவே தெரியாதா?'

'ஸிஸ்டர்!' ஸ்ராவணி சாட்டையால் அடியுண்டவளைப்போலச் சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள்.

ஸிஸ்டர் ஸ்ராவணியின் கண்களைக் கூர்ந்து பார்த்தாள் எதையோ தேடுபவளைப்போல.

'மகேந்திரன் சொல்லவேயில்லையா? பெற்றதாயை மகனுக்கு ஆயாவாய் வைக்கிற அளவுக்குக் கொடுமையானவனா அவன்! அவனைப் பார்த்தால் அந்த மாதிரி சந்தேகமே ஏற்படவில்லையே எனக்கு!' என்றாள்.

ஸ்ராவணியின் முகம் சிவந்தது.

'உங்களுக்கு இதோடு நாலைந்து தடவை சொல்லிட்டேன். மதுவுக்கும் எனக்கும்...' வார்த்தைய முடிக்கக்கூட வில்லை. ஸிஸ்டர் தொடர்ந்தார்.—

'ஸ்ராவணி! மதுவுக்கு மகேந்திரன் தந்தையா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவன் உன் மகன் தான். அது மட்டும் உண்மை'

என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே சிஸ்டருக்கு ஏதோ சந்தேகம் வந்து விட்டாற்போலிருந்தது.

'அந்த நேரத்தில் உனக்குப் பிறந்த குழந்தை உயிரோடிருந்த விஷயமாவது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்.

ஸ்ராவணியின் உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் திடீரென்று முகத்தில் வந்து குப்பென்று பொங்கிற்று.

'உங்க வேலைக்காரிக்குத் தெரியுமே!' சிஸ்டர் ஆயாவுக்காகத் தேடினார்.

'ஆயாவுக்குத் தெரியுமா?'

ஸ்ராவணி சட்டென்று தன் சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு ஆயாவைத் தேடினாள். ஆனால் ஆயா அந்தச் சுற்றுப் புறத்தில் எங்குமே இல்லை. சிஸ்டரைப் பார்த்ததுமே உள்ளே ஓடிப் போய் ஒளிந்து கொண்டு விட்டாள் போலிருந்தது.

'இப்படி உட்காரு. மொதல்ல இதைச் சொல்லு எனக்கு. நீயும் மகேந்திரனும் திருமணம் பண்ணிக்கவில்லையா?'

இல்லை என்று தலையாட்டினாள்.

'மதுயார் என்று இவ்வளவு நாளாய் அவன் உனக்குச் சொல்லவேயில்லையா?'

'இல்லை'



'நீ இந்த வீட்டில் நிஜமாகவே ஆயாவாய்தான் இருந்து வருகிறாயா? எனக்கு ஆயா என்று கடிதம் எழுதியது நீதானா?'

'ஆமாம்.'

சிஸ்டர் இரண்டு நிமிஷம் கண்கொட்டாமல் ஸ்ராவணியையே பார்த்தார்.

அறையில் ஆழ்ந்த அமைதி ஏற்பட்டது.

வெளுத்து ஜீவனற்றுப் போய் விட்ட ஸ்ராவணியின் முகத்தைப் பார்த்ததுமே சிஸ்டரின் இதயம் இரக்கத்தால் உருகத் தொடங்கியது. தாழ்ந்த குரலில் மிக மென்மையாய்.,—

'வாட் எ பிட்டி மை சைல்ட்! நான் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இங்கே வந்து உன்னைச் சந்திப்பேன் என்றும், இதையெல்லாம் திரும்பவும் நினைவுபடுத்த நேரிடும் என்றும் கனவிலும் நினைத்திருக்கவில்லை என்ன விநோதம்! வாழ்க்கையில் பயங்கரமான அனுபவங்கள் வரவே கூடாது. ஒருக்கால் வந்தாலும் அந்த விஷயம் அதோடு முடிவடைந்து விடவேண்டும். திரும்பவும் நினைத்துப்பார்த்துக் கொள்கிற நிலைமை வந்தால் மனிதன் மானசிகமாய் எவ்வளவு வேதனைக்கு ஆளாக நேரிடும் என்பதை நான் அறிவேன்? நான் இங்கே வந்திருக்காவிட்டால் இதெல்லாம் உனக்குத் தெரியவே நேர்ந்திருக்காதோ என்னவோ?'

என்று தொடர்ந்து சொல்லத் தொடங்கினார் சிஸ்டர்.

'அப்ப உனக்குப் பிறந்த குழந்தை பிழைத்திருக்கும்னு நாங்க யாருமே எதிர்பார்க்கவில்லை. உயிருக்கே ஊசலாடிக் கொண்டிருந்தது. பிழைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை. அதனால் ஏற்கனவே உடல்நலம் சரியில்லாத

உன்னிடம் இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார் உன் தந்தை. நான் ஒப்புக் கொண்டேன். பிரசவம் ஆன மறுநாளே உங்கள் வீட்டார் உன்னை வீட்டிற்குக் கூட்டிச் சென்று விட்டார்கள். உயிர் முற்றிலும் போகாத குழந்தையைப் பார்த்துக்கொண்டே எங்களால் விட்டுவிடத்தான் முடியுமா? ஆக்ஸிஜன் எல்லாம் கொடுத்து எங்களால் முடிந்ததையெல்லாம் செய்து பார்த்தோம். மூன்றுநாள் கழிந்தபிறகு குழந்தைக்கு மூச்சு சீராக வந்தது. மேலும் இரண்டு நாள் கழிந்தபிறகுஎல்லா குழந்தைகளையும்போல் பால் குடிக்கத் தொடங்கினான்.

நான் மிக சந்தோஷமாய் இந்தச் செய்தியை உங்கப் பாவுக்குப் போன் பண்ணிச் சொன்னேன் அவர் முதலில் என்னை யார் என்றே புரியாதது போல பேசினார். நான் பொறுமையாய் என்னை யார் என்று எடுத்துச் சொல்லிக் கொண்டேன்.

'குழந்தை சாதாரணமாய் ஆகிவிட்டது. வந்து எடுத்துச்செல்கிறீர்களா?' என்று கேட்டேன்.

'முடியாது' என்று சொன்னார் கச்சிதமாய்.

'எடுத்துட்டுப் போகமாட்டீங்களா? நாங்க என்ன செய்யறது அதை? வியப்படைந்தவளாய்க் கேட்டேன் நான்.

'என்ன பண்றத்துக்காகப் பிழைக்க வெச்சீங்க மொதல்ல? அந்தக் குழந்தை என் மகள் பெற்ற குழந்தை தான்னு என்ன நம்பிக்கை?'

'சார்.'

'எங்களுக்குச் சம்பந்தமில்லாத குழந்தையை நாங்க எப்படித் திருப்பி எடுத்துட்டுப் போக முடியும்? என்ன பண்ணச் சொல்றீங்கன்னு ஆலோசனை கேட்டீங்க



இல்லையா?' எடுத்துட்டுப் போய் மூஸி நதியில் விட்டெறியுங்க.—

கர்ணகடூரமாய்ச் சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டார். நான் அவமானத்தாலும் பொறுமையில்லாமலும் தவித்தேன். எவ்வளவு கஷ்டப்பட்டாவது சரி, குழந்தையை எடுத்துச் சென்று உன் பேரன்தான் இது என்று ஒப்படைத்துவிட்டு வந்துவிட வேண்டும் என்ற பிடிவாதம் ஏற்பட்டது.

ஆனால் என்ன ஆதாரம்? எதைக்காட்ட முடியும்? ரிகார்டில் ஸ்ராவணிக்கு பதில் மாற்று பெயரைக் காட்டினார்கள். திக்கற்ற அனாதை என்று அவ்விடத்தில் பெயர் கொடுத்திருந்தார்கள்.

'ஆவேசத்தைக் குறைத்துக் கொண்டு நிதானமாய் யோசித்தேன். ஜாதிமத பேதமின்றி, நீதி அநீதி என்று பாராமல் இந்த உலகத்திற்கு வரத் துடித்துக் கொண்டிருக்கும் உயிர்களுக்கு வாழ்க்கையைத் தருவது தான் எங்கள் பவித்திரமான கடமை. நான் சிறு வயதிலிருந்தே ஏற்படுத்திக் கொண்டிருந்த சத்தியங்களும் அனுபவத்தால் பெற்றிருந்த மனிதப் பண்பும் நினைவிற்கு வந்தன.

'அக்குழந்தையை யாராவது குழந்தை இல்லாத நல்ல தம்பதிகளுக்கு வளர்ப்பதற்குத் தந்து விடவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

'ஒரு மாதத்திற்குள்ளேயே நன்றாய் வளர்ந்து தேறி விட்டான். இரண்டு மாதம் முடிவதற்குள் எங்களைப் பார்த்துச் சிரித்து எங்கள் உள்ளங்களைக் கவர்ந்து விட்டான். மூன்று மாதத்தில் முகத்தில் சாயல்கள் நன்றாய்த் தெரியத் தொடங்கின.

'நான்கு மாதங்கள் கழிந்த பிறகு ஒரு காரியமாய் மெட்றாசுக்குப் போனேன். அங்கே எனக்குத் தெரிந்த ஒரு

தம்பதிகளுக்குக் குழந்தைகளே இல்லாததால் ஏதாவது 'அடாப்ஷன்' எடுத்துக் கொள்ள தகுந்த குழந்தை இருந்தால் சொல்லச் சொல்லி பல முறை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அதனால் மதுவை அவர்களிடம் கொடுப்பதற்காகப் புறப்பட்டேன்.

'நான் போனபொழுது அவர்கள் வீட்டைக்காலி செய்துவிட்டு வேறு வீட்டிற்கு மாறிவிட்டதாய்த் தெரிய வந்தது. அரும்பாடுபட்டு புதிய விலாசத்தைத் தேடிப் பிடித்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்கு போனபொழுது, ரப்பர் பத்தைப்போல கொழு கொழுவென்று அழகான ஒரு பெண் குழந்தை அவர்கள் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தது. அவர்களின் சிநேகிதர் ஒருவரின் மகளாம். எடுத்து வளர்க்கத் தொடங்கி ஒரு வருடமாகிறதாம். நான் மனமொடிந்து விட்டேன்.

நான் மதுவோடு திரும்பி வரப்போனபொழுது, போகட்டும் இந்தக் குழந்தைகூட நன்றாய்தான் இருக்கிறது—இதையும் சேர்த்து வளர்க்கிறோம். ஒரு மகள் ஒரு மகனாய் இருப்பார்கள்'— என்று சொன்னாள் அம்மனைவி. நான் ஒப்புக்கொள்ளவில்லை

'பெற்ற தாயின் அன்பு புஷ்பக விமானத்தைப் போன்றது. அதில் எத்தனை பேர் ஏறினாலும் இடம் இருக்கும். வளர்த்த அன்பு அப்படிப்பட்டதில்லை. அது கத்தி உறையைப் போன்றது, ஒரு உறைக்குள் இரண்டு கத்திகள் எப்பொழுதுமே ஒன்று ஒன்று கூடாது.'

—என்று சொல்லி விட்டேன்.மதுவை என்னுடனேயே திருப்பி அழைத்து வந்துவிட்டேன். அதற்குள் அவன் என்னிடம் நன்றாய்ப் பழகிவிட்டான். அவனை நானே வளர்த்து ஏதாவது கிறிஸ்தவ மிஷினரியில் சேர்த்து ஃபாதராக்கி விடலாம் என்று முடிவெடுத்துக் கொண்டேன். அந்தச் சமயத்தில் திடீரென்று அந்த ஜமுனா என்றபெண் வந்து......'



11352
296852

'ஜமுனாவா?'

'ஆமாம். ப்ரமோத் தங்கை.'

ஸ்ராவணி இயந்திர கதியில் தலையை ஆட்டினாள்.

பிறகு சிஸ்டர் மகேந்திரன் ஜமுனாவிடம் வந்து மதுவைப் பெற்றுக்கொண்டு போனதுவரை நடந்ததைவிவரித்துச் சொல்லிவிட்டு,

'நீ இங்கேயே இருந்தும்கூட உன்னைப்பற்றி அவன் என்னிடம் சொல்லாமல் போனதற்கு காரணம் என்ன?'—என்று கேட்டார்.

ஸ்ராவணிக்கு சிஸ்டர் சொன்ன கடைசி வார்த்தைகள் காதில் விழவேயில்லை. அவள் கண் முன் எத்தனையோ காட்சிகள் நிழலாடின.

தன்னை 'அம்மா' என்று அழைக்கச் சொல்லி மதுவிற்கு அவன் கற்றுத்தந்தது, அவ்னை அடிக்கும் உரிமை உனக்கு உண்டு என்றது,... எத்தனையோ.!

மகேந்திரன் அப்பொழுதே ஏன் தன்னிடம் சொல்லவில்லை? நம்பமாட்டேன் என்றெண்ணியா? சிஸ்டரைக் கூட்டிக் கொண்டு வந்து நிருபித்திருக்கலாமே. எல்லாம் நாடகம் என்று தள்ளி விடுவேன் என்றெண்ணியிருப்பானா? அதுவும் உண்மையே.

இப்பொழுது எதிர்ப்பாராமல் சிஸ்டர் சொன்னதால் தான் நம்பமுடிந்ததேயன்றி, இல்லாவிட்டால் அவளால் நம்பத்தான் முடிந்திருக்குமா.?

'அதிர்ச்சியாய் இருக்கிறதா?' சிஸ்டர் மதுவைக் கீழே இறக்கி விட்டு விட்டு ஸ்ராவணியிடம் வந்து தாடியைப் பார்த்து விட்டு, அன்பாய்ச்சிரித்தார்.

'சிஸ்டர்' ஸ்ராவணி அவர் யூனிஃபாரத்திற்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

'தைரியத்தை ஏற்படுத்திக் கொள்! உனக் கென்னம்மா தெரியும்? உன்னை இங்கே பார்த்ததும் நீங்களிருவரும் ஒன்று கூட விட்டீர்கள் என்று நினைத்து விட்டேன். ஸ்ராவணியின் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னார்.

ஸ்ராவணி சட்டென்று சிறு பெண்ணைப் போல சிஸ்டரைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டாள். எத்தனையோ ஆண்டுகளாய் ஊமையாய் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனையும், இப்பொழுதெல்லாம் அடிக்கடி அனுபவித்துக் கொண்டிருந்த துக்கமும் உருக்கிக் கண்ணீராய்ப் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

# 47

வெகுநேரங் கழித்து ஸ்ராவணி சமையலறையை நோக்கி வந்தாள். ஆயா ஸ்ராவணி வந்ததை கவனிக்காதவளைப் போல அங்குமிங்கும் சுற்றிக் கொண்டே வேலைசெய்து கொண்டிருந்தாள். அவள் தோரணையைப் பார்த்தால் வேண்டும் மென்றே ஸ்ராவணியிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேலையை வரவழைத்துக் கொண்டதாய்த் தோன்றிற்று.

பத்து நிமிஷம் பார்த்து விட்டுக் கடைசியில் தானே ஆயா விடம் வந்தாள் ஸ்ராவணி.

'ஆயா, இது உண்மைதானா? மது...' அதற்குமேல் ஸ்ராவணியால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை.

'அவன் சங்கதியை ஏன் என்னிடம் சொல்லவில்லைன்னு உலுக்கி எடுக்கிறாய். அவ்வளவுதானே?



இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு உன் முன்னால் நின்று பதில் சொல்ல வேண்டியிருக்கும்னு நினைத்திருக்கவேயில்லை. உங்கப்பா சொல்ல வேண்டாம்னாரு. சொல்லவில்லை. அவர் ஒரு முறை உத்தரவிட்டுவிட்டால் அதைக் கனவிலும் மீறி விடமுடியாதுன்னு உனக்கும் தெரியுமோனோ?'

'ஆனால் ஆயா...' ஸ்ராவணி வேதனையில் இறங்கப் போனபொழுது ஆயா இடைமறித்து விட்டு—

'ஆனால் எனக்கென்ன தெரியும், சொல்லு? கையும் காலும் சூம்பிப் போய், ஒரு மாமிச மொத்தையாய் இருந்த அவன் தான் இந்தத் தங்கக்கட்டி என்று கனவு கண்டேனா? அப்பொழுது அந்த நரசுங்களும் மற்றவங்களும் அந்தப் பிராணி ஓரிரண்டு நாட்களுக்குமேல் பிழைத்திருக்காது என்றுவேறு சொல்லிவிட்டார்கள். ஆனால் அப்போது எங்கள் கவனமெல்லாம் உன் ஆரோக்கியத்தின் மீதுதான் இருந்தது.' என்று சொல்லி விட்டுத் திரும்பவும் தன் வேலையைப் பார்த்துக் கொள்ளத் தொடங்கினாள். ஆயா என்றுமே இதுபோல வீறாப்பாய்ப் பேசி அறிந்திராத ஸ்ராவணி திகைத்துப் போய்விட்டாள்.

கடைசியில் ஸ்ராவணி துணிந்தே கேட்டுவிட்டாள்.

'ஆயா, மகேந்திரனாவது உன்னிடம் எப்பொழுதாவது......'

'சொல்லவில்லை. குறைந்தபட்சம் மது யார் என்று சந்தேகம் ஏற்படும்படியாய்க்கூட நடந்துகொள்ளவில்லை அவன் சங்கதியை விடு. ஆம்பிளை. ஏன் நீ மட்டும்? மகேந்திரன் யார் என்று எப்பொழுதாவது ஜாடையாகவாவது என்னிடம் சொல்லியிருக்கிறாயா? சிறுவயதிலிருந்தே உன்னைப் பெற்ற தாயைவிட மேலாய் வளர்த்து ஆளாக்கியிருக்கேனே! இந்த உலகத்தில் எல்லாவற்றைக்காட்டிலும்

உன் ஷேமத்தை மட்டுமே– உன் சுகத்தை மட்டுமே பெரிதாய்ப் பாவிக்கிற என்னிடம் ஒரு வார்த்தையாவது சொன்னாயா?

'எத்தனை இரவுகள் பக்கத்தில் படுத்திருக்கும் எனக்கு எங்கே விழிப்பு வந்து விடுமோ என்று அஞ்சிக் கொண்டே குப்புறப்படுத்தவாறு விசும்பிக்கொண்டிருப்பாய்! அந்த உன் வேதனை என்னவென்று என்றாவது என்னிடம் சொல்லியிருக்கிறாயா?

'நான் மட்டும் என்ன பண்ணிவிட முடியும்? பார்த்தும் சும்மாயிருக்க முடியாமல், உன்னை அதிகாரத்தில் தட்டிக் கேட்கவும் ஆணையிடவும் முடியாமல் நான் எவ்வளவு வேதனைக்கு ஆளாகியிருப்பேன்னு யோசித்தாவது பார்த்திருக்கிறாயா?

'நீ என்னை ஒரு சக மனுஷியாய் கவனித்திருந்தால் தானே புரியும்? வேலை வெட்டி செய்து கொண்டு விழுந்துக் கிடக்கிற ஒரு இயந்திரமாய் தானே பார்த்து வந்திருக்கிறாய்!'

'ஆயா!' சிலையாய் நின்று கொண்டிருந்த ஸ்ராவணி கத்தி விட்டாள். ஆயா அந்த கத்தலைப் பொருட்படுத்தவில்லை.

'நீ மழையில் நனைந்து ஜுரத்தில் படுத்திருந்தபோது புலம்பிய வார்த்தைகளின் மூலமாய் எனக்கு இதெல்லாம் தெரிந்து விட்டது. மது யார் என்று எனக்கு அப்பொழுது தெரியாமல் போனாலும், மகேந்திரனின் வாழ்க்கையில் அவன் தாய்க்கு அதிகமாய் இடமில்லை என்றும் உன்னைத் தான் அவன் மிகவும் நேசிக்கிறான் என்றும் புரிந்துக் கொள்ளத் தொடங்கினேன். அதனால் அவனை அதிகமாய் உதாசீனம் பண்ணாதேன்னு உனக்குச் சொல்லி எச்சரிக்க நினைத்தேன். ஆனால் தைரியமில்லாமல் என்னால் அந்த காரியத்தைப் பண்ண முடியவில்லை.



'ஏன்? நீ எவ்வளவு உரிமைகளைத் தந்த போதிலும் அவ்வப்பொழுது நீ எஜமானி நான் வேலைக்காரி என்ற சுபாவம் உன் வார்த்தைகளிலும், நடவடிக்கைகளிலும் பிரதிபலித்துக் கொண்டேயிருந்தன. அதனால்தான் எனக்குத் துணிச்சல் இல்லாமல் போய் விட்டது.'

'ஆயா!'

'என்றாவது ஒருநாள் நீயே அவனைப் புரிந்துக் கொள்வாய் என்றும், நீங்களிருவரும் ஒன்று சேர்ந்து விட்டால் உங்கள் நிழலில் என் எஞ்சிய காலத்தைக் கவலையின்றி கழிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அது கூட இப்பொழுது நிராசையாகி விட்டது.

மது உனக்குப் பிறந்த குழந்தை தான் என்று சிஸ்டர் சொன்னதைக் கேட்டு, தலைச் சுற்றத் தொடங்கி விட்டது எனக்கு. ஆனந்தம், ஆச்சரியம், இன்னும் என்னென்னவோ உணர்ச்சிகளும் என்னைத் திணறடித்தன. அப்பொழுதே அந்தக் குழந்தை என்னவாயிற்றுன்னு ஆசுபத்திரிக்குப் போய் பார்த்துட்டு வர நினைத்தேன். ஆனால் நேரம் ஏது..?

அதற்குள் அந்த ரஜாக்கர் இயக்கமும், துப்பாக்கி வெடிப்புக்களும், வந்துசேர்ந்துவிட்டன. வெளியே தலைக் காட்டவே முடியவில்லை. அதற்கப்புறமாய் இங்கே வந்துட்டோம். என்ற ஆயா சட்டென்று தேம்பிக் கொண்டே இரு கைகளையும் குவித்தபடி.

'ஸ்ராவணி! உனக்குக் கோடி கும்பிடு அதையெல்லாம் திரும்பவும் எனக்கு நினைப்பூட்டிக் கொல்லாதே என்னை. என்னால் தாங்க முடியாது; எனக்கு சக்தி இல்லை.' என்றாள்.

'ஸ்ராவணி தூக்கத்தில் எழுந்து நடப்பவளைப்போல தட்டுத்தடுமாறிக் கொண்டே ஆயாவிடம் வந்தாள்.

ஆயாவின் கூப்பிய இரு கரங்களையும் தன் கைகளால் பற்றிக் கொண்டே..,

'என்னை மன்னித்து விடு ஆயா! நான் பாஷாணமாய் ஏன் மாறிப்போனேன்னு உன்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது ஆயா! என் வருத்தத்தில் ஆழ்ந்துபோய் எனக்காக ஒரு உயிர் வருந்தப்பட்டுக் கொண்டிருக்கிறதைப் புரிந்துக் கொள்ள முடியாமல் போயிட்டேன். அது என் தப்புத்தான். என் முட்டாள் தனத்தை மன்னித்து விடு.

என் வேதனைகளை உன்னிடம் சொல்லிக் கொள்ளாததற்குக் காரணம் நீ. வேற்று மனுஷி என்ற எண்ணத்தாலோ, வேலைக்காரி என்று எண்ணியோ இல்லை. இப்பொழுதே என் தொல்லையாலும் எங்கள் இருவரின் பாரத்தாலும் உன்னை மிகவும் சிரமப்படுத்திவிட்டோம்.

'நானும் கிர்த்தியும் உனக்குக் கால்கட்டாய் இல்லாமலிருந்திருந்தால் நீ எங்கேயாவது நிச்சிந்தையாய் இருந்திருப்பாய்.

'பெற்ற தாயை எனக்குத் தெரியாது. ஒருக்கால் இருந்திருந்தாலும் நீ கட்டிய அன்பைவிட அதிகமாய் ஒன்றும் என் மேல் அன்பு காட்டியிருக்க முடியாது. எனக்காக இவ்வளவு பண்ணியிருக்கிற உனக்கு சுகத்தைத் தரக்கூடிய காரியம் எதையும் செய்யவில்லையேன்னு நான் பட்ட துன்பம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. நான் உன்னை— அலட்சியப் படுத்தவில்லை. என்னை நம்பு.'

'ஸ்ராவணி!' ஆயா சட்டென்று ஸ்ராவணியைக் கிட்டே இழுத்து அணைத்துக் கொண்டாள்.

'இந்தக் கிழவியின் வார்த்தையைப் பொருட்படுத்த வேண்டாம். நான்தான் தவறாய்ப் புரிந்து கொண்டு விட்டேன். நீ அதை என் மேல் ஆணையாய் மனதில்



வைத்துக் கொள்ளக்கூடார்து. மறந்து விடுவோம். இந்த நிமிஷத்திலிருந்து நடந்ததையெல்லாம் மறந்து விடுவோம். இத்தனை நாளாய் நடைப்பிணங்களாய் கழித்து வந்தோம். அதெல்லாம் இன்றோடு ஒழியட்டும்.'

'ஆமாம், ஆமாம், என்னால்கூட இதைத்தாங்கிக்க முடியாது இனி.' விசும்பலுக்கிடையே பதிலளித்தாள் ஸ்ராவணி. ஆயாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த ஸ்ராவணியின் மூடியிருந்த கண்களுக்கு முன்னால் ரஜாக்கர் இயக்கத்தின்பொழுது நடந்த என்னென்னவோ காட்சிகள் மளமளவென்று சுழலத்தொடங்கின...

அன்றிரவு கத்தல்கள் கூச்சல்கள், கதவுகளை உடைத்தெறிந்து கொண்டிருந்த சப்தங்கள், வீட்டில் ஆயுதம் சேவகர்கள் துப்பாக்கிகளை வெடித்துத் தள்ளிய சப்தங்கள்—பூட்சு சப்தங்கள், தந்தை எழுந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு எதிர்க்கப் போனது,

'ஓரடி முன்நோக்கி எடுத்து வைத்தாலும் ஒழிந்தீர்கள்'

—அவர் உருது மொழியில் உறுமியது, அந்த உறுமல் முடியும் முன்பே துப்பாக்கி வெடித்த சப்தம், திடீரென்று வீலென்ற அலறல்!—அந்த அலறல் யாருடையது என்று தெரிந்து கொள்ள முடியாதபடி புகைமண்டலம் கிளம்பி அடங்கி ஓய்வதற்குள் மார்பில் அடிப்பட்ட இடத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு, பந்தாய் உருண்டு விழுந்து கொண்டிருந்த தந்தை.... அவள் பார்த்துக் கொண்டிருந்தபொழுதே அவர் இமைகள் இரண்டும் சொருகிக் கொண்டது; அடுத்த வினாடியே உயிரற்று விழுந்தது—அவள் வீலென்று கத்த போனபொழுது ஆயா சட்டென்று அவள் வாயைப் பொத்தி ஒரு பக்கமாய் இழுத்துக் கொண்டு போனது—அவள் வாயை அழுத்த

மாய் மூடிக்கொண்டு வரும் அழுகையை அடக்கிக்கொள்ள பாடுபட்டது. அதற்குள் அறைக்குள் தாதா ஓட்டமாய் ஓடிவந்து ஆயாவிடம்.

'குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு தோட்டத்திற்கு ஓடிப்போ! வடக்குப் பக்கமாய் போங்கள். நான் அவங்க அந்த பக்கமாய் வராமல் பார்த்துக்கறேன்.'

என்று மின்னலாய்த் திரும்பி வெளியே ஓட்டமெடுத்தது, அவளும் கீர்த்தியும் உயிரை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு ஆயாவோடு தோட்டத்திற்கு ஓடியது, கடைசியில் மதில் சுவரில் ஏறி அந்தப் பக்கமாய் குதிக்கப் போன பொழுது அந்தப் பயத்தில் கீர்த்தியின் பிடி நழுவி கீழே விழுந்து, எழுந்திருக்க முயன்ற பொழுது, 'அம்மா' என்று வலியால் துடித்துக் கொண்டே கீழே விழுந்தது. ஆயாவும் அவளும் அவன் வாயைப் பொத்தி விட்டு இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு, அவன் வலியால் துடிக்கத் துடிக்க இழுத்துக் கொண்டே, மறைவாய் இருந்த ஓரிடத்தில் போய் மூச்சிரைக்க நின்றது...'

அதற்குள் அங்கே ஆயாவுக்குத் தெரிந்த சேவகன் ஒருவன் வந்தது—அவர்களை அடையாளம் புரிந்துக் கொண்டு அரும்பாடுபட்டு உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்களைக் கொண்டு போய் பாதுகாப்பான இடத்தில் தங்கச் செய்தது—

மறுநாள் அவனே திரும்பவும் வந்து தாதா இறந்து விட்டார் என்று சொன்னது, ஆயா ஓவென்று கதறி அழுதது,...அவள் உடனே ஆயாவை சமாதானப்படுத்தியது—இன்னும் என்னென்னவோ காட்சிகள்!

ஸ்ராவணி தலையைச் சிலிர்த்துக் கொண்டே 'வேண்டாம், வேண்டாம். என்னால் தாங்கிக்க முடியாது. எனக்குக் கூட பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கு' என்றாள் தேம்பிக் கொண்டே.



வெகு நாட்களுக்குப் பிறகு அவ்வாறு வந்து தன்னைக் கட்டிக் கொண்ட ஸ்ராவணியைப் பார்த்துமே ஆயாவின் இதயத்திலிருந்த அமைதியின்மை மாயமாகி கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பிற்று.

ஸ்ராவணிக்கு மது தன் மகன் என்று தெரிந்ததுமே மகேந்திரனை வேறு யாரோவாய்ப் பாவிக்கமுடியவில்லை.

அவன் ஏன் இதையெல்லாம் அவளிடம் சொல்லவேயில்லை. அவள் அதற்கு இடந்தரவில்லையா? இவ்வளவு வருத்தங்களையும் ஊமையாய் அனுபவித்து வரவேண்டிய காரணம் என்ன?

இவ்வளவு நாளாய் மதுயார் என்று தன்னிடம் சொல்லாத மகேந்திரன்பால் அவளுக்குக் கோபம்கூட வந்தது. சூரிய கிரணம் பட்டதுமே பனிக்கட்டி உருகிப் போய் இயற்கையின் அழகு தெளிவாய் தெரியத் தொடங்கினாற் போல மகேந்திரன்பால் துவேஷம் மறைந்ததுமே அவனுடைய நல்ல குணம் நன்றாய்ப் புரியத் தொடங்கியது.

ஒருமுறை நன்றாய் அலசி ஆராய்ந்துபார்த்தபொழுது அவன் பண்ணிய ஒவ்வொரு காரியத்திற்கும் பின்னால் ஒரு அர்த்தமும், பேசிய ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னால் வேதனையும், பலவந்தமாய் வரவழைத்துக் கொண்ட பொறுமை எல்லாம் புரிந்தன.

மாறிய மனதை அவனுக்குப் புரியும்படியாய்ச் சொல்ல விடத் துடித்தாள். மகேந்திரனின் வரவிற்காக காத்திருக்கத் தொடங்கினாள். சிஸ்டர் விடைப்பெற்றுக் கொண்டு போய் ஒருவாரமாகி விட்டது.

# 48

மகேந்திரன் இருந்த இடம் தெரியவில்லை. ஏதோ சாக்கில் கம்பெனிக்கு கோபாலை அனுப்பி விசாரித்துக் கொண்டேயிருந்தாள் ஸ்ராவணி. எவ்வளவு முயன்றும் ஒன்றுமே தெரியவில்லை.

அவன் டூரில் இருக்கிறான் என்றும், தற்சமயம் எந்த ஊரில் இருக்கிறான் என்று திட்டவட்டமாய்ச் சொல்ல முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள். நாட்கள் ஆக ஆக ஸ்ராவணிக்கு திகில் அதிகரித்துவிட்டது. அன்று மாலையில் ஸ்ராவணி தன் அறையில் உட்கார்ந்து மதுவின் சட்டைக்கு பட்டன்களைத் தைத்துக் கொண்டிருந்த போது வெளியே கார் ஹாரன் சப்தம் கேட்டது. ஸ்ராவணி திடுக்கிட்டாள். கார் உள்ளே வந்து நின்ற சப்தம் கூட கேட்டது. அறையில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்த மது எழுந்தது.,

'அப்பா வந்துட்டார், அப்பா வந்துட்டார்' என்று வெளியே ஓடினான்.

ஸ்ராவணி தானும் உடனே எழுந்து வெளியே போக முயன்று, அதற்குள் திரும்பவும் உட்கார்ந்து தைக்கப் போனாள். ஆனால் அவள் கவனம் தையலில் இல்லை. ஊசி விரலில் இறங்கிவிட்டது. உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் வற்றிப்போய் முகத்தில் குப்பென்று பொங்கினாற் போலிருந்தது. அடுத்த நிமிஷமே மிக சமீபத்தில் கேட்கப்போகும் காலடி சப்தத்திற்காகக் காத்திருந்தவாறு இதயம் படபடக்க. அதற்குள் ஆயா உள்ளே எட்டிப் பார்த்து விட்டு —

'நீ இங்கேயா இருக்கிறாய்? யாரோ வந்திருக்காங்க. நீ வேண்டுமென்று கூப்பிடுகிறாங்க' என்றாள்.



ஸ்ராவணி நிமிர்ந்து நின்றாள். கையிலிருந்த சட்டை நழுவி விழுந்தது 'என்னையா?' என்றாள் ஆச்சரியத்தோடு. அப்படியென்றால் வந்தது மகேந்திரன் இல்லையா?

அப்பப்பா! ஏமாற்றம் இத்தனைக் கூரியதாய் தாக்கவல்லது என்று அவளுக்கு இது தெரியாது.

'உன்னைத்தான்! இந்த வீட்டில் ஸ்ராவணி என்கிறவர் யார், என்று கேட்கிறாங்க கம்பெனியிலிருந்து வந்திருக்காங்களாம்!'

ஸ்ராவணியின் இதயத்தில் பொங்கிக் கொண்டிருந்த சூடான ரத்தம் மெல்ல மெல்ல குளிர்ந்து போயிற்று. ஆயா சொன்னது என்ன என்று புரியாதவளாய் எழுந்து வெளியே வந்தாள்.

ஸ்ராவணி வந்ததுமே அங்கே நின்று கொண்டிருந்த மூன்று ஆண்களும் ஒரே சமயத்தில் வணங்கினார்கள். ஸ்ராவணியும் அவர்களை வணங்கினாள். அவர்களுள் பைஜாமாவும், ஜிப்பாவும் உடுத்தியிருந்த ஒருவர் முன்னுக்கு வந்து என் பெயர் சிவசந்திரன். நான் உங்கள் கம்பெனியின் லீகல் அட்வைசர்' என்றான்.

ஸ்ராவணிக்கு அவன் சொன்னது எதுவுமே புரியவில்லை, கண்கள் விரிய பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இவங்க ரெண்டு பேரும் உங்கள் பார்ட்னர்கள்.' எஞ்சிய இருவரையும் பரிச்சயம் பண்ணினான்.

'உட்காருங்கள்!' என்றாள்.

'நீங்களும் உட்காருங்கள்' என்றான் சிவசந்திரன்.

ஸ்ராவணி உட்காரவில்லை. நாற்காலிக்குப் பின்னாடி நின்று கொண்டாள். மூவரும் உட்கார்ந்துக் கொண்டார்கள்.

ஒருத்தன் கதவிற்குப் போடப்பட்டிருந்த திரைச்சீலைகளையும் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த படங்களையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

இன்னொருத்தனின் பார்வை தரையை நோக்கிக் கவிழ்ந்திருந்தது. சிவசந்திரன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டே,

'உங்களுக்கு எப்படிச் சொல்றதுன்னே தெரியலை' என்றான்.

'என்ன விஷயம்?' என்றாள் ஸ்ராவணி. மூவரும் ஒருவர் முகத்தை இன்னொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

'சொல்லுங்கள்' என்றாள் ஸ்ராவணி.

அவர்கள் தோரணையைப் பார்த்தால் ஏதோ சொல்லத் தயங்கினாற் போலிருந்தது

'சமீபத்தில் கல்கத்தாவுக்கருகில் ஏற்பட்ட ரயில் விபத்தைப் பற்றிப் பேப்பரில் படித்திங்களா?'

'ஸ்ராவணி இல்லை என்று தலையாட்டினாள். ஆனாலும் அதற்குள் இவர்கள் வரவிற்கும் என்ன சம்பந்தம் என்று புரியாமல் பயத்தாலும் சந்தேகத்தாலும் பீதியடைந்துக் கொண்டிருந்தாள்.

அதில் நிறைய பேருக்குக் காயம் ஏற்பட்டது பலர் இறந்து விட்டார்கள். சமீபத்தில் அவ்வளவு பெரிய ரயில் விபத்து இதற்கு முன்னால் நேர்ந்ததேயில்லை.'



ஸ்ராவணியின் கைகள் நாற்காலியை அழுத்திப் பிடித்துக் கொண்டன.

'மகேந்திரன் அதே ரயிலில் தான் இருந்திருக்கிறார். இதோ, அதே ரயிலில் வருவதாய்த் தெரிவித்து, ஸ்டேஷனுக்குக் கார் அனுப்பச் சொல்லி அவர் கொடுத்திருந்த டெலிகிராமைப் பாருங்கள்.' சிவசுந்தரம் ஜேபியிலிருந்து டெலிகிராமை எடுத்துத் தந்தான். எவ்வளவு பேர்களின் கைகளில் பட்டிருக்குமோ அது, கசங்கிக் கிழியத் தயாராய் இருந்தது.

நடுங்கும் கைகளுடன் அதை வாங்கிப் பார்த்தாள். எழுத்துக்கள் சரியாய்த் தெரியவில்லை. செவியில் சமுத்திரத்தின் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. அது இன்னும் பெரிதாகி கிட்டே கிட்டே வந்து கொண்டே இருந்தது.

நாங்கள் உடனே அங்கே போய், கல்கத்தாவில் அவர் இருந்த ஓட்டலின் டாக்ஷிக்காரனே சுயமாய் அவரை ஸ்டேஷனில் இறக்கி விட்டு வந்ததாய்ச் சொன்னான்.'

'அப்படியென்றால்?' ஸ்ராவணியின் உதடுகள் அதிர்ந்தன.

'ஆக்ஸிடெண்ட் ஆனவங்கள் எல்லோரையும் சேர்த்திருந்த ஆசுபத்திரியில தேடிப்பார்த்தோம். கடைசியில் முகம் சிதைந்துப்போய் இரண்டு கால்களும் உடைந்திருந்த ஒரு சலத்தின் ஜேபியில் இவைகள் கிடைத்தன.'

இன்னொரு ஜேபியில் பர்சும் சிறிய டைரியும், ஒரு சாவிக் கொத்தையும் எடுத்து நடுவில் இருந்த மேஜை மேல் வைத்தான்.

'என்னது? என்ன சொல்றீங்க நீங்க?'

அதுவரை உள்ளே கதவிற்கருகில் நின்றபடி இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆயா பதற்றத்தோடு வந்து கேட்டாள்.

'எங்களால்கூட நம்ப முடியலை. ஆனால் இவற்றைப் பார்த்த பிறகு,—

'சிவசந்திரன் மென்று விழுங்கினான். ஆயா தேம்பிக் கொண்டே'

'ஸ்ராவணி' என்று அவளை நோக்கிப் போகத் திரும்பினாள் அதற்குள் சுவரைப் பிடித்துக் கொண்டே தட்டுத்தடுமாறியபடி உள்ளே போய்க் கொண்டிருந்தாள் ஸ்ராவணி.

'நீங்கள் தைரியமாய் இருக்கணும்.' பின்னாலிருந்து சிவசந்திரன் சொல்லிக் கொண்டிருந்தான். அரும்பாடுபட்டு அடுத்த அறையைத் தாண்டிய ஸ்ராவணி அதற்கு மேல் சக்தியில்லாதவளாய்க் கீரையாய் துவண்டு விழுந்து விட்டாள்.

## 49

என்ன விரோதம்! எவ்வளவோ நாட்களாய் ஒவ்வொரு நிமிஷமும் கண்ணுக்கு முன்னால் சுற்றி வந்து கொண்டிருந்த ஆளைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. அவன் இல்லை என்று தெரிந்ததும் மனமெல்லாம் அவன் உருவமே நிரம்பி வழிந்துக் கொண்டிருந்தது. அவன் தான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி!

முற்றிலுமாய் அவனை இழந்து விட்ட பிறகு அவன் வேண்டும் என்று தவிக்கிறாள்! அன்று கடைசிநாள் மதுவைத் தன்னிடம் ஒப்படைத்ததும், அவனே கொண்டு வந்து தன் அறையில் படுக்க வைத்ததும் திரும்பத் திரும்ப நினைவிற்கு வந்து கொண்டிருந்தன.



எல்லாவற்றையும் விட விநோதம்— மகேந்திரன் தன் மரணத்தை முன் கூட்டியே அறிந்து கொண்டிருந்தாற் போல உயில் எழுதி வைத்திருந்தான் அதில் அவன் சொத்திற்கெல்லாம் வாரிசான மதுவிற்கு ஸ்ராவணியை கார்டியனாய் நியமித்திருந்தான். கீர்த்தியின் படிப்பிற்காகக் கொஞ்சம் தனியாய் ஒதுக்கியிருந்தான்.

தனக்குப் பிற்பாடு கீர்த்தி, மதுவைத் தன் சொந்தத் தம்பியாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், வளர்ந்து பெரியவனாகிய பிறகுஎந்த விஷயத்திலும் தான் இல்லாத குறை ஏற்படாமல், தந்தையைப் போல பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டிருந்தான். தன் கர்ம காரியங்களைச் செய்வதற்குப் பணத்தை வீணாய் விரயம் பண்ணக்கூடாது என்றும், ராம்நாராயணனின் ஆசுபத்திரிக்குத் தன் பெயரில் கொஞ்சம் பணம் நன்கொடையாய்த் தர வேண்டியது என்றும் குறிப்பிட்டிருந்தான்.

தான் உயிரோடிருக்கும்வரை மதுவின் நலனை கவனித்துக் கொள்ள வேண்டியதாய் ஆயாவைக் கேட்டுக் கொண்டிருந்தான். அதற்குப் பிரதிபலனாய் ஆயாவுக்கு உணவிற்கும் உடைக்குமாய்க் கொஞ்சம் பணத்தை ஒதுக்கியிருந்தான்.

ஸ்ராவணி தனக்காகக் கட்டப்பட்டிருந்த வீட்டை அரசாங்கத்திற்கு' ஆசுபத்திரி வைப்பதற்காகக் கொடுத்து விட்டாள்.

அன்றிரவு!—

மது உறங்கி விட்டான். ஆயாகூட படுத்துவிட்டாள். மழைக்காலம். குளிர் அதிகமாயிருந்தால் சீக்கிரத்திலேயே ஊர் அடங்கி விட்டது.

ஸ்ராவணி புத்தகம் ஒன்றை மடியில் பிரித்துவைத்துக் கொண்டு, இரு கைகளாலும் முகவாயைப் பிடித்துக் கொண்டு சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சில இரவுகளாய்க் கண்கள் உறக்கத்தை மறந்து விட்டிருந்தன. மணிக்கணக்காய் அவ்வாறு சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்க வேண்டும் போலிருக்கும். சூனியத்தைத் தவிர தனக்கு எஞ்சியிருப்பது வேறெது என்று தோன்றியது. இவ்வாறு பல இரவுகள் கழிந்து விட்டன. இந்த வீட்டிலேயே அவள் வாழ்க்கை விடிந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

மது வளர்ந்து பெரியவனாவான். அதற்குள் கீர்த்தி குழந்தைகளுக்குத் தந்தையாகக் கூட ஆகி விடுவான். அவர்களுக்கிடையே அமைதியில்லாத மனதுடன், குமுறும் இதயத்துடன், மானசீக நோயால் அதிசீக்கிரத்தில் வயோதிகமடைந்துபோய் வாழ்க்கையை ஓட்ட வேண்டியிருக்கும். அதுதான் அவளுடைய எதிர்காலம். இதைவிட வேறென்ன இருக்கப் போகிறது அவளுக்கு? எவ்வளவு பயங்கரம்! நரகம்!

இவ்வாறு வேற்று யோசனையுடன் ஸ்ராவணி இருளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது வாசலில் கார் ஓசையைக் கேட்டு திடுக்கிட்டாள். காதுகளைத் தீட்டிக் கொண்டாள். சந்தேகமில்லை. அவள் பிரம்மைப்படவில்லை.

உண்மையிலேயே கார் ஓசை கேட்கிறது. ஸ்ராவணி எழுந்து 'கோபால்' என்று கூப்பிட்டுக் கொண்டே வராந்தாவிற்கு வருவதற்குள் கார் வீட்டின் முன்னால் வந்து நின்றது.

லாயர் சிவசந்திரனின் கார் அது. இந்த அர்த்த ராத்திரி வேளையில் அவனுக்கு இங்கே என்ன வேலை?



ஏதோ தீயதை எடைப் போட்டுக் கொண்ட ஸ்ராவணி, 'கோபால்' என்று இன்னொரு முறை இரைந்து கூப்பிடப் போனாள். வாய் பெயரவில்லை.

காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தது சிவசந்திரன் இல்லை...யாரோ!

அவ்விடத்தில் இருள் அடர்த்தியாய் இருந்ததால் மனித உருவம் நன்றாய்ப் புலப்படவில்லை. மங்கலான நிலா வெளிச்சத்தில் காரை விட்டிறங்கிய ஆள் டிரைவரிடம் ஏதோ சொல்லி விட்டு, மெதுவாய் தலை குனிந்தபடி படியேறி மேலே வந்து கொண்டிருந்தது தென்பட்டது.

கொஞ்ச நேரம் நிலா வெளிச்சம் அவன் மேல் பட்டதுமே மெல்ல உருவம் புலப்பட்டது ஸ்ராவணியின் தேகம் நடுங்கத் தொடங்கி விட்டது.

யோசனையில் ஆழ்ந்தபடி படியேறி மேலே வந்து கொண்டிருந்த அவன், வீலென்ற அலறல் கேட்கவே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

வராந்தாவில் தூண் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ராவணியைப் பார்த்ததுமே சட்டென்று நின்று, 'ஸ்ராவணி' என்றான் தன்னையறியாமலேயே.

'நீங்கள்...நீங்கள்' தான் பார்த்துக் கொண்டிருப்பது கனவா நினைவா என்று புரியாமல் திணறினாற்போல வந்தது பதில்,

'ஸ்ராவணி! நான்தான் மகேந்திரன்! பயப்படவில்லையே நீ?'

சிரிப்பை வரவழைத்துக் கொண்டே பேசிய அவர் வார்த்தைகள் முடியக்கூடவில்லை. அதற்குள் ஸ்ராவணி சுழற்காற்றாய் ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டே, 'நீங்கதானா, நிஜமாகவே நீங்கதானா?'

என்று அழத் தொடங்கி விட்டாள்.

ஸ்ராவணி!' ஏதோ சொல்ல முயன்ற அவன் குரல் பெயரவில்லை கைகள் தன்னையறியாமலேயே ஸ்ராவணியின் தோளைப் பிடித்து கிட்டே இழுத்துக் கொண்டன.

இருவரும் வெளியே வந்தபோது வராந்தாவின் படியிறக்கத்தில் நின்று மகேந்திரன் ஸ்ராவணியின் தோள்களைப் உலுக்கி விட்டு வெறிப்பிடித்தவனைப் போல 'ஸ்ராவணி!| ஸ்ராவணி!' என்று பிதற்றத் தொடங்கினான். அதற்குள்ளாகவே சலனம் ஒடுங்கிப் போய் விட்ட ஸ்ராவணியின் மேனி கிரையாய்த் துவண்டு அவன் கைகளில் நிலைவற்றுச் சரிந்து விட்டது.

## 50

ஸ்ராவணிக்கு விழிப்பு வந்தபோது பக்கத்தில் ஆயாவைத் தவிர வேறு யாருமே இல்லை.

'ஆயா! என்றவள் தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டாள். சற்று முன்னால் நிகழ்ந்தது உண்மைதானா என்ற சந்தேகம் ஏற்பட்டது,

ஆயாவின் கண்கள் தொலைவில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த மகேந்திரனை நோக்கித் திரும்பிற்று.

மகேந்திரன் எழுந்து ஸ்ராவணியிடம் வந்தான்.

ஆயா ஏதோ வேலை இருந்தாற்போல மெதுவாய் அங்கிருந்து எழுந்து வெளியே போய்விட்டாள்.

மகேந்திரன் இமைக்காமல் ஸ்ராவணியையே பார்த்தான். ஸ்ராவணியின் கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன. ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டிருந்தாற் போல லேசாய் அதிர்ந்து கொண்டிருந்தன உதடுகள்.



இருட்டில் தடவினாற் போல சூனியத்தை நோக்கிக் கைகளை நீட்டினாள் அவள்.

மகேந்திரன் இதை ஒன்றையும் கவனிக்காமல் அப்படியே நின்றான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. எதையோ தேடினாற்போல சூனியத்தில் நெளிந்த ஸ்ராவணியின் கைகள் அவன் கண்களில் தென்பட்ட உணர்ச்சியைப் பார்த்து விட்டு, மெல்ல மெல்ல கீழே தாழ்ந்து, போர்வையின் விளிம்பை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டன.

'திடீரென்று அவன்,— 'பயப்படாதே! நிலைமை என்னை நிர்பந்தப்படுத்தி வீட்டிற்குத் திரும்பிவரும்படி பண்ணிவிட்டது. இரண்டு நாட்களுக்கு மேல் இருக்க மாட்டேன். இதுதான் நான் இந்த வீட்டிற்குக் கடைசியாய் வருவது.' என்றான்.

ஸ்ராவணியின் கண்ணீர் நிரம்பிய கண்கள் அகல விரிந்தன. அடுத்த நிமிஷம் புரண்டு தலையணையில் முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள். இதயத்தைப் பிழியும்படியாய், வெளிவந்த அந்த துக்கத்தைப் பார்த்தபிறகுகூட அவன் மனம் உருகவில்லை. கொஞ்ச நேரம் அப்படியே பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்த பிறகு, அவன் மெதுவாய் அங்கிருந்து வெளியே சென்று விட்டான்.

முதல் முதலாய் ஸ்ராவணி அதுபோல ஓடிவந்து கட்டிக் கொண்டபோது தன் ரகசியம் வெளிப்பட்டு விட்டதென்றும், தான் யார் என்று ஸ்ராவணி புரிந்து கொண்டிருக்கிறாள் என்றும் நினைத்தான். அந்த ஆசையால் ஏற்பட்ட சந்தோஷத்தோடு கிட்டே வந்து ஸ்ராவணியை

மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டாற்போல அழுத்தமாய் மார்போடு அணைத்துக் கொண்டான். நினைவுத் தப்பி விட்ட ஸ்ராவணியைத் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலில் படுக்க வைத்ததுமே, பரபரப்புடன் தன் அறைக்கு ஓடி வந்து, பழங்காலத்து இரும்புப் பெட்டியின் உள் அறையை இழுத்துப் பார்த்தான். பார்த்தவன் தூக்கி வாரிப் போட அப்படியே நின்று விட்டான்.

தான் போகும் போது எப்படி வைத்து விட்டுப் போனானோ அப்படியே இருந்தது. அவற்றைத் தொடவும் இல்லை என்று தெரிந்தது.

போகும் பொழுது கடைசி நாளன்று இரவில் அவன் உட்கார்ந்து முதலிலிருந்து கடைசி வரைக்கும் ஸ்ராவணி தன் வாழ்க்கையில் எப்படி நுழைந்தாள், எந்த விதமாய்ப் பிணைந்துக் கொண்டாள் என்றும் சிக்கலாகிவிட்ட தம் இருவர் வாழ்க்கையையும் அவனால் எப்படி ஒன்று சேர்க்க முடியவில்லை என்றும் விவரமாய்க் கதையைப் போல எழுதி வைத்திருந்த கடிதம் வைத்தது வைத்தாற்போலவே இருந்தது.

மகேந்திரன் மனதில் எற்பட்ட ஆனந்தம் அந்த நிமிஷத்திலேயே ஆவியாகி விட்டது. இறந்து விட்டான் என்று எண்ணியிருந்த ஆள், திடீரென்று கண் முன்னாடி தோன்றியதால் தற்காலிகமாய் ஏற்பட்ட மகிழ்ச்சி அது! அதைத் தவிர வேறில்லை.

இல்லாததை "ஊகித்துக் கொண்டு. நடக்காததற்கு ஆசைப்பட்டு, பிறகு வருந்துவது எதற்காக?

உண்மையை தைரியமாய் வரவேற்பதே நல்லது.

அதனால்தான் அவன் கொஞ்ச நேரத்திற்குமுன்னால் ஸ்ராவணி அதுபோல கையை நீட்டியபோது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.



மகேந்திரனைப் பார்த்ததுமே ஆயாவுக்கு என்றுமில்லாத பொறுமை வந்துவிட்டது. உடனடியாய்த் திரும்பவும் சமையல் செய்து அவள் குளிப்பதற்காக வெந்நீர் போட்டாள்.

ஸ்ராவணி ஒருவாறு அழுகையை அடக்கிக்கொண்டே எழுந்து வநது வேலையில் உதவி செய்ய முயன்றபோது, வேண்டாம் என்று தடுத்து விட்டாள் ஆயா.

சாப்பிட்டுக் கொண்டே மகேந்திரன் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். சமையலறைக் கதவிற்கு அந்தப் பக்கமாய் நின்று கேட்டுக் கொண்டிருந்த ஸ்ராவணிக்கு எல்லா வார்த்தைகளும் காதில்விழவில்லை. ரயில் விபத்து—அதற்கு முன்னால் யாரோ தன் டைரியை பிக்பாக்கெட் பண்ணியது—உடனே ரயில் விபத்து ஏற்பட்டது—ஏதேதோ தெளிவில்லாமல் விழுந்து கொண்டிருந்தன. ஆயா துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்த கேள்விகளுக்கெல்லாம் அவன் சுருக்கமாய்ப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடிந்ததும், கைகளைக் கழுவிக் கொண்டிருந்த அவன் ஆயாவைப் பார்த்துச் சொன்னான்:

'ஆயா! ரெண்டு நாள்தான் இருப்பேன்.இந்தஇரண்டு நாட்களுக்குள் உன் கை மணத்தைக் காட்டிவிடு பார்க்கலாம். இந்த முறை போனால் இப்போதைக்குக் திரும்பி வரமாட்டேன்' என்றான்.

ஸ்ராவணியின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்தாற் போலிருந்தது. ஆயா பதில் பேசவில்லை. அவன் துவாலையில் கையைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தபோது ஸ்ராவணி பாக்குப் பொடியை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் முகம் இருட்டில் இருந்ததால் அதில் எந்த உணர்ச்சி இருந்தது என்று ஸ்ராவணிக்குத் தெரியவில்லை.

# 51

அன்றிரவு மதுவைத் தூக்கிக் கொண்டு போய் மகேந்திரனின் அறையில் படுக்கவைக்கப் போனாள் ஸ்ராவணி. ஸ்ராவணி உள்ளே வந்ததைப் பார்த்ததுமே மகேந்திரன் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து லாந்தர் வெளிச்சத்தில் ஏதோ காகிதங்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவன், சட்டென்று அவற்றை மடித்து வைத்து விட்டு, ஜன்னலுக்கருகில் போய் நின்று கொண்டான்.

கொஞ்ச நாளாய் கற்பனையிலேயே அவனை ஊகித்துப் பார்த்துப் பார்த்து சோர்ந்துப் போய் விட்டிருந்த ஸ்ராவணிக்கு உயிரோடு எதிரே தென்பட்ட அவன் உருவத்தைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாததாய் இன்னும் இன்னும் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவனிடம் என்னென்னவோ கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அந்த சம்பிரத்தையும், பட்டும் படாமலும் இருந்ததையும் பார்த்ததும் அதைரியம் உண்டாகி, அவளைத் தொலைவிலேயே நிறுத்தி வைத்து விட்டன.

மதுவைப் படுக்க வைத்து விட்டு, வேண்டுமென்றே துப்பட்டியை சரி பண்ணிக் கொண்டு கொஞ்ச நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள், அவன் ஏதாவது பேசுவானா என்று எதிர்பார்த்து ஆனால் ஏமாற்றந்தான் எதிர்ப் பட்டது. அவன் திரும்பியும் பார்க்கவில்லை அதுவரை கையிலிருந்த காகிதத்தைக் கிழித்து, உருண்டையாக்கி, ஜன்னல் வழியாய் விட்டெறிந்துக் கொண்டிருந்தான்.

'உங்களுக்கு இன்னும் ஏதாவது தேவையா?' உயிரைப் பிடித்துக் கொண்டு கேட்டு விட்டாள் அவள்.



'ஊஹூம்!' கச்சிதமாய் சட்டென்று வந்தது பதில்- ஸ்ராவணி போகத் திரும்பினாள். அவன் தோரணைக்கு நிராசை அடைந்துவிட்ட மனம் அவளை பலவந்தமாய் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது.

நூதனமான அந்த உணர்ச்சியை அடக்கிக் கொள்வதற்கு அவளுக்கு சக்தி இல்லாமல் போய்விட்டது. அது வெளிப்பட்டு விடாமல் சலனமின்றி நடந்துகொள்ள வேண்டுமென்றால், எவ்வளவு முயன்றாலும் சாத்தியப் படவில்லை. அதுவும் அவன் இரண்டு நாட்களுக்கு மேல் இருக்க மாட்டேன் என்றதும், திரும்பி வரமாட்டேன் என்றதும் இன்னும் பயமுறுத்திக் கொண்டிருந்தன

'ஸ்ராவணி' திடீரென்று பின்னாலிருந்து கேட்டது. தலைப்பைப் பிடித்து இழுத்து நிறுத்தினாற்போல அப் படியே நின்று விட்டாள். மார்பு வேகமாய்ப் படபடத் தது. எவ்வளவு முயன்றாலும் பின்னால் திரும்பிப் பார்க் கவே முடியவில்லை அவளால்.

மகேந்திரன் சொல்லிக் கொண்டிருந்தான்:'ஸ்ராவணி! நோயால் சோர்ந்துப் போயிருந்த ஆள் வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே எவ்வளவு ஓய்வு தரவேண்டுமோ அவ்வளவும் தந்து விட்டாய். இதை நான் எதிர்பார்க்க வில்லை. இந்த ஜென்மத்தில் மறக்கமாட்டேன். குறைந் தது. இந்த ஒரு வேளையாவது என் மேலுள்ள துவேஷத்தை மறந்து போய் உதார குணத்துடன் நடந்து கொண்டதற்கு என்னால் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.'

ஸ்ராவணி திரும்பிப் பார்த்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த முகத்தில் தான் எவ்வளவு சலனமின்மை! உதார குணத்தை அவள் காட்டி விட்டாளாம். இதற்கு அவனால் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளாமல் இருக்க முடியாதாம்! யாருக்கு வேண்டும் அது!

குளிர்ந்த கையால் மென்மையாய்த் தொடுவான் என்றெண்ணியிருந்தவள், திடீரென்று கைநீட்டி கன்னத்தில் ஒன்று கொடுத்தால் எப்படி இருக்கும்? ஸ்ராவணியின் முகத்தில் கூட அதே உணர்ச்சிதான் பிரதிபலித்தது.

'தாங்க்ஸ் ஸ்ராவணி!' என்றான்.

ஸ்ராவணிக்கு அடியுண்ட புலியைப் போல ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. புஸ்ஸென்று திரும்பி 'இதுக்கு...இதுக்கு கடவுள்கூட மன்னிக்கமாட்டார்' என்றாள்.

ஸ்ராவணியிடம் திடீரென்று தோன்றிய இம்மாறுதலைப் பார்த்து வியப்படைந்து விட்ட அவன்,—' நான் என்ன பண்ணினேன்?' என்று கேட்டான் தன்னையறியாமல்.

'என்ன பண்ணினீங்கன்னுகூட தெரியாதா? மதுவைப் பற்றிய விஷயத்தை என்னிடம் ஏன் சொல்லவில்லை? சொல்லத் . தேவையில்லைன்னு நினைச்சுட்டீங்களா? அல்லது தெரித்து சொல்கிற அருகதைதான் எனக்கு இல்லைன்னு நினைச்சீங்களா?'

விக்கித்துப் போய் விட்டான் மகேந்திரன்.

ஸ்ராவணி சிஸ்டர் வந்து விட்டுப் போன விஷயத்தையெல்லாம் சொல்லி முடித்தாள். 'சொல்லுங்கள். ஏன் பேசவில்லை? என்னை ஏன் இந்த துர்பாக்கிய நிலையில் வைத்திருந்தீங்க இத்தனை நாளாய்? கேவலம் வேடிக்கைப் பார்ப்பதற்காகவா? அவன் தாயே அவனுக்கு ஆயாவாய் இருக்கிறாள் என்று தெரிந்ததும் சிஸ்டர் நம்பமாட்டாமல் ஆச்சரியப்பட்ட போது....'

ஸ்ராவணிக்கு திடீரென்று அழுகை வெடித்துக் கொண்டு வந்துவிடவே, ஆதரவில்லாதவளாய் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பத் தொடங்கினாள்,—



'ஆதியிலிருந்தே என்னை ஏன் இதுபோல சித்திரவதைப் பண்றீங்க? நான் என்ன தப்புப் பண்ணிட்டேன் இப்படிப் பழி வாங்கிக் கொள்வதற்கு.? நான் ஏற்கனவே இந்த வேதனையால் மனம் ஒடிந்து போய்க் கொண்டிருக்கும் போது உங்களை எப்பொழுது பார்ப்பேனோ, இதெல்லாம் உண்மை என்று உங்கள் வாயால் கேட்பேனோன்னு நிமிஷத்தைக் கணக்கிட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தபோது தான் அந்த சிலசந்திரன் வந்து...' அவள் தொண்டை அடைத்துக் கொள்ளவே வார்த்தைகளை அழுகை விழுங்கி விட்டது.

'ஸ்ராவணி! ஒரு வார்த்தை கேட்கிறேன் பதில் சொல்லு. மது யார் என்று தெரிந்தபிறகு அவன் மேல் உனக்கு வெறுப்பு ஏற்படவில்லையே? மனப்பூர்மாய் தயங்காமல் சொல்லு உன் பதிலை.'

ஸ்ராவணி இல்லை என்று தலையாட்டினாள். மகேந்திரன் திருப்தியோடு மூச்சு விட்டபடி, 'போதும், இது போதும் தான் இதைவிட வேறெதையும் விரும்பவில்லை.

இவ்வளவு நாளாய் நான் காத்துக் கொண்டிருந்ததற்கு இந்தப் பரிசு போதும். இனி நான்என்னவானாலும் சரி' எங்கேயிருந்தாலும் சரி, எனக்குக் கவலை இல்லை.' என் ஆசை நிறைவேறிவிட்டது. நான் விரும்பிய நீங்களிருவரும் ஒன்றாகி விட்டீர்கள். உங்கள் இருவருக்கும் நடுவே அபசகுநியாய் இல்லாமல் நான் தொலைவிற்குப் போய் விடுவதற்கு முன்னால் எனக்கு இந்த திருப்தி போதும்.'

தனக்குள் சொல்லிக் கொண்டே அங்கிருந்து போகத் திரும்பினான்.

'உங்க உத்தேசம் எனக்கு புரிந்து விட்டது. இவ்வளவு நாளும் நான் காட்டிய உதாசீனத்திற்கு என்னைப் பழி வாங்கணும்னு...'

'பழியா? உன்னையா?' மகேந்திரன் வியப்போடு அவளைப் பார்த்தான். ஈரத்தாலும், ரோஷத்தாலும் பளபளத்த அக்கண்களைப் பார்த்ததுமே அவனுக்குத் திரும்பவும் ஏதோ நினைவிற்கு வந்தது.

'இன்னொரு விஷயத்துக்கும் பதில் சொல்லு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் வந்ததுமே ஏன் அவ்வாறு உரிமையோடு நடந்து கொண்டாய்? அது கேவலம் நான் பிழைத்து வந்துவிட்டேன் என்ற உணர்ச்சியாலா அல்லது......'

அதுவரை நிமிர்ந்து அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ராவணியின் கன்னங்கள் சிவந்துவிட்டன. பதில் சொல்ல முடியாதவளாய் மெதுவாய்த்தலையை கவிழ்த்துக் கொண்டாள்.

'இந்த ஒரு கேள்விக்கு பதில் சொல்லிவிடு. அதற்கு மேல் உன்னைத் தொந்தரவு படுத்தமாட்டேன்'

ஸ்ராவணி பதில் பேசவில்லை.'

'சொல்லமாட்டாயா? அல்லது சொல்லத்தான் பதில் எதுவும் இல்லையா?'

ஸ்ராவணியின் வாயிலிருந்து அதற்கும் பதில் இல்லை.

'இதப்பார் நான் திட்டமறத் தெரிந்துக் கொள்ள உதவு. உன்னால் வாயைத் திறந்து பதில் சொல்ல முடியா விட்டால் உன் கண்கள் மூலமாய் உன் அந்தரங்கத்தைத் தெரிவி. உன் கண்கள் மூலமாய் நான் எத்தனையோ முறை உன் மனதைத் துல்லியமாய்த் தெரிந்துக் கொண்டிருக்கிறேன். அவை என்னை என்றுமே மோசம் பண்ணிய தில்லை.'

ஸ்ராவணியின் தலை மேலும் தாழ்ந்து விட்டது.



'முகத்தைத் தூக்கு. ஒருமுறை என்னைப் பார்! இந்தக் கடைசி சமயத்தில் தப்பர்த்தத்திற்கோ, சந்தேகத்திற்கே இடம் தரக்கூடாது. எங்கே என்னைப் பார்.'

'ஸ்ராவணி அரும்பாடு பட்டுத் தலையைத் தூக்கினாள்.

'மகேந்திரன் கூர்மையாய், ஆழமாய், எதையோ தேடினான். அதில் பயம், ஆனந்தம், அன்பு, சந்தேகம், இன்னும் பற்பல உணர்ச்சிகள் கதம்பமாய்த் தோன்றிய அப் பார்வை அவனை மெல்ல மெல்ல ஈர்க்கத் தொடங்கிற்று.

'ஸ்ராவணி!' ஒரு வினாடி தடுமாற்றமடைந்த அவன்,

'இதென்னது? நான் பிரம்மை கொள்ளவில்லையே?' என்றான் தனக்குள் சொல்லிக் கொள்வது போல. ஸ்ராவணி, 'இல்லை' என்று தலையாட்டினாள்.

காந்தமாய்த் தன்னைக் கவர்ந்துக் கொண்டிருந்த அந்த தீனமான கண்களையே பார்த்தபடி வெகுநேரமாய் உட்கார்ந்திருந்தான் அவன்.

பிறகு, நிற்க சக்தியில்லாதவனைப் போல மெல்ல மெல்ல ஸ்ராவணிக்கு முன்னால் மண்டியிட்டு அப்படியே சரிந்தான்.

தன்னையே தான் நம்பமுடியாத அளவிற்கு ஆச்சரியமும், கலவரமும், பரபரப்பும் அலைக்கழித்துக் கொண்டிருந்தது அவன் முகத்திலிருந்து ஒன்றாய்த் தெரிந்தது. அதை உணர்ந்து ஸ்ராவணி சட்டென்று இரு கைகளையும் நீட்டி அவன் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டாள்.

அந்த நேரத்தில் அவனுக்கு அந்த தைரியத்தை அளிப்பதும் உரிமையைத் தருவதும் மிக அவசியமாய்ப் பட்டது அவளுக்கு.

எங்கே கொஞ்சம் வெட்கப்பட்டாலும், தயங்கினாலும் விரலடியில் நீரைப் போல அவன் தன்னை விட்டு நழுவி விட நேர்ந்து விடுமோ என்றஞ்சினாள்.

அதனால், அவன் நிரந்தரமாய்த் தொலைவிற்குப் போய் விடுவான். அந்தப் பயந்தான் அவளிடமிருந்த வெட்கத்தையும் தயக்கத்தையும் கொஞ்சநேரம் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

'ஸ்ராவணி!' அவன் உதடுகள் லேசாய் நடுங்கின. இன்னும் இதையெல்லாம் நம்ப மாட்டாதவனாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அவன் கண்களில் ஆசையும் நம்பிக்கையும் ஒளியும் நிழலும் போலப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

கடைசியில் ஆசை வென்றது. ஒளி நின்றது.

மகேந்திரன் சட்டென்று ஸ்ராவணியின் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொண்டு அவள் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். கொஞ்சநேரம்வரை அவன் எதுவும் பேசவில்லை. ஸ்ராவணிக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை. சில நாட்களாய்த் தீராத வேதனைக்கு ஆளாகிவிட்டிருந்த இரண்டு இதயங்கள் ஒன்று சேர்ந்துவிட்ட தருணம் அது.

ஸ்ராவணிக்கு இதுவரை நள்ளிரவு நிசப்தமானது இவ்வளவு அழகாய் இருக்குமென்றோ அந்த நிசப்தத்தில் இன்னொரு மனிதனின் நெருக்கம் இவ்வளவு இனிமையாய் இருக்குமென்றோ தெரியாது.

'ஸ்ராவணி! ஸ்ராவணி!' மகேந்திரனின் இதயம் முழுவதும் பொங்கி எழுந்த அன்பு அவன் கை விரல்களில்



பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி விட்டதோ என்று எண்ணும் அளவிற்கு ஸ்ராவணியின் கேசங்களை அங்குமிங்கும் நகர்த்தின. அவன் குரல்கூடத் தழுதழுத்தது.

'ஸ்ராவணி! நீ எனக்கு இந்த அவகாசம் தருவதற்குள் நான் அதை வெற்றி பெற்றுக் கொள்வதற்குள் உன் வாழ்க்கையில் நிறைய பாகம் வீணாகி விட்டது. நான் எதிரே பார்த்துக் கொண்டேயிருந்தும் கூட ஒன்றும் செய்ய முடியாதவனாயிருந்தேன். இதுதான் என் வருத்தம்!'

மழைக்குப் பின் தோன்றும் வெயிலைப் போலப் பிரகாசமாய் இருந்த அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ராவணி, ஆள் காட்டி விரலை அவன் உதட்டின் மேல் வைத்து,

'உன் வாழ்க்கைன்னு ஏன் பிரித்துச் சொல்றீங்க, 'நம் இருவரின் வாழ்க்கையும்'—என்று சேர்த்துச்சொல்லுங்கள்! என் மீதுதான் தப்பு. நான் உங்களைப் புரிஞ்சுக்காமல் போயிட்டேன். மன்னிச்சுடுங்க' என்றாள்.

அவர்களின் அந்த அணைப்பில் ஆண் பெண்களுக்கிடையே சகஜமாய் ஏற்படும் ஆவேசமோ, காதலர்கள் முதல் முதலாய் ஒன்று கூடும்போது ஏற்படும் அவசரமோ இல்லை.

வயோதிகமாகி வாழ்க்கையில் அநேக இன்ப துன்பங்களுக்கு ஆளாகி, மன அமைதியை நாடி தேசாந்திரம் போய்க் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று தமக்குப் பிடித்தமான நபர் தென்பட்டால் தோன்றும் தாங்க முடியாத ஆனந்தத்தாலும் திருப்தியாலும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டாற்போலிருந்தது.

இருவரும் அந்த ஆனந்தத்தால் கண்களை மூடிக் கொண்டார்கள்.

விடியற்காலை ஆகி விட்டதால் காற்றில் இன்னும் குளிர்ச்சி இருந்தது. கொல்லையிலிருந்த மரங்களில் கூடு கட்டிக் கொண்டு வசித்து வந்த பறவைகள் சிறகுகளைப் படபடத்துக் கொண்டே துயில் விழித்தெழுந்தன.

பவழ மல்லிகை மரத்திலிருந்து பொலபொலவென்று பூக்கள் கம்மென்ற வாசனையுடன் உதிர்ந்து கொண்டிருந்தன. அவர்கள் உறவிற்குப் புஷ்பாஞ்சலி செய்தாற் போலிருந்தது. அந்த உதய வேளையில் இயற்கையும்கூட அபூர்வ அனுபவம் எதையோ பெற்று விட்டாற்போல் சலனமில்லாமல் அமைதியாய் மிகப் பிரகாசமாய்த் தோற்றமளித்தது!

★

சென்னை மாவட்ட கிளை நூலகம்
11352
2968852



வர்மா பதிப்பகம் சென்னை—17.